


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நினைக்க...
# சிரிக்க...
# சிந்திக்க...

(''சண் அங்கிள்'' என்ற பெயரில் 'உதயன்' இதழில்
எழுதிவந்த நகைச்சுவை ஆக்கங்களின் முதல் தொகுதி)

## பொ. சண்முகநாதன்

மணிமேகலைப் பிரசுரம்
த.பெ. எண் : 1447
7 (ப.எண் : 4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091 - 44 - 24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
website : http://www.tamilvanan.com

# நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | நினைக்க... சிரிக்க... சிந்திக்க... |
| ஆசிரியர் | : | பொ. சண்முகநாதன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | 2005 |
| பதிப்பு விவரம் | : | முதல் பதிப்பு |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | : | கிரௌன் சைஸ் (12.5 x 18.5 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | : | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | XVIII + 218 = 236 |

**நூலின் விலை : ரூ. 60.00**

**இலங்கை விலை : ரூ. 180.00**

| | | |
|---|---|---|
| லேசர் வடிவமைப்பு | : | தங்க.காமராஜ் பேசி : 24332272 |
| அச்சிட்டோர் | : | முருகன் ஆஃப்ஸெட் பிரிண்டர்ஸ் சென்னை – 600 004 |
| நூல் கட்டுமானம் | : | தையல் |
| வெளியிட்டோர் | : | மணிமேகலைப் பிரசுரம் சென்னை - 600 017 |


Digitized by Noolaham Foundation

# 2004ஆம் ஆண்டுக்கான சிறந்த பத்திரிகையாளர் விருது விழாப் புகைப்படங்கள்



2004ஆம் ஆண்டுக்கான சிறந்த தமிழ்ப் பத்தி எழுத்தாளர் விருதினை 'லக்மீம' ஆசிரியர் சுந்தீர நிஹாதமணி டீ.மெல்லிடமிருந்து பெறும் நூலாசிரியர் பொ.சண்முகநாதன்



உதயன் - சுடர் ஒளி நிர்வாகப் பணிப்பாளர் ஈ. சரவணபவன், சண்டே ஐலண்ட் பத்திரிகை பிரதம ஆசிரியர் மணிக் டீ சில்வா ஆகியோருடன் விருது பெற்ற நூலாசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விருது விழா மண்டபத்தில் இலக்கிய ஆர்வலர்களான கொழும்பு
'கிறிஷ்ஷோ மல்ரி ரேட்ஸ்' நிர்வாகப் பணிப்பாளர் பொ.பாலகிருஷ்ணன்,
சுகாதார அமைச்சு, விசாரணைப் பிரிவு அலுவலர் ஈ.மயூரன்
ஆகியோர்களுடன் நூலாசிரியர் பொ.சண்முகநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருதுச் சான்றிதழ்

## *Journalism Awards For Excellence 2004*

**B A Siriwardena Columnist of the Year**

*Tamil Language*

*P Shanmuganathan*

(Free Lance Journalist from Jaffna)

"For captivating the readership on timely issues of public concern in a lively and distinctive style"

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

Kumar Nadesan
**Co- Chairman**
Organising Committee

Sinha Ratnatunga
**Co- Chairman**
Organising Committee



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை!

## ஆழமும் தெளிவும் செறிந்த நகைச்சுவை எழுத்தில் வல்லவர் 'சண் அங்கிள்.'

மற்றவர்களைச் சிரிக்கச் செய்வது எல்லோருக்கும் கைவரக்கூடிய ஒன்றன்று. ஏனையவர்களைச் சிரிக்க வைப்பவர்களைப் பிரதிபண்ணித் தானும் அதனைக் கனகச்சிதமாகச் செய்துவிட முடியாது. ஒருவரை அல்லது பலரை ஒன்றுசேர நேரில் பார்த்துப் பேசினாற்கூட முழுக்க முழுக்கச் சிரிக்கச் செய்வது ஒன்றும் இலகுவானதல்ல. அவ்வாறிருக்க, வாசகர்களை நேரில் பாராது, எழுத்தின் ஊடாகச் சிரிக்கச் செய்வதென்பது எல்லா எழுத்தாளர் களுக்கும் இயலக்கூடியது அல்ல. அதுவும் ஒரு சிறப்புக் கலையே: விசேட ஆற்றலே.

இந்த அரிதான கலை சங்குவேலி பொ.சண்முக நாதனுக்குக் கைவரப்பெற்றிருப்பதை நான் மாணவனாக இருந்தபோதே அறிவேன். அப்போது மிக்க வரவேற்பைப் பெற்றிருந்த 'கலைச்செல்வி'யில் அவரது நகைச்சுவைக் கட்டுரைகள் வெளிவருவது உண்டு.

'கலைச்செல்வி'க்கும் எனக்கும் ஒருவகைச் சிறிய பந்தம் இருந்ததால் பொ.ச.வின் நகைச்சுவைக் கட்டுரைகளை அதில் நிறையப் படித்துச் சுவைத்த அனுபவம். இத்தனைக்கும் அக்காலத்தில் நேரில் அவரைச் சந்தித்ததில்லை. ஆனால் அவரது நகைச்சுவைக் கட்டுரைகளை மிக ஆர்வத்துடன் படிக்கும் வாசகனாக இருந்தேன்.

பத்திரிகைத்துறையில் பிரவேசித்த பின்னர் ஒரு சில தடவைகளில் அவரை நேரில் சந்தித்தது உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் 'சஞ்சீவி'யை ஆரம்பித்த பின்னர் அவர் 'சேறும் தண்ணீரும்' என்ற குறுநாவலை எழுதினார். நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதுமாறு கேட்டேன். பலன் சற்றுக் குறைவாகத்தான் இருந்தது. வேறு பணிகளின் நிமித்தம் ஒழுங்காக நகைச்சுவைப்பத்தி ஒன்றை அவர் எழுதவில்லை என்பது ஞாபகம்.

இரண்டாயிரம் ஆண்டு மே மாதம் மூன்றாம் திகதி உதயன், சஞ்சீவி பத்திரிகைகளை அரசாங்கம் தடை செய்தது. தக்க - நியாயப்படுத்தவல்ல காரணங்களை முன்னிறுத்தி அரசு அவ்வாறு செய்யவில்லை. தன்து வசம் இருந்த அதிகாரங்களை வைத்துக்கொண்டு எமது பணிமனைக்குப் பூட்டுப்போட்டது.

61 நாள்களில் பின்னர் உதயன் மீண்டும் உதித்தான். முன்னரைவிட உத்வேகத்துடன் தமிழர்களின் உரிமைக் குரலாக ஓங்கி ஒலித்தான். எனினும் அப்போதிருந்த பலவகை வளப் பற்றாக்குறையால் சஞ்சீவியை மீளவும் வெளிக் கொணர முடியவில்லை.

சஞ்சீவி (பாரம்பரியமாக ஞாயிற்றுக்கிழமை வார இதழாக அன்றி) ஆரம்பத்திலிருந்தே சனிக்கிழமைகளிலே வாசகர்களின் வாசிப்புப் பசியைத் தீர்த்தது. ஆகையால் உதயனின் சனிக்கிழமை இதழில் செய்திகளுடன் வாசகர் விரும்பும் அம்சங்களையும் சேர்த்துக் கொண்டோம்.

அப்போதுதான் சங்குவேலி பொ.சண்முகநாதனிடம் இருந்து கட்டுரை ஒன்று கிடைத்தது. நகைச்சுவை எழுத்தாளர் ஒருவர் பொதுக் கட்டுரையோடு மினைக்கெடக்கூடாது இவரைப் பயன்படுத்தி உதயன் வாசகர்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்று தோன்றியது.

இரண்டாவது கட்டுரையோடு அவர் இணைத்திருந்த கடிதத்தில் தொடர்ந்து எழுதும் விருப்பம் தொனித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்களுக்கு நகைச்சுவை ததும்பும் ஒரு பத்தியை சனிக் கிழமை தோறும் வழங்கலாம் என்ற எண்ணம் எழுந்தது.

அதன் பயன்தான் 'சிரிக்க சிந்திக்க' என்ற பத்தி.

பத்தி எழுதுவது ஒன்றும் இலேசுப்பட்ட காரியமன்று.

பத்து நிமிடங்கள் வாசிக்கக்கூடிய பத்தியில் சராசரி பத்துத் தகவல்களாவது இருக்க வேண்டும்.

பழைய அனுபவங்கள், சங்கதிகள் என்று பலதரப்பட்ட அம்சங்களைத் தொட்டால் மட்டுமே அதிக எண்ணிக்கையான வாசகர்களைக் கவர முடியும். வெவ்வேறு வகைப் பசி கொண்ட வாசகர்களைத் திருப்திப்படுத்த வேண்டுமே!

பல வருடங்களுக்கு முன்னர் படித்த, பார்த்த, கேள்விப்பட்ட விடயங்கள், விவகாரங்களை அச்சொட்டாக மீள் நினைவுக்குக் கொண்டுவரவல்ல அபார ஞாபக சக்தி இன்றியமையாதது. இவற்றுடன் சமகால ஆட்டோட்டங்களை அவதானித்துக் கருத்துச் சொல்லும் தகுதியும் தேவை.

இவை எல்லாவற்றுக்கும் உள்ளும் புறமுமாக நகைச் சுவை கலந்து, முலாமிட்டு வாசகனை சிரிக்க வைக்கும் வல்லமை சண் அங்கிளுக்கு கைவந்த கலை. சமூகத்திலும், அதன் நடவடிக்கைகளிலும் உள்ள குறைபாடுகளை நாசுக்காக நகைச்சுவையுடன் வெளிப்படுத்தும் திறமையை அவரது பல பத்திகளில் படிக்கலாம்.

எப்போதோ நிகழ்ந்ததை நேற்றைய சம்பவம் போலவும் நேற்றைய நிகழ்வைப் பழையது போலவும் புடம் போடுகின்ற எழுத்தாற்றல் பொ.சவுக்கு கைவரப்பெற்றது.

சண் அங்கிளின் எழுத்து தங்கு தடங்கல் இன்றி, தளம்பல் குழம்பல் இன்றி, ஆற்று நீர் போல ஓடுவது. அதில் ஆழமும் தெளிவும் செறிந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு மேலதிகமாக நான் சொல்ல விரும்பவில்லை. புத்தகத்தைப் படித்து நீங்களே அவர் எவ்வகை எழுத்தாளர் என்பதனை வகுத்துக் கொள்ளுங்கள்.

2004 ஆம் ஆண்டில் அவர் மீண்டும் எழுதத் தொடங்கியதும் பத்தியின் தலைப்பை 'நினைக்க சிரிக்க சிந்திக்க' என்று மாற்றினேன். பத்தியை ஏற்கனவே வாசிக்காத வர்களுக்கு நகைச்சுவைப் பத்தி என்று சொல்வதற்காக.

2004 ஆம் ஆண்டில் 29 வாரங்கள் **உதயனில்** வெளியான பத்திகளை மட்டுமே சமர்ப்பித்து இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் கழகத்தின் சிறந்த தமிழ்ப் பத்தி எழுத்தாளருக்கான விருதைப் பெற்ற பெருமைக்குரியவர் சண் அங்கிள். அவருக்கு உதயனின் பாராட்டுக்களும் உரித்தாகுக.

நகைச்சுவை எழுத்தாளர் பொ.சண்முகநாதனின் எழுத்துப் பணி மென்மேலும் சிறப்புற்று மேலோங்கி வளர வாழ்த்துகிறேன்.

**ம.வ.கானமயில்நாதன்**

யாழ்ப்பாணம்.
07.08.2005

பிரதம ஆசிரியர்
சஞ்சீவி - உதயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தி எழுத்தும் இந்நூலாசிரியரும்

'சண் அங்கிள்' என்ற புனைபெயரில் மிகவும் ஜனரஞ்சக மாகவும், நகைச்சுவையாகவும் கடந்த சில வருடங்களாக யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் 'உதயன்' நாளிதழில் ''நினைக்க... சிரிக்க... சிந்திக்க...'' என்ற தலைப்பில் எழுதிவந்த பொ.சண்முகநாதன் தனது சொந்தப் பெயரிலும் நீண்ட நாட்களாக எழுதி வரும் முக்கிய ஈழத்து எழுத்தாளர்களுள் ஒருவர்.

ஈழத்து எழுத்துலகில் சண்முகநாதன் என்ற பெயரில் ஐந்தாறு எழுத்தாளர்கள் இருந்து வந்துள்ளனர். அவர்களுள் சிலர் நம்மிடையே இப்பொழுது இல்லை. ஆயினும் நகைச் சுவையாக எழுதக்கூடிய ஒரு சில ஈழ்த்து எழுத்தாளர்களுள் பொ.சண்முகநாதன் முத்திரை பதித்த ஒருவர்.

இவர் தொடர்ந்து சில கட்டுரைகளைத் தொடராக எழுதி வந்ததனால், இவை 'பத்தி எழுத்து' (Column Writing) என்ற எழுத்து வகையைச் சார்ந்தது எனலாம். இத்தகைய எழுத்தை 'கனதி'யான எழுத்து எனப் பலர் ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக ஏளனமாகவே பத்தி எழுத்தாளர்களை அணுகும் முறை விபரமறியா வாசகர்கள் சிலரிடையே இருந்து வருகிறது.

அடிக்குறிப்புகள், மேற்கோள்கள், பகுப்பாய்வு போன்றவை உள்ளடங்கிய எழுத்தை மாத்திரம் 'கனதி'யான எழுத்து என்று கொள்ளும் மனோபாவம் நம்மில் பலரிடையே இருந்து வருகிறது.

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் பண்பும், எழுத்தும் இலகுவாக எவருக்கும் சித்திக்கிறது எனச் சொல்ல முடியாது. பலருக்கு இலகுவாகவும், எளிமையாகவும் எடுத்துக் கொண்ட பொருளைப் பரிவர்த்தனை செய்யும் ஆற்றல் எளிதில் வரப் பெறுவதில்லை.

இந்தப் பின்னணியிலே ஆழமான செய்திகளை, இலகு நடையில் வாசகருடன் பேசுவது போன்று, நகைச்சுவையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து ஆசிரியர் பொ.சண்முகநாதன் எழுதக்கூடியவர் என்பது இத்தொகுப்பு மூலம் நிரூபணமாகிறது.

இப்புத்தகத்தில் இடம்பெறும் கட்டுரைகளை ஒரே மூச்சில் படித்து முடித்த பின்னர், ஆசிரியர் எழுதியுள்ள முறை சலிப்புத் தட்டாது அமைந்திருப்பதைக் கண்டு மகிழ்வுற்றேன்.

பல முக்கிய செய்திகளையும், அதனுடன் தொடர்புடைய கிளைச் செய்திகளையும் சுருக்கமாகத் தந்த பின்னர், சிந்திக்கத் தக்க கருத்துகளைய்யும் பலவந்தமாகத் திணிக்காமல், எடுத்துக் கொண்ட் பொருளுடன் ஒட்டியதாக அவர் எழுதும் முறை ஆசிரியருடைய எழுத்து முதிர்ச்சியையும், அறிவு வளர்ச்சியையும் காட்டி நிற்கின்றது.

பாண்டியன் (நாவலர்) நெடுஞ்செழியன், மார்லன் பிராண்டோவை எனக்கும் தெரியும், பக்குவப்பட்ட எழுத்தாளர்கள், தமிழ்வாணன்/எஸ்.டி.சிவநாயகம், கண்ணதாசனுக்குப் பிடித்த அந்த மூன்று பெண்கள் ஆகிய பத்திகள், என்னைப் பொறுத்த மட்டில் சுவாரஸ்யமான தகவல்களைத் தந்தன. ஏனையவையும் படிக்கச் சுவையாக அமைந்துள்ளன.

ஆசிரியர் தொடர்ந்தும் இலகு வாசிப்புக்கான கனதி கலந்த செய்திகளையும், குறிப்புகளையும் எமக்குத் தந்து மகிழ்விப்பாராக. பாராட்டுக்கள்.

**- கே.எஸ்.சிவகுமாரன்**

ஜூன் 28, 2005

21, முருகன் பிளேஸ்,
கொழும்பு - 06, இலங்கை
011-94-1-2587617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை!

'உதயன்' இதழில் 'சண் அங்கிள்' என்ற பெயரிலே வாரம் தோறும் யான் எழுதிவந்த பத்தி எழுத்துக்களின் முதலாவது தொகுதி இதுவாகும். இதிலே சென்ற ஆண்டுக்கான சிறந்த தமிழ் பத்தி எழுத்தாளருக்கான விருது பெறக் காரணமாகவிருந்த எழுத்துக்களும் 2001/02 காலப் பகுதிகளிலே வெளியானவைகளில் ஒரு பகுதி எழுத்துக்களும் இடம் பெற்றுள்ளன. ஏனையவைகளை இன்னொரு தொகுதி யாக வெளியிடலாம் என நினைக்கிறேன்.

தொடர்ச்சியாக எட்டு ஆண்டுகள் கொழும்பிலே வாசம் செய்துவிட்டு யாழ்ப்பாணம் வந்து திரும்பும் போதெல்லாம் இடையிலே இங்கேற்பட்டுள்ள சில விசித்திரமான மாற்றங்களை கொழும்புப் பத்திரிகையிலே எழுத வேண்டும் என நினைப்பேன். குறிப்பாக மிக்சர் கடைகளுக்கு திடீரென்று ஏற்பட்ட முக்கியத் துவம், இங்குள்ள பத்திரிகைகளிலே புதிதாக வெளிவரத் தொடங்கியுள்ள 'இன்னார் மறைவினால் வருந்தும் இன்னாருக்கு அனுதாபம்' தெரிவிக்கிற, அதேபோல 'பாராட்டி வாழ்த்தும்' விளம்பரங்கள்... இன்னும் பழைய - புதிய நேரக் குழப்பங்கள்...

அதேபோல அங்கேற்பட்ட சில அனுபவங்களை இங்குள்ள பத்திரிகைக்கு எழுதவேண்டும் எனவும் நினைப்பேன்; எல்லாமே நினைப்போடு சரி. பின்னர் நான் இங்கு மீளவும் வாழத் தொடங்கியதும்தான் அதெல்லாம் 'உதயன்' மூலமாகச் செயலுருவம் பெற்றது. எழுத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையிலே ஒருவித அஞ்ஞாதவாசம் இருந்த என்னை இப்பத்தி மூலம் மீண்டும் எழுதத் தூண்டிய பொறுப் பெல்லாம் அவர்களையே சாரும். குறிப்பிட்ட நாளில் எழுதிக் கொடுத்தாக வேண்டுமே என்றதொரு நெருக்கடியை வாரந்தோறும் ஏற்படுத்தி - வேறு வகையில் சொல்வதானால் படைப்பதிலே ஒரு குதூகலத்தை (Creative Pleasure) ஏற்படுத்தி நானே வியக்கும் அளவுக்கு என்னை இப்படியொரு சாதனை புரிய வைத்தவர்களும் அவர்களே! குறிப்பாக பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனும் இடையிலே சில காலம் அப்பொறுப்பிலிருந்த ந.வித்தியாதரனும் எனக்குத் தந்த அன்புத் தொல்லைகள் மறக்க முடியாதவை. ஆக, சண் அங்கிளுக்கு இத்தனை பிரபலத்தை ஏற்படுத்தித் தந்ததே 'உதயன்'தான். இறுதியில் சிறந்த தமிழ் பத்தி எழுத்தாளர் விருது கிடைக்கவும்தான்...

**ப**ழைய நினைவுகளை மீட்டிப் பார்ப்பதிலும் ஒரு சுவை இருக்கிறது. வாசகர்கள் புதுமையை விரும்புகிறார்கள்... அதிலும் பழைய நினைவுகளை முன்கொணர்ந்து பார்க்கின்ற புதுமையையும்தான்... வரதரின் 'மலரும் நினைவுகள்', எஸ்.பொவின் 'நனவிடை தோய்தல்', டொமினிக் ஜீவாவின் 'எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்' என்பனவெல்லாம் இந்தவகை நூல்களே!

இப்படியான பழைய நினைவுகள், அந்த முரண்பாட்டுச் சிந்தனைகளால் எழுகின்ற அனுபவச் சுவைகள், சில பாத்திரங்களின் அறிமுகம் என்று வரும்போது நடைச் சித்திரச் சாயலும் புகுந்து விடுகிறது. சொல்லுவதை நகைச்சுவையுடன் சொல்ல வேண்டும் என்னும்போது சுய புராணங்களும் வரத்தான் செய்தது. பின்னாளில் அவ்வப்போது எதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத வேண்டும் என்று தோன்றியதோ, அப்படி அதையும் எழுதியதுண்டு. எப்படியும் முடிவு சிரிக்க அல்லது சிந்திக்க வைப்பதாகவும் பார்த்துக் கொண்டேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக எனக்கே இன்னதென்று வகைப்படுத்த முடியாத ஒரு புதிய அமைப்பிலும் நடையிலும் இவைகளை எழுதித் தள்ளிவிட்டதாகத் 'தம்பட்டம்' அடித்துக் கொண்டிருக்கிறேன். புத்தி எழுத்தாளர் என்றதும் எமக்கெல்லாம் 'பட்'டென்று நினைவுக்கு வருபவர் பிரபல கலை - இலக்கியத் திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள். அவரே இன்னொரு பக்கத்திலே 'நிச்சயமாக இதெல்லாம் அந்த வகையைச் சார்ந்ததே' என்று அடித்துச் சொல்லி விட்டாரே, பிறகென்ன?

★ ★ ★ ★ ★

சிறந்த பத்திரிகையாளரும் எழுத்தாளரும் ஆங்கில ஆசிரியருமான வே.வரதசுந்தரம் 'சஞ்சீவி' காலம் முதல் என்னை மிகவும் பெருமைப்படுத்தி வருபவர். சிலவேளை என்மீதுள்ள அதீத நம்பிக்கை காரணமாகவோ என்னவோ 'அது' அளவு கடந்தும் போய் விடுவதுண்டு. நாவல் எதுவும் எழுதாத காலத்திலே என்னை நாவலாசிரியர் என்று அறிமுகப்படுத்தி... அதனாலென்ன, பின்னர் நான் ஒரு நாவல் எழுதவும் வைத்தவர்.

அந்த நாவலும் கையுமாக அவர் 'மணிமேகலைப் பிரசுரம்' ரவி தமிழ்வாணனுடன் ஓர் உடன்பாடு செய்து கொண்டு எனது சம்மதத்துக்காகக் காத்திருந்த வேளை, கொழும்பு சென்ற நானும் அவரைத் தேடிச் சென்றிருக்கிறேன்.

''நினைத்தோம் வந்தீர், நூறு வயது'' என்ற வரதர் தம்பதியினரின் வாழ்த்துக்களுக்கு மத்தியிலே அதைவிடச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த - அதுவும் நகைச்சுவை ஆக்கங்களை (விருதுபெறக் காரணமாகவிருந்த ஆக்கங்களையும்தான்) நான் உதயனில் எழுதிவந்த சங்கதியைத் தெரிவித்தேன். அவைகளையே முதலில் வெளியிடலாம் என்ற முடிவும் அங்கு ஏற்பட்டது. ரவி தமிழ்வாணனுக்கும் அதுவே மிகவும் பிடித்துவிட்டது.

கதையோடு கதையாக, மேலே குறிப்பிட்ட எனது பெரு மதிப்புக்குரியவர்களுடன் இந்நூல் உருவாகப் பலவகையிலும் எனக்குத் துணைநின்ற இலக்கிய ஆர்வலர்களான 'கிருஷ்ஷோ மல்ரி ட்ரேட்ஸ்' நிர்வாகப் பணிப்பாளர் பொ.பாலகிருஷ்ணன், 'விகடவாரிதி' ந.கனகசேகரம் J.P. ஆகியோர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

**- பொ.சண்முகநாதன்**
10.08.2005

**டாக்டர் சுப்பிரமணியம் வீதி,**
**கந்தரோடை,**
**சுன்னாகம்,**
**இலங்கை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே......


1. இத்தால் சகலரும் அறியவேண்டியது... 1
2. பெய்யெனப் பெய்யும் மழை 4
3. ஒலிபெருக்கிகளுக்கு ஓய்வு வேண்டும் 7
4. ஆலயங்களுக்கு ஒலிபெருக்கிகள் 11
5. சாத்திரியாரின் சாப்பாட்டுக் கடை 15
6. மெமோறியலில் நடந்த 'மூன்லைட் காணிவல்' 19
7. மெமோறியலில் நடந்த 'மூன்லைட் காணிவல்' (2) 23
8. படம் பார், பாடம் படி 27
9. படம் பார், பாடம் படி (2) 31
10. நினைத்ததும் (எழுதியதும்) நடந்ததும் 34
11. வீடுதான் சொர்க்கம் 38
12. பெரிய வாத்தியார் 42
13. ஜேபி மாஸ்டர் 46
14. சர்வ வல்லமையுள்ளவர்களிடமிருந்து சர்வலோக நிவாரணம்... 50
15. அவர் மாரடைப்பால் காலமானார் அவருக்கு வயது... 54
16. வைத்தியசாலைக்கு மின்னுயர்த்தி... 58
17. கிழவியைக் குமரியாக்கும் இயந்திரம் 61
18. இங்கிலிசு வாத்தியார் சொன்ன 'வீத்திறி' கதை 65
19. இது பழனிமலையல்ல, பாராளுமன்றம்! 69
20. துரையரின் (நன்னாரி) தேநீர்க் கடை 73


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 21. | கல்வீட்டு மாமியும் அரிவரி மாமியும் | 77 |
| 22. | பச்சைத் தண்ணீரிலும் பலகாரம் சுடலாம் | 80 |
| 23. | வயது வரலாம், வயதுக் கோளாறு வேண்டாம் | 84 |
| 24. | 'ஹைட் பார்க்'கிலிருந்து 'மயில்கால் எண்ணெய்' வரை... | 88 |
| 25. | ஹலோ... உங்களுடன்தான்... | 91 |
| 26. | சாப்பாட்டுக்கு முன்னர் குலுக்கிக் குடிக்கவும் | 95 |
| 27. | நாய்வாலை நிமிர்த்தினாலும் இந்த விதானைமார்களை...?...!! | 99 |
| 28. | உண்டேன்... உண்டேன்... சோறல்ல... | 103 |
| 29. | கண்ணை விட்டுப் பிரிவதில்லை கண்களுக்கும் சொந்தமில்லை | 107 |
| 30. | மௌனம் என்றொரு வார்த்தை | 110 |
| 31. | பூகம்பத்தையே அனுப்பியிருக்கலாம்! | 113 |
| 32. | பாதத்திலிருந்து முகத்துக்கு... | 116 |
| 33. | 'லஞ்'சுக்கு வாறியளா? | 118 |
| 34. | தாம்பாளத்துக்கு ஒரு கைப்பிடி | 121 |
| 35. | அந்தோனி சொன்ன கதை | 124 |
| 36. | சேலை கட்டிய மாது | 127 |
| 37. | அதுக்கு வைத்தியம் பார்க்கின்ற... | 131 |
| 38. | இதுவுமொரு 'மச்ச' விவகாரம்தான் | 135 |
| 39. | நேற்றுக் கேட்டிருக்கலாமே... | 139 |
| 40. | நேற்று வந்திருக்கலாமே... | 141 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 41. | மிகினும் குறையினும் நோய் செய்யும் | 144 |
| 42. | பாண்டியன் (நாவலர்) நெடுஞ்செழியன் | 148 |
| 43. | ஆள் பாதி ஆடை பாதி | 151 |
| 44. | மார்லன் பிராண்டோவ் எனக்கும் தெரியும் | 154 |
| 45. | ஏமாந்தவர் யார்? | 157 |
| 46. | சிரிக்க... விளம்பரங்கள் | 161 |
| 47. | 'பக்குவப்பட்ட' எழுத்தாளர்கள் | 165 |
| 48. | நான் சொல்லுகிறேன் "ஒன்றும் இல்லைப் போ..." | 169 |
| 49. | ஓடி(ட) ஓடி(ட) உழைப்பவர் | 171 |
| 50. | அடுத்த நிகழ்ச்சி இன்னும் சில வினாடிகளில்... | 177 |
| 51. | கட்டபொம்மன் தமிழன் இல்லை என்று சொன்ன தமிழ்வாணன்! | 180 |
| 52. | எண்ணும் எழுத்தும் | 184 |
| 53. | மதுவிலும் 'மருந்து'ண்டாம் | 188 |
| 54. | அறிவுரை கூறவும் ஒரு தகுதி வேண்டும் | 192 |
| 55. | இடறி விழுந்தால்... அங்கே ஒரு சமாதான நீதிவான் | 196 |
| 56. | கண்ணதாசனுக்குப் பிடித்த அந்த மூன்று பெண்கள்... | 200 |
| 57. | மன்ழயும் குடையும் கொடையும் | 204 |
| 58. | கீறல் விழுந்த தட்டுக்கள் (!) | 208 |
| 59. | மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி | 212 |
| 60. | பாவை விளக்கும் பெண் பாவையும் | 216 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இத்தால் சகலரும் அறியவேண்டியது...

"சிவபெருமானின் கிருபையை முன்னிட்டு என்றும் என்மேல் பட்சம் மறவாத மகனுக்கும், மருமகள் ஆத்தைக்கும், கண்ணிறைந்த பாக்கியங்களுக்கும், ராசாத்திக் குஞ்சுக்கும்..."

- இப்படித்தான் எனது ஆச்சி சொல்லச் சொல்ல நான் அவவுக்காகக் கடிதத்தை ஆரம்பிப்பேன். அத்துடன் பிள்ளையார் சுழி, சிவமயம் அதிமுக்கியம்.... சுருக்கமாக 'அன்புள்ள மகனுக்கும் மற்றும் யாவருக்கும்' என்று எழுதினால் என்ன என்று கேட்டால் 'உனக்கென்ன வந்தது?' என்று கோவிப்பா....

சைக்கிள் கடை மணியத்தாரும் சில சமயம் "மணித்தம்பி... ஒரு பற்றுச் சீட்டு எழுதும் பார்ப்போம்.." எனக் கேட்பார். இன்ன முகவரியைச் சேர்ந்த நான் இன்ன முகவரியைச் சார்ந்த இன்னாருக்குக் குறித்த சைக்கிளை விற்று முழுப் பணமும் பெற்றுக் கொண்டதாக எழுதி யிருப்பேன் என்றுதானே நினைக்கிறீர்கள்? அப்படியல்ல, அவர் சொல்வது போலத்தான் தொடங்க வேண்டும்.

"இத்தால் சகலரும் அறிய வேண்டியது யாதெனில்.... என்ன சிரிக்கிறீர்... எழுதும்..." என்பார்.

இந்த 'இத்தால் சகலரும் அறியவேண்டியது' என்பது அக்காலத்தில் எல்லாருக்கும் தெரிந்த - வழக்கத்திலிருந்த 'பிரசித்த'மான வாக்கியம். அப்போதெல்லாம் அரசாங்க மற்றும் பொது அறிவித்தல்களை 'பிரசித்த'க்காரர் ஒருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருத்தெருவாகச் சென்று பறையடித்துச் சொல்வதுண்டு. அவர் இந்த வாசகத்தை முதலில் சொல்லிவிட்டுத்தான் அறிவித்தலை வாசிப்பார்.... பறையடித்துக் கேட்டால் 'என்ன பறை?' என்றறியத் தெருவுக்கு ஓடுவோம்... அப்பொழுதெல்லாம் அம்மா சொல்லுவா... அப்படிக் கேட்கக் கூடாது...'என்ன பிரசித்தம்' என்றுதான் கேட்க வேண்டும் என்று.

எதையும் புதுமையாகவும் சுவையாகவும் சொல்ல வேண்டும் என்ற கருத்துடையவர் நமது 'வரதர்' அவர்கள். அவர் பின்னாளில் வெளியிட்ட 'புதினம்' பத்திரிகை வாசகர் கடிதம் பகுதிக்கு மேற்படி வாசகத்தைத்தான் மகுட வாக்கியமாக போட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதையெல்லாம் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், தேவையோ, தேவையில்லையோ எதையும் அடைமொழிகளுடன் சொன்னால்தான் அக்காலத்தவர் களுக்குப் 'பொச்சம்' தீரும்போலிருக்கிறது. அதிகம் ஏன் அக்கால நவீனங்களை எடுத்துக் கொண்டால்கூட... 'காந்தாமணி அல்லது தீண்டாமைக்குச் சாவுமணி' (வை.மு. கோதைநாயகி) 'நீலகண்டன் அல்லது சாதி வெள்ளாளன்' (இடைக்காடர்) இப்படித்தான்.

இப்பொழுதெல்லாம் எதையும் சுருக்கமாகவும் சுவையாகவும் சொன்னால்தான் எதற்குமே நல்லது எல்லாருக்குமே ஏற்றது என்றாகிவிட்டது. அது பெயராக இருந்தாலும் சரி வசனமாக இருந்தாலும் சரியே! இருப்பினும் விட்டகுறை தொட்டகுறையாக இன்றைக்கும் அவை சில விடயங்களிலும் சில வகைகளிலும் தொடரத்தான் செய்கிறது.

எனக்கு தெரிந்த சிலர் இப்பொழுதும் சுமக்க முடியாத பெரிய பெயர்களைச் சுமந்து கொண்டு திரிவதை 'அனுதாபத்துடன் கவனித்திருக்கிறேன்.' கதிர்காமநாதக் கயிலைநாதர் என்றொருவர், சிவபாத சுந்தரஜெயவீரரத்தினம் இன்னொருவர். இதிலே தந்தை பெயர்களும் சேர்ந்திருப்பதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்து விடாதீர்கள். அவை வேறு சுருக்கமாக முறையே கனகசபை, முருகேசு என்றிருக்கின்றன. இப்போதுள்ள கட்டம் போட்ட விண்ணப்பப் படிவங்களில் இப்பெயர்களை எழுதுவதென்றால் அது எவ்வளவு கட்(ஷ்)டம்? 'வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்குத் தமிழ் விவகாரம், இந்து கலாசார அமைச்சு'... இந்தப் பெயரும்கூட என் வலப்பில் எழுத முடியாத அளவுக்கு நீண்டு விட்டது. யுனெஸ்கோ, யுனிசெவ் என்பது போல இதற்கும் ஒரு வழி காண முடியாதா?

தற்காலத்தில் எல்லாரும் சேர்ந்து செய்கின்ற ஒரு தவறுபோல, மரண அறிவித்தல்களில் வருகின்ற 'உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்' என்பதை எடுத்துக் கொள்ளலாம். இந்த வரிகள் அவசியமற்றவை. அவர்களுக்காகத்தானே அந்த அறிவித்தல்கள்? அதைச் சொல்லித்தான் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? தந்திகளில் திரு, அவர்களுக்கு என்ற வார்த்தைகளைத் தவிர்ப்பது நேபால இதையும் தவிர்க்கலாம்.

முன்னர் இலங்கை வானொலியில் அறிவிப்பாளராக இருந்த காலஞ்சென்ற 'வி.என்.பி' என்ற வி.என். பாலசுப்பிர மணியம் கூட அப்போது இக்கருத்தினைச் சொல்லியிருந்தார். அவரது நினைவாக, அவரது உரையொன்று பின்னர் மறு ஒலிபரப்பானபோது அதை நானும் கேட்டேன். அப்படிச் சொல்வதன் மூலம் வானொலி வருமானம் பாதிக்கப்படலாம் என்ற போதிலும் என்னைப் போலவே அவரும் துணிந்து அதனைச் சொல்லியிருந்தார்.

வேண்டுமானால் அந்தியேட்டி, நினைவஞ்சலி விளம்பரங்களில் அந்த வரிகளைப் பயன்படுத்தலாம். காரணம் அவைகளில் 'போசனம்' சம்பந்தப்பட்டிருக்கிறதல்லவா? யாரும் அழையாத விருந்தாளிகளாக வந்து 'பந்தி'யில் அமர்ந்து கொண்டால், சமாளிக்க முடியாமற் போய்விடலாம்!

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெய்யெனப் பெய்யும் மழை

இது மன்னர் காலத்துக் கதை... மன்னவன் சபைக்கு வந்ததும் அமைச்சரைக் கேட்கும் முதற்கேள்வி ''அமைச்சரே, நாட்டிலே மாதம் மும்மாரி பொழிகிறதா?''

நாட்டிலே மழை பெய்ததா இல்லையா என்பதைக் கூட மன்னர் அமைச்சரைக் கேட்டுத்தான் - தெரிந்துகொள்ள வேண்டி இருந்தது. அவ்வளவுக்கு அவர் அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்திருப்பாரோ!

அமைச்சர் மட்டும் என்னவாம்? அவரும் இவருக்கு வாய்த்த அமைச்சர்தானே...? இருப்பினும் மன்னர் கேட்பார் என்பதற்காக யார் மூலமாவது அவர் அதை அறிந்து வைத்துக் கொண்டு பதிலளிப்பார்.

சரி, அப்படியே மழை பெய்யாவிட்டால் மன்னர் 'மழை பொழியும்படி' ஆணை பிறப்பிப்பாரா? அல்லது அப்படிப் பொழிய வைக்கத்தான் அவரால் முடியுமா?

மன்னர் கதை அப்படியே இருக்கட்டும், நம்மால் அது முடியுமா? மழைமேகம் கருக்கட்டும் சமயமாகப் பார்த்து, 'கொடும்பாவி' கட்டி இழுத்து, 'காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த' கதையாக மழை பெய்வதுண்டு. அதை வைத்துக் கொண்டு 'பார்த்தீர்களா கொடும்பாவி இழுத்ததும் மழை பெய்து விட்டது' என்று சொல்வதை நம்பவும் எம்மில் பலர் இருக்கவே செய்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை மேகம் கருக்கட்டினால், அது மழையாக இறங்கித்தானாக வேண்டும். இறங்குவதற்குப் 'பஞ்சிப் பட்டால்'... உரிய காலத்தில் பிரசவம் நிகழாவிட்டால் 'சிசேரியன்' எனும் அறுவை சிகிச்சை மூலம் குழந்தையைப் பிறப்பிப்பது போல... சில இரசாயனங்களை வானத்துக்கு அனுப்பி விஞ்ஞான முறையிலும் மழையை வரவழைக்கலாம். (சிசேரியன் மூலம் பிறந்த உலகத்தின் முதற் குழந்தை ஜுலியஸ் சீசர்தானாம். அதனால்தான் அவருக்கு அந்தப் பெயராம். கத்தி கொண்டு பிறப்பிக்கப்பட்டவர் இறுதியில் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டது வேறு கதை...)

இதைவிட, நமது பெண்கள் நினைத்தால் மழையை (கண்ணீர் மழையை அல்ல) வரவழைக்க முடியும் என்றொரு கதையும் இருக்கிறது. அதனைச் சொல்வதற்கு முன்னர், முன்னுரையாகச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

பெண்களுக்கு கணவனே கண்கண்ட தெய்வம் என்பார்கள். 'பெண்ணானவள் கணவன்ன வணங்கி வரவேண்டும், கணவன் ஆண்டவனை வணங்கி வரவேண்டும்' என்றெல்லாம் வாரியார் சொல்லி வருவார். நான் ஆண்களுக்காக வக்காலத்து வாங்குவதாக நினைக்கக் கூடாது.... எல்லாம் மழைக்காகத்தான்.

வள்ளுவரும் 'தெய்வம் தொழாள் கொழுநன் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்கிறார். வேறு தெய்வங்களை வணங்க வேண்டியதில்லை. கண் விழித்ததும் கணவனை வணங்கி எழுபவள் மழையைப் பெய்விக்கும் சக்தி பெற்றிருப்பாளாம். அப்படியானவள் பெய் என்றதும் மழை பெய்யுமாம். (முஸ்லீம் பெண்கள் பள்ளி வாசல்களுக்குப் போவதில்லையாம். அப்படி நான் நமது பெண்களைக் கேட்கவில்லை. நீங்கள் இரண்டையுமே செய்யுங்களேன்.. அதுவும் மழைக்காகத்தான்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள்கூட இப்போதெல்லாம் பக்தர்களின் மழை வரத்துக்கு அவ்வளவு மதிப்புக் கொடுப்பதில்லை போலிருக்கிறது... அவரும் நல்ல பிள்ளைக்கு இருக்கப் பார்க்கிறார்... ஒரு குட்டிக் கதை... கண்ணதாசன் சொன்னதாகத் தெரிகிறது...

"ஒரு விவசாயி நெல்லை விதைத்து விட்டு பிள்ளையாரை வணங்கி மழை வரம் கேட்கிறார்.

ஒரு நாடகத் தயாரிப்பாளர் எக்கச்சக்கமாக நாடக நுழைவுச் சீட்டு விற்று விட்டு, அவரும் பிள்ளையாரிடம் வரம் கேட்கிறார்; மழை வரக்கூடாதென்று.

எது நடந்தாலும் நிச்சயம் நாளைக்கு பிள்ளையாருக்குப் பரிசாக ஒரு சிதறு தேங்காய் உடைக்கப்படும்."

கணவனை மதிக்கிற பெண்கள் இருக்கும் வரை மழை பெய்யும்-'அவள் பெய்யென்றால் மழை பெய்யும்' என்ற வள்ளுவர் வாக்கினை நான்வேறு கூறப்போய் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்து விட்டேனோ? அவர்கள் அப்படிச் செய்தும் மழை பெய்யாவிட்டால் அவர்கள் மீது வீணாகச் சந்தேகம் கொள்ள வழியேற்பட்டு விடுமே என்பதுதானே உங்கள் கவலை? உங்களுக்கெல்லாம் கைகொடுப்பதுபோல கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இந்தக் குறளுக்கு பின்வருமாறு விளக்கம் தருகிறார்.

'தெய்வம் தொழாதவளும் கணவனைத் தொழுதெழு பவளுமான பெண்ணானவள் (கணவனுக்கு) பெய்யெனப் பெய்யும் மழை போன்றவள்'. அதாவது அவள் பெய்யென்றதும் மழை பெய்யும் என்பதல்ல. பெய் என்று சொன்னதும் பெய்யும் மழை என்று ஒன்றிருந்தால் எப்படியோ, அப்படி அவனுக்கு அவள் இருப்பாளாம்! எப்படி விளக்கம்?

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒலிபெருக்கிகளுக்கு ஓய்வு வேண்டும்

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்திலே அன்று நடைபெற்ற கம்பன் விழாவைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு அப்போது எனக்கும் கிடைத்தது. அங்கே மண்டபத்திற்குள் இடம் கிடைக்காமற்போனவர்களின் வசதி கருதி வெளியேயும் தொலைக்காட்சி - ஒலிபரப்பு வசதிகள் செய்திருந்தார்கள்.

வழக்காடு மன்றம் நடந்து கொண்டிருக்கையில் கடைசிப் பேருந்தைத் தவற விட்டுவிடக் கூடாது என்பதற்காக விழாச் சூழலை விட்டு வெளியே வந்து இராமகிருஷ்ண வீதியில் கால் பதிக்கிறோம்...

அங்கு ஒரு கனவான் தமது வீட்டுக்குள் இருப்புக் கொள்ள முடியாமல் வீதிக்கு வந்து தம்பாட்டில் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ஆவேசமாகப் பொரிந்து தள்ளிக் கொண்டிருக்கிறார்.

"இவங்கள் ஏன் இங்கை வந்து சண்டை பிடிக்கிறாங்கள்? மூன்று நாள்களாக இரவிரவாக ஒரே சண்டைதான்.. சீ.. நிம்மதியாக இருக்க விடுகிறாங்களில்லை..."

அவர் சண்டை என்று குறிப்பிட்டது விழாவையொட்டி நடைபெற்ற பட்டிமண்டப - வழக்காடு மன்ற நிகழ்ச்சிகளைத் தான். எமக்கு விருந்தாக இருந்த அந்த விழா அவருக்கு வேம்பாகக் கசந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தம் ஒரு குறிப்பிட்ட டெசிபலுக்கு மேற்பட்டால் மக்களுக்கு மனவுளைச்சல், பதற்றம், நிதானமின்மை, இரத்த அழுத்தம், செவிப்புலன் மந்தமாவது போன்றவைகள் ஏற்படலாம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. அதுவே ஒருவருக்குப் பிடிக்காத ஓசையாக இருந்துவிட்டால் இந்த பாதிப்பு மேலும் அதிகரிக்கலாம். சில 'கோஷ்டி'களின் துள்ளிசையால் நாம் பாதிக்கப்படுவதுபோல...

சில மாதங்களுக்கு முன்னர் வவுனியாச் செய்தி ஒன்று கொழும்புப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்திருந்தது. அங்குள்ள கோயில்குளம் சிவன்-விஷ்ணு கோயில்களில் நிரந்தரமாகப் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிபெருக்கிகளினால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அசௌகரியங்கள் பற்றி அதிலே விளக்கப் பட்டிருக்கிறது. இடைவிடாது ஒலிக்கும் ஒலிபெருக்கிச் சத்தத்தால் மாணவர்களின் படிப்புக்கு இடையூறு ஏற்படுகிறது, குழந்தைகளின் உறக்கம் கெடுகிறது, நோயாளிகள் அமைதி யின்றித் தவிக்கிறார்கள், ஊரில் அமைதியே இல்லாமற் போய் விட்டது, வீடுகளில் வானொலிப் பெட்டியோ தொலைக் காட்சிப் பெட்டியோ போடமுடியாமலும், ஒருவரோடு ஒருவர் கதைக்க முடியாத நிலையும்கூட ஏற்பட்டிருக்கிறதாம்...

இங்கு மட்டும் என்னவாம்? 'இருபது பேர்களுக்கு ஒரு கோயில்' என்ற அளவுக்கு கோயில்கள் பெருகிவருவதாக ஓர் அன்பர் 'உதயன்' வாசகர் திருமுகத்தில் குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது. அதேபோல இன்னொருவர் 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பதை மாற்றிச் சொல்ல வேண்டிய அளவுக்கு இங்கு ஒலிபெருக்கி உபத்திரவம் பெருகிவிட்டதாகக் குறிப்பிட்டதும் நினைவுக்கு வருகிறது... இதனை எழுதிக் கொண்டிருக்கையில் கூட 'ஆலயங்களின் நிர்வாகிகளுக்குப் பணிவான வேண்டுகோள்' என்ற தலைப்பில் நீராவியடி மாணவர்களின் ஆதங்கம் வெளிப்பட்டிருக்கிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்க் கந்தன் ஆலயம், மருதடி விநாயகர் ஆலயம், துர்க்கையம்மன் ஆலயம் - இங்கெல்லாம் விழாக்காலங்களில் பொருத்தப்படும் ஒலிபெருக்கிகளால் மக்களுக்கோ, பக்தர்களுக்கோ உபத்திரவங்கள் ஏற்படுவதில்லை. அங்கெல்லாம் தேவை கருதியும் பக்திச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும்தான் அவைகள் பயன்படுத்தப் படுகின்றன. அவ்வளவுக்கு கோயில் நிர்வாகிகளும் ஆன்றவிந்தடங்கிய சான்றோர்களாக இருக்கிறார்கள்... (கோயில் சூழலுக்கு வெளியே நடப்பவைகளுக்கு அவர்கள் எப்படிப் பொறுப்பாக முடியும்...?)

ஆனால் கிராமங்களின் நிலை அப்படியல்ல! தேவைக்கு அதிகமான பணத்தை வைத்துக்கொண்டு செலவிடும் வழிதெரியாது வீம்புக்காக ஒலிபெருக்கியில் செலவிடுகின்றார்கள். (அவர்களுடைய சிக்கனமெல்லாம் ஐயருக்கு சம்பளம் கொடுப்பதில்தான்) "நீங்கள் வரா விட்டாலும் நாங்கள் உங்களை விட்டுவைக்கமாட்டோம்' என்பது போல தெருநீளம் ஒலிபெருக்கிகளைக் கட்டி மக்களின் அமைதியைக் கெடுத்து வருகிறார்கள்...

இவை ஆலயச் சூழலில் பக்தி மார்க்கத்துக்கு ஒவ்வாத 'சங்கதி'களை ஒலிபரப்பிவிடுவது... அது வேறு தனிக் கதை... சுவைக் கதை கூட...

இந்த அத்துமீறல்கள் தடுக்கப்படவேண்டும். போகிற போக்கை பார்த்தால் எங்கே வவுனியா கோயில்குளம் கோயில்களின் 'முன்மாதிரி'(?)யைப் பின்பற்றி இங்குள்ள கோயில்களுக்கும் நிரந்தர ஒலிபெருக்கிகள் வந்துவிடுமோ என்று பயமாகவிருக்கிறது. (கோயிலிலே குழப்பம் விளைவித்தேன், கோயில் கூடாது என்பதற்காகவல்ல... என்று 'பராசக்தி' கணேசன் கூறிக்கொண்டே போகிறார். நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறேன் இன்று கோயில்களில் குழப்பம் செய்வதே இந்த ஒலிபெருக்கிகள்தான்.)

வீரசிங்கம் மண்டபத்திலே நடந்த ஒரு நாடக விழாவுக்கு மண்டபம் நிறைந்த கூட்டம்... இடையிலே நாடகம் பற்றிக் கருத்துரை வழங்குமாறு காலஞ்சென்ற தேவன் - யாழ்ப்பாணம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். தேவன் மேடைக்கு வந்து ஒலிவாங்கி முன்நின்று அதன் சுரையை முறுக்கி உயரத்தைப் பதிக்கிறார். அப்படியே அதனைத் தூக்கிச் சென்று மேடையின் ஓரத்தில் வைத்துவிட்டுப் பழைய இடத்துக்கு வருகிறார்... தம்மால் மண்டபத்தின் கடைசி வரிசையில் இருப்பவர்களுக்கும் கேட்கக் கூடியதாக ஒலிபரப்பி இல்லாமலே பேசமுடியும் என்ற முன்னுரையுடன் பேசுகிறார்... இது எம்மில் பலரும் அறிந்த ஒரு பசுமையான நிகழ்ச்சி... இங்கே என்னவென்றால் 'இருபது மகா ஜனங்களுக்'கும் ஒலி பெருக்கி தேவைப்படுகிறதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆலயங்களுக்கு ஒலிபெருக்கிகள்

*சி*ல வாரங்களுக்கு முன்னர் ''இறைவன் விரும்பியபடி நடந்து கொண்டால்...'' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அதெல்லாம் ஒரு குறிப்பிட்ட ஊரிலுள்ள ஒரு கோயில் என்றில்லாமல் அதிலே குறிப்பிட்டவாறுள்ள எந்தக் கோயிலுக்கும் பொருந்த வேண்டும் என்பதுதான் எனது விருப்பமாயிருந்தது.

அப்படியிருக்க அதனைப் படித்த சிலர் ஒலிபெருக்கி விவகாரம் சம்பந்தப்பட்ட மட்டில் - அதெல்லாம் தங்கள் கோயிலைப் பற்றித்தான் என்று 'உரிமை கோரி' 'ஒப்புதல் வாக்குமூலம்' அளிப்பது போலச் சிலர் நடந்து கொண்டார்களாம். அதெல்லாம் நான் எதிர்பாராத - எண்ணாத - ஒன்றாக இருந்தாலும் தொப்பி யாருக்குப் பொருந்துகிறதோ அவர்கள் அதையெடுத்து அணிந்து கொள்ளலாம்தானே! மொத்தத்திலே அக்கட்டுரை பலரையும் பல விதத்திலும் சிந்திக்க வைத்திருக்கிறதாம்!

ஓர் அன்பர் இப்படித் தெரிவித்தார். தங்கள் கோயிலுக்கும் 'ஈ அடிச்சான் கொப்பி' போல அப்படி நிரந்தர ஒலிபெருக்கிச் சாதனங்களைக் 'கொள்முதல்' செய்தால் என்ன என்று எண்ணியிருந்தார்களாம். மேற்படி கட்டுரை தந்த விளக்கத்தையடுத்து அது பற்றி மீண்டும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதென்ன 'ஈயடிச்சான் கொப்பி' உங்களுக்குத் தெரியுமா? அதற்கான விளக்கம் இதுதான் . ஒரு கெட்டிக்கார மாணவன் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தான். அவனுக்குப் பக்கத்திலே 'கொப்பியடிப்பதிலே' கெட்டிக்காரனான இன்னொரு மாணவனும் விடை எழுதிக் கொண்டிருந்தான். நல்ல வேளையாகப் பரீட்சை மேற்பார்வையாளர்களின் காவலோ, கவனிப்போ அவ்வளவு தூரத்துக்கு இருக்க-வில்லை. இவன் கெட்டிக்கார மாணவனின் விடைகளை அப்படியே 'அச்சொட்டாக'ப் பார்த்து எழுதிக் கொண்டிருந்தான். தனது பெயர், அல்லது சுட்டெண்களைச் சரியாக எழுதினானோ தெரியவில்லை.

எல்லாம் சரி, கெட்டிக்கார மாணவன் விடைத்தாள்களை ஒன்று சேர்த்துப் 'பின்' பண்ணும் சமயம்...அந்நேரம் பார்த்துத் தற்செயலாக ஈ ஒன்று வந்து அவனின் தாள்மேல் இருக்க அதையும் அடித்துவிட்டுத்தான் அவன் பின் பண்ணியிருக்கின்றான். அவனைப் பின் பற்றி விடையெழுதிக் கொண்டிருந்த அந்தக் 'கொப்பிக் கற்' மாணவன் - அதுவும் பரீட்சையோடு சம்பந்தப்பட்ட ஒரு செயல்முறைதான் என்று எண்ணியிருக்கிறான்! அவனுக்கு முன்னால் ஈ வரவில்லை. அதனாலென்ன? பக்கத்து மேசையெல்லாம் தேடி அலைந்து ஓர் ஈயை அடித்துப் பிடித்துக் கொண்டு வந்து... அதன் பின்னர் தான் அவன் பரீட்சை எழுதியதன் முழுப் பயனையும் உணர்ந்தானாம்! அது நிற்க.

கோயில் சட்டதிட்டங்கள் விதிமுறைகள் என்று வகுத்துக் கொண்டு அதன்படி நடந்து கொள்ளும் பட்சத்தில் நிரந்தர ஒலி பெருக்கிகளையிட்டுப் 'பயம் கொள்ள' வேண்டியதில்லை என்கிறார் ஒருவர். திருவிழா - பூசைகளின் உபயகாரர்கள் போட்டி போட்டுக் கொண்டு தனியார் ஒலிபெருக்கிகளை மேலதிகமாக வாடகைக்கு அமர்த்தி தெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளம் ஒலிபெருக்கிகள் (குழாய்கள்) பொருத்துவதைக் கட்டுப்படுத்தலாம். 'சிவபூசையில் கரடி' என்பது போல வேண்டாத சங்கதிகள் - விளம்பரங்களுக்கு இடமில்லாமற் போவதுடன், சொந்த ஒலிபெருக்கியில் அளவோடு நின்று கட்டுப்பாடுகளுடன் நடந்து கொள்ள முடியும்.

இப்படியெல்லாம் கூறுகிறார் அவர்.

ஆமாம், அரசாங்க வானொலி 'ஒலிபரப்பு விதிகள்' என்று வைத்திருப்பது போல கோயில்களும் அப்படி ஒன்றை வைத்துக் கொண்டு அதன் கட்டுப்பாட்டுக்குள் நடந்து கொள்ளலாம். 'குரங்கின் கைப் பூமாலை' என்பது போலன்றி ஆன்ற விந்தடங்கிய சான்றோர்களை அதற்குப் பொறுப்பாக விட வேண்டும். இதெல்லாம் மேலே குறிப்பிட்ட அன்பர் சொன்னதன் திரண்ட கருத்தாகும்.

அத்தியடியைச் சேர்ந்த சுதன் என்பவர் தங்கள் பிள்ளையார் கோயிலைப் பொறுத்தவரை தாங்கள் அப்படித்தான் நடந்து கொள்வதாகக் குறிப்பிட்டார். தங்கள் கோயிலில் நிரந்தரமாக ஒலிபெருக்கிச் சாதனங்கள் இருந்த போதிலும் தாங்கள் கட்டுப்பாட்டுடன் சொற்பொழிவு, தவில் -நாதசுரம் போன்ற மங்கள இசைகளுக்கே பெரும்பாலும் பயன்படுத்துவதாகச் சொன்னார். ஒவ்வொரு நாளும் என்றில்லாமல் உற்சவ காலங்கள், திருவெம்பாவை, சதுர்த்தி போன்ற நாட்களிலே மட்டும் அதிகாலையிலே அது சம்பந்தமான பதிகங்களைச் சிறிது நேரம் ஒலிபெருக்குவார்களாம். அதெல்லாம் அத்தினங்கள் பற்றிய ஒரு விழிப்புணர்வை மக்களுக்கு நினைவுபடுத்துவதாக அமையுமாம். இதையும் வரவேற்கலாம்தானே! இரண்டு பஞ்சாங்கங்களில் அந்தந்தக் கோயில் எதனைப் பின்பற்றித் திருவிழாக்கள் - பூசைகளைச் செய்கிறது என்பதையாவது மக்களுக்குச் சொல்லத்தானே வேண்டும்?!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது சிறிய வகுப்பிலே படித்த ஒரு பாடம் ஞாபகத்துக்கு வருகிறது. ஆடு மேய்க்கும் ஒரு சிறுவன் யாருமற்ற வயல் வெளியிலே நின்று '' ஓநாய்... ஓநாய்...'' என்று கத்துவானாம். குடிமக்கள் அலறி அடித்துக் கொண்டு அவனைக் காப்பாற்றச் சென்றால் அவன் அங்கே குறும்புச் சிரிப்புடன் நிற்பான். இப்படி பல நாள்கள். ஒரு நாள் உண்மையாகவே ஓநாய் வந்துவிடுகிறது. அவன் அவலக் குரல் கொடுத்தும் யாருமே அவனைக் காப்பாற்றச் செல்ல வில்லை...!

உடுவிலைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபரான திரு. செ.தில்லைநாதன் தமது ஓர் அனுபவம் பற்றிச் சொன்னார். தாம் ஒரு கோயிலுக்குச் சென்றதாகவும், அங்கு ஏழாம் திருவிழா உபயகாரர் திரு...வை காரியாலயத்துக்கு வருமாறு திரும்பத் திரும்ப ஒலிபெருக்கியில் சொல்லிக் கொண்டிருந்தார்களாம்...

அந்தக் கோயிலில் 'எள் போட்டால் எள் விழாத' அளவுக்கு அல்லது ''பார் சிறுத்தலின் படை பெருத்ததோ படை பெருத்தலின் பார் சிறுத்ததோ'' என்ற அளவுக்கு கூட்டமாயிருக்கும். அதனால் உபயகாரரைத் தேடிக் கண்டு பிடிக்க முடியாதிருக்கும் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் மீண்டும் சொன்னார் -

''இத்தனைக்கும் அந்த நேரத்திலே அங்கு உள்வீதி, வெளிவீதி எங்கும் நின்ற சனம் இருபது பேர்கள்கூட இருக்காது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாத்திரியாரின் சாப்பாட்டுக் கடை

**மா**னிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்னாலுள்ள சாத்திரியாரின் சாப்பாட்டுக் கடை பற்றியும், அங்கே வந்து போகும் 'கொமிசனர்' பற்றியும் முன்னொரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். அவரைப் போலவே இவருக்கும் சொந்தப் பெயருக்குப் பதிலாகச் சாத்திரியார் என்ற பெயரே நிலைத்து விட்டது. கல்லூரியின் நண்பகல் இடைவேளையின் போது அங்கு வியாபாரம் அமோகமாக நடக்கும் என்றாலும் கடை என்னவோ சுண்ணாம்புச் சுவரிலான ஓலைக் கொட்டகைதான். உள்ளே வகுப்பறைகளை நினைவூட்டுவது போல வரிசையாக நீளமாக வாங்கு - மேசைகள் போடப் பட்டிருக்கும். கடையின் முன்பக்கத்தில் மேசை நாற்காலியும் ''பொயிலரும்'' இருக்கும். நாற்காலி பெயருக்குத்தான் இருக்கும். அதிலே சாத்திரியாரோ, பின்னால் வரப்போகின்ற அவரது மனைவியோ அமர்வதென்பது அபூர்வத்திலும் அபூர்வம்... தேநீர்க்கடை ,சாப்பாட்டுக் கடை என்பது தெரிய வேண்டும் என்பதற்காக அப்போதெல்லாம் இந்த "பொயிலரை" கடைக்கு முன்னர்தான் வைத்திருப்பார்கள். அதற்கு முன் நின்று தேநீரை அடித்து ஆற்றுவதே ஒரு விளம்பரம்தானே...? தற்போதைய கொத்து றொட்டி, அப்பக்கடை போல... அந்த ஓசை ஒலியுடன் தெருப்புழுதியும் சேரவேண்டும்...

சாத்திரியாரின் கடையில் 'இடம் கிடைக்காது - உணவு கிடைக்காது' என்று நினைப்பவர்கள் மானிப்பாய் ஆலடிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்குத் தான் வரவேண்டும். அங்கேயும் அப்போது இரண்டு சாப்பாட்டுக் கடைகள் இருந்தன. அங்கும் வியாபாரத்துக்குக் குறைச்சல் இல்லை. இருந்தாலும் சாத்திரியார் கடைச் சாப்பாடு 'ஏ வண்' என்பதால் உங்களை மீண்டும் அங்கேயே அழைத்துச் செல்கின்றேன்.

சாத்திரியார் நாலுமுழ வேட்டியை மடித்துக் கட்டி யிருப்பார். அவர் சேட் அணிந்து நாம் பார்த்ததில்லை. உடம்பு முழுவதும் விபூதி சந்தனத்தை அழுத்திப் பூசி இருப்பார். உரத்த அதிகாரத் தொனியில்தான் கதைப்பார். ஆனால் சண்டைக்காரர் அல்லர் - எல்லாவற்றையும் சமாளிக்கக் கூடியவர்.

அவருக்குச் சோதிடமும் தெரிந்திருக்க வேண்டும். 'அமளி' குறைந்த நேரங்களில் பஞ்சாங்கமும் கையுமாக அந்த நாற்காலியில் (அதுதான் ஏற்கனவே சொன்னேனே அபூர்வம் என்று) இருந்து ஏதோ குறிப்புகள் எழுதிக் கொண்டிருப்பார். அதைவிட சீட்டுக் கொம்பனி நடத்தியதாகவும் தெரிகிறது. 'கொமிஷனர்' அங்கு வந்து போவதுகூட அது சம்பந்தமாகத்தானாம். கல்லூரி ஆசிரியர்கள் சிலர் கூட இவரிடம் சீட்டுப் பிடிப்பார்களாம். பண வசூலுக்காக ஒரு சில உயர் வகுப்பு மாணவர்களை உதவிக்கு வைத்திருந்தாராம்...

சாப்பிடப் போனால் அந்த வேலையை முடித்துக் கொண்டு போவதற்குப் பதில் உந்தத் 'துளவாரங்கள்' எல்லாம் எதுக்கென்று நீங்கள் கேட்பதற்குமுன் வந்த வேலைக்கு வருகிறேன்...

அக்காலத்தில் உணவகங்களில் வாழை இலையை விட வாழை மடல்கள்தான் அதிகமாகப் பாவிப்பார்கள். காய்ந்த வாழை மடல்கள் அளவளவாக வெட்டிப் பொருத்திக் கட்டுக் கட்டுகளாக விற்பனைக்கு வரும். இந்தக் கட்டுக்கள் பெருமளவில் கொழும்பு போன்ற நகரங்களுக்கும் ஏற்றுமதியாவது உண்டு. சாத்திரியார் கடையிலும் வாழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடல்களில்தான் உணவுகள் வழங்கப்படும். உணவு என்றால் தோசை, இடியப்பம், இட்லி, பிட்டு ... இவைகள்தான். அது மதிய உணவுதான் என்றாலும் சோறு சாப்பிடுவதில் எவரும் அக்கறைப்படுவதில்லை. வடை, வாய்ப்பன் போன்ற சிற்றுண்டிகளுக்கு மட்டும் அலுமினியத் தகடுகள்....

சாத்திரியார் அனேகமாகத் தனியாக நின்றே எல்லாவற்றையும் கவனிப்பார். முதல் சுற்றில் எல்லாருக்கும் உணவு பரிமாறிவிட்டு அவர்களுக்குத் தேநீரும் போட்டுக் கொடுப்பார். 'கட கட' என்று தேநீர் கலந்து மிக நீளமாக உயர்த்தி ஆத்துவார். தகர மூக்குப் பேணிகள்தான் அப்போதெல்லாம் தேநீர்க் கடைகளிலும், தண்ணீர்ப் பந்தல்களிலும் புழக்கத்தில் இருந்தன. எச்சில் படுத்தாமல் அண்ணாந்து குடிப்பதற்கு அவைகள் ஏற்றன. கிளாஸ் பயன்படுத்தப்படாததற்குக் காரணம் ஒரு வேளை சாத்திரியார் போன்றவர்களின் அடித்து ஆத்துதலுக்கு நின்று பிடிக்காது என்பதாக இருக்குமோ?

இடம் காலியாகக் காலியாகப் புதியவர்களுக்கு உணவு பரிமாறப்படும். ஓடி வந்து மீண்டும் மீண்டும் தேநீர் போடுவார். மேசையடிக்கு வந்து பணமும் பெற்றுக் கொள்வார். ஒவ்வொருவரும் தாம் தாம் எடுத்தவை என்ன என்பதைச் சொல்லிப் பணத்தைக் கொடுப்பார்கள்.

நெருக்கடியான சமயங்களில் ஒய்வு கிடைத்தால் சாத்திரியாரின் மனைவியும் உதவிக்கு வருவார். மேசைக்கு முன் நின்று பணம் பெறுவதுதான் அவரின் முக்கிய வேலையாக இருக்கும். தேநீரும் போடுவதுண்டு என்றாலும் அது ஆர்ப்பாட்டம் இல்லாத 'நீளம்' குறைந்ததாகத்தான் இருக்கும். இவர் காட்சிக்கு எளியராக இருந்தாலும் உள்ளே சமையலுக்கும் உணவுப் பண்டங்களின் சுவைக்கும் காரணமாக இருந்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் சாத்திரியார் கடையில் சாப்பிட்டிருக்கிறேன் என்பது குறிப்பிடத்தக்கது. வீட்டிலே சாப்பாடு கட்டித் தருவார்கள். பூவரசம் இலையில் சூடு ஆறாத நிலையில் அவசரத்தில் வைத்து கட்டிய உணவு சாப்பிடும் சமயம், உள்ள சுவையும் இழந்து ... அதைவிடக் கல்லூரிப் பிரார்த்தனை முடிந்து வகுப்புக்குள் நுழைந்து பார்த்தால் அலமாரிக்குள் வைத்த மாணவர்களின் சாப்பாட்டுப் பொதிகளை நாய்கள் சிலவேளை களவாடியிருக்கும். இப்படி எப்போதாவதுதான் நடப்பது உண்டு. இதைச் சாட்டாக வைத்து கடைச் சாப்பாட்டுக்கே பெரும்பாலும் பணம் பெற்றுச் செல்வேன். இருபது சதம் கிடைத்தால் மூன்று தோசையும் ஒரு பால்தேநீரும்... இருபத்தைந்து சதம் கிடைத்தால் கூடவே கடலை, நெல்லிக்காய், ஜம்புக்காய் என்று அவற்றுக்கும் பணம் தேறும். அந்த வாழை மடலில் சட்னியுடன் சேர்த்துச் சாப்பிட்ட தோசையை நினைக்கும் போது இப்பொழுதும் வாயூறும்... ஆகா என்ன சுவை... இப்பொழுதும்தான் தோசை சுடுகிறார்கள், சம்பலும் 'சரிக்கட்'டுகிறார்கள். வெள்ளித் தட்டில் வேறு வைத்துத் தருகிறார்கள். இருந்தாலும் அது போல வருவதில்லையே!

பின் குறிப்பு: சத்தியமாகச் சொல்லுகிறேன் சாத்திரியாரின் மனையாள் மனையியல் டிப்ளோமா எதுவும் பெற்றதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மெமோறியலில் நடந்த 'மூன்லைட் காணிவல்'

அக்காலத்திலே எங்கள் சின்னையா வீட்டுக்கு சுப்பிர மணியம் என்பவர் எப்போதாவது வந்து போவார். அவர் கந்தரோடை செல்லப்பரின் மகன் என்றும் சின்னையாவுக்கு அவர் பெறாமகன் என்றும் பின்னர் அறிய முடிந்தது. நாங்கள் அவரை 'மணியம் மாமா' என்றுஅழைப்போம்.

அரவிந் வேட்டி, சில்க் நாஷனல், உத்தரியச் சால்வை 'சென்ட்' வாசனை சகிதம் அவர் வந்து போகிறார் என்றால் அவருக்கு ராஜமரியாதைதான். மற்றாஸிலிருந்து வந்ததாக வாய்க்கு வாய் பெருமையடித்துக் கொள்ளும் அவர் பெரும்பாலும் பேசுவதும் 'அந்த'த் தமிழ்தான்....

மற்றாஸ் அவருக்கு 'மாமி'யார் வீடு போலத்தான்... அவர் 'சட்டப்படி' திருமணம்(?) செய்து கொள்ளாது கடைசிவரை பிரம்மச்சாரியாகவே வாழ்ந்தவர்... 'பாகவதர்' தோற்றமுடைய அவர் 'கலை'யுணர்வு மிக்கவர். இந்தியாவிலிருந்து அவ்வப்போது நடனக் குழுக்களை அழைத்து வந்து நாட்டின் பல பகுதிகளிலும் 'சதிர்க் கச்சேரி'கள் நடத்தி வந்தவர்.

அப்பொழுதெல்லாம் இப்படி இந்தியாவிலிருந்து நாட்டியக்காரர்களையும் நாதசுர - தவில் வித்துவான்களையும் அழைத்து வந்து கச்சேரிகள் நடத்துபவர்கள் பலர் இருந்திருக் கிறார்கள். சுதுமலையிலும் இதே பெயரில் இன்னொருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கிறார். அவரை 'லீமா மணியம்' என்றழைப் பார்கள். அவர் மேடை நாடகங்களும் ஆடியிருக்கிறார். அதனால்தான் 'லீமா' என்ற பெயர் சிலேடையாக அவரின் பெயரோடு ஒட்டிக் கொண்டிருக்கவேண்டும்.

நாட்டியம்-பரதம் என்பதைவிட 'சதிர்க் கச்சேரி' என்பது அதற்குப் பொருத்தமான பெயர்தான். இப்பொழுதெல்லாம் எவர்களையாவது 'போலிப்பு'ச் செய்து அவர்கள் போல பாடி இரசிகர்களை மகிழ்விக்கிறார்களே சில இசைக் குழுவினர்... அதே போன்றதொரு 'பாவனை' நாட்டியம்தான் இந்த சதிர்க் கச்சேரியும். முக்கியமாக சினமா நாட்டியப் பாடல்களை என்று சொல்லலாம்...

எனது நண்பர் காலஞ்சென்ற நடிகர் மா. அருமைநாயகம் இதனை வேடிக்கை செய்து ஆடிக் காட்டுவார். 'பச்சைக் கிளி பாடுதே, பக்கம் வந்தே ஆடுதே, பாரு உன் துன்பம் பறந்தோடுதே'-இது பாடல். நாட்டியக்காரி 'பச்சைக்கிளி பாடுதே' என்னும்போது இடது கையைக் சுழற்றி ஆகாயத்தைக் காட்டுவாளாம். 'பக்கம் வந்தே ஆடுதே' என்னும்போது வலது கையைச் சுழற்றி கிளியை அணைப்பது போல காட்டுவாளாம். 'பாரு உன் துன்பம் பறந்தோடுதே' என்னும்போது இரண்டு கைகளையும் முன்னே கொண்டு வந்து மேலும் கீழும் அசைத்து அசைத்து காற் சலங்கை ஒலிக்க பின்னணி இசை (முக்கியமாக சல்லாரி) அதைவிடப் பலத்து ஒலிக்க மேடையைச் சுற்றிப் படுவேகமாக வட்டம் போடுவாளாம்...

சதிர்க் கச்சேரிகள் நடத்திவந்த சுப்பிரமணியம் என்ற மணியம் பின்னர் ஒரு மாற்றமாக காணிவலுக்குத் தாவினார். ஏற்கனவே வேறு இடங்களில் நடத்திவிட்டு மானிப்பாய் மெமோறியல் க்ல்லூரி மைதானத்தில் 'மூன்லைட்' என்ற பெயரில் நடத்திய காணிவல் பற்றி மேற்கொண்டு கவனிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதுள்ள கல்லூரிக்கும் விளையாட்டு மைதானத்திற்குமிடையே அப்போது ஒரு பாழடைந்த மண்டபம் இருந்தது. மண்டபம் அரைகுறை வேலைகளுடன் கைவிடப்பட்டு, அப்படிக் கைவிடப்பட்டே பல்லாண்டு களாகியிருக்க வேண்டும். 'காணிவல்' அந்த மைதானத்தில் என்றும் அது பற்றித் திட்டமிடும் அலுவலகமாக அந்த மண்டபம் என்றும் நிச்சயிக்கப்பட்டு வேலைகள் நாளிலும் பொழுதிலுமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

மைதானம் துப்புரவாக்கப்பட்டு சுற்றிவர காட்சிக் கூடங்களாகப் பந்தல்கள் அமைக்கப்பட்டு வந்தன. அதேவேளை அலுவலகமும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. 'காணிவல்' பற்றிய சுவரொட்டி விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள், பசை வாளிகள் ஒரு புறம்... 'காணிவல்' நுழைவு வாயில், காட்சிக் கூடங்களை அலங்கரிக்கும் பொறுப்பு எனது தந்தையாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் விதவிதமாகப் பட்டங்கள், கட்டுவதிலும், வெளிச்சக்கூடு, பூக்கள், மாலைகள் போன்ற பேப்பர் வேலைகள் செய்வதிலும் ஏற்கனவே பெயர் பெற்றவர். அவரும் அவரது உதவியாளர்களும் அந்த வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். இது இன்னொரு புறம்... அவர் இன்னொரு பொறுப்பினையும் தாமாகவே ஏற்றுக் கொண்டிருந்தார். மானிப்பாய் ஆனந்தா வீதிச் சந்தியிலுள்ள அந்த சைக்கிள் கடையில் 'காணிவல்' தேவைக்கென ஓடுவதற்காக ஒரு சைக்கிளை நாள் வாடகைக்கு எடுத்துக் கொடுத்திருந்தார்.

ஓர் அரசியல் கட்சி மாநாட்டு பாணியைத் தோற்றுவிடும் அளவுக்குத் தடபுடலான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. மணியத்தாருக்கும் மூச்சுவிட நேரமில்லாத அளவுக்குத் தலைக்கு மேல் வேலைகள். சின்னையா வீடு... அலுவலக மைதான மேற்பார்வைகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி வேலைகள்... என்று ஓடித்திரிந்தார். நாங்களும் ஆசையால் உந்தப்பட்டு 'சரீர' உதவிகளைச் செய்து வந்தோம். எங்களுக்கெல்லாம் காணிவலுக்கு இலவச பாஸ்களல்லவா?

'காணிவல்' தொடங்கப் போகும் நாளும் நெருங்கி வந்து கொண்டிருந்தது. ஆனால் 'மெரிக்கோ-ரவுண்டு' வந்து சேரும் அறிகுறியைக் காணவில்லை. எமது கவலையைப் போக்கும் வகையில் 'கவலையை விடுங்கள்; எல்லாம் உரிய நேரத்தில் வந்து சேரும்' என்று சொல்லப்பட்டது.

இதோ, அடுத்த நாள் - 'காணிவல்' தொடக்க நாள்-

அதற்கெனச் செய்த விளம்பரங்கள் போதாதென்று மணியத்தார் நினைத்திருக்க வேண்டும். அதனால் ஒரு விநோதமான-பிரமாதமான-அதற்கு முன் யாரும் இங்கு செய்திருக்காத-புதுமாதிரியான- 'மதறாஸ் பாணி' விளம்பர நிகழ்ச்சிக்கு ஏற்பாடாயிற்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மெமோறியலில் நடந்த 'மூன்லைட் காணிவல்' (2)

தவில் நாதஸ்வரம் என்பது போல நையாண்டி மேளம், குழல் என்பதும் தமிழ்நாட்டுக் கிராமியக் கலைகளில் ஒன்றாகப் போற்றப்பட்டு வருகிறது. மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை இந்திய வம்சாவழித் தொழிலாளர்கள் மத்தியில் இந்த வாத்தியங்களைக் கையாளக்கூடிய சிலர் அப்போதிருந்தனர்.

தென்னிந்தியப் பாணியில் 'மூன்லைட்' காணிவலுக்கு விளம்பரம் செய்யத் தீர்மானிக்கப்பட்டதாகச் சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேனல்லவா? அது இப்படித்தான்.

ஒரு மாட்டு வண்டியில் காணிவல் பற்றிய பெரிய விளம்பரப் பதாகைகளைக் கட்டி... அதற்கு முன்னால் பொய்க்கால் குதிரையாட்டம் - நையாண்டி மேளக் குழுக்களுடன் இரவிரவாக ஊர்வலம்... மானிப்பாயையும் அதனைச் சூழவுள்ள கிராமங்களையும் சுற்றி வந்தது. சாவியின் 'வாஷிங்டனில் திருமணம்'நகைச்சுவை நாவலில் காஸ் விளக்குகளுடன் திருமண ஊர்வலம் சென்றபோது தெரு நாய்கள் குரைத்து ஆரவாரம் செய்ததாக வருகிறது... 'சிவபெருமான் இவ்விடத்தில் வந்து சில்லாலைப்பக்கம் நடந்த' போது, 'அவர் கோலம் கண்டு இவ்விடத்து நாய்களும் அவரை விட்டு வைக்கவில்லை' என்று நமது மகாகவி அவர்களும் தமது 'குறும்பா' ஒன்றில் குறிப்பிடுகிறார்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோமக்ஸ் வெளிச்சத்துடன் சென்ற எமது ஊர்வலத்துக்கும் 'இந்த வரவேற்பு'க்குக் குறைச்சல் இருக்கவில்லை.

காணிவல் மைதானத்துக்கு வருவோம்... தொடக்க நாள்... மின் பிறப்பாக்கி இயந்திரம், ஒலிபரப்புச் சாதனங்கள் எல்லாம் வந்து விட்டன... நமது கட்டைப் பரமகுருதான் ஒலிபரப்பாளர். மைதானத்தில் உள்ள மாமரங்கள் யாவும் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ஆனால் முக்கியமான 'மெரிக்கோரவுண்ட்' இன்னமும் வந்தபாடில்லை. அது ஒன்று இருந்தாலே போதும்; காணிவல் கலகலப்பாகிவிடும். அதுதான் இங்கு வரவில்லையே... அப்படியானால் முதல் நாள் காணிவலில் என்னதான் இருந்தது என்றால்...?

ஒரு காட்சிக் கூடத்திலே மிகப்பெரிய அளவுக்கு விளைந்த ஒரு பாரிய மரவள்ளிக்கிழங்கு... அதற்கருகே ஒடுங்கிய வாயுள்ள ஒரு பெரிய போத்தலுக்குள் போத்தல் வாயால் புகுத்த முடியாத பெரிய மாங்காய்... மாங்காய் பிஞ்சாக இருக்கும்போது, அதனைப் போத்தலுக்குள் விட்டு, போத்தலையும் மரத்தில் கட்டித் தொங்கவிட்டு வளர்த்திருக்க வேண்டும். வேறு நாலு ஐந்து கூடங்கள் Gambling எனப்படும் சூதாட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. ஐஸ்கிறீம் கடை ஒன்று; சிற்றூண்டிச் சாலை ஒன்று... ஏனைய கூடங்கள் காணிவல் முடிவடையும்வரை வெறுமையாகவே இருந்தன.

அடுத்தடுத்த நாள்களில் காணிவலில் மேலும் சில நிகழ்ச்சிகள் புகுத்தப்பட்டன. அவைகளில் இரண்டைக் குறிப்பிடலாம்.

ஒன்று காணிவல் தொடங்கியதையடுத்து ஒருவரை உயிருடன் பெட்டியில் வைத்து ஆறடி நீளக்குழியில் இறக்கி மண்ணில் புதைத்து விடுவார்கள். பின்னர் காணிவல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு நேரத்தில் குழியைத் தோண்டி அவரை உயிருடன் மீட்டெடுப்பார்கள்.

அடுத்தது, மானிப்பாய் அரியத்தின் மோட்டார் சைக்கிள் பாய்ச்சல். அவர் படுவேகமாகப் பலத்த சத்தத்துடன் மோட்டார் சைக்கிளில் ஓடிவந்து சுமார் 20 அடி தூர இடைவெளியைப் பாய்ந்து கடப்பது, பார்வையாளர்களை மயிர்க்கூச்செறிய வைக்கும் சாதனையாகும்.

இதைவிட சூதாட்டக் களத்திலும் ஆரவாரத்துக்குக் குறைவிருக்காது. பணம் போட்டு 'ஒன்றெய்தி நூறிழக்கும்' சூதர்கள் ஒருபுறமும், அவைகளை வேடிக்கை பார்ப்பவர்கள் இன்னொரு புறமுமாக எந்நேரமும் அங்கு கூட்டத்துக்குக் குறைவிருக்காது. இங்கு வாக்கு வாதம் ஏற்பட்டு அது கைகலப்பிலும் முடிவதுண்டு. ஒரு முறை குலத்துங்கம் விதானை என்பவருக்கும் சேனாதி என்பவருக்கும் அவ்விடத்தில் ஏற்பட்ட வாக்கு வாதம் கைகலப்பு இழுபறி என்று தொடர்ந்தது. 'விலக்குப் பிடிக்க' யாரும் துணியாத நிலையில் இந்தச் சண்டை மைதானமெங்கும் ஊடுருவி வெகுநேரம்வரை நீடித்தது. காணிவலில் பார்ப்பதற்காக அதிகமாக ஒன்றுமில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு அன்று அதுவும் ஒரு விருந்தாக அமைந்தது.

அந்த 'மூன்லைட்' காணிவல் எதிர்பார்த்த வெற்றியைக் கொடுக்காததால் மணியத்தார் 'விட்டேனா பார்' என்று காரைநகரில் 'சன்லைட்' காணிவல் நடத்தப் புறப்பட்டு விட்டார். கிடுகுகள் - பந்தல்கால்கள் யாவும் லொறியில் அங்கு ஏற்றப்பட்டதுடன் எங்களுக்கும் அவருக்குமிடையிலான தொடர்பும் அறுந்து விட்டது. அவரும் மெல்ல மெல்ல 'தலைமறைவு' வாழ்க்கை நடத்தத் தொடங்கிவிட்டார். எனது தகப்பனார் காணிவல் தேவைக்கென எடுத்து விட்டிருந்த அந்தச் சைக்கிளையும் யாரோ, மணியத்தார் தனக்குத் தரவேண்டிய பணத்துக்காக எடுத்துச் சென்றுவிட... பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாதான் அந்த சைக்கிள் கடைக்காரனுக்கும் பணம் இறுக்க வேண்டிய கட்டம்...

இந்தச் சுப்பிரமணியம் வெகுகாலத் தலைமறைவுக்குப் பின்னர் கடைசியாகச் 'சுப்பிரமணியம் சாமி'யாராக கதிர் காமத்திலே ஒரு மடத்திலிருந்து பக்தர்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருந்ததாக அறிந்தோம்... சாமியார் கோலத்திலுள்ள அவரது படத்துடன் கூடிய விளம்பரங்கள் கூட கொழும்புத் தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவந்ததாக நினைவு...

எல்லாம் சரி எல்லாவற்றையும் அந்தக் காலம் அந்தக் காலம் என்று செர்ல்லுகிறீர்களே! இதையாவது எந்தக் காலம் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியுமா என்றுதானே கேட்கிறீர்கள்?

நிச்சயமாக முடியும். இதெல்லாம் நடந்தது (அதாவது காணிவல்) 'தேவதாஸ்' காலத்தில்... அப்பொழுது யாழ்ப்பாணம் ராணி திரையில் அப்படம் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்தது... காணிவலிலும் திரும்பத் திரும்ப 'எல்லாம் மாயைதானா இந்த ஏழை', 'உறவுமில்லை பகையுமில்லை ஒன்றுமேயில்லை...' என்பன போன்ற தேவதாஸ் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்கும். இப்பொழுதும் அந்தப் பாடல்களைக் கேட்டால் அந்த 'மூன்லைட்' காணிவலும் அந்த காணிவலை நினைத்தால் இந்தப் பாடல்களும் என் நினைவுக்கு வரத் தவறுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# படம் பார், பாடம் படி

படங்கள் வெளிவந்தால் - தமிழ்ப்படங்களைத்தான் சொல்லுகிறேன், அவைகளைச் 'சுடச்சுட'ப் பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வம் ஆர்வலர்கள் மத்தியிலே இருப்பதுண்டு. அதற்கேற்ற வசதி வாய்ப்புகளும் இப்பொழுது வந்து விட்டன. மினி சினமாக்கள், தொலைக் காட்சிப் பெட்டிகள், 'பீஸ்' எடுத்து டெக்கில் போட்டுப் பார்க்கின்ற... இப்படிப் பல...

ஆனால், அப்பொழுதெல்லாம் திரையரங்குகளை விட்டால் வேறு வழியில்லை. இலங்கையிலே திரைப்பட இறக்குமதியாளர்கள் என்று சினிமாஸ் லிமிட்டெற், சிலோன் தியேட்டர்ஸ் போன்ற நிறுவனங்கள் இருந்தன. அவைகளுக்கென்று கொழும்பிலே மட்டுமன்றி நாடு முழுவதும் தனித்தனியாக திரையரங்குகளும் இருந்தன. ஒரு திரைப்படத்தை எந்த நிறுவனம் இறக்குமதி செய்ததோ, அந்த நிறுவனத்துக்குரிய திரையரங்குகளில்தான் அப்படம் ஓட முடியும். முதல் சுற்றில் முக்கிய நகரங்களிலுள்ள அவர்களது ஐந்தாறு திரையரங்குகளுக்குத்தான் இந்த வாய்ப்பு கிடைக்கும். ஏனைய திரையரங்குகளுக்கு அடுத்தடுத்த வாய்ப்புகள் தான்.

எக்காரணம் கொண்டும் ஓர் இறக்குமதியாளரின் படத்தை இன்னொரு இறக்குமதியாளருக்குரிய திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரங்குகளில் பார்க்க முடியாது... 'ஐயாவின் நோயாளர்களை அம்மா பார்க்க மாட்டார். அம்மாவின் நோயாளர்களை ஐயா பார்க்க மாட்டார்...' என்பது போல என வைத்துக் கொள்ளுங்களேன்...

நகரத்திலேயுள்ள ஒரு திரையரங்கில் ஒரு படம் புதிதாகத் திரையிடப்படுகிறது என்றால், அங்கு திருவிழாக் கூட்டம்தான். யார் முந்திச் சென்று 'படம் பப்படமாகு முன்னர்' அதனைப் பார்ப்பது என்பதில் நகர மக்கள் மட்டுமல்ல, கிராம மக்களும் அங்கு அலைமோதுவார்கள்.

அப்படி ஒருவர் பார்த்துவிட்டு வந்தால் அவர் 'மனிதருள் மாணிக்கம்' என்றுதான் மற்றவர்களால் மதிக்கப் படுவார். அவரை 'எப்படி படம்?' என்று கேட்பதைவிட 'எப்படிப் பார்த்தீர்கள்?' என்று அந்தச் சாதனை பற்றித்தான் கேட்பார்கள்.

இப்படிப் படம் பார்த்த சிலர் மீண்டும் அப்படித் திரையரங்கினுள் புகுந்து பக்கத்திலிருப்பவர்களுக்கு, ஓடிக் கொண்டிருக்கும் படத்தைப் பற்றி 'தீர்க்க தரிசனம்' சொல்லப் போய்... பாராட்டுப் பெறுவதுமுண்டு... வாங்கிக் கட்டுவதுமுண்டு... படத்தைப் புதிதாகவே பார்த்துவிட வேண்டும் என அலைமோதிய ரசிகர்களைச் சமாளிப்பதற்காக அப்பொழுது ஓர் அதிசயம் கூட நடந்திருக்கறது.

யாழ்ப்பாணத்திலே நான் முன்னர் குறிப்பிட்ட ஒரு நிறுவனத்துக்குச் சொந்தமாக இரண்டு திரையரங்குகள் இருந்தன. அந்த இரண்டிலுமே ஒரு புதுப்படம் ஓடி யிருக்கிறது. அதாவது இரண்டு பிரதிகளைக் கொண்டல்ல, ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பது போல...

'ஒரு திடப்பொருளானது திரவத்தில் மூழ்கும்போது..' என மாணவர்கள் ஆர்க்கிமிடிஸ் தத்துவத்தை மனப்பாடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து ஒப்புவித்தலைப் போலச் சொல்லுகிறேன்... ஒரு திரையரங்குக்கு இரண்டு படம் காட்டும் கருவிகள் (புறஜெக்டர்ஸ்) அவசியம் இருக்க வேண்டும்.

ஒரு படம் என்பது பல படச் சுருள்களைக் கொண்ட ஒரு தொகுதியாகும். ஒரு புறஜெக்டரில் முதல் சுருள் ஓடி முடிந்ததும், அடுத்த புறஜெக்டரில் இரண்டாவது சுருளை ஓட விடுவார்கள். இப்படி மாறி மாறி ஓடும்போதுதான் திரையில் தொடர்ச்சியான படம் விழுகிறது.

மேலே குறிப்பிட்ட ஒரு திரையரங்கில் இரண்டு மணிக்கு என்றும் அடுத்த திரையரங்கில் இரண்டரை மணிக்கு என்பது போலவும் விளம்பரம் செய்தார்கள்.

முதல் அரங்கில் படத்தின் முதல்சுருள் ஓடி முடிந்து, அடுத்த சுருள் ஓடிக்கொண்டிருக்கும் அச்சமயம் புறஜெக்டரிலிருந்து கழற்றிய முதல் சுருளைத் திருப்பிச் சுற்றிக் கொண்டு படுவேகத்தில் அடுத்த திரையரங்குக்குக் கொண்டுபோய், அந்த புறஜெக்டரில் பொருத்தி ஓட விடுவார்கள். அதேபோல அங்கு இரண்டாவது சுருளும் ஓடி முடிந்து அடுத்த ஓட்டத்துக்குத் தயாராகிக்கொண்டிருக்கும்...

இப்படியாக நாடெங்கிலும் சுற்றி வருகின்ற ஒரு படப் பிரதி ஒரு திரையரங்குக்கு இரண்டாவது தடவையும் வருகிறதென்றால் அப்போது அதற்கு நுழைவுக் கட்டணம் அரைவாசிதான். அதாவது கலரிக்கு 65 சதத்துக்குப் பதில் 35 சதம்தான்!

போயும் போயும் கலரிப் புத்தியா என்று கேட்கிறீர்களா? 'வயித்தைக் கட்டி வாயைக் கட்டி'ப் பணம் சேகரித்துப் படம் பார்ப்பவர்கள் 'பல்கனியில்' இருந்தா பார்க்க முடியும்? தவிரவும் அப்பொழுதெல்லாம் கலரியைக் குறைத்து மதிப்பிடுவதில்லை. சுவரொட்டி விளம்பரங்களில் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலரிக்கு 'இவ்வளவு' என்று அதைத்தான் பெரிதுபடுத்திக் காட்டுவார்கள். பெரிய இடத்துப் பையன்கள் கூட அதற்குப் போவதுண்டு. இது மட்டுமா?

கலரி என்றால்தானே முன்னுக்கு இருந்து படம் பார்க்க முடியும்? அங்கு இடம் இல்லை என்றதும் மேலும் இரண்டு மூன்று வரிசைகளுக்கு வாங்குகள் கொண்டுவந்து போட்டு இன்னும் திரைக்கு முன்னால் இருக்க வாய்ப்புத் தருவார்கள். அதாவது எமது அபிமான நடிக - நடிகைகளை மிகவும் கிட்ட இருந்து பார்க்கும் வாய்ப்பு... கோடம்பாக்கம் வீதிகளில் நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு நின்றாலும் கிடைக்குமா இந்த அரிய வாய்ப்பு?

அதிகம் ஏன், நா(ன்)ம் நினைத்தால் கன்னடத்துப் பைங்கிளிகளையும் கவர்ச்சிக் கன்னிகளையும் தொட்டுக் கூட பார்த்திருக்கலாம்.

ஆனால்...

அப்போது நா(ன்)ம் அப்படி நினைத்ததில்லை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# படம் பார், பாடம் படி - (2)

அக்காலப் படங்களில் நல்ல கதை இருக்கும், சிறந்த கருத்துக்கள் இருக்கும், பண்பட்ட நகைச்சுவைக் காட்சிகள் இருக்கும்... இப்படியொரு கருத்து இருக்கிறது... மொத்தத்தில் அப்படங்களில் இருந்து நாம் பலதையும் கற்றுக் கொள்ள முடியும்... படம் வெளிவருகின்றபோது கூடவே எட்டுப் பக்கத்தில் ஒரு பாட்டுப் புத்தகமும், திரைக்கதை - வசனம் - பாடல்கள் என்று இன்னொரு புத்தகமும் வெளிவரும். அவைகள்கூட சிலசமயம் நல்ல கவிதை, நாடக நூல்களாக அமைந்துவிடும். குறிப்பாகப் பாட்டுப் புத்தகத்திலே கதைச் சுருக்கம் தந்து, ''மிகுதியை 'வெள்ளித் திரை'யில் காண்க'' என முடித்திருப்பார்கள். அது கூட குறித்த படத்துக்கான ஒரு சிறந்த அறிமுகம் - வழிகாட்டிதான்.

அ்திகம் ஏன் , படங்கள் பார்த்த அருட்டுணர்வைக் கொண்டு நாடகங்கள் தயாரித்தவர்களும், பட வசனங்களைப் பேசியும் நடிப்பைப் பின்பற்றியும் நடிகர்களானவர்களும் கூட இருந்திருக்கிறார்கள். படத்தை விடுங்கள், படத்திற்குள் - கதைக்குள் கதையாக வந்த சோக்கிரட்டீஸ், சாம்ராட் அசோகன் போன்ற குறு நாடகங்களைத் தாங்களும் நடித்தே புகழ் பெற்றவர்களும் உண்டு. காலஞ்சென்ற நடிகர் மா.அருமைநாயகம்கூட ஆரம்பகாலங்களில் சோக்ரட்டீஸ் நாடகத்தை நடித்து பின்னர் அது வெற்றிவிழாக்கூடக் கண்டது. கலைஞர் மு.கருணாநிதியின் வசனங்களை - அவர் போலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி மக்களின் 'அப்ளாஸ்'களைப் பெற்று 'ஈழத்துக் கருணாநிதி'கள் உருவான காலமும் அதுவே!

இக்காலத்திலே தயாரிக்கப்படுகின்ற அத்தனை ஜனரஞ்சகமான - மசாலா படங்களையும் பார்க்கின்றவர்கள் பெற்றிராத 'பாடங்களை' அக்காலத்தில் ஆடிக்கொன்று ஆவணிக்கொன்று என்று பார்த்த நாம் பெற்றிருக்கின்றோம். பரீட்சையில் தமிழ் பாடம் நன்றாகச் செய்திராத ஒருவரைப் பார்த்து 'ஒழுங்காகப் படம் பாத்துமா அப்படி?' என்று கேட்பதுண்டு என்றால் நான் 'படம் பார் பாடம் படி' என்று சொல்ல வந்ததில் என்ன தவறைக் கண்டு விட்டீர்கள்?

புதிய படங்களைத் திரையிடும் வாய்ப்பு நகரங்களில் உள்ள திரையரங்குகளுக்குத்தான் கிடைக்கும் என்றும், அவை சங்கானை, இணுவில் , நெல்லியடி போன்ற திரையரங்குகளுக்கு வரும்போது அவை 'பழசாகி'விடும் என்பதையும் ஏற்கனவே சொல்லியிருதேன். அதேபோல நகரத்தில்உள்ள இரண்டு திரையரங்குகளில் ஒரு படம் ஓடிய அதிசயம் பற்றியும் முன்னர் சொல்லியிருந்தேன். இப்பொழுது ஒரு படத்துக்கு மூன்று இடைவேளை விட்ட திரையரங்கு பற்றிச் சொல்லப் போகின்றேன். நாங்கள் அப்போது பொறுமையாக இருந்து அப்படிப் படம் பார்த்த கதையை நீங்களும் பொறுத்திருந்து கேட்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்(ல்)கிறேன்.

இணுவில் ஸ்ரீ காலிங்கன் திரையரங்கில் ஒரேயொரு படம் காட்டும் கருவிதான் (புறஜெக்டர்) இருந்தது. (இத்திரையரங்கு நான் பின்னர் குறிப்பிடப் போகும் மருதனார்மடம் நன்னாரித் தேத்தண்ணிக் கடையில் இருந்து 'ஒரு கூப்பிடு' தூரத்தில் இருந்தது) ஒரு படம் பன்னிரண்டு சுருள்களைக் கொண்ட தொகுதி என்றால் ஒரு புறஜெக்டரை வைத்துக் கொண்டு எப்படி அதைக் காட்ட முடியும்? எனவே, அவர்கள் மூன்று சுருள்களை ஒரு பென்னம்பெரிய சுருள் என்ற அடிப்படையில் அனைத்துச் சுருள்களையும் நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருள்களாக இணைத்து வைத்திருப்பார்கள். அந்த வண்டிச் சில்லுப் போன்ற பாரிய படச்சுருளை ஒரே புறஜெக்டரில் இருந்து கழற்றிப் பொருத்திப் படம் காட்டுவதனால்தான் அப்படி மூன்று இடைவேளைகள்... புறஜெக்டர் 'முக்கி முக்கி' படச்சுருளை இழுக்கும்போது சுருள் அறுந்துவிட்டால், மேலும் சில இடைவேளைகள்... அப்போதெல்லாம் சினமா விசிறிகளின் 'விசிலடி' காதுகளைப் பிளக்கும்...

பொறுமைக்கும் ஓர் எல்லை வேண்டாமா? அப்படியெல்லாம் சகித்துக் கொண்டு எதற்காகப் படம் பார்க்க வேண்டும்? அப்படித்தானே கேட்கிறீர்கள்? அதற்கும் காரணம் உண்டு.

இப்பொழுதெல்லாம் அந்தக் காலத்துப் படங்களைப் பற்றிப் பெருமைப்படுகிறோம். அதேபோல, அப்பொழுதும் அதற்கு முந்திய காலத்துப் படங்களைப் பற்றிப் பெருமை பேசப்படுவதுண்டு. அவைகளைப் பார்ப்பதற்குரிய இடம் என்றால் இந்தப் பழைய படங்கள் ஓடுகின்ற திரையரங்குகள்தானே நமக்குக் கதி! குறிப்பாக சுந்தராம்பாள் நடித்த 'ஒளவையார்', கண்ணாம்பா நடித்த 'கண்ணகி', எஸ்.வி.சுப்பையா நடித்த 'வள்ளியின் செல்வன்' போன்ற படங்களை நாங்கள் பார்த்தது இந்த 'மூன்று இன்ரவல்' புகழ் திரையரங்கில்தான் என்பது நினைவு...

இறுதியாக இன்னொரு விடயம் சொல்லவேண்டும். அக்கால கல்விமான்கள் சொல்லுவார்கள் 'நாவலர் சந்தி' என்றால் தெரியாதவர்கள் இருக்கலாம். ஆனால் மனோகராச் சந்தி என்றால் தெரியாதவர்கள் இருக்க முடியாது. (முன்னருள்ள பெயருக்குப் பின்னால் ஒரு தமிழறிஞர் இருக்கிறார். பின்னருள்ள பெயருக்குப் பின்னால் ஒரு சினமா மடுவம் இருக்கிறது) இப்பொழுது மட்டும் என்னவாம்? நாவலர் பாடசாலை இன்னமும் பக்கத்திலே இருக்கிறது. பட மடுவம் களஞ்சியமாக மாறிவிட்ட போதிலும்... ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நினைத்ததும் (எழுதியதும்) நடந்ததும்

அந்த முதலாளி ஒரு நாள் சில அச்சிட்ட தாள்களுடன் அலுவலகம் வந்தார். அவைகளை அங்குள்ள அனைத்து ஊழியர்களதும் பார்வையில் படும்படியாக ஆங்காங்கு ஒட்டும் படி பணித்தார். அவைகளிலுள்ள மணிமொழி இதுதான்:

''இன்றே செய் - அதுவும் நன்றே செய். எதையும் நாளைக்கு என்று ஒத்திப் போடாதே!''

'இனிமேல் தமது அலுவலகம் சுறுசுறுப்பாக இயங்கும். மணிக்கூட்டைப் பார்த்து வேலை செய்து, கலண்டரைப் பார்த்துச் சம்பளம் பெறுபவர்கள்கூடத் தங்கள் கடமைகளில் அதிக அக்கறை செலுத்தி உழைப்பார்கள்' - இந்த நம்பிக்கையுடன் அவர் போய்விட்டார்.

அவர் மீண்டும் அலுவலகம் வரும்போது நாமும் வந்து மிகுதிக் கதையினைக் கவனிப்போம்.

சில அறிவித்தல் அல்லது எழுத்துக்களுக்கு நல்ல பயன்கள் கிடைப்பதுண்டு. வேறு சிலவற்றுக்கோ...

நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் 'ஆனந்த விகடன்' இதழில் ஒரேயொரு தடவை படித்த குட்டிக் கதை. அது என்னைச் சிந்திக்கத் தூண்டியதால் இன்றைக்கும் அதன் சுருக்கத்தைக் கூறமுடிகிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயில் வண்டி ஓடிக் கொண்டிருக்கையில் அந்தப் பெட்டிக்குள் பரிசோதகர் வருகிறார். 'பெண்கள்' என எழுதப்பட்ட அறிவித்தலின் கீழ் ஒருவன் அமர்ந்திருக்கிறான். பரிசோதகர் அவனுக்கு அந்த அறிவித்தலைச் சுட்டிக் காட்டுகிறார். 'இது பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனம். இங்கெல்லாம் நீங்கள் இருக்கக் கூடாது' என்கிறார். அவனும் மறுவார்த்தை பேசாமல் அக்கட்டளைக்கு அடிபணிந்து, எழுந்து அப்பால் சென்றுவிடுகிறான்.

பரிசோதகர் சில நிமிடங்களின் பின்னர் மீண்டும் அந்தப் பெட்டிக்குள் திரும்பி வருகிறார். முன்னர் குறிப்பிட்ட ஆள் வேறொரு இடத்திலே அமர்ந்திருக்கிறான். ஆனால் புகைத்துக் கொண்டிருக்கிறான். பரிசோதகருக்கு பொல்லாத கோபம் வந்து விடுகிறது. வேறொரு இடத்திலே எழுதப்பட்ட 'புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது' என்ற அறிவித்தலைச் சுட்டிக் காட்டி எச்சரிக்கிறார். அதற்கு அவன் அமைதியாகச் சொன்னான் - ''நான் அதற்குக் கீழிருந்து புகைக்கவில்லையே!''

தமிழ் நாட்டிலே தி.மு.க. ஆட்சி பீடம் ஏறியதும் பல மறுமலர்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அவற்றிலே ஒன்றுதான் பேரூந்துகளிலே திருக்குறட் பாக்கள் எழுதப்பட்டதாகும். அதனால் வள்ளுவர் பெயரும் திருக்குறளின் சிறப்பும் எங்கும் பரவலாயிற்று. இந்த முன்மாதிரியைப் பின்பற்றி, நமது 'மில்க் வைற்' அதிபர் சிவதர்ம வள்ளல் க.கனகராசா அவர்கள் இங்கு தாமும் அப்பணியைச் செய்து பாராட்டுப் பெற்றவர்.

அப்பொழுதெல்லாம் அங்கும் சரி இங்கும் சரி நடத்துநர்கள் சிலரின் நடத்தைகளை மனதிற் கொண்டு ஒரு வேடிக்கையான வினா எழுப்பப்பட்டதாம். 'யாகாவா ராயினும் நாகாக்க...', 'இனிய உளவாக இன்னாத கூறல்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தொடங்கும் குறள்களைச் சுட்டிக் காட்டி 'இதெல்லாம் யாருக்காக? நடத்துநர்களுக்கா? பயணிகளுக்கா?' என்றெல்லாம் கேட்கப்பட்டதாம்.

'மில்க் வைற்' அதிபரும் மறைந்துவிட்டார். அவரது திருக்குறட் பணிகளும் இங்கு தொடராமற் போய்விட்டன. அந்தோ... நாமும் அப்படி ஒரு கேள்வியைக் கேட்கவும் இங்கு வாய்ப்பில்லாமற் போய்விட்டதே!

அமரர்களான வன்னியசிங்கம், அமிர்தலிங்கம் போன்றவர்கள் சிறந்த அரசியல்வாதிகள் மட்டுமின்றி நாடறிந்த பேச்சாளர்களும் ஆவார்கள். அவர்கள் தமிழரசுக் கட்சி மேடைகளில் கேள்விகளுக்கு நகைச்சுவையாகவும், ஆணித்தரமாகவும் பதிலளித்தவர்கள். வன்னியசிங்கம் சம்பந்தப்பட்ட ஒரு விவரம் இது-

அவர் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் கட்டத்துக்கு வருகிறார்... அன்று யாருமில்லாத போது அவரது வீட்டு மதிற்சுவர் மீது யாரோ, 'துரோகி' என எழுதிவிட்டார்கள். அன்று எங்கு பார்த்தாலும் அதுபற்றியே பேச்சாக இருந்தது. அது பற்றிய கேள்விக்கு அவர் இப்படி பதிலளித்தாராம்...

''இன்று ஒருவர் என்னைச் சந்திக்க வந்தபோது நான் வீட்டிலில்லை... வந்தவர், வந்த விவரத்தை எழுதிக் கையெழுத்திடுவதற்கான குறிப்புப் புத்தகமும் வீட்டிலில்லை. அதனால் வேறு வழியின்றி வீட்டுச் சுவரிலே தனது 'பெயரை' மட்டும் எழுதிவிட்டுச் சென்றிருக்கிறார்.''

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட அந்த அலுவலகத்துக்கு அடுத்த நாள் அந்த முதலாளி வருகிறார். நீங்களும் அதைத்தானே எதிர்பார்த்திருந்தீர்கள், வாருங்கள் என் பின்னால்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது 'இன்றே செய்...' எனத் தொடங்கும் மணிமொழிகளின் பயனாக அலுவலகத்தில் ஏற்பட்டிருக்கக் கூடிய முன்னேற்றங்களைக் கவனிக்கவேண்டுமல்லவா?

அலுவலகம் வெறிச்சோடிக் கிடக்கிறது. மனேஜரும் சில சிற்றூழியர்களும்தான் பாக்கியாக இருந்தனர். எல்லா வற்றையும் துருவித்துருவி ஆராய்ந்து விசாரித்துப் பார்த்ததில் பின்வரும் விவரங்கள் தெரியவந்தன...

பிரதம எழுதுவினைஞர் தனது 'பதவி விலகல்' கடிதத்தை ஒப்படைத்துவிட்டு வேறொரு வேலைக்குப் போய்விட்டாராம்...

கணக்காளர் இரும்புப் பெட்டியிலிருந்த ஒரு தொகைப் பணத்துடன் கம்பி நீட்டி விட்டாராம்...

டைப்பிஸ்ட் மேனகா தனது காதலனான சக ஊழியர் மோகனுடன் ஓடிவிட்டாளாம். இப்படி... இன்னும்...

எல்லாம் அந்த 'மணிமொழியால்' வந்த வினை. ''பின்னால் பார்த்துக் கொள்ளலாம்'' என்றிருந்தவர்கள் அந்த அறிவித்தலையடுத்து 'எல்லாவற்றையும் அன்றே செய்து விட்டார்கள்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வீடுதான் சொர்க்கம்

இப்பொழுது சோகமான சில சங்கதிகளைச் சொல்லப் போகிறேன். எதற்கும் நீங்களும் தற்பாதுகாப்பாகக் கைவசம் ஒரு கைக்குட்டை வைத்திருப்பது நல்லது.

நம்மவர்களுக்கு மிகமிக அற்பமான ஓர் ஆசை இருப்பதுண்டு . தங்களுக்குக் கடைசி காலத்திலே கொள்ளி வைப்பதற்குச் 'சாண்பிள்ளையானாலும் ஓர் ஆண் பிள்ளை பிறக்க வேண்டும் - இருக்கவேண்டும்' என்பது! அது மட்டுமல்ல, தாங்கள் செத்தால் தங்களுக்காக அவர்கள் அழ வேண்டும் என்பதுவும்தான்! பிதிர்க் கடமைகளைப் பற்றிக்கூட அவர்கள் அக்கறைப்படுவதில்லை; கொள்ளிதான் முக்கியம்.

ஆனால் நடப்பது என்ன? ஒன்றுக்குப் பல ஆண்கள் இருந்தாலும் அவர்களுக்குக் கொள்ளி வைப்பதற்கு ஆள்களைத் தேடவேண்டிய அவலம்... பிள்ளைகள் எல்லோரும் புலம் பெயர்ந்த நாடுகளிலே - வரமுடியாத அல்லது வரவிரும்பாத நிலையிலே இருப்பார்கள்.

'யார் கொள்ளி வைப்பது' என்ற கேள்வி எழும்போது யாருமே இலேசில் முன்வரமாட்டார்கள். 'நான் கந்த சஷ்டி விரதக்காரன் தெரியுந்தானே' என்பார் ஒருவர். 'நான் கோயில் தொண்டு செய்பவன், கோயிலுக்கு விளக்கு வைக்கவேணும்' என்பார் இன்னொருவர். இரண்டும் கெட்டான் நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று யோசித்துக் கொண்டிருப்பவரை இல்லக்கிழத்தி வந்து 'நீங்கள் பிறஷர்க்காரர் அல்லவா?' என்று இரகசியமாக இழுத்துச் சென்று விடுவாள்.

கடைசியாக ஒரு பரோபகாரி துணிந்து முன்வருவார். காரணம், இறுதிச் சடங்கு முழுவதையும் வீடியோவில் படம் எடுத்து அனுப்பும்படி, அதற்கும் வேறாக உண்டியலில் பணம் வந்து இருந்ததுதான்... (எவ்வளவு சோகம் பார்த்தீர்களா? கைவசம் கைக் குட்டை இருக்கிறதுதானே...)

அப்பொழுது எங்களூர்ப் பாட்டி ஒருத்திக்குக் கடுமையான நோய் கண்டிருந்தது. நாட்டு வைத்தியரும் மூன்று நாள் 'கெடு' வைத்திருந்தார். கொழும்பிலுள்ள மகனுக்கு தகவல் தெரிவித்ததும், அவர் துணைவியாருடன் வந்து விட்டார். மகனைக் கண்ட மகிழ்ச்சியில் போகவேண்டிய உயிர் ஆச்சிக்குத் திரும்பிவந்துவிட்டது. ஒரு வாரமாகியும் ஒன்றும் நடக்காததினால் வந்தவர்களும் 'புறுபுறுத்துக் கொண்டு' திரும்பி விட்டனர். இனிமேல் 'அப்படி அவசரப் பட்டு எதுவும் செய்து விடாதீர்கள்' என்ற உபதேசம் வேறு...

இரண்டுவாரம் கழித்து அந்த ஆச்சிக்கு மீண்டும் நினைவு தவறிவிடுகிறது. 'ஆவி அகத்ததோ புறத்ததோ' என்ற நிலைமையைக் கண்டு மீண்டும் கொழும்புக்குத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் கடந்த காலச் சம்பவத்தை நினைவூட்டித் தட்டிக் கழிக்க, நாம் 'இந்த முறை நிச்சயம்' என்பதை உறுதிப்படுத்திக் கொண்டிருந்தோம். அவர்கள் 'நடக்காவிட்டால் என்ன செய்வது?' என வாதாடிக் கொண்டிருக்கையிலே எங்கள் எல்லாருக்கும் அடுத்த தகவல் வீட்டிலேயிருந்து கிடைக்கிறது, 'நடந்துவிட்டதாக'... அவர்களும்தாம் அடுத்த நாள் காலை யாழ்தேவியில் புறப் பட்டு நண்பகல் அளவில் வந்து சேர்வதாகச் சொன்னார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சியின் பூதவுடலுக்கு மகன் கொள்ளிவைக்கும் பேறும் கிடைத்தது.

கந்தரோடையில் நடந்த இன்னொரு சம்பவம்... முதியவர் கவலைக்கிடமாக இருக்கிறார் என்ற தகவல் கொழும்பிலுள்ள மக்களுக்கு வேறுவிதமாகக் கிடைத்ததாம். அவர்களும் வானொலிக்கு 'மரணச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்' என்றவாறு அறிவித்தல்கள் கொடுத்துவிட்டு இங்கு வந்து விட்டார்கள். வந்தவர்களுக்கு - எழுத்தாளர் பாணியில் சொல்வதானால் 'தங்கள் கண்களைத் தங்களாலேயே நம்ப முடியவில்லை' முதியவர் தமது மரண அறிவித்தலைத் தாமே கேட்ட அதிசய மனிதராக வீற்றிருந்தார். அவர் தமக்கு அழுவதற்கும் ஆள்கள் இருக்கிறார்கள், கொள்ளி வைக்கவும் ஆள் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தியவராக மேலும் சில வாரங்கள் வாழ்ந்துவிட்டுத்தான் சிவபத மடைந்தார்...

இந்த இடத்திலே நண்பர் ஒருவர் குறிப்பிட்ட ஒரு தகவலும் நினைவுக்கு வருகிறது...

சிலருடைய மறைவைப் பற்றிக் குறிப்பிடுகையில் சிவபதமடைந்துவிட்டார், அமரத்துவம் எய்தி விட்டார், இறைபதம் சென்று விட்டார் என்றெல்லாம் ஆசை பற்றியோ அதீத நம்பிக்கையாலோ குறிப்பிடுவது உண்டு. அவர்களுக்கு அப்படியொரு தவப்பேறு கிடைத்தது பற்றி எமக்கு ஆட்சேபம் எதுவும் இல்லாவிட்டாலும்,

அப்படியானவர்களின் துயர்பகிர்வின் போது அது பற்றித் துயரப்படுவதும் துயர் தெரிவிப்பதும் சரியாகுமா என்பதுவே எமது கேள்வி...

பொதுவாகக் காலமானவர்களுக்காக அப்படி வருந்தலாம் - அனுதாபப்படலாம் - துயரப்படலாம் . ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடந்து பேரின்பப் பேறு பெற்றவர்களுக்குமா அப்படி?

பாடசாலை வகுப்பு ஒன்றிலே சமய பாடம் நடந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர் சொர்க்கம் பற்றியும் நரகம் பற்றியும் பாடம் நடத்திவிட்டு மாணவர்களை நோக்கிச் சில கேள்விகள் கேட்கிறார் .

''உங்களில் சொர்க்கம் போக விரும்புபவர்கள் கைகளை உயர்த்துங்கள் பார்க்கலாம்' என்கிறார். பெரும்பாலானவர்கள் கைகளை உயர்த்தினார்கள்.

அடுத்து ''நரகம் போக விரும்புவோர் கைகளை உயர்த்துங்கள்'' என்கிறார். 'தங்களுடைய சகாக்களை அங்குதான் சந்திக்க முடியும்' என்பதாலோ என்னவோ அதற்கும் சிலர் கைகளை உயர்த்தினர்.

ஒருவன் மட்டும் ஒன்றுக்கும் கைதூக்காதது கண்ட ஆசிரியர் 'இவன் திரிசங்கு சொர்க்கம் போக விரும்புகிறான் போலும்' என்று நினைத்தவராய் ''நீ எங்கு போகப் போகிறாய்?'' என்கிறார்..

அதற்கு அந்த மாணவன் ''எங்குமில்லை... பள்ளிக் கூடம் விட்டதும் எங்கும் போகாமல் நேராக வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்பது அம்மாவின் கட்டளை'' என்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெரிய வாத்தியார்

சங்குவேலி தமிழ்ப் பாடசாலைக்கு ஒரு காலத்தில் அதிபராகவிருந்தவரான கந்தசாமி அவர்கள் பின்னர் இளைப்பாறி உடுவிலில் வாழ்ந்த காலத்திலுங்கூட கடைசி வரை அக்கிராமத்துக்கும் அரும் பெரும் பணிகள் புரிந்தவர்.

தற்போது கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபராக விளங்கும் சிவாஜி அவர்களின் தந்தையாரான அவர் 'பெரிய வாத்தியார்' என்னும் பெயரால் பெருமை பெற்றவர். அதிபர் என்பதால் மட்டும் அவர் பெரிய வாத்தியாரல்லர், தோற்றத்திலும்தான்... உள்ளம் மட்டும் குழந்தையுள்ளம்.

சிறந்த நகைச்சுவையாளரான பெரிய வாத்தியார் பெரிய பேச்சாளரல்லர் . ஆனால் பேச்சுக்கிடையே நசுக்கிடாமல் கிண்டல் - பகிடிகள் விடுவதில் வல்லவர் எனப் பெயரெடுத்தவர். திருக்குறள் முனுசாமி, தென்கச்சி சுவாமிநாதன் ஆகியோர்களின் குரல்களைக் கேட்டிருப்பீர்கள். அவரும் அப்படியானதொரு பாணியிலேதான் பேசுவார். பேச்சினிடையே அவர் அந்தப் 'பந்தலிலே பாகற்காய் போகும் போது பாத்துக்கலாம்... விதைக்கல்லோ விட்டிருக்கு...?' கதையினையும் சொல்லிடுவார். எத்தனை முறை கேட்டாலும் 'நடிப்பு ஒப்பாரி'யுடன் கூடிய அவரது கதைக்கு வரவேற்பிருக்கும்... அவரை இந்த இடத்திலே சற்று நிற்க வைத்துவிட்டு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலச் சொற்கள், அமங்கலச் சொற்கள் என்றெல்லாம் கேள்விப்பட்டிருப்பீர்கள். கவிஞர் கண்ணதாசன்கூடத் தாம் தெரிந்தோ தெரியாமலோ கவிதைகளில் பயன்படுத்திய சில அமங்கலச் சொற்களால் பின்னர் ஏற்பட்ட விபரீதங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

வாழ்த்துப் பாக்கள், வாழ்த்து மடல்களில் நன்மை - தீமை, இன்பம் - துன்பம், சுகம் - துக்கம் என்றெல்லாம் எழுதக்கூடாதென்பார்கள். இந்த இணைச் சொற்களிலே வருகின்ற இரண்டாவது சொற்கள் மங்கலகரமான அந்த நிகழ்வுகளிலே ஒலிக்கக் கூடாத அமங்கலச் சொற்களாம். இன்னும் நடத்தப்பட்ட அளிக்கப்பட்ட என்றெல்லாம் கூட வரக்கூடாது. 'பட்ட' என்பதற்கு அழிந்த, இறந்த என்ற கருத்தும் இருப்பதால் அவைகளெல்லாம் இங்கு வேண்டாத சொற்கள். அதற்குப் பதில் அப்படியான இடங்களிலே 'பெற்ற' என்பதைப் பயன்படுத்தலாம்.

இவைகளை வானொலியில் ஆலய நேர்முக வர்ணனைகள் செய்பவர்களும் உணர்ந்ததாகத் தெரிய வில்லை, அவர்களும் 'அலங்கரிக்கப்பட்ட...' என்பதில் தொடங்கி, தீபதூபம் 'காட்டப்பட்டு...' அருச்சனை 'செய்யப்பட்டு...' பாமாலை 'பாடப்பட்டு..' பூமாலை 'சூடப்பட்டு..' 'தூக்கி வரப்பட்டு...' 'இழுத்துவரப்பட்டு..' இப்படி வரிக்கு வரி கடவுளர்களுக்குப் போடுகின்ற அடிகள் சொல்லிமாளாது. தந்தை செல்வா 'தமிழ் மக்களை இனிமேல் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' எனச் சொல்லிச் சென்றார். கடவுளை நம்பிய நாம் கைவிடப்பட்டதற்கு இந்த வானொலி வர்ணனையாளர்களும் காரணமாகவிருக்குமோ? 'பட்டு' என்பது இலக்கணப்படி தவறான சொல் அல்ல. தமிழ் மரபுக்குத்தான் இது பொருந்தாது. இங்கே கூட 'பெற்று' என்பதைப் பயன்படுத்தி என்னிடமிருந்தாவது இவர்கள் தப்பியிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண ஒப்பந்தம் எனப்பெறும் திருமணப் பதிவை எடுத்துக் கொண்டாலும்... பெரிய வாத்தியாரை மீண்டும் அழைத்து வருவோம். அவர் திருமணப் பதிவாளராகவும் பணிபுரிந்தவர். அவர் தமது இயல்பான நகைச்சுவை உணர்வினால் அந்தச் சடங்குகளையும் மங்கலகரமாகவும் மகிழ்ச்சிகரமாகவும் நடத்திப் பெருமை பெற்றவர். திருமணப் பதிவின்போது சொல்லப்பெறுகின்ற - சொல்ல வைக்கப் பெறுகின்ற வாக்குறுதி மொழிகளிலும் சில அமங்கலச் சொற்கள், வாக்கியங்கள் வருகின்றன.

அவைகளை மாற்றியமைக்கும் உரிமை அவருக்கில்லா விட்டாலும் அவைகளை மழுங்கடிக்கும் வகையிலான 'கெட்டிமேளம்' போல அவரது நகைச்சுவைகள் அமைந்து விடும். அந்த அமங்கல - அபசகுன வார்த்தைகள் எல்லாம் சூரியன் முன் மின்மினி போலாகிவிடுகின்றன.

'திருமணம் என்பது ஒரு முற்றுகையிடப்படாத கோட்டை போன்றது. வெளியேயுள்ளவர்கள் உள்ளே நுழையத் துடிக்கிறார்கள். உள்ளே சென்றவர்கள் வெளியே வரத்துடிக்கிறார்கள்' என்பார்கள். இவையிரண்டுக்கும் நடுவே 'எழுத்து மேசை' முன் விழிப்பிதுங்கி நிற்கும் தம்பதியினரை மட்டுமின்றி சபையினரையும் சிரிப்பு வெள்ளத்தில் மிதக்க வைத்தவர் நமது பெரிய வாத்தியார்.

மோதிரம் மாற்றும் சமயங்களில் 'எழுத்துக் கொப்பியில் கையொப்பம் வைத்தாச்சுத்தானே? இனிப் பயப்படாமல் கையைப் பிடிக்கலாம்... கையைக் கொடுக்கலாம்' என்பார். மாலை மாற்றும் சமயங்களில் 'இனிக் கிட்ட நிற்கலாம்' என்பார்.

ஒருவருக்கொருவர் பானம் பரிமாறும்போது 'குடுபிள்ளை - வாங்கிக் குடி பிள்ளை' - இப்படியாக அவர் உதிர்க்கின்ற பகிடிகள் பல...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்குப் பின்னர் அவர் விட்ட இடத்திலேயிருந்து அவரது பணியைச் செய்துவருகின்ற குமரவேல் அவர்களும் அவரது இந்த வழியையும் பின்பற்றலாமே...

மங்கலம் - அமங்கலச் சொற்கள் பற்றியெல்லாம் இவ்வளவும் சொல்லிவந்தவன் முத்தாய்ப்பாக அதையும் சொல்லி முடிக்கலாம் என நினைக்கிறேன்.

அந்த ஊரிலே மிகவும் 'ராசி'யான ஒரு கவிஞரும், ஒரு வைத்தியரும் இருந்தார்கள். கவிஞர் ஒருவரை 'வாழ்க' என்று பாடினால் அவருக்கும் நிச்சயம் 'அது' நடக்கும். அதேபோல அந்த வைத்தியரும் ஒருவருக்கு 'வாழ' மருந்து கொடுத்தால் அவருக்கு நிச்சயம் 'அது'தான் நடக்கும். அந்த ஊரிலே திடீரென்று ஒருவர் இறந்துவிடுகிறார். அதுபற்றிய 'மரண விசாரணை'யை இவர்கள் தங்களுக்குள்ளேயே நடத்துகிறார்கள். கவிஞர் வாயாலேயே அதனைக் கேட்போம்...

சொல்லாண்ட பாவின்
  சுவைதெரிந்த பாவலன்யான்
பல்லாண்டு வாழ்க எனப்
  பாடவில்லை - வல்லோய்நீ
ஒப்பில் மருந்தினை நீயும் உதவவில்லை
  எப்படிச் செத்தானிவன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜேபி மாஸ்டர்

கூட்டுறவுத் தந்தை என மதிக்கப்பெற்றவரும், ஒருகாலத்தில் வட்டுக்கோட்டைப் பிரதிநிதியாக விளங்கியவருமான அமரர் வி.வீரசிங்கம் அவர்கள், நாம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் எமது கல்வியைத் தொடங்கிய காலத்தில் அதன் அதிபராக விளங்கியவர். அவர் காலத்திலும், அதன் பின்னர் அதிபராக விளங்கிய முத்துவேற்பிள்ளை காலத்திலும் அங்கு 'ஒழுக்க வாத்தியாராக' (DISCIPLINE MASTER) விளங்கியவர் தாம் இந்த ஜேபி மாஸ்டர். ''ஜேபி'' என்றதும் நீங்கள் அவரைக் குறைத்து மதிப்பிடக் கூடாது. அது அவரின் பெயருக்குப் பின்னால் அல்ல, முன்னுக்குத்தான் இருந்தது. அதாவது அவரது பெயர் J.P. நாகலிங்கம் என்பது.

வீரசிங்கம் அவர்கள் செல்லமுத்து விளையாட்டரங்கப் பக்கத்திலிருந்து கல்லூரிக்குக் குடை பிடித்தவாறு நடந்து வருவார். ஜேபி மாஸ்டர் சந்தை, கிழக்கு ஒழுங்கையிலுள்ள தமது வீட்டிலிருந்து ஒரு 'பார்' இல்லாத சைக்கிளில் ஓடி வருவார். அவர்களின் வருகையை வைத்தே மணிக்கூட்டு முள்ளைத் திருப்பிச் சரி செய்து கொள்ளலாம். அவ்வளவிற்கு அவர்கள் 'பங்சுவாலிட்டி'க்குப் பெயர் பெற்றவர்கள். அவர்கள் புறப்பட்டுவிட்டார்கள் என்றால்... அந்தப் பயணம் யாருக்காகவும் நிற்கமாட்டாது. அப்படி அதில் குறுக்கிடும் துணிச்சலும் எவருக்கும் இருக்காது. அவர்கள் தங்களுக்கென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுத்துக் கொண்ட ஒரு குறிப்பிட்ட கோட்டில் நடப்பது போலவும் , ஓடுவது போலவும்தான் இருக்கும். அவர்களின் தலைகளைக் கண்டால் மாணவர்கள் எவரும் அநாவசியமாக தெருவோரங்களில் நிற்கமாட்டார்கள். வகுப்பறைகளுக்குள் ஓடி ஒளிந்து விடுவார்கள். ஏன் ஏனையவர்கள் கூட 'சிங்கர்' வருகிறார். 'ஜேபியர்' போகிறார் என்றால் மரியாதையுடன் வழிவிட்டுக் கொடுப்பார்கள்.

அதிலும் அந்த ஜேபி மாஸ்டர் சைக்கிளில் வருவது மிகவும் வேடிக்கையாக இருக்கும். அவர் சைக்கிளில் ஓடும்போதுகூட சாலை விதிகளைக் கடைப்பிடிக்கத் தவறு வதில்லை. அவர் இடது பக்கம் திரும்பப் போகிறார், நேரே போகப் போகிறார், பின்னால் வருகின்ற வாகனத்திற்கு முந்திச் செல்ல வழி விடுகிறார், தாம் சைக்கிளை நிறுத்தி இறங்கப் போகிறார் என்பவைகளுக்கெல்லாம் கைகளால் அவைகளுக் குரிய சமிக்ஞைகளைக் கொடுத்துக் கொண்டே செல்வார். பொலீஸாரைக் கண்டால் சைக்கிளில் 'டபிள்' போகிறவர்கள் அக்காலத்தில் குதித்து இறங்கிவிடுவதுபோல மாணவர்கள் ஜேபி மாஸ்டரைக் கண்டாலும் குதித்து இறங்கிவிடுவார்கள். அப்படி ஒரு பயம் கலந்த மரியாதை அவருக்கு இருந்தது. அதிபர்·வீரசிங்கத்துடன் ஒப்பிடும்போது ஜேபி மாஸ்டர் ஒரு சிறிய மான் (MAN)தான்.

கல்லூரியானது கட்டிம்சன் மண்டபத்தில் அதிபர் வீரசிங்கம் நடத்தும் பிரார்த்தனைக் கூட்டத்தையடுத்து நடைபெறும். காலைத்தூக்கி நின்றாடும் நடேசப்பெருமானுக்குரிய வழிபாட்டு நிகழ்ச்சியாக அது தொடங்கினாலும் சர்வமதப் பிரார்த்தனையைப் போலவுமிருக்கும்...

இதேவேளை ஜேபி மாஸ்டரும் மிக நீளமான ஒரு பிரம்புடன் தமது அலுவலக அறையிலிருந்து ஒரு துள்ளலுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறங்கிவந்து தரையில் நின்றுகொள்வார். அவரது அறையும் கல்லூரி நுழைவுவாயிலும் சற்றுத் தூரமானாலும் எதிர் எதிராகவே அமைந்திருந்தது. கல்லூரிக்குத் தாமதமாக வருபவர்கள் எவரும் அவரது பார்வையிலிருந்து தப்பிவிட முடியாது.

அவருக்கு ஒளித்து யாரும் பிரார்த்தனை மண்டபத்துக்குள்ளோ, வகுப்பறைகளுக்குள்ளோ நுழைந்து விடமுடியாது. அவர் பெயர் சொல்லி அழைக்காவிட்டாலும் என்ன மான் (MAN) வா மான் (MAN) என அழைத்து, பிரம்பை அதன் நடுப்பகுதியில் பற்றியவாறு அவர்களுக்குப் 'பிரப்பம்பழம்' வழங்குவார். அவரிடம் அப்படித் தண்டனை பெறுபவர்கள்கூட அவர் மீது கோபமோ, குரோதமோ கொள்வதில்லை. அவர் பிரம்பைக் கையாளுகிற முறையால் தாங்கள் மட்டுமல்ல, அவர்கூடத்தான் அடிபடுகிறாரே என்ற அனுதாபம் காரணமாக இருக்குமோ?

வீரசிங்கத்தார் பிரார்த்தனை முடிந்ததும் அங்கு மேல் நாட்டுப் பத்திரிகை வியாபாரம் ஒன்றைப் பின்பற்றி இன்னொரு நல்லொழுக்கத்தையும் மாணவர்களிடையே அறிமுகம் செய்ததுண்டு. நடேசர் படம் வைக்கப்படும் அந்தச் சட்டத்திலே ஒரு கரும்பலகையை மாட்டி அதில் விலைப்பட்டியல் ஒன்றை எழுதச் செய்து அதற்கு முன்னால் உள்ள மேசையில் கொப்பி, பென்சில் போன்றவைகளை அடுக்கி வைத்து அதற்குப் பக்கத்தில் ஒரு 'சோக்' வெற்றுப் பெட்டியையும் வைக்கச் செய்திருந்தார். மாணவர்கள் எவர் வேண்டுமானாலும் தங்களுக்கு வேண்டியவைகளை எடுத்துக் கொண்டு, அதற்குரிய பணத்தை 'சோக்' பெட்டிக்குள் போடவேண்டியது...

வீரசிங்கத்தார் தம்முடன் பிரம்பு வைத்திருந்த போதும் அதனைப் பாவித்ததாகத் தெரியவில்லை. அதுதான் அவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வையொன்றே போதுமே! தவிர அந்தக் கவலையும் அவருக்கு இருந்திருக்காது... அதுதான் அதையெல்லாம் கவனிப்பதற்கென்றே பாதுகாப்பு அமைச்சர் போல ஜேபி மாஸ்டர் இருந்திருக்கிறாரே... அக்கல்லூரி மாணவர்கள் எங்கிருந்தாலும் ஒழுக்கமும் ஒழுங்கும் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்றால், அதற்கெல்லாம் காரணம் இவர்கள் போட்டுவைத்த அந்த அத்திவாரம்தான் காரணமாகவிருக்கும்...

ஜேபி மாஸ்ரர் சுகாதாரமும் சரீரவியலும் (HYGIENE & PHYSIOLOGY) பாடமும் அங்கு நடத்தி வந்தவர். அத்துடன் உடற்பயிற்சி - விளையாட்டுத் துறைகளுக்கும் பொறுப்பாக இருந்தவர். இந்த இடத்திலே இன்னொரு தகவல் -

அப்போதெல்லாம் அக்கல்லூரிக்குப் பல மைல்கள் தூரத்தில் இருந்தெல்லாம் மாணவர்கள் கால் நடையாகவே வந்து போனார்கள். இன்னும் சிலர் தண்ணீர் கட்டியும் துலா மிதித்தும் தங்களின் பெற்றோர்களின் விவசாய முயற்சிகளுக்கு உதவி செய்துவிட்டும் வருவார்கள். வேறு சிலர் விடுமுறை நாள்களில் 'வால்சுத்து' கட்டக்கூடப் போவார்கள். இப்படியெல்லாம் கடுமையாக உழைத்துவிட்டு படிக்கவென்று வருபவர்களுக்கு உடற்பயிற்சி வேறு வேண்டுமா?

நவாலியைச் சேர்ந்த ஆசிரியர் நகுலேசன் ஆவியுலகத்தாரோடு பேசிய அனுபவம் உள்ளவர். எங்களுக்கு ஆசிரியராக இருந்தவர். அவர் அப்போது இப்படியும் ஒரு நையாண்டி செய்ததுண்டு. ''எங்கட பிள்ளைகளுக்கு இருக்கிற உடற்பயிற்சி போதாதென்று இந்த ஜேபியன் பிறகும் அதுகளை வெயிலுக்க நிறுத்தி வருத்துகிறானே...?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வவல்லமை யுள்ளவர்களிடமிருந்து சர்வலோக நிவாரணம்...

மருந்துகளையும் மருத்துவ முறைகளையும் பொறுத்த வரை காலத்துக்குக் காலம் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காண்கின்றோம். ஆனால் திருவள்ளுவர் அன்றைக்குச் சொல்லிய 'மருந்து' இன்றைக்கும் பொருந்தக் கூடியதாக இருக்கிறது. 'மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வழிமுதலா எண்ணிய மூன்று' போன்றவை.

முன்னரெல்லாம் ஒரு நோயாளி வைத்தியசாலைக்குப் போவதென்றால், கூடவே கட்டாயம் மருந்துக்கெனப் போத்தலும் கொண்டுசெல்ல வேண்டும். சில சமயம் ஒன்றுக்கு மேற்பட்ட போத்தல்களும் தேவைப்படலாம். அப்போதெல்லாம் மருந்துகள் பெரும்பாலும் கலவை (MIXTURE)களாகத்தான் இருந்தன. வைத்தியசாலை வார்டுகளிலும் அனைத்து நோயாளிகளின் அலுமாரிகளின் மேலும் பல்வேறு இந்த வகை வண்ணக் கலவைகளைக் காணலாம். வரிசையாகக் காய்ச்சல் பார்த்துக்கொண்டுவரும் தாதிமார்களும், இந்தக் கலவையைக் கிளாசில் வார்த்து அவர்களைக் குடிக்கச் செய்துவிட்டுப் போவார்கள்.

வைத்திய நிலைய மருந்து கொடுக்கும் பகுதியும் 'கலகலப்பாகத்'தான் இருக்கும். இப்போதுள்ளது போல சரையில் கொட்டிக் கொடுத்துவிட்டு 'அடுத்தாள்' என்று சொல்ல முடியாதே! அடித்து ஆத்தி-அதுவும் போத்தல்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனல் வைத்து ஊத்திக் கொடுக்க வேண்டும். அதுவரை நாமும் அங்கே பொறுமையாகக் காத்திருக்கவேணும்.

காளமேகப் புலவர் 'கலப்படம்' பற்றிக் குறிப்பிடுகையில்... வானத்திலே இருக்கும்போது அதற்குப் பெயர் முகில். அது நிலத்தில் விழுந்தபோது நீராகிறது. அதுவே பால்காரி, மோர்க்காரி, தயிர்க்காரர்களின் கைகளிலே பட்டு பால் என்றும், மோர் என்றும், தயிர் என்றும் பெயர் பெறுகிறதாம்... இங்கும் அதே கதைதான்... இந்தக் கலவைக்கு மூலமே இங்குள்ள நல்ல தண்ணீர்தான்...

வெளியே அவுன்ஸ் கணக்குகள் பொறிக்கப்பட்ட மருந்துப் போத்தல்களும் இருந்தன. போதாமைக்கு மருந்து வழங்கப்படுகின்ற இடங்களிலே கீறிட்ட இடங்களை நிரப்புகின்ற - தேவையற்ற சொற்களை நீக்குகின்ற ஓர் அச்சிட்ட தாளைக்கூட போத்தல்மேல் ஒட்டிவிடுவார்கள். அதிலே ''நாள்... தடவைகள், சாப்பாட்டுக்கு முன்/பின்... தேக்கரண்டி/மேசைக்கரண்டி வீதம் எடுக்கவும்'' என்றிருக்கும். எல்லாவற்றுக்கும் 'குலுக்கல்' முக்கியம். அப்போதையை பேதி மருந்துகள் - பூச்சி மருந்துகளும் இப்படித்தான். அதெல்லாம் ஒரு மனித வதைதான்... விடுமுறையில் நின்றுதான் அதை எடுக்கவேணும்...'சீதம்' போன பின்னர்தான் 'பத்தியச் சாப்பாடு'...

ஆங்கில மருந்துகள்தான் அப்படி என்றால் நாட்டு மருந்துகள் எனச் சொல்லப்படும் ஆயுள்வேத - சித்த மருந்துகளும் அப்படித்தான் - ஆனால் அவை சற்றுத் தடித்த கரைசலாக இருக்கும். 'எல்லாரும் கைவிட்ட பின்னர் சில்லாலை வைத்தியம்' என்பதுபோல தமிழ் வைத்தியம் சரிவராவிட்டால்தான் அக்காலத்தவர்கள் ஆங்கில வைத்தியத்தை நாடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மருந்துகள் அநேகமாக முலைப்பால், இஞ்சிச் சாறு, கற்பூரவள்ளிச் சாறு - இவைகளில் கரைத்துத் குடிக்கிறதாகவே இருக்கும். இதற்கெனச் சில வீடுகளிலே மருந்துச் சிரட்டையும், உரை கல்லும் ஏனைய உபகரணங்களும் இருக்கும். ஒரு முறை இந்த வகை மருந்தைக் குடித்தால்... நெஞ்சிருக்கும் வரை அந்த நினைவிருக்கும்... அதுவும் குழந்தைகளுக்கு இதனை ஊட்டுவதென்றால்... (குழந்தையின் நோக்கில்) காலில் ஒரு பாவி கழுத்திலொரு மாபாவி (வாயைக்) கோலியிழுத்துத்தான்...

கலவைக்காலம் போய் குளிசை, கூட்டுக் குளிசை, சப்பிச் சாப்பிடுகிற குளிசை எனறெல்லாம் வந்துவிட்டது. 'சிறப்', 'ரொனிக்' தவிர தண்ணி மருந்து என்பதே அநேகமாக ஆங்கில வைத்தியத்தில் இப்பொழுது இல்லாமற் போய்விட்டது.

ஊசிமருந்து என்பது என்றைக்குமே இருந்து வருகிறது. அப்பொழுதெல்லாம் நல்ல கலவை போட்டுத் தருமாறு சில நோயாளிகள் டாக்டர்களைக் கேட்பதுண்டு. அதேபோல வேறு சிலர் தமக்கு ஊசிபோடும்படியும் கேட்பதுண்டு. ஆனால் ஊசியும் கையுமாக தாதி வருவதைக் கண்டதுமே அதுவரை நோயினால் துடித்துக் கொண்டிருந்த ஒரு நோயாளியின் நோய் பறந்து விடுவதுதான் மர்மமாக விருக்கிறது...

இதேபோல கொழும்பிலுள்ள நம்மவர்கள் சிலர் செலைன் - குளுக்கோஸ் ஏற்றிக் கொள்வதைச் 'சிக்'கெனப் பிடித்துக் கொள்கிறார்கள். முன்னர் நல்ல கலவை கேட்டுப் பெற்றதைப் போல, இடையிலே ஊசியைக் கேட்டு ஏற்றிக் கொண்டது போல அவர்களுக்கு செலைன் - குளுக்கோஸ் ஏற்றிக் கொண்டால்தான் திருப்தி ஏற்படுகிறது. அதற்கேற்றாற்போல கொட்டாஞ்சேனை மட்டக்குளிப் பகுதிகளில் சில 'செலைன் டாக்டர்'களும் இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமாம், அவர்களின் சொந்தப் பெயர் மறந்துவிடும் அளவிற்கு அவர்களுக்கு இந்தப் பெயர் நிலைத்துவிட்டது. அவர்கள் பணிபுரியும் தனியார் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்ற வசதியில்லா விட்டாலும் நோயாளி ஒருசில மணித்தியாலங்கள் படுத்திருந்து செலைன் போட்டுக் கொண்டு போகிற வசதிகள் இருக்கும். நோயாளியும் கண்ணைச் செருகிக்கொண்டு படுத்திருந்து அதை ஏற்றிக் கொண்டு, நோய் நீங்கப் பெற்றவராய் புத்துயிர் பெற்றுச் செல்வதைக் காணமுடிகிறது... எப்படியிருந்தாலும் அவர்கள் மகா கெட்டிக்காரர்கள் தான்... தங்களுக்கு என்ன தேவை என்பதை சர்வ வல்லமையுடைய டாக்டர்களிடமிருந்தே கேட்டுப் பெறுகிறார்கள் என்றால்...?

மீண்டும் தொடங்கிய இடத்துக்கு வருகிறேன். இதுவும் ஒரு கலக்கல் பகிடிதான். ஒரு கிழவி பேரனுடன் வைத்திய நிலையம் வந்திருந்தாள்... அவன்தான் அனுசரணையாளனும்... மருந்து கொடுக்குமிடத்தில் கலவையைப் பெற்றவனிடம் ''நாள் மூன்றுதடவை... சாப்பாட்டுக்கு முன்னர்... குலுக்கிக் கொடுக்கவும்'' என்றவர்களிடம் இவன் கேட்டானே ஒரு கேள்வி - ''கலவையையா? கிழவியையா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அவர் மாரடைப்பால் காலமானார் அவருக்கு வயது...

திருமண முதற்பந்தியிலிருந்து ஒரு 'வெட்டு' வெட்டி விட்டு வந்தவர்களில் ஒருவர் இப்படிக் குறைப்பட்டுக் கொள்கிறார். ''பரிமாறியவர்கள் படுமோசம் எனக்கு பாவக்காய்க் கறி போடவில்லை''

நம்மவர்களுக்குப் போதும் என்ற மனமே கிடையாது. கிடைத்தவைகளையிட்டுப் பெருமைப்படுவதை விட்டுவிட்டு கிடைக்காத ஒன்றுக்காகக் குறைப்படுவதே - அதையே பெரிதாகப் பேசுவதே - வழக்கமாகிவிட்டது. அதுவும் மற்றவர்களுக்குக் கிடைத்தது தனக்குக் கிடைக்காவிட்டால் அதை அவர்களால் சகித்துக் கொள்ளவே முடியாதிருக்கிறது.

இந்த நம்மவர்களின் இயல்பைத் தெரிந்து கொண்டுதான் பந்தியிலே உணவு பரிமாறும்போது, எல்லா இலைகளுக்கும் வரிசையாக ஒரேயளவில் அளந்தது போல சோறு வைத்துக் கொண்டு வருவார்கள் - அதற்கு முன்னர் வரிசை தவறாது - அதுவும் ஒவ்வொன்றாக - கறிவகைகளை வைத்துக் கொண்டு வந்திருப்பார்கள்.

கடைசியிலே 'பிரமிட்' உச்சியிலே அதாவது சோற்றுக்கு மேலே பருப்புக் கறியை ஊற்றிவிட்டு 'சரி சாப்பிடலாம்' என்றதும்தான் சாப்பிடுகிறோம்.

இப்படி எல்லாம் பாரபட்சம் இல்லாமல் சமநிலை பேணப்படுகின்ற நமது சபையிலே ஒருவருக்கு பாவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகற்காய்க் கறி கிடைக்கவில்லை என்றால்... ச்சா... பாவம்... சாப்பிடும்போது அது எனக்கு தெரியாமற் போய் விட்டது... நான் பாகற்காய்க் கறியை தொட்டுக்கூட பார்ப்பதில்லை.

இப்படியானதொரு தாழ்வுச் சிக்கல் சில சமயம் எம்மிடமும் தலைகாட்டுவதுண்டு. விருந்துச்சாப்பாட்டுக்குப் பின்னர் பீடா, சிகரெட் போன்றவைகளை நீட்டும் போது 'இலாகிரிப் பொருள்களா? - அவை எம தூதர்களல்லவா? அந்தப் பழக்கம்தான் எமக்குக் கிடையாதே' என்று உத்தமர்கள் போல மறுத்து விடுவோம்.

பின்னர் அதுபற்றி நினைத்துச் சிந்தித்தால்... மற்றவர் களுக்கெல்லாம் கிடைத்த ஓர் அதிகப் 'படி' - அல்லது 'போனஸ்' நமக்கெல்லாம் கிடைக்காமற் போய்விட்டதே என்றதொரு ஆதங்கம் ஏற்படப் பார்க்கிறது...

வீட்டிலே அளந்து சாப்பிடுபவர்கள் விருந்திலே அளவுக்கு மீறியும் அத்துமீறியும் அறுசுவையுடனும் சாப்பிடுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?

தனக்கு அந்த வருத்தம் இந்த வருத்தம் என்று சொல்லி, எனக்கு அது வேண்டாம் இது வேண்டாம் என்று மறுப்பது அழகல்ல - நாகரீகம் ஆகாது.

'பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரீகம் வேண்டுபவர்' என்ற உயர்ந்த பண்பாட்டை அவர்கள் இங்கே பின்பற்றுகிறார்கள் என நினைக்கிறீர்க்ளா?

'சாகும்போது தமிழ் படித்துச் சாகவேண்டும். என் உடல் வேகும்போதும் தமிழ் மணந்து வேகவேண்டும் என்ற பண்டிதர் சச்சிதானந்தனின் வாக்கை அவர்கள் உணவுச் சுவையிலும் பின்பற்றத் துணிந்து விட்டார்கள்' என நினைக்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லவேயில்லை, மற்றவர்களுக்குக் கிடைத்தவை தமக்கு இல்லையென்றாகி விடக்கூடாது என்ற மனோபாவம்தான் எல்லாவற்றுக்கும் காரணம். வேண்டுமானால் வீட்டுக்கு வந்ததும் இரண்டு 'டயனோல்' வில்லைகளைக் கூடுதலாக எடுத்துக் கொள்வார்கள்.

கிடைத்தவைகளையிட்டுத் திருப்தியடையாது கிடைக்காதவற்றையே பேசிக்கொள்வதென்பது மருந்து வியாதிகளைக்கூட விட்டுவைக்கவில்லை. வைத்திய வசதிகளும் நவீன அணுகுமுறைகளும் வந்து விட்டாலும், குறிப்பிட்ட மருந்துக்குத் தட்டுப்பாடு என்றால் அது பற்றியே பேசிக் கொள்கிறார்கள். ஊடகத் துறைகள் கூட அதற்கு விதிவிலக்கல்ல... (அதற்காக அது பற்றிக் கவனம் செலுத்தக் கூடாது - குரல் கொடுக்கக் கூடாது என்பதல்ல ) சும்மா... ஒரு பேச்சுக்காகச் சொல்லுகிறேன்...

அப்படித்தான் நோயைப் பற்றிக்கூட அப்படி ஒரு 'பற்றாக்குறை' சிலருக்கு இருப்பதுண்டு. தங்களுக்கேன் 'பிறசர்' இல்லை - தங்களுக்கேன் பிறசர் பார்ப்பதில்லை என்று அவர்கள் கவலைப்படுவதுண்டு. இருக்கின்ற 'டயபிடிஸ்' போன்றவைகளை வைத்துக் கொண்டு திருப்திப்படுவதை விட்டுவிட்டு இல்லாததற்காக இவர்கள் ஏன் ஏங்க வேண்டும்? (அதற்கான காரணம் பின்னால் வருகிறது)

இத்தகையவர்களுக்கு நான் சொல்வதுண்டு 'பிறசர்' போன்ற இருதய நோய்கள் வரவேண்டுமானால், அதற்கு முதற்கண் அவர்களுக்கு 'இதயம்' இருக்க வேண்டும்... அதாவது இலக்கியங்கள் கூறுகின்ற இதயம்... இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால் பாரதூரமான பொறுப்புகள் - கடமைகளை எல்லாம் 'ரேக் இற் ஈஸி' என்று நினைக்கிற உள்ளம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது 'பிறசர் என்பது பெரும்பாலும் பெரிய மனிதர்களுக்குத்தான். வருவதுண்டு... அரசாங்கத்துக்கு 'அழுத்தம்' கொடுக்கவென்று நாடாளுமன்றம் செல்கிறார்களே... அவர்களும் 'பிறசர்'காரர்கள்தாம்... பெரிய மனிதர்கள் காலமான செய்திகளை ஊடகங்கள் அறிவிக்கும் போது கவனித்திருப்பீர்களே... '...அவர்கள் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது...'

இந்த இடத்திலே மிக... மிக... மிகத் தன்னடக்கத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். நானும் ஒரு 'பெரிய' மனிதன்தான். எனக்கு வயது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வைத்தியசாலைக்கு மின்னுயர்த்தி...

"யாழ்.போதனா வைத்தியசாலையில் 'லிப்ற்' வசதிகள் இல்லாத காரணத்தால் மேல் தளத்திற்கு நோயாளர்களைத் தூக்கிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.''

இலங்கைக்கான, அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் வருகை தந்திருந்தார். அவ்வமையம் வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி ந.கனகரத்தினம் குறிப்பிட்ட ஒரு கருத்தே மேலேயுள்ளது. இது கவனத்துக்குரியது மட்டுமல்ல கவனிக்க வேண்டிய ஒரு கருத்துமாகும். அதுவும் உடனடியாக...

யாழ். வைத்தியசாலையில் நவீன சாதனங்களும் புதுப்புது வசதிகளும் மெல்ல மெல்ல எட்டிப் பார்க்கின்றன. வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை - சில சமயங்களில் சில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு போன்ற சில குறைகள் இருந்தாலும் வைத்தியசாலை ஓரளவு முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது. தற்செயலாக அங்கு மின்சார சபை மின்சாரம் நின்றுவிட்டால் கூட அடுத்த நிமிடமே மின்பிறப்பாக்கி மூலம் வைத்தியசாலை முழுவதற்கும் மின்சாரம் கிடைத்து விடுகிறது. ஆனால் அதிமுக்கியமாக இருக்க வேண்டிய மின்னுயர்த்தி (LIFT) இல்லாதது பெரியதொரு குறைதான். மின் உயர்த்திதான் இல்லா விட்டாலும் சாதாரண 'கப்பி- கயிறு'களிலான உயர்த்தியாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க வேண்டாமா? அந்தக் காலத்து மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில்கூட இப்படியான குறைகள் இருக்க வில்லை.

மாடிக்கு அனுப்பப்படுகின்ற அல்லது மாற்றப்படுகின்ற நோயாளிகள் அனுபவிக்கின்ற அவலமும் அவமதிப்பும் சொல்லுந்தரமன்று. சக்கர நாற்காலியிலோ வண்டியிலோ நோயாளிகளைத் தள்ளிக் கொண்டு வருகின்ற ஒரு சிலர் மாடிப்படி வரை வந்ததும் 'ஆற்றங்கரை வரை கொண்டு வந்தாயிற்று. இனி ஆக ஆறு அடி நீளமுள்ள ஆற்றைக் கடப்பது தான் பாக்கி... உங்களால் அது முடியும்தானே?' என்பது போல நடக்கப் பார்க்கிறார்கள். 'மெல்ல மெல்ல படியேறி வரமுடியுமா?' என்று மெல்லக் கேட்கிறார்கள். அவர்களும் தான் என்ன செய்வார்கள்? 'இப்படி ஒரு கேஸ்' என்றதும் நழுவப் பார்க்கும் சக ஊழியர்களைத் தேடிச் 'சிக்'கெனப் பிடித்து வந்து நாற்காலியுடன் அல்லது வண்டியுடன் நோயாளிகளை மாடிக்குக் கொண்டு செல்வது என்றால் அது இலேசான காரியமா?

'ஆரோக்கியத்திற்கு நடப்பது நல்லது' என்பவர் களுக்குக்கூட படியேறுவது பரிந்துரைக்கப்படுவதில்லை. அதுவும் 'பாரத்'துடன் படியேறுவது... அதாவது ஊழியர் களுக்கும் சேர்த்துத்தான் நான் பரிதாபப்படுகிறேன்.

எப்படியோ உதவியாளர்களின் ஒத்துழைப்புடன் நோயாளிகளை மாடிக்குத் தூக்கிச் செல்பவர்கள் சிலரின் வாய்களாவது 'சும்மா' இருக்கும் என நினைக்கிறீர்களா? அனுபவித்தவர்களுக்கு மட்டுமே அது எல்லாம் தெரியும்.

'கட்டிலை விட்டு இறங்கக் கூடாது - ஏன் கட்டிலிலேயே எழுந்திருக்கக்கூடாது' என உத்தரவிட்ட வர்களுக்குக் கூட 'அப்படி இருந்தால் சுகமாகாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகால்களுக்குப் பயிற்சி கொடுத்தால்தான் விரைவில் வீட்டுக்குப் போகலாம்' என்று உபதேசம் செய்வார்கள். (அறம், பொருள், இன்பத்துக்கு அடுத்த 'வீடு' பற்றிக் குறிப்பிடுகிறார்களோ என்னவோ?) கொஞ்சம் ஸ்தூல சரீரமான நோயாளி என்றால், அவரின் எடை பற்றிய ஆராய்ச்சி - விசாரணை வேறு...

மொத்தத்தில் இந்த வகை உபசரிப்பால் நோயாளிகளின் தேறிய உடல்நிலை கூட சீர் கெடுவதுடன் அவர்கள் மிகுந்த மன உளைச்சல்களுக்கும் ஆளாக வேண்டியுள்ளது. இதற்கெல்லாம் காரணம் சடப் பொருளான அந்த மின்னுயர்த்திகள் இல்லாததுதானே? எனது ஆத்திரமும் அந்தச் சடப் பொருளின் மீதுதான். எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால்-

''ஏய்... யாரங்கே... யாழ்.போதன வைத்தியசாலைக்குச் சம்பந்தப்பட்டவர்கள் 'லிப்ட்' வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க இத்தால் கண்டிப்பான உத்தர விடுகிறேன்'' - என்று உறுமமாட்டேனா என்ன...?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிழவியைக் குமரியாக்கும் இயந்திரம்

கடந்த ஆண்டினை நினைத்துப் பார்க்கும்போது, அமெரிக்காவின் உலக வர்த்தகக் கட்டடம் மீது நடத்தப்பட்ட விமானத் தற்கொலைத் தாக்குதலை எவரும் மறந்துவிட முடியாது. இந்தப் பேரழிவுக்குட்பட்ட நியூயோர்க் கட்டடத் தொகுதியிலுள்ள ஒரு மாடிக் கட்டடமோ அல்லது அதுபோல இன்னொன்றோ தெரியவில்லை. அதை வைத்து ஒரு துணுக்குக் கதை வழங்கி வருகிறது...

நியூயோர்க்கிலுள்ள அதியுயர் மாடிக் கட்டடமொன்றின் உச்சி மாடியில் உல்லாசப் பயணிகளாக வந்த மூன்று நண்பர்கள் தங்கியிருந்தனர். அவர்கள் பகலெல்லாம் ஊரைச் சுற்றிவிட்டு இரவானதும் தங்கள் அறைக்கு வந்து விடுவார்கள்...

ஒரு நாள் அப்படி அவர்கள் களைத்துப்போய் அந்த விடுதிக்கு வந்தபோது அவர்களுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. வரவேற்பறையில் இருந்தவர்கள் மின்னுயர்த்தி (LIFT) பழுதடைந்துள்ளதால் படி மூலமே மாடிக்குச் செல்ல வேண்டும் என வருத்தத்துடன் தெரிவித்தனர்...

அது பல நூறு படிகளைக் கொண்ட பலமாடிக் கட்டடம். அதன் உச்சி மாடிக்கு அவர்கள் நடந்து போவதென்றால்...?

அதனால் அவர்கள் இப்படி ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். களைப்புத் தெரியாமலிருக்க ஆளுக்கு ஒரு கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் அது! அதாவது 'ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது' என்பது போல இது கதை...

முதலாவது ஆள் வீரக்கதை, இரண்டாவது ஆள் காதல் கதை, மூன்றாவது ஆள் மர்மக் கதை என்பதற்கிணங்க 'வீரக்கதை' நடந்து கொண்டிருந்தது... பல மாடிகளைத் தாண்டிவிட்டார்கள். இரண்டாவது ஆளின் காதல் கதைச் சுவையுடன் அவர்கள் ஏறக்குறையத் தங்கள் மாடியறையையே நெருங்கிவிட்டார்கள். மூன்றாவது திடுக்கிடும் - மர்மக்கதை... அதனாலென்ன? கதை முடியாவிட்டால் அறைக்குள் சென்ற பிறகும் அதைத் தொடரலாந்தானே? ''ம்... ஆரம்பிக்கலாம்'' என்றனர் இருவரும்.

மர்மக் கதைக்காரன் தனது திடுக்கிடும் கதையைச் சொல்லுகிறான் ''மாடி அறைத் திறப்பை கீழே வரவேற்பறையில் விட்டுவிட்டு வந்து விட்டேன்.''

இந்தத் துணுக்குக் கதைக்கு மூக்கும் முழியும் வைத்து கலைஞர் மு.கருணாநிதி ஒரு பெரிய கதையைக் கற்பனை செய்து எழுதியிருந்ததும் நினைவுக்கு வருகிறது. அதாவது அந்த நண்பர்கள் சொன்னதாக வருகின்ற வீரக் கதையையும் காதற்கதையையும் தாமே புனைந்து அதிலே பொருத்தியிருக்கிறார்.

நகர அபிவிருத்திகளோடு சேர்ந்து இந்த மின்னுயர்த்திகளும் நவீனமயப்பட்டு வந்திருக்கின்றன. கொழும்பு நகரின் சில இடங்களிலேயுள்ள சிலவகை மின்னுயர்த்திகளை இயக்குவதற்கென அதற்குள்ளேயே இயக்குநர்கள் இருப்பார்கள். அழைப்பு 'பட்டனை'அழுத்தி அதை வரவழைக்கலாம். கதவு திறந்து கொண்டதும் உள்ளே நுழைந்து மாடி இலக்கத்தைக் குறிப்பிட்டாலே போதும். இதிலே எமக்கு எந்தவித சிரமமோ பிரச்சினைகளோ இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு சில இடங்களிலுள்ள சிலவகை மின்னுயர்த்திகளை நாமேதான் இயக்கியாக வேண்டும். அதற்குள் இயக்குநர்கள் என்று எவரும் இருக்கமாட்டார்கள். அதை எப்படி இயக்க வேண்டும் என்பதைச் சரியாகப் புரிந்து கொண்ட பின்னரே அதற்குள் நுழைய வேண்டும். இதிலே ஒரு சிறு தவறு விட்டாலும் விபரீதமாகிவிடலாம். இத்தகைய சங்கதிகளை யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்வதை விட 'நில், கவனி...' அதாவது 'வெயிற் அன் ஸீ' என்ற முறையில் கற்றுக் கொள்வதுதான் நல்லது. அதன்பின் 'வெள்ளோட்ட'மாக முதலில் யாருடனாவது அல்லது யாருக்குப் பின்னாலாவது நுழைந்து பார்க்கலாம்- பயிற்சி பெறலாம். ஆனால் அவர்களும் உங்களைப் போன்ற 'அனுபவசாலி'யாக இருந்து விடக் கூடாது.

இவைகளைத் தவிர இலங்கை வங்கித் தலைமைக் கட்டடம் போன்ற இடங்களிலே முதல் மாடிக்குப் போவதற்கென நகரும் படிகள் (Escalator) இருக்கும். இங்கே ஒரு பக்கத்திலே மேலே போவதற்கான ஒரு தொகுதிப் படிகளும், மறுபக்கத்திலே கீழே இறங்குவதற்கான இன்னொரு தொகுதிப் படிகளும் நகர்ந்தவாறிருக்கும். மேலே போவதற்கு என்றால் முதலாவது படியிலே கவனமாகக் கால்களைப் பதித்து நிதானமாக நின்று கொள்ளவேண்டும். படிகள் எம்மை மேலே கொண்டு செல்லும். மேல் தளம் வந்ததும் அதே கவனத்துடனும் நிதானத்துடனும் அதிலே கால்களைப் பதிக்க வேண்டும். இறங்கும்போதும் அப்படித்தான். ஏற்கனவே இதிலே ஏறிஇறங்கி நல்ல அனுபவம் பெற்றவர்கள் அந்தப் படிகளின் நகரும் வேகம் போதாதென்று தாங்களும் வேறு அதை முந்திக் கொண்டு அதிலே நடப்பதையும் காணலாம். இதற்கும் கூட 'நில், கவனி...' உதவுவதைப் போல வேறு எவரும் எமக்கு உதவ முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.போதனா வைத்திய சாலையில் மின்னுயர்த்திகள் இல்லாத காரணத்தினால் நோயாளிகள் அனுபவிக்கின்ற அவலம், அவமதிப்புப் பற்றியெல்லாம் முன்னொரு சமயம் குறிப்பிட்டிருந்தேன். கொழும்பில் எல்லா வசதிகளும் கொண்ட சில அரசாங்கத் தொடர்மாடிகளிலும் ஏனோ தெரியவில்லை, சொல்லிவைத்தாற்போல இக்குறைபாட்டினைக் காணலாம். அதனால் அங்கு குடியிருப்பவர்கள் சில சந்தர்ப்பங்களிலே படுகின்ற அவலமும் சொல்லி மாளாது.

ஒரு நாட்டுப்புற மாது புதிதாகப் பட்டணம் பார்க்க வந்திருந்தாள். ஒரு 'லிப்ட்' அறைக்கு முன் நின்று நான் முன்னர் குறிப்பிட்ட 'வெயிற் அன் ஸீ' பொலிசியடிப்படையில் நடப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். கதவு திறந்து கொண்டதும் ஒரு கிழவி அதற்குள் ஏறிக் கொள்ள 'லிப்ட்' மேலே போய்விடுகிறது. சற்று நேரத்தின் பின் அது மீண்டும் கீழிறங்கியது. கதவு திறந்து கொள்ள, ஓர் இளம் கட்டழகி ஒயிலாக அங்கிருந்து வெளியே வருகிறாள்.

பார்த்துக் கொண்டிருந்த மாதுவுக்கு ஆச்சரியமாக இருந்தது. கிழவியை குமரியாக்கும் இயந்திரம்கூட பட்டணத்துக்கு வந்து விட்டது போலிருக்கிறது என எண்ணி வியந்தாள். அடுத்த முறை வரும்போது தனது கணவரையும் அழைத்து வர வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்கிலிசு வாத்தியார் சொன்ன 'வீத்திறி' கதை

உடுவில் - தம்பையா குலசிங்கம் என்றால் தெரியாதவர்களுக்கும் 'இங்கிலிசு வாத்தியார்' என்றால் பட்டென்று தெரிந்துவிடும். சேட்டை உள்ளுக்கு விட்டு வேட்டி கட்டியிருப்பாரே... அவரைத்தான் குறிப்பிடுகிறேன். அவர்தான் எங்களுக்கு ஆரம்பப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராக இருந்தவர், பின்னர் இளைப்பாறி இருந்த காலத்தில் 'ஷெல்' பட்டுக் காலமாகிவிட்டார்.

அவர் அப்பொழுதெல்லாம் அடிக்கடி சொல்லும் கதை இப்பொழுதும் நினைவில் நிற்கிறது.

ஏறக்குறைய சம வயதுடைய மூன்று நண்பர்கள் ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்ந்து அதனைப் படிக்க வேண்டும் என ஆசைப்பட்டனர். தக்க ஆசிரியர் ஒருவரை அணுகித் தம் ஆசையை வெளியிட்டனர். ஆசிரியரும் அதற்கு உடன்பட்டு அவர்களுக்கு ஆங்கிலம் கற்பிக்கத் தொடங்கினார். ஆனால் ஆங்கிலம் செய்த பாவமோ அல்லது அவர்கள் செய்த பாவமோ தெரியவில்லை அவர்களின் வாயில் ஆங்கிலம் நுழைவதாகத் தெரியவில்லை. கடைசியில் ஆளுக்கு இரண்டொரு ஆங்கிலச் சொற்களை மட்டும் அறிமுகப்படுத்திவிட்டு 'அவைகளை' மனப்பாடம் செய்யும்படி பணித்துவிட்டு ஆசிரியர் தப்பினால் போதும் என்று போய்விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது ஆளுக்கு அவர் சொல்லிக் கொடுத்தது 'வீத்திறி' (நாம் மூவர்) என்பது! இரண்டாவது ஆளுக்கு 'போர் ரென் ரூபீஸ்' (பத்து ரூபாவுக்காக) என்பது!

மூன்றாவது ஆளுக்கு அதுகூடச் சிரமமாக இருக்கும் என்பதால் 'யேஸ் யேஸ்' (ஆம், ஆம்) என்பது!

மூவரும் நாளிலும் பொழுதிலுமாக மனப்பாடம் செய்து ஒருவாறாக மேற்படி வார்த்தைகளைப் பேசக் கற்றுக்கொண்டு விட்டனர்.

இப்படி இருக்கும்போது ஒரு தெருவோரத்தில் அடிபட்டு மயங்கிக் கிடந்த ஒருவரை இந்த இணைபிரியாத நண்பர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு, 'ஆங்கிலத்தில்' சிந்தித்துக் கொண்டு இருந்தனர். பொலீஸார் ஜீப்பில் வந்து குதிக்கிறார்கள்.

பொலீஸ் அதிகாரி இவர்களை அணுகி ''இது யார் செய்த வேலையாக இருக்கும்?'' என ஆங்கிலத்தில் கேட்கிறார். அதற்கு முதலாவது ஆள் ''வீத்திறி'' என ஆங்கிலத்திலேயே பதிலளிக்கிறார்.

துப்பு அவ்வளவு விரைவில் துலங்குவதைக் கண்டு மகிழ்ந்த பொலீஸ் அதிகாரி மீண்டும் ஆங்கிலத்தில் ''எதற்காக அப்படிச் செய்தீர்கள்?'' என்று கேட்கிறார். இரண்டாவது ஆளும் சளைத்தவரா என்ன? அவர் ''போர் ரென் ரூபீஸ்'' என்கிறார்.

'போயும் போயும் பத்து ரூபாவுக்காக இப்படியும் செய்வதா?' என்ற கேள்விக் குறியுடன் பொலீஸ் அதிகாரி ''அப்படியானால் நீங்கள் குற்றத்தை ஒப்புக்கொள்கிறீர்கள், அப்படித்தானே?'' என்கிறார்.

மூன்றாவது ஆளும் ஆங்கிலத்தில்தான் ''யேஸ், யேஸ்'' என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் விலங்கு மாட்டப்பட்டு ஜீப்பில் ஏற்றப் பட்டனர்.

- இதுதான் இங்கிலிசு வாத்தியார் சொன்ன கதை. இதை வைத்துக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சில சொற்கள் - சொற்றொடர்களை வைத்துக்கொண்டு சமாளிக்க முடியாது என்று நான் சொல்ல வரவில்லை. என் போன்ற வர்கள் சில சிங்களச் சொற்களை வைத்துக் கொண்டு கொழும்பில் காலந்தள்ளவில்லையா? எதற்கும் பொருத்தமான வார்த்தைகளைப் பொருத்தமான இடங்களில் பயன்படுத்தும் விவேகம் இருக்க வேண்டும். தவறினால் 'வீத்திறி' கதை போல விபரீதம்தான் ஏற்படும்.

நமது ஸ்ரீதரசிங் அவர்கள் தமது தந்தையார் பூபாலசிங்கம் பற்றிக் குறிப்பிடுகையில் அவரைச் சோவியத் யூனியனுக்கு அனுப்பி வைப்பதற்காக அவருடன் ரயிலில் பயணம் செய்தாராம். அப்பொழுது உடன் வந்த ஒரு 'புறொக்டர்' கொழும்பு சேரும்வரை ஆங்கிலத்தில் கொட்டோ கொட்டு என்று கொட்டியதும் 'யேஸ் நோ' என்ற இரண்டு சொற்களையும் வைத்து தமது தந்தையார் அவரைச் சமாளித்ததையும் வியந்து சொல்லியிருக்கிறார்.

எனது நண்பரொருவர், அவருக்கு ஆங்கிலம் புரிந்து கொள்ளும் அளவுக்கு பேச வராது. இருந்தாலும் யாராவது ஆங்கிலத்தில் முழங்கும்போது இவர் இடையே மட்டும் பொருத்தமான இடங்களில் 'உண்மைதான்' (oh... really) 'அப்படித்தான்' (of course) போன்ற கனதியான வார்த்தைகளைப் பாவிப்பதைப் பார்த்தால்... ஆங்கிலத்தில் அவர் ஒரு விண்ணன் என்றுதான் சொல்லத் தோன்றும்.

இதென்ன பிரமாதம் நமது யுவதிகள் ''ஹலோ ஹாய்'' என்ற வார்த்தைகளை வைத்தே ஜமாய்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறார்களே...(ஹாய் என்பது யார் கண்டுபிடித்த ஆங்கிலமோ?)

ஆங்கிலப் பாவனை நம்மைவிட்டுப் போய்விடும் - சிங்கள மக்கள் இணைப்பு மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றிருந்தோம். கொம்பியூட்டரின் வருகையும், பாதுகாப்புப் படையினரின் வருகையும் இக்கருத்தை மாற்றிவருகிறது போலத் தெரிகிறது. தனிச் சிங்களத்தில் செய்து வந்த பணிகளைக் கூட ஆங்கிலத்தில்தான் செய்தாக வேண்டும் என்ற கட்டாயத்தைக் கொம்பியூட்டர்கள் உருவாக்கி வருகின்றன. 'கொம்பியூட்டர் படிக்கப் போகிறோம்' - 'ஆங்கில வகுப்புக்குப் போகிறோம்' என்று சொல்லுபவர்களின் தொகை அதிகரித்துவருகிறது.

இதேபோல இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளின் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் மாறிவிட்டது. அவர்களுக்கு 'கொஞ்சம் போல'த்தான் தமிழ் தெரியும். எம்மவர்களுக்கு 'டிக்க டிக்க'த்தான் சிங்களம் தெரியும். ஆனால் பயண விண்ணப்பம் முதல் முன்னுரிமைக் கடிதம், குடும்பப் பதிவு, பொலீஸ் முறைப்பாடு, சத்தியக் கடதாசி எல்லாவற்றுக்குமே ஆங்கிலத்தை விட்டால் வேறு வழியில்லை.

இந்த மாற்றங்கள் எல்லாம் தமிழ் மட்டுமே தெரிந்த சில கிராம அதிகாரிகள் போன்றவர்களுக்கு மட்டும் பெரும் வில்லங்கமாக இருந்து வருகிறதாம். அவர்களும் சில ஆங்கில வார்த்தைகளை மட்டுமே வைத்துக்கொண்டு 'காலாட்ஷேபம்' நடத்தி வருவதாகத் தெரிகிறது. எனக்குள்ள கவலையெல்லாம் அவர்களில் யாரும் 'வீத்திறி' கதைபோல நடந்துக் கொள்ளக் கூடாது என்பதுதான்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இது பழனிமலையல்ல, பாராளுமன்றம்!

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்திலேதான் இது நடந்தது. காலித்தொகுதிப் பாராளு மன்ற உறுப்பினர் டபிள்யூ.தஹாநாயக்கா பாராளுமன்றத்தை நோக்கிக் கோவணத்துடன் வந்து கொண்டிருக்கிறார்...

அவரை ''ஏன் இப்படிக் கோவணத்துடன் இங்குற்றோர் ஆண்டியானாய்... இது பழனிமலை அல்லவே... பாராளு மன்றம் அல்லவா...'' என்று யாரும் கேட்கவில்லை. காரணம், அவரது நோக்கமே அக் கோலத்துடன் அதற்குள் நுழைய வேண்டும் என்பதுதான்!

அக்காலத்தில் அரிசி, மா போன்ற உணவுப் பொருள்களின் மீதும், துணிவகைகளின் இறக்குமதிகள் மீதும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்துக்குக் குறிப்பிட்ட அளவுகளுக்கு மேல் அவைகளைக் கொண்டு செல்வது கூடக் குற்றமாக்கப்பட்டிருந்தது. அப்பொழுதும் சோதனைகளும், சுற்றி வளைப்புகளும் இருந்தன. வெடிப் பொருள்களல்ல, அரிசி கடத்தப்படுகிறதா என்ற சோதனைகளும், பயங்கர வாதிகள் பதுங்கியுள்ளனரா என்பதற்குப் பதில் அரிசி, நெல் பதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றனவா என்ற சுற்றி வளைப்புகளையும்தான் குறிப்பிடுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அளவுக்கு உணவுக்கும், உணவுப் பொருள் களுக்கும் தட்டுப்பாடுகளும், கட்டுப்பாடுகளும் இருந்தன. எந்த வீட்டை எடுத்துக் கொண்டாலும் ''இன்றும் வருவது கொல்லோ நெருநலும் கொன்றது போலும் நிரப்பு'' என்ற அவலம்தான்.

அரசாங்கமும் நாட்டின் நன்மை கருதி அரிசி, மா உணவு வகைகளை மக்கள் குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் வாரத்தில் ஒரு நாளுக்குமேல் அதைத் தொட்டாலே குற்றம் என்றும் உத்தரவு பிறப்பித்திருந்தது. அந்த நாளில் அவைகளுக்குப் பதில் மரவள்ளிக் கிழங்கு போன்றவைகளைச் (இஞ்சிச் சம்பலுடனல்ல) சாப்பிடச் சொன்னார்கள். பாண் கிடைப்பதுகூடக் குதிரைக் கொம்புதான். கிடைத்தாலும் தலைகளுக்கு இத்தனை என்ற அடிப்படையில்தான். அதையும் தினமும் பெறமுடியாது... அது கூடச் சுழற்சி முறையில் தான்...

துணிவகைகளைப் பொறுத்தவரைகூட இதுதான் கதை... கூப்பனுக்கு இத்தனை யார் என்று அதற்கும் கட்டுப்பாடு. அவர்கள் வழங்கும் துணி பெண்களுக்கென்றால் 'உட்பாவாடை'க்கும், ஆண்களுக்கென்றால் 'அதற்கும் தான்' போதும் என்றெல்லாம் கேலிபேசப்பட்ட அந்த வேளைதான் தஹாநாயக்கா அவர்களும் 'கலரி'க்கு விளையாட்டுக் காட்ட அப்படி...

காலிமுகக் கடற்கரைக்கு எதிரேயுள்ள அப்போதைய பாராளுமன்றத்துக்கு முன்னே தஹாநாயக்கா அக்கோலத்தில் நிற்கிறார்... அவரைச் சுற்றிப் பத்திரிகையாளர்களும், படப்பிடிப்பாளர்களும் பேட்டிகள் எடுத்துக் கொண்டும் 'கிளிக்' செய்து கொண்டும் இருக்கிறார்கள். அப்போது அவரை அப்படி வேடிக்கை பார்த்தவர்களில் நமது எழுத்தாளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகையாளருமான வே.வரதசுந்தரமும் ஒருவராம் - ஆனால் அரைக்கால்சட்டை போட்ட மாணவனாக! உயரமான தஹாநாயக்காவை அவருக்கு மிக நெருக்கமாக நின்று வரதர் அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்த காட்சியும் 'கிளிக்' செய்யப்பட்டு விட்டதாம்! அடுத்த நாள் பத்திரிகையொன்றில் முன்பக்க முகப்புப் படமாக அக்காட்சியும் இடம் பெற்று விட்டதாம்...

சென்ற ஆட்சிக் காலத்தில், எண்ணெய் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக நமது யாழ்ப்பாண உறுப்பினர் மகேஸ்வரன் அவர்கள் அவரது சக உறுப்பினர்களுடன் மாட்டு வண்டியில் பாராளுமன்றம் சென்றார்களல்லவா? அருகேயுள்ள வாகனத் தரிப்பிடத்திலே வண்டியை நிறுத்திவிட்டு, மாடுகளையும் கொண்டுபோய் தண்ணி காட்டிக் கட்டிவிட்டு பாராளுமன்றத்துக்குச் சென்றார்களாம்... ஆனால், அன்று தஹாநாயக்கா பாராளுமன்றத்திற்குள் சென்றாரா என்ற விவரம் தெரியவில்லை. பாராளுமன்ற சம்பிரதாயங்கள் என்றெல்லாம் இருக்கிறதல்லவா? 'சேட்டைவிட'த் தெரியாதவர்களை உள்ளே அனுமதிக்க மறுப்பவர்கள் அவரை - அதுவும் அக்கோலத்தில்...

ஒரே சகோதரிகள் ஒரே மாதிரியான துணியில் சட்டை அணிந்திருந்தால் 'என்ன கூப்பன் துணியா' 'என்று கேட்பதுண்டல்லவா? அதற்கு அடிப்படையே முக்கியமாக நான் இங்கே குறிப்பிட்ட பங்கீட்டுத் துணிகள் விநியோகம் தான். மாணவர்களுக்குத்தான் சீருடை என்றில்லை. ஒருவித குறுக்குக் கோடிட்ட காற்சட்டைத் துணி... காற்சட்டைக்காரர்கள் யாரைப் பார்த்தாலும் அப்போது அந்தத் துணியில்தான்... சீத்தைத் துணிகளைப் பொறுத்தவரையும் கூட ஒரு சில மாதிரி வகைகள்தான்... மைமல் பொழுதில் தவறுதலாக மனைவி என்று நினைத்து மச்சாளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பிட்டுவிட்டு... 'எக்யூஸ்மி... ஐயாம் சோ சொறி...' சொன்னவர்களும் இருந்திருப்பார்கள்.

இந்த இடத்திலே 'ஆனந்த விகடன்' தேவனின் 'சம்பங்கிபுரத்து மர்மம்' கதைச் சுருக்கம்.

டிபுடி பொலீஸ் கமிஷனர், ஆபத்சகாயத்துக்கு கட்டளை யிடுகிறார். சம்பங்கிபுரத்துக்குப் போய் கஸ்தூரியைக் கொலை செய்த ஆசாமியைக் கண்டு பிடிக்குமாறு...!

...சம்பங்கிபுரத்தில் எங்கே பார்த்தாலும் கஸ்தூரி மயம், அங்குள்ள ஹோட்டல் முதலாளியின் பெயர் கஸ்தூரி, கொலையுண்டவரின் மைத்துனர் பெயர் கஸ்தூரி, பொலீஸ் இன்ஸ்பெக்டரின் பெயர் கஸ்தூரி, ஹெட் கான்ஸ்டபிளின் பெயர் கஸ்தூரி. டாக்டரின் பெயர் கஸ்தூரி, பியூன் கஸ்தூரி...

அந்த ஊரிலுள்ள கஸ்தூரி ரங்கப் பெருமாள் மகா சக்தி வாய்ந்தவர். ஆகவே அந்த ஊரில் எந்தப் பிள்ளை பிறந்தாலும் அதற்குக் கஸ்தூரி என்று பெயர் வைப்பதே வழக்கமாகி விட்டது.

''கொலையாளியின் பெயர் கஸ்தூரி'' - இது இவரின் கண்டுபிடிப்பு.

''சரி அவனைக் கைது செய்யும்'' - தந்தியில் இவருக்கு உத்தரவு வருகிறது.

திருப்பதியில் மொட்டைத் தாதனைக் கண்டுபிடித்தாலும் பிடிக்கலாம்; சம்பங்கிபுரத்தில் கஸ்தூரியை எப்படிப் பிடிப்பது? இவ்வளவு சிரமப்பட்டு கொலையாளியின் பெயரைக் கண்டுபிடித்த ஆபத்சகாயம் அவனை 'அரெஸ்ட்' செய்யமுடியாமற் போனதாக கதை முடிகிறது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# துரையரின் (நன்னாரி) தேநீர்க் கடை

'*சா*த்திரியாரின் சாப்பாட்டுக் கடை' போலவே அப்போது மருதனார்மடச் சந்தியிலிருந்த 'துரையரின் தேநீர்க் கடையும்' என்னை நினைக்கவும் சிந்திக்கவும் வைக்கிறது... அது சாதாரண தே-கடையல்ல, 'நன்னாரித் தேத்தண்ணிக் கடை' எனும் அடைமொழியும் பெற்று விளங்கியது.

'அது' பற்றித் தெரிந்தவர்கள், அந்த இடத்தில் போய்வரும் போதெல்லாம் அங்கு தரித்து நன்னாரித் தேநீர் அருந்தத் தவறுவதில்லை. வேறு சிலர் வில்லங்கமாகவேனும் அந்த இடத்துக்கு வலிந்து போய் வருவதுண்டு. காரணம் துரையரின் நன்னாரித் தேநீர் மகிமைதான்!

நல்ல தேயிலையைக்கொண்டு தயாரிக்கும் தேநீருக்கு மேலதிகமாக எதுவும் சேர்த்துக் கொள்ள வேண்டியதில்லை. அதிலேயே சில தனித்துவங்களும் மருத்துவப் பயன்களும் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும் இஞ்சித் தேநீர், நன்னாரித் தேநீர் - இவைகளைப் பொறுத்தவரை அவைகளில் விதிவிலக்குகள் இருக்கும் போல எனக்குத் தெரிகிறது.

குடாநாட்டுக்கு வெளியே இப்பொழுது சில குறிப்பிட்ட கடைகளில் இஞ்சித் தேநீர் குடிக்கலாம் என்றிருக்கிறது. தேநீரில் - அதுவும் குறிப்பாக வெறும் தேநீரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவாக இஞ்சி கலந்தால், அதிலும் ஒரு தனிச் சுவையும் மருத்துவப் பயனும்கூட இருக்கிறது. குடித்ததும் அசதி நீங்கிப் புத்துணர்ச்சி பெற்ற உணர்வு தெரியும். (அதற்காக மரவள்ளிக் கிழங்கு சாப்பிட்ட கையோடு அதனைக் குடித்து விடாதீர்கள்). எதற்கும் அளவுதான் முக்கியம். சுன்னாகம் நீர் வழங்கல் சபையினர் சில சமயங்களில் செய்வதுபோல குடிநீருக்குள் அளவுக்கதிகமான குளோரினைக் கலந்துவிடக்கூடாது. மீண்டும் சொல்கிறேன், அளவு முக்கியம்... 'மிகினும் குறையினும் நோய் செய்யும்' என்பது வள்ளுவர் வாக்கு.

மீண்டும் துரையரின் கடைக்கே வருவோம். அவரின் கடையும் ஆரம்பத்தில் மண்சுவர் கொட்டகையாக இருந்துதான் படிப்படியாக வளர்ச்சி கண்டது. அதுவும் ஒரு மூக்குப் பேணிக் கடைதான்... வெளிப்பேணி கூட இருந்ததாக நினைவு... 'தேநீர்க் கடைப் பிரவேச' காலத்தில் அந்தக் கடைக்கும் இலக்கு வைத்ததாக அறிய வருகிறது... கடையில் சுடச்சுட சுவையான வடை, வாய்ப்பன், பகோடா, மோதகம், சூசியம் எல்லாம் கூட இருக்கும். இருந்தாலும் கடைக்குக் 'கியாதி' வந்தது என்னவோ நன்னாரித் தேநீரால்தான்...

கடை முதலாளி துரையரும் சரி, அவருக்கு உதவியாகச் சில சமயங்களில் நிற்கும் சகோதரனும் சரி, 'காந்திக் கோலத்தவர்கள்'... சாரமோ நாலு முழ வேட்டியோதான் அணிந்திருப்பார்கள்... வண்டிக்காரர்கள்... அதாவது வயிற்றோடு சம்பந்தப்பட்ட வண்டியைச் சொல்லுகிறேன். இருவருமே அதிகம் பேசமாட்டார்கள்... 'உம்'மென்றுதான் இருப்பார்கள்... பேசுவதெல்லாம் நன்னாரித் தேநீர்தான்...

தப்பித் தவறி யாராவது 'ரீ' என்று கேட்டால் போதும், துரையருக்குப் பொல்லாத கோபம் வந்துவிடும். ''அதெல்லாம் இங்கு கிடையாது போ...'' என்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது வடலியடைப்பில் வசிக்கின்ற செல்வராசா என்பவர் அப்பொழுது எங்கள் கூட்டாளியாக இருந்தவர். அவருக்கு இருந்தாற்போல நன்னாரித் தேநீரின் நினைவு வந்து விடும். பேச்சுவாக்கில் ஏதாவது பந்தயம் என்று வந்தாலும் நன்னாரித் தேநீரைத்தான் 'பணயப் பொருளாக' வைப்பார். நன்னாரித் தேநீர் வாங்கித் தருவதாக அல்லது வாங்கித் தரவேண்டும் என்பதாக... படம் பார்க்கின்ற திட்டம் என்று வந்தால், இணுவில் ஸ்ரீகாலிங்கன் மடுவத்துக்குப் போகலாம் என்பார். வரும்போது மருதனார்மடச் சந்தியில் தேநீர் குடிக்கலாம் என்பதற்காக... சுன்னாகத்துக்கு போவதற்குக் குறுக்குப் பாதை இருக்க, 'ஏன் குறுக்காலை போவான். மருதனார்மடத்தால் போவம்' என்பார்.

அதிகம் ஏன், வேறு சோலிகள் இல்லாவிட்டால் கூட அதற்கென்றேகூட எம்மை அங்கு இட்டுச் செல்வதுமுண்டு. அந்தளவுக்கு அவர் நன்னாரியின் பெருமை தெரிந்தவர் மட்டுமல்ல, தாம் பெற்ற சுவையினைத் தமது கூட்டாளிகளும் பெறவேண்டும் என்ற நல்லெண்ணமும் உடையவர்.

கடையில் போதியளவு வாங்கு, மேசைகள் இருப்பதில்லை. அதனால் நாம் சில வேளைகளில் நின்றவாறும் தேநீர் குடிப்பதுண்டு.

நாம் எடுப்பது அநேகமாகத் தேநீர் மட்டும்தானே! அங்கும் செல்வராசா, துரையரின் முகவர் போலத்தான் நடந்து கொள்வார். தேநீரைச் சுவைத்துக் குடித்தவாறே ''தேத்தண்ணி எப்படி இருக்கிறது?'' என்று எம்மிடம் அபிப்பிராயம் கேட்பார்.

அது, இந்தப் பட்டாளத்தைத் தான்தான் அழைத்து வந்ததாகத் துரையருக்கு உணர்த்துவான் வேண்டியும் இருக்கலாம். அல்லது அவரது முகத்திலே புன்னகையை வரவழைக்கும் பகீரத முயற்சியாகவும் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீரைக் கடைக்கும் எதிர்க்கடை போடுவது நம்மவர்களின் வழக்கம். ஒருவர் 'மிக்ஸர்' தொழில் தொடங்கி நல்லாய் வந்தால் போதும். அதற்குப் போட்டியாக மூலைக்கு மூலை 'மிக்ஸர்' தொழிலகங்கள் முளைத்துவிடும். ஒருவர் தொலைத் தொடர்பு நிலையம் அமைத்து 'ஓகோ' என்று வந்து விட்டால் போதும், 'ஆகா விட்டேனா பார்' என்று அதற்குப் பக்கத்தில் மேலும் சில நிலையங்கள் தோன்றிவிடும் . பின்னர் எல்லா அகங்களிலும் நிலையங்களிலும் 'ஈ'யோட்டிக் கொண்டிருப்பார்கள். ஆனால் -

துரையரின் நன்னாரித் தேநீர்க் கடைக்குப் போட்டியாக வேறு கடைகள் அப்பொழுதும் சரி பின்னாலும் சரி தோன்றாததற்குக் காரணம் என்னவாக இருக்கும்?

பழைய கால வைத்திய வாகடங்கள் போல அந்தக் காரணமும் துரையரோடு போய்விட்டிருக்குமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்வீட்டு மாமியும் அரிவரி மாமியும்

அப்பொழுது எங்கள் கிராமத்திலுள்ள கல்வீடுகளை ஒருகையால் விரல் விட்டே எண்ணிவிடலாம். வரலாற்றுப் பெருமைமிக்க மட்டக்களப்பு வைத்தியலிங்கம் வீடு என்பது ஒன்று. அது சுற்று மதிலுடன் கூடிய மிகப் பெரிய நாற்சார் வீடு. எங்கள் பாடசாலையும் ஓடுகளால் வேயப்பட்ட கல் கட்டடம்தான். இதைவிட எனது மாமா முறை உறவினரின் வீடும் கல் வீடுதான். அதனால் நாங்கள் மாமியைக் கல்வீட்டு மாமி என்றுதான் சொல்லிக் கொள்வோம். அதனையடுத்து அவவின் தாயாரின் வீடு இருந்தது. அவவையும் நாங்கள் மாமி என்றுதான் அழைப்போம்... அதாவது 'அரிவரி மாமி' என்று... அவவின் வீடு தரை, சுவர், தூண்கள் எல்லாம் சிமெந்திலானது என்றாலும் ஓலைக் கூரை...

எங்கள் பாடசாலை கல் கட்டடம் என்றாலும் அதனோடு இணைந்திருந்த அரிவரி, முதல் வகுப்புகள் அதற்கு விதிவிலக்காக இருந்தன. கப்புகள் நாட்டி, கிடுகுகளால் வேயப்பட்ட அவ்வகுப்புகளின் தரையானது செப்பனிடாது கரடு முரடாகத்தான் இருந்தது... இப்பொழுது அரிவரி மாமிக்கு அப்பெயர் வந்த காரணம் உங்களுக்குத் தெரிந்திருக்கும் என நினைக்கிறேன். (என்ன சிரிக்கிறீர்கள்... நாங்கள் அவ்வகுப்புகளில் படித்தபோது சரவணமுத்து வாத்தியாரும் பூமணி வாத்தியாரும், எங்களை முழங்காலில் நிற்கும்படி பணித்தபோது எங்கள் முழங்கால்கள் பட்ட வேதனை உங்களுக்கு எங்கே புரியப் போகிறது...? சிரிக்கிறார்களாம்.... சிரிப்பு...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதிகளைப் பொறுத்து அக்கால வீடுகளை முப்பெரும் பிரிவுகளாக வகுக்கலாம். கல்வீடுகள் (கொங்கிறீற் அல்ல) பணக்காரர்களுக்குரியன. மண்சுவரிலான கிடுகு வீடுகள் ஏழைகளுக்குரியன. பனையோலை வீடுகள் என்பன நடுத்தர வகுப்பினர்களுக்குரியன. அரிவரி மாமியின் வீடும் பனை யோலை வீடுதான். கல்வீட்டு மாமிக்கு மேலும் சில பெருமைகள் இருந்தன. மாமா ஓர் அரசாங்க உத்தியோகத் தராக இருந்தவர். அப்போது அதுவும் எங்கள் கிராமத்தைப் பொறுத்தவரை அரிய நிகழ்வுதான். முதன் முதல் சைக்கிள் வந்தது, வானொலிப் பெட்டி வந்தது எல்லாமே அந்த வீட்டிலேதான்...

வானொலிப் பெட்டி வந்து அதன் இணைப்பு வேலைகள் நடைபெற்றபோது அதனை வேடிக்கை பார்க்கப் பலர் அங்கு கூடிவிட்டனர். இரண்டு பனை மரங்களுக்கிடையே 'ஏரியல்' கட்டி வீட்டின் சுவரருகே பைப் தாட்டு 'எர்த்' வயர் இணைத்து... அந்த வானொலிப் பெட்டி (PYE) வாய் திறந்தபோது... நாமும் வியப்பினால் வாய் திறந்து நின்றோம். அந்த வானொலி, கார் பற்றறியால் இயங்கியது. மின்சக்தி குறைந்ததும் அதனைச் 'சார்ச்' பண்ணக் கொடுத்து விடுவார்கள்... அது திரும்பி வரும்வரை வானொலிக்குக் கட்டாய விடுமுறைதான்...

முதன் முதலாக வெளிநாட்டுக்குப் போனதுகூட கல் வீட்டு மாமியின் பிள்ளைகள்தான். அக்காலக் கடவுச்சீட்டு விண்ணப்பத்தில் அப்படி ஒரு குறிப்பு(ஆங்கிலத்தில்தான்) இருந்ததாக நினைவு. 'விண்ணப்பகாரர் பத்திரத்தைத் தமது சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்ய வேண்டும்'. பாஸ்போர்ட் பெறுவதற்கே இந்தத் தகுதி என்றால் வெளிநாடு போவதற்கு எத்தனை தகுதிகள் தேவைப்பட்டிருக்கும்...?

அரிவரி மாமியின் கணவரை நாம் சின்னம்மான் என்றுதான் அழைப்போம். அவரிடமும் ஒரு சைக்கிள் இருந்தது. 'ஐயா அதில் ஓடுவதைவிட உருட்டுவதுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதலாக இருக்கும்' என்று கல்வீட்டு மாமியின் பிள்ளைகள் கேலி செய்வதுண்டு. அப்போதெல்லாம் சைக்கிள் ஓடுபவர்கள் பெடலில் இடது காலை மிதித்தவாறு சிறிது தூரம் ஓடித்தான் ஆசனத்தில் அமர்ந்து சவாரி செய்வார்கள். சைக்கிள் ஆசனத்தில் அமர்ந்தவாறே அதனைச் செலுத்தும் வழக்கம் மிகவும் குறைவு. சின்னம்மானோ பெடலுக்குப் பதில் அச்சில் காலைப் பதித்து ஏறித்தான் சைக்கிள் ஓடுவார். இறங்குவதும் அப்படித்தான்.

இதைவிட கல்வீட்டு மாமி வீட்டில் இருந்தது போலவே அரிவரி மாமி வீட்டிலும் அந்த ரோமன் இலக்க - பெண்டூல - 'பிக்பென்' சுவர் மணிக்கூடு இருந்தது. (இப்போதும் சில வீடுகளில் காட்சிப் பொருளாக இதுபோன்ற மணிக்கூடுகள் இருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள்) இந்த மணிக்கூட்டுக்கு வாரமொருமுறை முகப்புக் கண்ணாடியைத் திறந்து அதற்கெனவுள்ள சாவியை இரண்டு துவாரங்களிலும் செலுத்தி 'வைன்' கொடுக்க வேண்டும். ஒன்று மணிக்கூடு ஓடுவதற்கும், மற்றது நேரத்துக்கு நேரம் மணியடிப்பதற்கு மாகும். இந்த வேலைக்குச் சின்னம்மான் என்னைத்தான் கூப்பிடுவார். மரக்கட்டிலில் ஸ்ரூலை வைத்து அதற்குமேல் ஏறி நின்று மணிக்கூட்டுக்குச் சாவி கொடுக்க அவரால் முடியாது. அவர் நேரத்தை மதிப்பவர். சாவி கொடுக்கும் நாளன்று நான் போகத் தாமதமானால் அவரே என்னைத் தேடி வந்து விடுவார். '' மணிக்கூட்டுக்குச் சாவி கொடுக்க வேணும்... மணி... ஒருக்கால் வந்திட்டுப்போம்'' என்பார்.

அதென்ன மணிக்கூடும் மணியும் என்கிறீர்களா?

எனக்கு அப்படியும் ஒரு (புனை) பெயர் இருந்தது. அது மட்டுமல்ல எனது அப்பாவை 'மணி அப்பா' என்பார்கள். எனது அம்மாவை 'மணி அம்மா' என்பார்கள். இதிலிருந்து நான் அப்போதே எவ்வளவு 'பிரபல'மாக இருந்திருக்க வேண்டும் என்பது உங்களுக்குப் புரிகிறதா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பச்சைத் தண்ணீரிலும் பலகாரம் சுடலாம்

காசோலை (CHEQUE) என்றால் அதுவும் பணம் போலத்தான்; பணத்துக்குச் சமமான பெறுமதி அதற்கும் உண்டு. நான் வேறு ஒரு சமயம் குறிப்பிட்ட பிரேதப் பெட்டிக்குள் எழுதிப் போடுகிற காசோலைகள்... அதை விடுங்கள் - அதெல்லாம் வங்கிக்குப் போகாத காசோலைகள்.

காசோலைப் புத்தகங்களை வைத்திருப்பதற்கான நடைமுறைக் கணக்குகளை (CURRENT ACCOUNT) சாதாரண சேமிப்புக் கணக்குகளைத் திறப்பதுபோல யாரும் எளிதில் திறந்துவிடமுடியாது. அதற்கான தகுதிகளைத் திறக்கப் போகிறவர் வங்கிக்கு நிரூபித்தாக வேண்டும். 'காசோலைகள் மூலமாக கொடுக்கல் - வாங்கல்கள் செய்யவேண்டியுள்ளவர்கள்' என்பதுவும் அவற்றிலே ஒன்று! இந்த வகைக் கணக்குகளைத் திறப்பதற்கான கட்டுப்பாடுகள் மேலும் இறுக்கமாகிக் கொண்டுவருவதற்கான காரணம் காசோலை மோசடிகளைக்கூடிய வரைதவிர்க்கவும், காசோலைகளுக்கான மதிப்பைத் தொடர்ந்து பேணவுமேயாகும்.

முன்னரெல்லாம் எனக்குத் தெரியச் சிலர் யாராவது நன்கொடை - நிதிகள் என்று கேட்டு நச்சரித்தால் கரைச்சல் தாளாது கடைசியில் காசோலை எழுதிக் கொடுப்பார்கள். வந்தவர் மறைந்ததும் முதல் வேலையாகக் குறிப்பிட்ட காசோலைக்குப் பணம் வழங்க வேண்டாம் (STOP-PAYMENT) என்று குறிப்பிட்ட வங்கிக்குக் கடிதம் அனுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார்கள். இப்போதென்றால் அதைக்கூட இலேசாகச் செய்து விட முடியாது.

இதைவிட சிலர் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் பணத்தை வங்கிக்குப் போட்டு விடலாம் என்ற நம்பிக்கையுடன் பிற்திகதியிட்ட காசோலைகளை (POST DATED CHEQUE) கொடுப்பனவுகளுக்காக வழங்குவார்கள். பின்னர் அத்தவணையில் அப்படிப் போட முடியாமல் காசோலை திரும்பிவிட்டால் அதற்கும் வங்கிக்கு தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்பதுடன் அப்படியான தவறை மீண்டும் செய்தால் வங்கி அக்கணக்கையே மூடிவிடும். நடைமுறைக் கணக்கொன்றைத் தொடங்குவதே சிரமமாக இருக்கையில் அப்படி ஒரு தவறு நடைபெற யார்தாம் விரும்புவார்?

வங்கிகள் தங்களிடம் கணக்கு வைப்பதையும் - வைத்திருப்பவர்களையும் ஊக்குவிப்பதற்காக காலத்துக்குக் காலம் விதம் விதமான திட்டங்களை அறிமுகம் செய்து வருகின்றன. கணக்கில் ஒரு தொகைக்குமேல் பணத்தை நிலையாக வைத்திருப்பவர்களுக்குப் பரிசுச் சீட்டுகளில் பங்குபெறுகின்ற-பரிசுகள் பெறுகின்ற வாய்ப்பு, தவணைப் பணம் செலுத்தாமலே காப்புறுதிகளிலே இணைந்து கொள்கின்ற சலுகை, இப்படிப் பல... அத்துடன் வட்டிகள் வேறு... ஆனால் நடைமுறைக் கணக்குகளில் இருக்கும் பணத்துக்கு வட்டி எதுவும் இல்லை. அத்துடன் இலங்கை வங்கியைப் பொறுத்தவரை எந்தவொரு மாதத்திலாவது கணக்கில் குறிப்பிட்ட தொகை இல்லாவிட்டால் அதற்கு வேறு சேவைக் கட்டணம் (SERVICE CHARGE) என்று அறவிடுகிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியிலே ஒருவர் நடைமுறைக் கணக்கொன்றை - அதுவும் கொழும்பில் வைத்திருக்கிறார் என்றால் அவர் சாதனையாளர் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டிய ஒருவராகத்தான் இருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன, நான் வணிகக் கல்வி போதிக்கப் புறப்பட்டு விட்டதாக என்னுகிறீர்களா? இல்லை, ஒரு கதைதான் சொல்லப் போகிறேன். அதற்கு முன்னுரையாகத்தான் இவ்வளவையும் சொன்னேன்.

மூன்றெழுத்துப் புகைக் கொம்பனி முதலாளி ஒருவரின் வம்சாவளியில் வந்ததாகச் சொல்லிக்கொண்டு அந்த இளைஞன் கொழும்பிலே எமக்கு அறிமுகமானான். அவன் தனது மனைவி, தாயார் சகிதம் ஒரு வாடகை வீட்டிலே வசதியுடன் தங்கியிருந்தான். தந்தையார் மேற்படி கொம்பனியின் யாழ் கிளைக்குப் பொறுப்பாக இருந்தவராம்.

இளைஞனும் தனது பங்குக்குச் சில சுயமுயற்சித் தொழில்களைச் செய்துவந்தான். வவுனியா, திருகோணமலை நகரிலுள்ளவர்களுக்கு வாகன ரயர்கள் வாங்கி அனுப்புவதும் அவற்றிலேயொன்று. கொழும்பு விற்பனையாளர்கள் கடன் என்று கொடுக்கமாட்டார்கள். பணம் என்று கொடுக்க முடியாவிட்டால் காசோலையாவது கொடுத்தாக வேண்டும். நம்பிக்கையானவர்கள் என்றால் பிற்திகதியிட்ட காசோலைகளையும் ஏற்றுக் கொள்வார்கள். குறிப்பிட்ட இளைஞனும் வசீகரமும் வாய்வல்லமையும் நிறைந்தவனாதலால் அவனுக்கும் அச்சலுகை கிடைத்திருந்தது.

'பச்சைத்தண்ணீரிலே பலகாரம் சுடுவது' என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். நல்லதொரு நடைமுறைக் கணக்கை வைத்திருப்பவரும் - அப்போதைக்குக் கைவசம் பணம் இல்லாவிட்டாலும் 'தாளை' வைத்துக் கொண்டு அப்படிச் சுடலாம். வட்டிக்குப் பணம் பெறுவதுபோல் அதைப் பிணையாகக் கொண்டும் பணம் பெறலாம்.

கொழும்பிலே காசோலை மாற்றிக் கொடுப்பவர்கள் என்று மட்டுமல்ல, பிற்திகதியிட்ட காசோலைகளுக்குப் பணம் கொடுப்பவர்கள் என்றும் இருக்கிறார்கள். ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் வங்கிகள் வழங்கிய கொடுப்பனவுக் கட்டளைகளை (PAY-ORDERS) நாமும்தான் அப்படி மாற்றியிருக்கிறோமே, நினைவிருக்கிறதா...?

நமது கதாநாயகனும் தெரிந்தவர்கள் - அறிந்தவர்களிடம் அப்படிக் காசோலைத் தாள்கள் பெற்றுச் சீராகத்தான் தனது வியாபாரத்தைச் செய்துவந்தான். 'சம்திங்'கைச் சந்தோசமாகக் கொடுத்துத் தாள் பெற்று வந்தவருக்குத் திடீரென்று தானே அப்படி ஒரு கணக்குக்குச் சொந்தக்காரனாகிவிட்டால் என்ன என்ற ஞானோதயம் வந்துவிட்டது. அடுத்து அவர் காசோலைப் புத்தகமும் கையுமாகக் காட்சியளித்தார். எழுதி எழுதிக் கிழித்தார்... கிழித்துக் கிழித்து எழுதினார். எல்லாம் ஒழுங்காகவே நடைபெற்றது...

திடீரென்று ஒருநாள் அவனும் அவனது குடும்பத்தினரும் காணாமற் போய்விட்டனர். எங்காவது உலாச் சென்றிருக்கலாம் என்று நினைத்தவர்களுக்குக் கடைசியில் அவர்கள் கிளாலி வழியாக யாழ்ப்பாணம் சென்றுவிட்டதாகத் தகவல் கசிந்தது. காலம் செல்லச் செல்ல ஒருவர் மாறி ஒருவராக ஒற்றைச் சிலம்பினைக் (காசோலை) கையிலேந்தியவாறு ஆசாமியை விசாரித்து வரத் தொடங்கினார்கள்.

அவர்களின் ஒற்றைகளை வாங்கிப் பார்த்தால்... அவைகள் எல்லாம் பெரிய தொகைகளுக்கு அவரால் எழுதப்பட்டுத் திரும்பிய காசோலைகள்... வங்கிக் குறிப்புகளாக சிலவற்றில் வரைஞரிடம் விசாரிக்கவும் (REFER TO DRAWER) என்றும் ஏனையவைகளில் கணக்கு மூடப்பட்டது (ACCOUNT CLOSED) என்றும் எழுதப்பட்டிருந்தன.

கதையை இந்த அளவிலே நிறுத்திக்கொள்கிறேன்... என்ன, நாங்களும் அப்படி ஒரு கணக்கைத் திறந்தால் என்ன என்கிறீர்களா? அந்த அன்பரைப் போலன்றி 'பச்சைத் தண்ணீரிலே பலகாரம் சுடுவதற்காக மட்டும்' என்றால் சரிதான்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வயது வரலாம், வயதுக் கோளாறு வேண்டாம்

சிலர் பிறந்த நாளைக் கோலாகலத்துடன் கொண்டாடுவார்கள். ஆனால் 'எத்தனையாவது' என்பதை மட்டும் சொல்லத் தயங்குவார்கள்... நான் அப்படியல்ல... எத்தனைக்கெத்தனை வயது அதிகமோ அத்தனைக்கத்தனை 'அந்த நாள்' நினைவுகளை மீட்டிச் சொல்லுகிற தகுதியைப் பெறலாமல்லவா?

ஒருவரின் வயதைத் தந்திரமாக அறிவதற்கு ஒரு வழி அவரின் தேசிய அடையாள அட்டையின் முதல் இரண்டு இலக்கங்களையும் அறிவதுதான். அது 45 என்று தொடங்கினால் 1945ஆம் ஆண்டில் பிறந்தவர். அதற்கடுத்த மூன்று இலக்கங்களையும் அறிய முடிந்தால், அவரின் பிறந்த மாதம், திகதிகளையும்கூடக் கணித்துவிடலாம். அதன் கூட்டுத் தொகைதான் அது! பெண்களுக்கென்றால் அதிலிருந்து 500ஐக் கூட்டிப் பார்க்க வேண்டும். இன்னொன்று சொல்ல வேண்டும். 'வயது பதினாறிருக்கும் இளவயது நங்கை' எனக் காட்ட வேண்டுமானால் அட்டை இருந்தாலும் அது பற்றி மூச்சே விடக்கூடாது.

ஆண்டொன்றை நிறைவு செய்து விட்டு, அடுத்தாண்டில் நுழையும்போது பழைய சம்பவங்களை நினைத்துப் பார்ப்பதும் ஒரு வழக்கமல்லவா? அந்த வகையிலே இப்புத்தகத்தில் உள்ள சில கட்டுரைகள் ஆரோக்கியமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில கருத்துப் பரிமாறல்களுக்கு வழிவகுப்பன. 'இங்கிலீசு வாத்தியார் சொன்ன 'வீத்திறி' கதை', 'ஒலி பெருக்கிகளுக்கு ஓய்வு வேண்டும்' என்பன அவைகள்.

முதலாவதை மட்டும் எடுத்துக் கொள்கிறேன். அதிலே ''ஹாய் என்பது யார் கண்டுபிடித்த ஆங்கிலமோ?'' என ஐயம் தெரிவித்திருக்கிறேன். அதற்குப் பதிலாக திருநெல்வேலி வி.செல்வநாயகம் என்பவர் 'How are you' என்பதன் சுருக்கமே 'HAY' என்றாகிவிட்டது எனக் 'கண்டுபிடித்து' எழுதியிருந்தார். அத்துடன் எனக்குப் புத்திமதியும் கூறியிருந்தார். அதனாலென்ன? நான் கேட்டதும் 'யார் கண்டுபிடித்தது' என்பதுதானே? அதற்குப் போய்...

அவருக்கு விளக்கமளிக்க வேண்டும் என்றிருக்கையில் புலோலி சி.இரத்தினம் என்பவர், எல்லாருக்குமே விளக்கமளிக்கவல்ல அரியதொரு கட்டுரையை எழுதி என்னைத் 'தடுத்தாட்கொண்டு' விட்டார். அக்கட்டுரையில் முன்னவரின் விளக்கமானது அபத்தமானது என்றும் Hay போன்ற சில வார்த்தைகள் இலக்கண ரீதியில் ஏனைய சொற்களுடன் தொடற்பற்றதும் கருத்தற்றதுமான வெறும் ஒலிக்குறிப்பே என்றும் தக்க ஆதாரங்களுடன் விளக்கியுள்ளார். அவரின் அக்கட்டுரையானது ஆங்கிலம் படிப்பவர்களுக்கும் ஆய்வு செய்பவர்களுக்கும் நல்விருந்தாக அமைந்திருந்ததைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

இந்தச் சர்ச்சை பற்றி எதுவும் அறிந்திருக்காத போதிலும், கே.எஸ். சிவகுமாரன் அவர்கள் இலங்கை வானொலியில் தாம் நடத்தி வருகின்ற 'இலகு வழியில் ஆங்கிலம்' நிகழ்ச்சியில் (3. 11.01) தம்போக்கில் கருத்து தெரிவித்தார். அதற்கு அவர் ஹலோ என்பதற்குப் பதிலாகவே சிலர் ஹாய் என்பதைப் பயன்படுத்தி வருகிறார்கள் என்றும், ஆங்கில எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கிலில்லாத இச்சொல்லை ஆங்கிலமாக ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தெரிவித்திருந்தார். சென்ற வார நிகழ்ச்சியில் கூட அவர் இக்கருத்தை மீண்டும் வலியுறுத்தியிருந்தார்...

நினைக்க சிந்திக்க மட்டுமன்றி, கட்டுரைகளிலே இடம்பெற்ற சில வரிகள், நான் சொல்லித்தான் என்றில்லா விட்டாலும் சிலரைத் தாமாகவே ஓசைப்படாமற் செயற் படவும் வைத்திருக்கிறது. ஒரு கட்டுரையிலே (துரையரின் (நன்னார்ரி) தேநீர்க் கடை) கதையோடு கதையாக இடையிலே '...நீர் வழங்கல் சபையினர் சில சமயங்களில் செய்வதுபோல குடிநீருக்குள் அளவுக்கதிகமான குளோரினைக் கலந்து விடக்கூடாது' எனக் குறிப்பிட்டிருந்தேன். அதன் பின்னர் இன்றளவும் அந்தத் தவறே அங்கு நடப்பதில்லையாம்...

வேறு சில வரிகள் சிலரை எதிர்மாறாகவும் செயற்பட வைத்துவிட்டதோ எனக்கூட நினைக்கத்தோன்றுகிறது... 'இங்கே துப்பாதீர்கள்', 'இங்கே புகைத்தல் விலக்கப் பட்டுள்ளது' என்ற அறிவித்தல்களே சிலருக்கு அந்த நினைவைக் கொண்டுவருவதுண்டல்லவா? வெற்றிலை போடுவதையும் புகைப்பதையும் தற்காலிகமாக அதுவரை மறந்திருந்தவர்களே அதைக் கண்டதும் விழிப்படைந்த வர்களாய் - அந்த நினைவு வந்தவர்களாய் செயலில் இறங்குவதுபோல...

ஒரு கட்டுரையில் (50 சதத்திற்கு வீடு கட்டலாமா?) அந்தக் காலத்து பஸ் நடத்துநர்கள் ஐந்து சதம் மிகுதி கொடுக்காத கதையில் தொடங்கி, அப்பொழுதுள்ள ஐம்பது சதம் கொடுக்காத கதையிலே நின்றுக் கொண்டு, புதிய பஸ் கட்டண உயர்வைத் தொடர்ந்து, இனிமேல் அது ஒரு ரூபாயிலே போய் முடிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என முடித்திருந்தேன். என்னே தீர்க்க தரிசனம்... இப்பொழுது சில நேரங்களில் சில மனிதர்கள் அப்படியும் நடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதாக அறியவருகிறது (இந்த அறிய வருகிறது, தெரிய வருகிறது என்பதெல்லாம் இந்தப் பத்திரிகையாளர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளப் பயன்படுத்துகின்ற வார்த்தைகள் என்கிறீர்களா?)

மீண்டும் வயதுக் கோளாறு - மன்னிக்கவும், வயதுப் பிரச்சினை...

சிலர் தங்கள் வயதை வெளிப்படையாகச் சொல்லா விட்டாலும் நாகரிகமாகவும் கௌரவமாகவும் வேறு வழியில் சொல்லுவார்கள். பெரிய பிரமுகர்கள் - புள்ளிகளைக் குறிப்பிட்டு, 'அவருடைய வயதுதான் எனக்கும்' என்பார்கள். நானும் அப்படி குறிப்பிடுவதென்றால்... வானளாவ உயர்ந்து, நாடெங்கும் கிளை பரப்பி நிற்கின்ற இலங்கை வங்கியை உங்களுக்குத் தெரியும்தானே?... அதற்கும் எனக்கும் ஒரே வயதுதான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘ஹைட் பார்க்’கிலிருந்து ‘மயில்கால் எண்ணெய்’ வரை...

லண்டனிலுள்ள ‘ஹைட் பார்க்’ பூங்காவில்பலர் கூடுவார்களாம்... அங்கே ஒரு மேடை போட்டிருக்கிறார்களாம்... அதிலே யார் வேண்டுமானாலும் ஏறிநின்று எது பற்றியும் சுதந்திரமாகப் பேசலாமாம்... எந்த விதத் தடையும் கிடையாதாம்... பூங்காவுக்கு வருகிறவர்களுக்கு இது நல்ல பொழுதுபோக்காம்... அவர்கள் போகிற போக்கில் பேசப் படுவனவற்றைக் கேட்டுச் செல்வார்களாம்... (ளாம் ளாம் என்று சொல்லுவதற்குக் காரணம் லண்டன் சென்று இவைகளைக் கண்டதாகப் புழுகும் துணிச்சல் எனக்கு இல்லாததே).

இது மேடை கிடைக்காதவர்களுக்குத் தங்கள் வயிற்றெறிச்சலை தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பாகவும் இருக்கும். இன்னும் சிலருக்குப் பேச்சுப் பயிற்சிக்கான தளமாகவும் இருந்திருக்கிறது. ஐ.நா. சபையில் நீண்ட நேரம் பேசிச் ‘சாதனை’ படைத்த வி.கே.கிருஷ்ணமேனன் கூட ஆரம்பகாலத்தில் இந்த மேடையில் பேசி இருக்கிறாராம்.

கொழும்பில் கூட்டம் அதிகமாகக் கூடும் இடங்களில் ‘வித்தைகள்’ காட்டுபவர்களும் இப்படித்தான் நடந்து கொள்வார்கள்.

பம்பலப்பிட்டியில் உள்ள கடவுச்சீட்டு அலுவலகத் திற்கு முன்னாலும் தேசிய வைத்தியசாலையில் ‘கேட்’ திறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும் வரை காவல் நிற்கும் பார்வையாளர்கள் கூட்டத்திற்கு முன்னாலும், 'றீகல்' படமாளிகையின் முன் படம் பார்ப்பதற்கென வரிசைகளில் நிற்போர் மத்தியிலும் இந்த வித்தைகள் காட்டுவோர் 'ஹைட் பார்க்' பேச்சாளர் போலவே நடந்துக் கொண்டு, கூடவே விளக்கங்களுடன் வித்தைகளும் காட்டுவார்கள். கடைசியில் உண்டியல் குலுக்கிப் பணமும் சேர்ப்பார்கள்!

லண்டனில் இருந்து கொழும்பு ஊடாக யாழ்ப்பாணம் வருவோம்...

பல ஆண்டுகளுக்கு முன்னர் 'தனித்தமிழாக' வாழ்ந்த ஆசிரியர் சூ.க.இறைபுகழ்வாழி என்பவரை 'பழசு'களாகிய நாம் இன்றும் நினைவில் வைத்திருக்கிறோம். தமிழ் உணர்வாகத் திகழ்ந்த அவர் தம் போக்கில் தாம் நினைத்தவாறு சில காரியங்களைச் செய்து விடுவார். பத்திரிகை நடத்தி இருக்கிறார்; துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு இருக்கிறார்; தமிழரசுக் கட்சி மேடைகளிலும் சில சமயம் தோன்றியுள்ளார்.

அவரும் 'லண்டன் பூங்கா' மேடையாக நினைத்துக் கொண்டு கூட்டம் அதிகமாகஉள்ள நேரம் பார்த்து பொது விடங்களில் உணர்ச்சிப் பிழம்பாக மாறிச் சொற்பொழி வாற்றுவார்.

இப்பொழுது 'சுவிசேஷம்' பற்றி ஒருவர் பேசிக் கொண்டிருப்பாரே, அப்படி...ஹர்த்தால், கடையடைப்பு சமயங்களில் ஆஸ்பத்திரிக்கும் பஸ்நிலையத்திற்கும் இடையில் அரைச் சுவரில் ஏறிநின்று அவர் சொற்பொழி வாற்றியது எனக்கு இப்பொழுதும் நினைவில் நிற்கிறது. அவரது தோற்றத்தையும் செயலையும் காணும் போது அப்போது பிரபலமாக நடிக்கப் பெற்று வந்த 'சோக்கிரட்டீஸ்' நாடகத்தின் 'சோக்கிரட்டீஸ்' பாத்திரமும் கூடவே நினைவுக்கு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை எழுதுகையில் 'மயில்கால் எண்ணெய்' வியாபாரம் செய்வதற்கென இங்கு வருகின்ற சிங்கள வைத்தியர் (வெதமாத்தயா) பற்றிய நினைவும் மறக்க முடியாதது. அவரிடம் எண்ணெய் வாங்காவிட்டாலும் அவர் சொற்பொழிவாளனாக நின்று கொண்டு கொச்சையாகவும் மழலைத் தமிழுமாகக் கலந்துப் பேசுகின்ற உரையானது மிகவும் சுவையாக இருக்கும், எவ்வளவு நேரமும் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்.

அவர் தனது பேச்சினிடையே சில பரிசோதனைகளும் செய்து காட்டுவார். தனது எண்ணெயைத் தடவி சூடு ஒத்தடம் கொடுத்தால் முறிந்த எலும்புகள் பொருந்திக் கொள்ளும் - வளைந்து கொடுக்கும் - என்பதற்கு இப்படி விளக்கம் செய்து காட்டுவார். முதலில் ஒரு தடியை எடுத்து வ்ளைப்பார். அது முறிந்து விடும். பின்னர் அதே தடிக்குத் தனது எண்ணெயைத் தடவி, நெருப்புமூட்டி அதில் வாட்டுவார். அதன் பின்னர் தடி, வேண்டியவாறு வளைந்து கொடுப்பதைக் காட்டுவார்.

'சக்கடத்தார்' புகழ் காலஞ்சென்ற அச்சுவேலி இராசரத்தினம் அவர்கள் அப்போது இந்த 'மயில்கால் எண்ணெய்' வியாபாரியை அச்சொட்டாகப் பாவனை செய்து தாமே ஒரு தனி நாடகம் நடத்தி வந்ததும் குறிப்பிடத்தக்கது. சிரிக்கவும் சிந்திக்கவுமான அந்த நாடகத்திலே 'வெதமாத்தயா' வின் 'தெமில்' கொஞ்சி விளையாடும்.

நாடகத்தில் வைத்தியர் சொல்வதாக இப்படியும் ஒரு வசனம் வருகிறது. எனது மொழியில் அது இப்படி:

'கலவ்ரம் வந்து கொழும்புத் தமிழர்கள் கை கால் முறிந்து இனி அங்கு திரும்புவதே இல்லை' என்ற முடிவுடன் கப்பல் ஏறினார்கள். ஆனால் இப்போது அவர்கள் திரும்பி விட்டார்கள். அதற்குக் காரணம் எனது 'மயில்கால் எண்ணெய் தான்' ...இஹ், இஹ், இஹ்...! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஹலோ... உங்களுடன்தான்...

யாழ்ப்பாணம் தொலைத் தொடர்பு நிலைய இலக்கத்தை சுழற்றுகிறேன். பல தடவைகள் அப்படிச் சுழற்றிய பின்னர் தொடர்பு கிடைக்கிறது... 'யாழ்ப்பாணம்' என்று பதில் குரல் கேட்கிறது.

''இங்கு 553 மானிப்பாய்... எனக்கு 25883 - கொழும்பு வேண்டும்'' என்கிறேன்.

இலக்கங்களைக் குறித்துக் கொண்டவர் ''ஏழு மணித்தியாலத் தாமதம்'' என்கிறார்.

நான் எனது அவசரத் தேவை பற்றி விளக்கியதும் ''சுப்பர்வைஸருக்குப் போடுகிறேன்... கதைத்துப் பாருங்கள்...'' என்ற பதிலும் அதனைத் தொடர்ந்து சுப்பர்வைஸரின் குரலும் கேட்கிறது.

சுப்பர்வைஸரும் 'பெரிய மனசு' பண்ணி ''நாலு மணித்தியாலத்தில் தருவதற்கு முயற்சி செய்கிறோம்'' என்றதும் நானும் நன்றி சொல்லிவிட்டு ரிசீவரை வைக்கிறேன்.

நாலு மணியாலத்தை நெருங்கிக் கொண்டிருக்கையில் தொலைபேசி மணி ஒலிக்கிறது. கொழும்பு அழைப்பாக இருக்குமோ என்று எடுத்ததும் தொடர்பு நிலையத்திலிருந்து குரல் கேட்கிறது. ''உங்களுக்குத் திருகோணமலையிலிருந்து அழைப்பு ஒன்று வருகிறது... லையினிலை நின்று கொள்ளுங்கள்...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றே நின்று பார்க்கிறேன். இணைப்பை ஏற்படுத்தித் தருவதற்குப் பல நிமிடங்களாகின்றன.

திருகோணமலைத் தொடர்பு கிடைத்துக் கதைத்ததும், எனது கொழும்பு அழைப்புப் பற்றித் தொடர்பு நிலையத்துக்கு நினைவூட்டுகிறேன். மீண்டும் சுப்பர்வைவஸர்... ''மேலும் ஒரு மணித்தியாலத் தாமதம்'' என்று அதற்காக மன்னிப்புக் கேட்கிறார்.

கடைசியாக 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பது போல கொழும்பு அழைப்புக்கான மணி 'ஒலிக்கிறது'... ( அது 'சிரிக்க'த் தொடங்கியதெல்லாம் பிற்காலத்தில்தான்) யாழ்ப்பாணத் தொடர்பு நிலையத்தினரும் கொழும்புத் தொடர்பு நிலையத்தினரும் எங்களுக்கான தொடர்பினை ஏற்படுத்துவதற்காக எடுக்கின்ற முயற்சிகளை காதால் இரசித்தவாறே கால்கடுக்க நிற்கிறேன். அதிசயம் ஆனால் உண்மை. கடைசியில் தொடர்பு கிடைக்கிறது. 'இரண்டு நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்' என்ற உத்தரவுடன்!

★ ★ ★

**எ**ன்ன இதெல்லாம் என்றுதானே கேட்கிறீர்கள்? இதுதான் இருபது ஆண்டுகளுக்கு முன்னரிருந்த தொலை பேசியின் கதை. அல்லது நாம் அதனோடு 'மல்லுக் கட்டிய' கதையும்தான். என்ன இருந்தாலும் எம்மவர்கள் எவ்வளவு தான் 'பஞ்சம் கொட்டினாலும்' தொலைபேசிச் சேவை என்பது இப்பொழுது எவ்வளவோ முன்னேற்றம் கண்டுதான் இருக்கிறது. இப்பொழுது எங்கு வேண்டு மானாலும் நேரடியாக இலக்கங்களைச் சுழற்றி அழைப்பு களைப் பெறமுடியும். அப்பொழுது அப்படியல்ல, மானிப் பாயில் இருப்பவர் என்றால், அந்த தன்னியக்கத் தொலைபேசி நிலையத்திற்குள் அடங்கியுள்ள இலக்கங்களை மட்டுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படி நேரடியாகச் சுழற்றிப் பெறமுடியும் 'லோக்கல் கோல்' என்பதும் அதுதான்!

வவுனியா கொழும்பு என்றால், அதெல்லாம் 'ட்ரங் கோல்' எனப்படும். நான் மேலே குறிப்பிட்டபடி பதிவு செய்து தான் எடுக்கவேண்டும். தனியார் தொலைபேசி நிலையங்கள் என்பதெல்லாம் அப்பொழுது கிடையாது. தொலைபேசியில் பேசவேண்டும் என்றால் அந்த வசதியுள்ள அஞ்சல் அலுவலகம் போக வேண்டும். அல்லது அந்த வசதியுள்ளவர்களின் வீடுகளுக்கோ வர்த்தக நிலையங்களுக்கோதான் போக வேண்டும்.

வெளிநாடுகளிலுள்ளவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமானால் கொழும்புக்குத்தான் போகவேண்டும். பெரிய தபாற்கந்தோர் (G.P.O), மத்திய தொலைத் தொடர்பு நிலையம் (C.T.O) அங்கெல்லாம்தான் அந்த வசதிகள் இருந்தன. இப்பொழுது யாழ்ப்பாணத்துக்கே அந்த வசதிகள் வந்துவிட்டன.

அப்பொழுதெல்லாம் தொலைபேசியை எப்படிக் கையாளவேண்டும், அதில் எப்படிப் பேசவேண்டும் என்றெல்லாம் தொலைபேசி விவரக்கொத்தில் விளக்கம் தரப்பட்டிருக்கும். தொலைபேசி மொழியும் அநேகமாக ஆங்கிலம்தான். தொலைத் தொடர்பு நிலையத்துக்குச் சுழற்றியதும், உடனே ஆங்கிலத்தில்தான் பதில் கிடைக்கும். அங்கு பணிபுரிபவர்களும் அநேகமாக அழகாக ஆங்கிலம் பேசக்கூடிய பெண் 'மணி'களாகத்தான் இருப்பார்கள். தபாற்கந்தோர் என்றால் பிரச்சினையில்லை, அவர்களே எடுத்துத் தருவார்கள். மற்றும்படி தொலைபேசி எடுப்பதற்குப் பலரும் கூச்சப்படுவார்கள். தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசவேண்டியிருக்குமோ என்ற பயம்... கூச்சம்... அதனால் 'ஹி...ஹி... நீங்கள் எடுத்துத்தாருங்கள்... நான் கதைக்கிறேன்...' என்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியைப் பொறுத்தவரை இப்பொழுது எவ்வளவு முன்னேற்றம்... அதோ வானொலியைக் கவனியுங்கள்...

★ ★ ★

"இதோ... மற்றுமொரு அழைப்புக் கிடைத்திருக்கிறது..."

''நான் வவுனியாவிலிருந்து கீதா பேசுகிறேன்...''

'' சரி கீதா... நீங்கள் ஏதாவது தகவல் தெரிவிக்க விரும்புகிறீர்களா?''

''நேற்றுதான் ஒரு தகவல் சொல்லியிருந்தேன்... அது உரியவர்களுக்குக் கிடைத்திருக்கும்... இப்பொழுது பாட்டுக் கேட்கப் போகிறேன்...''

''சரி... யார் யாருக்காக பாட்டு கேட்கிறீர்கள்?'' கிளிநொச்சியிலுள்ள அப்பாவான பரமசிவம், அம்மாவான பார்வதிக்காகவும்... மற்றும் கனடாவிலுள்ள அண்ணன் சுரேசுக்காகவும் அண்ணி மைதிலிக்காகவும்... மற்றும் நிலக்ஸன், கொலக்ஸனுக்காகவும்... மற்றும் நெக்டோ குட்டிக்காகவும், பன்ரா குட்டிக்காகவும், பெப்சிக் குஞ்சுக்காகவும்...''

''எல்லாருக்காகவும் இதோ ஒலிக்கிறது பாடல்... (பாடல்) ''கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு... டண்டணாட்டன்...''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாப்பாட்டுக்கு முன்னர் குலுக்கிக் குடிக்கவும்

"அங்கிருந்த வேலையாள்களில் ஒருவனைக் கூப்பிட்டு கடதாசியும், மையும், பேனையும் வரவழைத்து ஒரு கடிதம் எழுதி..."

'ஈழகேசரிச் சிறுகதைகள்' நூலில் வருகின்ற சானாவின் 'நாட்டியப் பெண்' கதையில் இந்த வரிகள் வருகின்றன. *1941* இல் எழுதப்பெற்ற இவ்வரிகள் இன்றுள்ளவர்களுக்கு ஆச்சரியமாகவிருக்கலாம். ஆனால் அதற்கு ஒரு தசாப்த காலத்திற்குப் பின்னரும்கூட இந்த நிலைதான். மறுமலர்ச்சிக் காலம், ஈழகேசரிக்காலம், சுதந்திரன் காலம் என்பது போல பேனா வரலாற்றை எடுத்துக் கொண்டாலும், தொட்டெழுதிய காலம், ஊற்றுப் பேனாக் காலம் என்றெல்லாம் நீண்டுதான் இன்றைய குமிழ்முனைப் பேனாக் காலத்துக்கு வந்திருக்கிறோம்.

பேனாவினால் மையைத் தொட்டெழுதிய காலத்தை எம்மால் இலேசில் மறந்துவிட முடியாது. பேனா என்பது பென்சில் போன்ற ஒரு தடிதான். அதன் ஒரு பக்கத்தில் NIB எனப்படும் குச்சி செருகியிருக்கும். போத்தலிலுள்ள மையிலே தொட்டுத் தொட்டு எழுத வேண்டும். எழுதிய மை உடனே காய்ந்து விடாது. அதனால் எழுதிக்கொண்டு வரும் போதே இடையிடையே எழுதிய பகுதிகளை ஒற்றிக் கொண்டும் வரவேண்டும்... அதற்கென BLOTTING PAPER எனப்படும் தடித்த மை ஒற்றும் காகிதமும் கூடவே வைத்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்திலே, பெண்களுக்கான அக்காலச் சமையல் குறிப்பு ஒன்றினைத் தரட்டுமா? சமைத்த கறியில் தவறுதலாக உப்பைக் கூடப் போட்டுவிட்டீர்களா? கவலையை விடுங்கள். இந்த மை ஒற்றும் காகிதத் துண்டுகளை கறியில் போட்டு எடுங்கள் சரியாகிவிடும்.

பள்ளிக்கூடத்துக்குப் புத்தகச்சுமையுடன் மைக் கூட்டையும் சிந்தாமல் கவனமாகக் கொண்டு சென்று வரவேண்டும். வகுப்பு மேசையிலும் இந்தப் பேனாத் தடிகளை வைப்பதற்கென்று பேனா நீளத்திற்கு ஒரு பள்ளமும், மைக்கூட்டை வைப்பதற்கென்றே ஒரு துவாரமும் கூட வைத்திருப்பதுண்டு. அதற்கென்றே ஒரு வகை மார்பிள் மைக்கூடுகள்கூட அப்பொழுது இருந்திருக்கிறது. இந்த மையையும் மாணவர்கள் தாங்களே தயாரித்துக் கொள்வதற்கு வசதியாக மைச் சரைகளும் மைவில்லைகளும் கடைகளில் அப்போது விற்பனைக்கிருந்தன.

இந்தப் பேனாத் தடிகளில் பொருத்துகின்ற குச்சிகளிலும் பல வகைகள் இருந்தன. இருந்தாலும் 'ஜி' நிப்பால் எழுதினால்தான் எழுத்துத் திருந்தும் என்பது 'ஆன்றோர்' வாக்கு. எனது அனுபவத்தில் அதனால் எழுதுவதென்பது கடதாசியில் 'உழு'வதற்குச் சமம்.

இந்தத் தொட்டெழுதுகிற காலத்தில் 'அச்சுக் கொப்பி' என்றொரு புத்தகமும் 1, 2, 3 என இருந்தது. அதன் ஒவ்வொரு பக்கத்திலும் முதல் வரியில் எழுத்துக்கள் - வாக்கியங்கள் என்றிருக்கும். அதன்கீழ் வரிவரியாகக் கோடுகளிடப் பட்டிருக்கும். அச்செழுத்துக்களைப் பார்த்துப் பார்த்து 'ஸ்ரீராமஜெயம்' எழுதுவது போலத் திரும்பத் திரும்ப - அதுவும் 'ஜி' நிப்பால் எழுதிப் பழகினால் நாம் சிறந்த எழுத்தாளர்களாக, அல்ல, அழகான எழுத்தாளர்களாக முடியுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுதெல்லாம் படிக்கின்ற பிள்ளைகளையும் மை விளையாட்டுக்களைக் கொண்டு அறியலாம். ஒருவருக் கொருவர் மை தெளிக்கிற அல்லது தங்களுக்குத் தாங்களே மை பூசிக்கொள்கிற... சுருக்கமாகச் சொல்வ தென்றால் அக்கால மாணவர்கள் வீட்டுக்கு வந்தால் உப்புச் சவுக்காரம் கொண்டு கைகழுவினால்தான் மற்ற அலுவல்களைக் கவனிக்க முடியும்.

ஊற்றுப் பேனா புழக்கத்திற்கு வந்ததும் மைக்கூடு காவும் வேலை இல்லாமற் போய்விட்டது. பேனாவில் மை நிரப்பினால் போதும். பேனாவில் தலைப் பகுதியைக் கழற்றி 'மைநிரப்பி' மூலம் மை எடுத்து விடுகிற வகைப் பேனாக்கள் என்றும், தலைப் பகுதியை போத்தல்களுக்குள் விட்டு உறிஞ்சி எடுக்கிற வகைப் பேனாக்கள் என்றும் ஊற்றுப் பேனாக்கள் இருந்தன. 'பாக்கர் 51', 'சுவான்' என்றெல்லாம் அதி உயர்ந்த வகைப் பேனாக்களும், அந்தப் பெயர்களிலான பல நிற மைப் போத்தல்களும் இருந்தன.

எல்லாரும் பாவிக்கக் கூடியதான ஒரு தரமான பேனாவாக 'பைலட்' விளங்கியது. அதன் விலை ஆரம்ப காலத்தில் ரூபா ஐந்தாக இருந்தது.

மாணவர்களின் மை விளையாட்டுக்கள் பிற்காலத்திலும் தொடரவே செய்தன. அக்காலத்தில் 'பகிடி வதை' என்றால் ஒருவருக்கொருவர் மை தெளிக்கிற வதைதான். அதுவும் ஏப்ரல் முட்டாள் தினத்தன்று பள்ளிக்கூடமும் இருந்து விட்டால்... அப்பொழுது ஆனைக்கோட்டை மகேசன் என்பவரும் எங்களுடன் படித்தவர். இவரை 'பேனா மெக்கானிக்' என அழைப்போம். ஊற்றுப் பேனாக்களுக்கு ஏற்படுகின்ற கோளாறுகளைப் பகுதிநேர வேலையாக ஏற்றுக் கொண்டு சேவை அடிப்படையில் திருத்திக் கொடுப்பார். ஆளைப் பார்த்தாலே 'தொட்டெழுதும்' காலத்தவரோ என எண்ணத் தோன்றும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுதெல்லாம் எங்கு பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் குமிழ்முனைப் பேனாக்கள் என்றாகிவிட்டது. அதுவரை ஊற்றுப் பேனாதான். பச்சை மைக்காரர், வைலட் மைக்காரர் என்றெல்லாம் சில பிரமுகர்களின் 'தனித்துவங்கள்' பேசப்பட்டதுண்டு.

என்ன இருந்தாலும் அழகான கையெழுத்துக்கு சொந்தமானவர்கள் - அவர்கள் தலையெழுத்துப்படி எப்படி இருந்தாலும் - அக்காலத்தில் ஜி நிப்பினால் அச்சுக் கொப்பியில் எழுதிப் பயிற்சி பெற்றவர்களே! அப்படியானால் இந்த டாக்குத்தர்மார்களுக்கு அந்தப் பயிற்சி இல்லைபோல் இருக்கிறது.

ஒருவருக்கு தபாலில் வந்த அந்தச் சிறு கடிதத்தினை படித்துப் புரிந்து கொள்ள முடியவில்லை; ஒரே கிறுக்கலாக இருந்தது. அவரின் மனைவி அதற்கு ஒரு வழி சொன்னாள் ''பக்கத்து வீட்டு மருந்தாளரிடம் காட்டிப் பாருங்கள். அவர்கள் டாக்குத்தர்மார்களின் மோசமான கையெழுத்தையெல்லாம் புரிந்துகொண்டு மருந்து கொடுப்பவர்களாயிற்றே.''

அதன்படி இவரும் மருந்தாளரிடம் கடிதத் துண்டைக் காட்டியிருக்கிறார். அவர் அதைப் படித்து விட்டுச் சொன்னார். ''நாளொன்றுக்கு மூன்று முறை...சாப்பாட்டுக்கு முன்னர்... குலுக்கிக் குடிக்கவும்'' (நோயாளியை அல்ல மருந்துக் கலவையை).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாய்வாலை நிமிர்த்தினாலும் இந்த விதானைமார்களை...?...!

சிங்களத்தில் 'கிராம நிலதாரி' என்றும் தமிழில் 'கிராம அதிகாரி' (GRAMA OFFICER) என்றும் சொல்லப்படுகின்ற அந்த விதானைமார்களைத்தான்... அந்தச் சொல் இன்னமும் வழக்கொழிந்து விடவில்லைத்தானே? அதிலும் நான் இக்கட்டுரையில் குறிப்பிட வந்ததெல்லாம் கொழும்பு விதானைமார்களைத்தான்... (இங்கே சிலர் நிம்மதிப் பெருமூச்சு விடுவது... காதில் விழுகிறது)

அங்குள்ள கிராம அதிகாரிகளிடமிருந்து காரியம் பெறவேண்டுமானால் 'சம்திங்' கொடுத்தே ஆகவேண்டும். அதுகூடச் சரியில்லை, 'மோதிங்' என்று சொல்ல ஆங்கில இலக்கணம் இடம்தருமோ தெரியவில்லை... சிங்கள மக்களிடமே அப்படி வாங்கிப் பழகியவர்கள் தமிழர்களை விட்டு வைப்பார்களா?

மட்டக்குழியில் ஒரு கிராம அதிகாரி இலஞ்சம் பெற்றதாக அவரை வேலையிலிருந்து இடைநிறுத்தி வைத்தபோது சிலர் ஆறுதல் அடைந்தார்கள். அதெல்லாம் அவரோடு மட்டும்தான். அவருக்குப் பதிலாக வந்தவரிடமோ அல்லது ஏனைய கிராம அதிகாரிகளிடமிருந்தோ மீள வேண்டுமே!

ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட, ராஜ கம்பீர, ராஜ குலதிலக என்று எந்த அரசாங்கம் வந்தாலும் இவர்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்த முடியாது - இவர்களை வழிக்குக் கொண்டு வரமுடியாது. அதேவேளை தமிழர்களுக்கும் பிரச்சினைகள் இருக்கின்றன. அதுவும் இந்த கிராம அதிகாரிகளால் பிரச்சனைகள் இருக்கின்றன. அவைகளை ஓரளவுக்கேனும் தீர்த்தாக வேண்டும் என்றுணர்ந்த அரசாங்கம் அதற்கு 'நாய்வாலை நிமிர்த்துவதைவிட' வேறு வழியைத்தான் நாடுகிறது.

அடையாள அட்டை தவறிவிட்டது என்று பொலீஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்றால் 'யாழ்ப்பாணத்தவர்களுக்குக் கொழும்பு வந்ததும் சொல்லி வைத்தது போல அடையாள அட்டைகள் தவறிவிடுகின்றன' என்று கேலி செய்வார்கள். பின்னர்தான் ஆமைவேகத்தில் என்றாலும் முறைப்பாட்டைப் பதிவுசெய்து அதன் பிரதியைப் பெறமுடியும்.

ஆனால் முறைப்பாட்டுப் பிரதியுடன் புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவென கிராம அதிகாரிகளிடம் சென்றால் அவர்கள் உதிர்க்கும் வார்த்தைகளைக் கேட்கச் சகிக்காது; அவர்களுக்குக் கொடுத்தும் மாளாது; அலுவல் நிறைவேறாது.

தமிழர்கள் இவர்களால் இப்படித் தொடர்ந்து தொல்லைகளுக்கு ஆளானால் அவர்களது ஆதரவைப் பெற முடியாது. அதனால் இதற்கு ஒரு மாற்று வழியாகத் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளிலும் அரசாங்கம் அவ்வப்போது அதே இடத்தில் சேவையை (ON THE SPOT SERVICE) நடத்தி வருகிறது.

அங்கு ஒரு பகல் முழுவதும் தற்காலிகமாக செயலகம், காவல் நிலையம், பதிவாளர் அலுவலகம், ஆள் பதிவு செய்யும் அலுவலகம், கப்பல் பதிவு அலுவலகம், விமான சீட்டுப் பெறும் அலுவலகம் போன்றவைகள் அமைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு பிரச்சனைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்படுகிறது. அடையாள அட்டை விண்ணப்பங்களுக்கு அங்கு தனிக் கவனம் எடுக்கப்படும். அங்கேயே புகைப்படங்கள் எடுத்து உரிய ஆவணங்களுடன் கையளிக்கலாம். கிராம அதிகாரிகளும் அங்கு மட்டும் பெட்டிப்பாம்பாக அடங்கி விண்ணப்பத்திலுள்ள உரிய இடத்தில் ஒப்பமிடுகிறார்கள்.

இப்படித் தமிழர்களின் முக்கியமான தேவைகளுக்கென நிரந்தரமாக ஒரு வழி காணப்பட வேண்டுமென உணரப் பட்டதன் விளைவுதான் ' முன்னரங்க அலுவலகம்' (FRONT OFFICE). அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் போன்ற வர்களின் முயற்சியால் உருவான இவ்வலுவலகம் பஞ்சிகாவத்தையிலுள்ள ஸ்ரீசங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ளது. இங்கு தமிழர்களின் பிரச்சினைகள் உடனுக்குடன் கவனிக்கப்படுகின்றன.

இங்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குரிய பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றுப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவைகளின் மொழிபெயர்ப்புகளும் செய்து கொள்ளலாம். வர்த்தமானப் பத்திரிகை உட்பட அரசாங்கத் தகவல் பகுதி வெளியீடுகளையும் பெற்றுக் கொள்ளலாம். எல்லாவற்றுக்கும் மேலாக ஆள் பதிவு திணைக்களப்பகுதி ஒன்றும் இயங்கிவருகிறது. முன்பு வடக்கு கிழக்கு மாகாணப் பதிவாளர் அலுவலகம் மாளிகாவத்தையில் இருந்தது. விடுவிக்கப்படாத பகுதியாக யாழ்ப்பாணம் இருந்த போது அங்கு பெறப்பட்ட சான்றுப் பத்திரங்கள் சில தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாதென்றிருந்தது. அதனால் மாளிகாவத்தை அலுவலகத்தில் எந்நாளும் வெள்ளம் போல் தமிழர்கள் கூட்டம். அவர்களைத் தொடர்ந்து தரகர் கூட்டமும்... வலிய வந்து 'ஒரு நாளில் பெற்றுத்தர இவ்வளவு' என்று பேரம் பேசுவார்கள். சிலருக்கு அப்படிக் கிடைத்தாலும் வேறு சிலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பணமாகச் கொடுத்ததையும் இழந்து, குறிப்பிட்ட ஆசாமியைத் தேடித்திரிவார்கள். முன்னரங்க அலுவலகம் வந்ததும் விண்ணப்பங்களைக் கையளிப்பது போன்ற பணிகளும் இங்கேயே மேற்கொள்ளப்படுகின்றன. தரகர்கள் தொல்லைகளும் குறைந்து சான்றிதழ்களையும் முறைப்படி விண்ணப்பித்து உரிய காலத்தில் பெறமுடிகிறது. இப்பொழுது மாளிகாவத்தையில் ஆவணக் காப்பகம் மட்டுமே உண்டு.

முன்னரங்க அலுவலகத்தில் அடையாள அட்டை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவைகள் விரைவில் கிடைக்கவும் ஏற்பாடாகி உள்ளது. கொழும்பில் தங்கியிருப்பதற்கான பொலீஸ் பதிவு, உரிய ஆவணங்கள், காணாமற் போனது சம்பந்தமானதென்றால் பொலீஸ் முறைப்பாட்டுப் பிரதி, புகைப்படம் (அதையும் அங்கேயே எடுக்கலாம்) இவைகளை இதற்கென அங்குள்ள மும்மொழியும் தெரிந்த சிங்கள அதிகாரியிடம் கொடுத்தால் போதும். மிகுதி வேலைகள் அனைத்தையும் அவரே பார்த்துக் கொள்வார். இதற்கு கிராம அதிகாரியின் கையொப்பமோ அவரைத் தேடித் திரிய வேண்டிய அவசியமோ இல்லை... இல்லவே இல்லை.

இந்த மாற்று ஏற்பாடுகளுக்கெல்லாம் காரணம் எனது கருத்துப்படி சர்வ வல்லமையுள்ள அரசாங்கத்தாலும் அந்த விதானைமார்களைத் திருத்த முடியாது என்பதுதானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உண்டேன்... உண்டேன்... சோறல்ல...

இரசிகமணி கனக செந்திநாதன் 1945இல் எழுதிய சிறுகதை 'ஒரு பிடி சோறு'. செல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சூழலிலுள்ள வெள்ளிக்கிழமை மடத்தில் நடந்த அன்னதான நெருக்கடியில் ஒரு பிடி சோறுகூடப் பெற முடியாமற்போன ஒரு கிழவியின் அவலத்தைச் சொல்கிறது இக்கதை.

இக்கதை பற்றி ஒரு நிகழ்விலே விமர்சனம் செய்கையில் எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் ''இதைப் படிக்கும்போது, அது அந்தக் காலக் கதைபோலத் தெரியவில்லை.

இன்றைக்கும் அங்கே இதுதான் நடக்கிறது... பந்தியில் இடம் பிடிப்பதற்காக இடிபட்டுத் தள்ளுப்பட்டு ஏறி விழுவதை இப்பொழுதும்தான் அங்கு காண்கிறோம்...'' என்றார். இந்த இடத்திலே எனது சிந்தனை சிறகுகட்டிப் பறந்து சென்று தெஹிவளை விஷ்ணு கோயிலையடைகிறது...

'சிவன் இருக்க விஷ்ணுவா? சிவத்தை விட்டு விட்டு வைணவத்துக்குக் போகலாமா? சைவத்தைச் சிதைக்கும் ஆஞ்சநேயர் வழிபாட்டுக்குத் துணை போகலாமா?' என்றெல்லாம் யாரும் பிரச்சினை கிளப்பவேண்டியதில்லை. பிரச்சினை வேண்டாம்... நான் கூறப் போவதெல்லாம் அங்கு வழங்கப்படும் சோற்றைப் பற்றித்தான். நீங்களும் என்னுடன் வந்தால் அங்கு நெருக்குண்ணாமல் சோறுண்ணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கோயிலின் சிறப்பு என்னவென்றால் ஞாயிற்றுக் கிழமைகளில் அங்கு வழங்கப்படும் அன்னதான நிகழ்ச்சிதான். கொழும்பிலுள்ள தமிழர்கள் எல்லாருமே கூடிவிட்டது போன்ற - அத்தனை பேர்களுக்கும் உணவு வழங்குவதென்றால் அது இலேசான காரியமா? ஆனால், அதனை அந்த ஆலயத் தொண்டர்கள் எவ்வளவு கச்சிதமாகவும் - யாரும் குறை சொல்ல முடியாத வகையிலும் நிறைவேற்றி வருகிறார்கள்!

அங்கு கூடுகின்ற அத்தனை சனங்களும் அநேகமாக சாப்பிட்டு விட்டுத்தான் போகிறார்கள். அதெல்லாம் கௌரவக் குறைவு என்றோ 'பாவச் சொத்தைப் பங்கிட்டுக் கொள்வதாகும்' என்றோ எவரும் நினைப்பதில்லை.

அதிலும் 'லொட்ஜ்'களிலும் 'அனெக்ஸ்'களிலும் அடைந்து கொண்டு 'நொட்டைத்தீன்' சாப்பிட்டு 'வயித்துக்கு வஞ்சனை' செய்து வருகின்றவர்களுக்கு வாரம் ஒரு நாள் கிடைக்கின்ற வீட்டுச் சாப்பாடு போன்றது - விஷ்ணு கோயில் சாப்பாடு.

அதனால் கோயில் சுற்றாடலில் வசிப்பவர்கள் மட்டுமல்ல கொட்டாஞ்சேனை, மட்டக்குளி போன்ற தூர இடங்களில் இருந்தும், அதிக பணம் செலவு செய்து அங்கு வருபவர்களையும் காணமுடிகிறது.

இந்த அன்னதானம் ஞாயிற்றுக் கிழமைகளில் தவறாது இடம்பெற்று வருகிறது. வேண்டுமானால், சனிக்கிழமைத் தமிழ்த் தினசரி ஒன்றில் ஆலய நிர்வாகத்தினர் வெளியிடுகின்ற அந்த விளம்பரத்தைப் பார்த்தும் அதனை உறுதி செய்து கொள்ளலாம்.

அங்குள்ள அன்னதான மண்டபமானது மருதனார் மடம் ஆஞ்சநேயர் கோயில் தோற்றத்தில் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. முதல் மாடியில்தான் அன்னதானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகிறது. ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் அமரக்கூடிய பெரிய மண்டபம். சாப்பிட விரும்புகிற எவருக்கும் ஐந்து நிமிட அவகாசத்தில் பந்தியில் இடம் கிடைத்து விடும்; ஏமாற்றம் என்பது எவருக்கும் கிடைக்காது.

இதே அளவிலான இரண்டாவது மாடியும் பாவனைக்கு தயார் நிலையில் இருந்த போதிலும், அதற்கான தேவை இன்னமும் ஏற்படவில்லைப் போலிருக்கிறது.

அங்கு வழங்கப்படும் சாப்பாட்டிலும் குறை சொல்வதற்கில்லை.

சம்பாச்சோறு... அதற்கேற்ற உவப்பான கறிவகைகள்... தயிர், பருப்பு, பாயசம் கூட உண்டு. ''யாழ்ப்பாணத்த வர்களுக்கு அப்பளப் பொரியல் இல்லாவிட்டால் சாப்பாடு இறங்காது' என்று சிங்கள அன்பர்கள் கூறுவதுண்டு.

அங்கு 'சாப்பாடு இறங்குவதற்காக அப்பளமும் போடுகிறார்கள்...'

தெஹிவளை கோயிலுக்குப் போவதால் சிரம பரிகாரத்துடன் வேறு பல சகாயங்களும் பெறலாம். தமிழர்கள் அதிகமாக ஒன்று கூடுகின்ற இடமாக அது இருப்பதால் வேண்டியவர்களைச் சந்திக்கவும்... புதிதாக யாழ்ப்பாணத்திலிருந்து வந்தவர்களிடமிருந்து புதினங்கள் அறியவும்... யாழ் செல்லவிருப்பவர்களைத் தேடிப்பிடித்துக் கடிதங்கள் கொடுத்து விடவும்... இப்படிப் பல வாய்ப்புகள்.

கோயிலிலிருந்து கூப்பிடு தூரத்திலேதான் (அதாவது மைக்கில்...) தெஹிவளை மிருகக் காட்சியகமும் (ZOO) இருக்கிறது. அங்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை விசேட நிகழ்ச்சியாக யானைகளின் சாகசங்கள் உண்டு. கோயிலுக்குப் போகிறவர்கள் தங்கள் நிகழ்ச்சித் திட்டத்தில் இதனையும் சேர்த்துக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாடு இருக்க, இதோ ஒரு பாட்டு...

வழுதி கலியாணத்துக்குப் போய் வந்த ஔவையாரிடம் ''எப்படி அன்று கலியாணச் சாப்பாடு?'' என்று கேட்டதற்கு அவர் சொன்ன பதில் இது...

வண்ட மிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்து
உண்ட பெருக்கம் உரைக்கக்கேள் - அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியினாலே
சுருக்குண்டேன்; சோறுண்டிலேன்.

செல்வச்சந்நிதிக் கோயிலில் இப்பொழுதும் இதுதான் நிலைமை என்று கோகிலா சொல்லக் கேள்வி, ஆனால் தெஹிவளை கோயிலில் அப்படியல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்ணை விட்டுப் பிரிவதில்லை கண்களுக்கும் சொந்தமில்லை

தமிழ்நாடு சென்னையில், அந்த லொட்ஜில் தங்கியிருந்த வேளை அதனைக் கவனித்திருந்தேன். கட்டிலில் விரித்திருந்த படுக்கை விரிப்பின் ஒரு பக்கத்தில் ' STOLEN FROM ' எனத் தொடங்கி அந்த லொட்ஜின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது அந்த விரிப்பானது 'அந்த லொட்ஜில் இருந்து களவாடப்பட்டது' என்பதாகும்.

இப்படி எதற்காக எழுதவேண்டும் எனச் சிந்தித்த போதுதான் அந்த விடுதி நடத்துபவர்களின் விவேகம் புரிந்தது.

லொட்ஜைக் காலி செய்யும் போது தெரிந்தோ தெரியாமலோ சாமான்களோடு சாமான்களாக அதனை எடுத்துச் செல்பவர்கள் பின்னர் அதற்காக எவ்வளவு துன்பத்துக்கும் வேதனைக்கும் ஆளாக வேண்டியிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். அதனை வீட்டிலேயே பாவிப்பதை யாராவது கண்டால் 'இவர் இந்தியாவில் இந்த வேலைதான் செய்தவர்' என்ற வசை மொழி ஏற்படும். கழுவிக் காய விட்டாலும் தொல்லை... சலவைக்குக் கொடுத்தாலும் தொல்லை... வேறு வினைகளே வேண்டாம். இதனை எண்ணும் போது 'தவறுதலாகக் கூட அப்படிச் செய்து விடக்கூடாது' என்ற எச்சரிக்கை உணர்வுதானே யாருக்கும் ஏற்படும்? இதனை நினைக்கும் போது கூடவே இதுபோன்ற வேறு சம்பவங்களும் நினைவுக்கு வருகின்றன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பெரியகடை வீதியில் அப்பொழுது ஒரு பெரிய புடைவைக் 'கடை' - அப்படியா சொன்னேன்; அல்ல 'கடல்' இருந்தது. அங்கு ஒரு சமயம் பார்வையாளர்களின் கண்களில் படும்படியாக ஓர் அட்டை தொங்கியதைக் கண்டிருக்கிறேன். அதிலே அவர்களிடம் கடன்பட்டு, மீளச் செலுத்தாத 'நாணயம் தவறிய' சிலரின் பெயர் விவரங்களும் அவர்கள் பட்ட கடன் தொகைகளும் குறிப்பிடப் பட்டிருந்தன. அந்தப் பட்டியலில் அப்போதைய சில 'பெரிய புள்ளி' களின் பெயர்களும் இருந்தன. கடைக்காரர்கள் எச்சரிக்கைக் கடிதம் (Letter of demand)அனுப்பிச் சட்ட நடவடிக்கை எடுத்தாலும் கிடைத்திருக்காத பலன் அந்த அறிவித்தலால் நிச்சயம் அவர்களுக்குக் கிடைத்திருக்கலாம்.

இப்படி ஒரு தந்திரத்தை எழுத்தாளர் சிற்பி அவர்களும் 'கலைச்செல்வி' நடத்திய காலத்தில் கையாண்டு பயன் கண்டது நினைவுக்கு வருகிறது. இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள் நூல்கள், சிறுசஞ்சிகைகள் வெளியிட்டு நட்டம் அடைவதற்கு முக்கிய காரணமே விற்பனையாளர்கள் தாம். அதிலும் அவர்கள் வெளி மாவட்டங்களில் உள்ள விற்பனையாளர்களுக்கு இவைகளைத் தபாலில் அனுப்பி விட்டு பின்னர் அவர்கள் 'கணக்குப் பார்த்து'க் காசு அனுப்புவார்கள் என எதிர்பார்த்தால்... அது பெரும்பாலும் ஏமாற்றமாகத்தான் இருக்கும். அதனால் சிற்பி அவர்கள் அத்தகையவர்களை 'வழிக்குக் கொண்டுவர' அப்போது 'கலைச்செல்வி'யில் ஒரு பக்கத்தில் 'நேர்மையான விற்பனையாளர்கள்' என ஒரு பட்டியல் வெளியிட்டார். அதேவேளை 'நேர்மை தவறிய' விற்பனையாளர்களுக்கு, அப்படியொரு பட்டியலை 'கலைச்செல்வி'யில் வெளியிடப் போவதாகத் தனிப்பட்ட முறையில் அவர்களுக்குக் கடிதங்கள் எழுதினார். 'பொய்மையும் வாய்மையிடத்து புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்பதுபோல, அவர் அப்படிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாவிட்டாலும் அக்கடித வரிகளால் பயன் கிடைத்தது என்னவோ உண்மைதான். இப்படியாக சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்துப் பாவிக்கப்படும் ஒரு சொல் அல்லது சொற்றொடர்களுக்கு எவ்வளவு வலிமை இருக்கிறது என்பதையே சொல்ல வருகிறேன். இதைத்தான் 'வெல்லும் சொல்' என வள்ளுவரும் கூறுகிறாரோ?

அதிரடியான நடவடிக்கைகளுக்காக என்றில்லாமல் சில விளம்பரங்களிலும் தேர்ந்த வரிகளைப் பயன்படுத்தி அவைகளுக்கு கவர்ச்சியூட்டிய சம்பவங்களுமுண்டு.

சில புடைவைக் கடைச் சிட்டைகளிலும் பைகளிலும் இப்படி அச்சிட்டிருப்பதைக் கவனித்திருப்பீர்கள் 'If you are satisfied tell others. If not satisfied tell us'. அதாவது உங்களுக்கு திருப்தியானால் மற்றவர்களுக்கும் சொல்லுங்கள் இல்லையேல் எம்மிடம் சொல்லுங்கள்'. அதன் திரண்ட கருத்து இப்படியாகவும் இருக்கலாம். 'ஒறிஜினல் கிப்ஸ் சாரம்' என்று போலியை அவர்கள் உங்களிடம் தள்ளியிருந்தால் அது பற்றி நீங்கள் மற்றவர்களிடம் சொல்லக் கூடாது. வேண்டுமானால் அது பற்றி அவர்களிடமே சொல்லுங்கள்.

இறுதியாக ஒரு மூக்குக் கண்ணாடி விளம்பரத்தில் மிகவும் பொருத்தமான சினமாப் படப்பாடல் வரிகளைப் பயன்படுத்தியிருந்தது எனது கவனத்தை மிகவும் ஈர்த்திருந்தது. படிப்பதற்கு மட்டுமின்றி தூரப் பார்வைக்குமென இடையறாது அணிய வேண்டிய (BIFOCAL & CONSTANT WEAR) கண்ணாடிக்காரர்களுக்கு அச்சொட்டாகப் பொருந்தக் கூடிய அப்பாடல் வரிகள் வருமாறு: (கண்ணாடியைத் தேடுவதானால்கூட அதற்கொரு கண்ணாடி தேவைப்படுவோரே கவனியுங்கள்) 'கண்ணோடு காண்பதெல்லாம் கண்களுக்குச் சொந்தமில்லை. கண்ணோடு மணியானாய் அதனால் கண்ணைவிட்டுப் பிரிவதில்லை.'

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மௌனம் என்றொரு வார்த்தை

வெல்லும் சொல் பற்றியும், சுருக்கமாகக் கையாளப் படும் ஒரு சில வார்த்தைகளுக்குரிய வலிமை பற்றியும் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். அப்படியும் இல்லாமல் பொருத்தமான இடங்களில் கடைப்பிடிக்கும் மௌனத்துக்கும்கூட வலிமை இருக்கிறது. அதாவது சொல் சாதிக்காததை அப்படியான மௌனம் சாதித்திருக்கிறது என்பதைச் சொல்ல வருகிறேன்.

தந்தை செல்வநாயகம் அவர்கள் அரசியலில் நேர்மையைக் கடைப்பிடித்த பெருமகன். அவர் கேட்டார் பிணிக்கும் சொற்பொழிவாளர் இல்லாவிட்டாலும் மெதுவான நடுங்கும் குரலில் என்றாலும் நிதானமாகவும் சுருக்கமாகவும் வெல்லும் சொல்லறிந்தும் பேசுவார். அவர் அப்படிப் பேசுவதைச் சபை காதுகளைக் கூர்மைப்படுத்திக் கொண்டு கேட்கும்.

அவர் பேசி அல்ல - பேசாமல் சாதித்த சம்பவம் ஒன்று இருக்கிறது. தமிழர் கூட்டணியின் வட்டுக் கோட்டை மாநாட்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் இது நடந்ததாக அறிய முடிகிறது. அப்போது கூட்டுத் தலைமை பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது. செல்வநாயகம், தொண்டமானுடன் ஜி.ஜி.பொன்னம்பலத்தையும் கூட்டணித் தலைவராக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு அங்கு பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. காரசாரமான வாக்குவாதங்களும் கூச்சல் குழப்பங்களுமாக விவாதம் நீண்டு கொண்டிருந்தது. எல்லாவற்றையும் கவனமாகக் கவனித்துக் கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை அவர்கள் மெல்ல ஆசனத்தை விட்டு எழுந்து நிற்க முற்படுகிறார். அவரது தளர்ந்த உடல் நிலையில் அதற்குச் சிறிது நேரம் எடுக்குமல்லவா? கூச்சலும் குழப்பமும் நின்று அவர் என்ன சொல்லப்போகிறார் என்பதைக் கவனிக்க எல்லாரும் காத்திருந்தனர். தந்தை மெதுவாக எழுந்து மௌனமாக நிற்கிறார். யாரும் எதுவும் பேசவில்லை... தந்தை மீண்டும் ஆசனத்தில் இருந்து விடுகிறார்... அவ்வளவுதான். பின்னர் தீர்மானமும் ஒருமனதாக நிறைவேறிவிட்டது.

இனித் தமிழகப் பக்கம்... இது முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் சொன்ன கதை.

புதிதாகத் திருமணம் செய்த ஒருவன் அவரைத் தேடி வருகிறான். ''மனைவி பொல்லாதவளாக இருக்கிறாள். சொல்வழி கேட்கிறாள் இல்லை. எல்லாம் தான் நினைத்தபடிதான் நடக்கவேண்டும் என்கிறாள். இதற்கு என்ன செய்ய வேண்டும்?'' என்று ஆலோசனை கேட்கிறான். அதற்கு அவர் ''அடக்கிப் பார்'' என்கிறார். சில நாள்களின் பின்னர் இளைஞன் திரும்பவும் அவரிடம் வருகிறான். ''அடக்கிப் பார்த்தேன் ஐயா. அடங்கு கிறாள் இல்லை. நான்தான் அடி வாங்க வேண்டியுள்ளது'' என்கிறான்.

கி.ஆ.பெ. அவனுக்கு சொல்லுகிறார்: ''அடங்கிப் போ.'' அப்படி அவன் அடங்கிப் போனதும் அவர்களின் குடும்பத் தகராறு தீர்ந்து விட்டதாக அறிஞர் மேலும் சொல்கிறார். சிரிக்காதீர்கள்... வாய் பேசாமல் மௌனமாக அடங்கிப் போவதிலுள்ள நன்மை இது. ''ம்... என்ன அதுவும் அவளுக்கா...'' என்கிறீர்களா? இப்படி நெருக்கடி நேரங்களில் பேசாமல் இருக்க ஒரு வழியும் இருக்கிறது... உங்களுக்கு யார் மீதாவது ஆத்திரம் என்று வந்தால் வாய் நிறையத் தண்ணீரை நிறைத்து அதை அப்படியே வைத்திருக்க வேண்டும். எதிரி பேசி முடித்ததும் அல்லது உங்கள் ஆத்திரம் அடங்கியதும் தண்ணீரை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். கண்டபடி வார்த்தைகளை உதிர்த்து, அதனால் வரும் விபரீதங்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர்ப்பதற்கு இந்த மௌனப் பயிற்சி - அல்லது தண்ணீர்ப் பயிற்சி - உதவும்.

'கல்லாதவரும் நனிநல்லர் கற்றார்முன் சொல்லா திருக்கப்பெறின்' என்பது வள்ளுவர் வாக்கு. அப்படியல்ல. இந்தச் சொல்லாதிருக்கும் மௌனம் சில சமயங்களில் எல்லாருக்கும் நன்மை பயக்கும்.

கடைசியாக இன்னொரு தண்ணிக் கதை. 'இன்று ஒரு தகவல்.' நிகழ்ச்சியில் கேட்டது...

ஒரு கணவன் - மனைவி இடையே அடிக்கடி சண்டை சச்சரவு. அவள் ஒரு வார்த்தை பேசினால் இவன் இரண்டு வார்த்தைகள் பேசுவான். இவன் இரண்டு வார்த்தைகள் பேசினால் அவள் நாலு வார்த்தைகள் பேசுவாள். இப்படி பேச்சுவார்த்தையில் தொடங்கி கைகலப்புவரை செல்லும். கணவனால் பொறுக்க முடியாமல் ஊர்ப் பெரியவர் ஒருவரிடம் ஆலோசனை கேட்கப்போகிறான். பெரியவர் ஒரு போத்தல் நிறைய மருந்து வார்த்துக் கொடுத்துச் சொன்னார். "உன் மனைவி இரண்டு வார்த்தைகள் பேசினால் நீ பதிலுக்கு இரண்டு வார்த்தைகள் பேசுவதற்கு முன் இந்தக் கலவையில் இரண்டு அவுன்ஸ் வாய்க்குள் விட்டு அதை விழுங்காமல் வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டும்."

சில நாட்களின் பின் மீண்டும் போத்தலுடன் வந்தவனிடம் பெரியவர் கேட்டார். "எப்படி மருந்து? பயனேதும் கிடைத்ததா?"

"இல்லாமலா வந்தேன். அன்பு மிகக்கொண்டு இன்னொரு போத்தல்..." என்று தயங்கினான் வந்தவன்.

பெரியவர் சிரித்துக் கொண்டு சொன்னார்: "இந்த மருந்தை எங்கள் வீட்டுக் கிணற்றில் மட்டுமல்ல உங்கள் வீட்டுக் கிணற்றிலும் எடுக்கலாம்."

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூகம்பத்தையே அனுப்பியிருக்கலாம்!

பூகம்பம் ஏற்படும் ஒரு நாட்டிலே... பூகம்பத்தால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தமது பிள்ளைகளை அப்படியான பாதிப்பு இல்லாத தூரவிடத்து நண்பர் ஒருவரின் வீட்டிலே பாதுகாப்புக்காக ஒப்படைத்திருந்தார். சில நாட்களின் பின்னர் அவர் அந்த வீட்டுக்காரரிடம் தமது பிள்ளைகளைப் பற்றி விசாரித்திருக்கிறார். அதற்கு அந்த வீட்டுக்காரர் சொன்ன பதில் ''நீங்கள் இவர்களுக்குப் பதில் பூகம்பத்தையே அனுப்பியிருக்கலாம்'' - என்பதாகும். இதுவும் நான் எப்போதோ படித்த நகைச்சுவைத் துணுக்குத்தான். அண்மையில் இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் பெரும் பூகம்பம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியான செய்தி யாவரும் அறிந்ததே.

இதிலே ஓர் ஆச்சரியம் என்னவென்றால், இந்தியாவில் மிகச்சிறந்த விஞ்ஞானிகளும் ஆய்வாளர்களும் இருந்த போதிலும் இந்த ஆபத்துப் பற்றி முன்கூட்டியே எதிர்வுகூறத் தவறியதுதான்.

அதுதான் போகட்டும், எதிர்கால நிகழ்வுகள் குறித்துக் கச்சிதமாக ஆராய்ந்து கூறவல்ல சோதிட வித்தகர்கள் கூட இதிலே சோடை போய்விட்டனரே. ராஜீவ் காந்தியின் கொலை குறித்தும், பிரேமதாசா ஜனாதிபதியாவார், யாழ்ப்பாணத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மீளக் குடியமரும் வாய்ப்பு ஏற்படும் என்பன பற்றியும் முன்கூட்டியே எதிர்வு கூறியவர்கள் அங்குள்ள சோதிடர்கள். அதிலும் குறிப்பாகப் பார்த்தசாரதி போன்ற சோதிடர்களே பூகம்ப விடயத்தில் கோட்டை விட்டு விட்டார்கள்.

இதைவிட, அண்மையில் தென்னிலங்கையிலும் இலேசான பூமியதிர்வு உணரப்பட்டதாகச் செய்தி வெளியாகியிருந்தது. இதற்கு முன்னரும் சில ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் இலேசான பூமியதிர்வு ஏற்பட்டது. அப்பொழுது கொழும்பிலிருந்த என்னாலும் அதனை உணரமுடிந்தது. இது புளுகல்ல; உண்மை!

அதிகாலை அரைத்தூக்கத்தில் படுத்திருந்த எனது கட்டில் இலேசாக அரக்கப்பட்டது போன்ற உணர்வுதான் அது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்தவர்களால் இதனை உணர்ந்திருக்க முடியாதிருக்கும். நான்கூட அப்போது இது பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. எங்கோ குண்டு வெடித்ததினால் ஏற்பட்ட அதிர்வாக இருக்கலாம் என்று அமைதியாக இருந்து விட்டேன். உங்களுக்கு அதனை விளக்க வேண்டுமானால் எங்கோ தொலை தூரத்தில் நிலக்கண்ணி வெடித்தால் ஏற்படும் அதிர்வு இருக்கிறதே, அதை நினைத்துக் கொள்ளுங்கள். ஆனால் சத்தம் மட்டும் இல்லை; இதுதான் வித்தியாசம்.

'அது பூமியதிர்வுதான்' என்பது மூன்றாம் நாள் பத்திரிகைச் செய்திகளைப் பார்த்த பின்னர்தான் அங்குள்ளவர்களுக்கும் ஏன், எனக்குமே தெரியவந்தது. ச்சா... அப்பொழுது நான் மட்டும் கொஞ்சம் புத்திசாலித் தனமாகச் சிந்தித்திருந்தால் ஆகக் குறைந்தது நான் வசித்த மட்டக்குளியிலாவது என் பெயர் கொடிகட்டிப் பறந்திருக்குமே என்று இப்போது யோசிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கேட்க வேண்டுமா? வெறும் வாயை மென்றவர்களுக்கு அவல் கிடைத்த கதைதான். அது போன்ற பூமியதிர்வு மீண்டும் ஏற்படலாம் என்றும், எங்கெல்லாம் அப்படி ஏற்படலாம் என்றும், ஏன் அது வரப்போகின்ற பூகம்பத்துக்கான ஓர் அறிகுறி என்றும்கூட ஆய்வாளர்கள் ஆரூடங்கள் தெரிவிக்கத் தொடங்கி விட்டார்கள். இந்தியாவுக்கு நாம் ஒன்றும் சளைத்தவர்கள் இல்லைப்பாருங்கோ... இங்கும் இதுதானே நடக்கிறது.

என்னைக் கேட்டால், நாம் பூகம்பத்துக்கு அஞ்ச வில்லை. இன மோதல்களால் கடந்த இரண்டு தசாப்தங்களாக அதைவிடக் கொடிய அவலங்களையும் உயிர் அழிவுகளையும் சந்தித்து வருகிறோம். இவைகள் இல்லாமற் போய், இவைகளுக்குப் பதில் பூகம்பமே வந்தாலும் பரவாயில்லை என்பேன்.

என்னை யார் இதுபற்றியெல்லாம் கேட்கிறார்கள்? கேட்டால்தானே! *(10.03.01)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 32 பாதத்திலிருந்து முகத்துக்கு...

ஒரு காலத்தில் பயணிகளிடம் ஐந்து சதம் 'பிடிகாசு' பிடித்து வந்த பேரூந்து நடத்துநர்கள் அப்போது ஐம்பது சதம் பிடிக்கத் தொடங்கிய கதையைச் சொல்லி அது எதிர்காலத்தில் 'இப்படி எத்தனை ஒரு ரூபாய்?' என்ற கதையாகத் தொடர்ந்து விடுமோ என்று முன்னொரு சமயம் அச்சம் தெரிவித்தேன். அதெல்லாம்கூட இப்பொழுதும் சில இடங்களில் சில வேளைகளில் நடப்பதுண்டல்லவா? எப்படியிருக்கிறது எனது தீர்க்கதரிசனம்? இப்படி எத்தனையோ ஐம்பது சதங்களைப் பிடிப்பவர்கள் ஏதாவது ஒரு இக்கட்டான சந்தர்ப்பத்திலாவது ஐம்பது சதத்தை விட்டுக் கொடுத்திருக்கிறார்களா?

ஒலி பெருக்கி உபத்திரவம் பற்றியும் எழுதி ஒரு கருத்துக் களத்துக்கே வழிவகுத்திருந்தேன். இந்த உபத்திரவங்கள் கோவில்களில் மட்டுமென்றில்லாமல் இப்பொழுது பேரூந்துகளிலும் தொற்றிவிட்டது. பயணிகள் ஒரு புறம் நசிபடுகிறார்கள். மறுபுறம் (இசையால்) வதைபடுகிறார்கள். அது மட்டுமா? போதாக்குறைக்கு ஒலிபரப்பி பூட்டிய ஐஸ்கிறீம் வாகனங்கள் அடிக்கடி வீதிகள் தோறும் தரிசனம் தந்து எம்காதுகளுக்குக் குளிர் அருவியைக் கொட்டுகின்றன. இதற்கெல்லாம் காரணம் தட்டிக் கேட்க 'நான் இல்லை' என்ற காரணமாக இருக்குமோ? இதோ நான் மீண்டும் எழுதத் தொடங்கி விட்டேனே... இனி நான் இருக்கப் பயம் ஏன்?

ஒரு பிரபல மேல்நாட்டு ஓவியர். அவர் தாம் தீட்டுகின்ற ஓவியங்க்ள் ஒவ்வொன்றையும் வீட்டுக்கு வெளியே சுவரையொட்டிக் காட்சிக்கு வைப்பாராம். வைத்துவிட்டு மக்கள் கருத்தை மறைவில் இருந்து கவனித்துக் கேட்பாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சமயம் அப்படி ஓர் ஓவியத்தை வைத்துவிட்டுக் கவனித்துக் கொண்டிருந்தார். ஒருவர் அந்த ஓவியத்தின் கால் பாதத்தைப் பற்றி இன்னொருவருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்... 'அந்தப் பாதம் அப்படி இருக்கக் கூடாது. இப்படித்தான் இருக்க வேண்டும்' என்றாராம். ஓவியர் வெளியே வந்து பார்த்தபோது அவர் சொன்னது மிகவும் சரிதான் என்று தோன்றியது. அபிப்பிராயம் சொன்னவருக்கு அதற்காகப் பாராட்டும், நன்றியும் தெரிவித்ததுடன் அவரை மிகவும் கௌரவித்தும் அனுப்பினாராம். அப்படிச் சொன்னவர் ஒரு செருப்புத் திருத்தும் தொழிலாளி. அதனால் தினமும் பல பாதங்களைப் பார்த்துப் பழகியவர். அதனால் ஓவியத்தில் உள்ள பாதத்தின் குறைபாட்டை அவ்வளவு அச்சொட்டாகச் சொல்லிப் பெருமை பெற்றார்.

ஓவியர் அந்தத் தொழிலாளியின் ஆலோசனைப்படி படத்தைச் சீரமைத்து மீண்டும் காட்சிக்கு வைத்தார்; விமர்சனத்திற்காகக் காத்திருந்தார். மீண்டும் அந்தத் தொழிலாளி வந்தார். பழைய புகழ்ச்சியின் பெருமிதத்துடன் இந்த முறை இப்படிச் சொன்னார். ''கால் சரி, பாதம் சரி, ஆனால் முகத்திலே உள்ள மூக்கானது அப்படி இருக்கக் கூடாது; இப்படித்தான் இருக்க வேண்டும்'' என்றார். ''எப்படி இருக்க வேண்டும்?'' என்றவாறே ஓவியர் வெளிப்பட்டு வந்து பார்த்தார். அதே ஆள்தான். ஆனால், இந்த முறை அவரது அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தாம் தீட்டியது ஓவியருக்குச் சரியாகவே பட்டது. ஏன் அப்படிச் சொல்லுகிறீர்? எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லு கிறீர்? என்ற ஓவியரின் வினாக்களுக்கும் அவரால் பதிலளிக்க முடியவில்லை. பலர் முன்னால் அவர் கூனிக்குறுகி நின்றார். அந்தத் தொழிலாளி பாதத்துடன் மட்டும் நின்ற போது பெருமை பெற்றார். அதற்குமேல் முகத்தளவுக்குச் சென்ற போது அவமானப்பட்டார். இந்த இடத்திலே இந்தக் கதை தேவைதானா? நானும் எனது காலளவிலே நிற்க முயல்கிறேன். அநாவசியமாக முகத்தளவுக்குப் போய் தெரியாதவைகளி லெல்லாம் மூக்கை நுழைத்துக் கொள்ள மாட்டேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'லஞ்'சுக்கு வாறியளா?

தொண்ணூற்றி ஐந்தில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் இடப்பெயர்வு. அதனையடுத்து தொண்ணூற்றி ஆறில் (அதுவும் மாபெரும்தான்) மீளக்குடியமர்வு. யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்ததும் தொண்ணூற்றி ஏழு ஆரம்பத்தில் கொழும்பு - யாழ்ப்பாணம் விமானசேவை ஆரம்பிக்கப்பட்டது. 'லயன் எயர்' மூலமாக இச்சேவை ஆரம்பிக்கப்பட்டது.

பாதுகாப்பு அனுமதி; ஆசனப் பதிவு; அதிக கட்டணம் என்றெல்லாம் பல சிரமங்கள் இருந்தாலும் அதனை ஒரு வரப்பிரசாதமாகவே நம்மவர்கள் கருதினார்கள். விமானத்தில் கொழும்பு வருபவர்களும் சரி, கொழும்பிலிருந்து யாழ் செல்பவர்களும் சரி, அவர்கள் சாதனையாளர்கள்தாம்!

கொழும்பில் உள்ளவர்கள் யாழ் செல்பவர்களை 'மணந்து பிடித்து', ''போகும்போது சொல்லுங்கள்; அங்கு தபாலில் சேர்ப்பதற்கு ஒரு கடிதம் தந்து விடுகிறேன்'' என்பார்கள். ஒருவர் ஒரு கடிதம் என்றில்லாமல் பலர் பல கடிதங்கள் என்றாகி அதுவே சிலசமயம் ஒரு 'சுமை' யாகிவிடும். (தபால் விநியோகிப்பவர்கள் தோற்றுப் போய் விடுவார்கள்) அத்தோடு நின்றுவிட்டால் போதாதா...?

கொழும்பில் உள்ளவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்களைக் கண்டதும் அப்போதெல்லாம் உருகிப்போய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார்கள். போர் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருந்த அவர்களை அழைத்து ஒரு நேரமாவது அவர்களுக்கு 'வயிறாரச் சாப்பாடு போடவேண்டும்' என்ற நல்லெண்ணம் பிறக்கும். 'போறதுக்கு முன்னர் ஒரு நாளைக்கு 'லஞ்சுக்கு' (மதிய வுணவு) வாறியளா?' என்பார்கள். (இரவுச் சாப்பாட்டுக்கு அழைத்து வந்தவரைத் தாமதிக்க வைத்தால் பொலீஸ் பதிவுப் பிரச்சினை வேறு) இவரும் ஒரு கலியாணச் சாப்பாடு கிடைத்த மனநிறைவுடன் அழைப்பினை ஏற்றுக்கொள்வார். விருந்து முடிந்தது என்று வைத்துக் கொள்வோம். பொறுமையாக இருந்து அன்றைக்கு மட்டும் ரீ.விக்கு ஓய்வு கொடுத்துவிட்டு யாழ்ப்பாணத்துப் புதினங்களைக் கேட்பார்கள். பின்னர் தான் தமது பாரம்பரிய 'பணச்சடங்கு'ப் புத்தியைக் காட்டுவார்கள். ''நீங்கள் போகும்போது ஒரு சிறிய பார்ஸல் தந்து விடலாம் என்றிருக்கிறேன்.''

விருந்துண்டவருக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு விடும்... வார்த்தைகள் தடுமாறும்... அவரும் எத்தனையோ திட்டங்களுடன் வந்திருப்பார். அந்தப் பயணத்தைப் பயன் படுத்தி - அந்த இருபது கிலோவுக்குள் யாழ்ப்பாணத்திலே தட்டுப்பாடாகவும் ஒறுப்பாகவுமுள்ள சில அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு செல்லத் திட்டமிட்டிருப்பார்.

இன்னும் சிலர் அச்சமயம் இங்கு பொன்விலையாக இருந்த வெற்றிலை, இஞ்சிக்கிழங்குப் பக்கமும் மனம் விட்டிருப்பார்கள். அப்படிக் கொண்டு சென்றால் விமானக் கட்டணமாக கொடுத்த பெருந்தொகையில் ஒரு பகுதியை ஈடு செய்யமுடியும். இப்பொழுது அதற்கும் பங்கம் வந்து விட்டதே! அதுதான் சொல்லுவார்கள் 'நக்குண்டார் நாவிழந்தார்.'

**பு**திய புரிந்துணர்வு ஒப்பந்தம், ஏ -9 பாதை திறப்பு இவைகளையடுத்து வெளிநாட்டவர்களின் வரவு யாழ்ப்பாணத்துக்கு மேலும் அதிகரித்திருக்கிறது. கனடா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன், சுவிஸ்... இப்படி பலர் இங்குள்ள உறவினர்களைத் 'தரிசித்துச்' செல்கிறார்கள். கொண்டுவந்தும் - கொண்டும் போகிறார்கள்.

இவர்களுக்கும் இங்கு 'லஞ்சுக்கு வாறியளா?' அழைப்புக்குக் குறைவிருப்பதில்லை. உறவினர்கள் மட்டும் என்றில்லாமல் புதிய இடங்களிலிருந்தும் இப்படியான அழைப்புகள் வருவதுண்டு. வெளிநாட்டவர்களுக்கு இந்த அழைப்பிலுள்ள 'சுவை' மட்டுமல்ல 'சுமை'யும் தெரியும் என்பதால் இத்தகைய அழைப்புகளைச் சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழித்து விடுவார்கள்.

அனுபவக் குறையுள்ளவர்கள் இங்கேயும் சிக்கித் தவிப்பதுண்டு. அப்படியானவர்கள் சாப்பிட்ட கை கழுவிய கையோடு புலம்பெயர்ந்தவர்களுக்காகப் புளுக்கொடியல், எள், இடியப்ப உரல், கொட்டை எடுத்த புளி என்றெல்லாம் சுமந்து செல்கிறார்கள்... பாவங்கள்...

பரவாயில்லை - உதவிதானே என்கிறீர்களா? கவனமாயிருக்க வேண்டும். ஆக விட்டுக்கொடுத்தால் (அதாவது ஒரே வீட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட லஞ்சைச் சொல்லுகிறேன்.) அம்மி, ஆட்டுக்கல் என்று கூடச் சுமத்தி விடுவார்கள்.

என்ன என்னுடைய லஞ்சை எதிர்பார்த்திருந்த உங்களுக்கு ஏமாற்றமாகிவிட்டதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தாம்பாளத்துக்கு ஒரு கைப்பிடி

இப்பொழுதெல்லாம் நாட்டிலே வாள்வெட்டுச் சம்பவங்கள் பற்றியும் வாள்கொண்டு நடைபெறும் அச்சுறுத்தல்கள் பற்றியும் செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படவிருந்த வாள்களின் படங்களையும் கூட பத்திரிகைகளில் காண முடிகிறது.

'வாள்-படம்' என்றதும் எமக்கு அந்தக் காலத்துத் தமிழ் வாள் சண்டைப் படங்கள் நினைவுக்கு வரத் தவறுவதில்லை.

அக்கால கிராமியப் படங்கள் என்றால் அவைகளிலே சண்டைக் காட்சிகளாக சிலம்படி இடம் பெறுவதுண்டு. அவைகளிலே 'சடபட' வென்று கோலாட்டச் சப்தம் போன்ற ஓசை பிறக்கும். மற்றும்படி தமிழ்ப் படங்களுக்கே சிறப்புரிமையாகவுள்ள தீப்பிடித்து எரிகின்ற - தீவைப்புச் சம்பவங்களுக்கும் குறைவிருக்காது.

இவைகளைவிட புராண, அரச படங்களை எடுத்துக் கொண்டால் அவைகளிலே வாள் சண்டைகளுக்குத்தான் முக்கியத்துவம். 'மயிற் கூச்செறியும் வாள் சண்டைகள் நிறைந்த படம்' என்றெல்லாம் அவைகளுக்கு விளம்பரம் செய்வார்கள்.

'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி' என்றொரு படம். அதை நான் பார்க்கவுமில்லை; கதை இன்னதென்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது. ஆனால், அந்த அபூர்வ சிந்தாமணி என்பவர் வாள் கொண்டுதான் அந்த 'ஆயிரம் தலைகளையும் வாங்கி யிருப்பார்' என்பது எனது ஊகம்.

இடைக்கால எம்.ஜி.ஆர்.. சிவாஜி படங்களிலும் வாள் சண்டைகளுக்குக் குறைவிருந்ததில்லை. மதுரைவீரன், நாடோடி மன்னன், கட்டப்பொம்மன் என்பனவெல்லாம் வாள் சண்டைகள் நிறைந்த படங்கள்தான். இவர்களின் வாள் வீசும் தோற்றத்திலமைந்த பிரம்மாண்டமான 'கட் அவுட்'களை திரையரங்க வாயில்களில் வைத்திருப்பார்கள். துப்பாக்கி துளைக்காத சட்டை என்பது போல வாள் துளைக்காத மார்புக் கவசங்களைக் கூட அவர்கள் அணிந்திருந்தார்கள்.

என்ன இருந்தாலும் வாள் சண்டையில் வல்லவர் எம்.ஜி.ஆர்தான். வசனம் பேசுவதில் சிவாஜி என்பது போல... இதனை அக்கால ரசிகர் பாணியில் சொல்வதாயிருந்தால்... 'வாள் வீச்சுக்கு எம்.ஜி.ஆர். வாய் வீச்சுக்கு சிவாஜி..' இவர்களின் வாள்வீச்சுக்கு இறுதியில் பலியாகும் நடிகர் களாகத் திகழ்ந்தவர்கள் பி.எஸ்.வீரப்பா, எம்.என்.நம்பியார், ஓ.ஏ.கே.தேவர் என்போர்கள். ஆனால் அதெல்லாம் உக்கிரமான சண்டையின் பின்தான். வாளை உறையில் இருந்து உருவி எடுக்கின்ற 'உர்ர்' என்ற சப்தம் தொடக்கம் 'டிங்...டிங்...டொங்...' என்ற தாளலயம் போன்ற வாள் சண்டைச் சப்தங்களுடன் படத்தைப் பார்த்துவிட்டு வந்த பின்னர் கூட எமது செவிகளில் அவை ரீங்காரமிட்ட வாறிருக்கும்.

வாளை எதிராளிமீது வீசுவதுடன் எதிராளியின் வாள் தம்மீது விழுவதைத் தடுப்பதற்கும் ஒரு கவசம் பாவனையில் இருந்தது. அது நடுவிலே கைப்பிடிபோட்ட தாம்பாளம் போன்ற அமைப்பிலானது. வாள் இதன் மீது பட்டுத் தெறிக்கும் ஓசை வேறு. சும்மா சொல்லக் கூடாது. இப்படியான சில வேகமான வாள் சண்டைகளின் போது நெருப்புப் பொறிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடப் பறந்ததுண்டு. அந்தப் பொறி பட்டுத் தீ பரவுவதுமுண்டு. என்ன நான் தமிழ்ப் படங்களைப் பற்றித்தானே சொல்லிக் கொண்டு வருகிறேன்.

நிராயுதபாணியுடன் சண்டைக்குப் போவது போர் மரபாகாது. வாள் சண்டை தொடங்குவதும் அப்படித்தான். 'என் வாளுக்குப் பதில் சொல்லிவிட்டு....' என்றுதான் சண்டைக்குத் தூபமிடப்படும். எதிராளியிடம் வாள் இல்லாவிட்டால் அவருக்கும் ஒரு வாள் வீசி எறியப்படும். இப்படித்தான் ஒரு படத்தில் நகைச்சுவை நடிகர் நாகேசுக்கும் ஒரு வாள் கொடுக்கப்படுகிறது. வாளைப் பெற்ற நாகேசுக்கு உடம்பெல்லாம் உதறல் எடுக்கிறது; கையிலுள்ள வாளும் தான். அப்பொழுது அவர் சொல்லுகிறார் 'எனக்கு மட்டும் ஏன் நடுங்குகிற வாளைத் தந்திருக்கிறீர்கள்?'

இப்பொழுது இங்கு நடைபெறுகின்ற வாள் வீச்சுக்களிலே வாளும் வாளும் உராய்கின்ற சத்தங்களோ அல்லது அவை கேடயம் - கவசங்களில் படுகின்ற ஓசைகளோ எழுவதற்கு வழியில்லை. அது ஒருதரப்புத் தாக்குதல் என்பதால் 'தினத்தந்தி' நடையில் சொல்வதானால் 'சதக் சதக்'தான்!

'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்பது போல வேல் அல்ல - வாள் வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்கு கடன் என்றொரு பாடல் இருக்கிறதல்லவா? வர்ளுடன் யாரும் வந்தால் நிராயுதபாணிகளானவர்களுக்கு ஓடி ஒளிந்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. அந்தக் கடமை உணர்வு மிக்க கொல்லர் இப்படியானவர்களுக்கெல்லாம் 'கேடயம்' அமைத்துக் கொடுப்பதையும் தங்கள் கடமையாகக் கொண்டால் என்ன? அப்படி இல்லாவிட்டாலும் வீட்டு தாம்பாளங்களுக்கு நடுவிலே ஒரு கைப்பிடி பொருத்திக் கொடுத்தாலும் சரிதான்!

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அந்தோனி சொன்ன கதை

ஜூலியஸ் சீசரின் கதையை நினைத்ததும் எமக்கு மார்க் அந்தோனியின் பெயர் நினைவுக்கு வருவது போல, எனக்கு அந்தோனியை நினைத்ததும் அவர் சொன்ன அந்தக் கதை நினைவுக்கு வரத் தவறுவதில்லை.

எமது அந்தோனி கந்தரோடையில் வாழ்ந்து வரும் 94 வயது முதியவர். பழைமையின் பிரதிநிதியாகத் திகழும் இவர் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். தேவாலயங்களுடன் தொடர்புகள் வைத்து மதத் தலைவர்களுடன் பழகிய பட்டறிவு மிகப் பெற்றவர். பிள்ளைகள் வெளிநாடுகளில்... இவர் இங்கு தனியாக...! ஆனால் சுதந்திரமாகப் 'பகிடி'க் கதைகளுடன் திரிகிறார்.

உயர்ந்த மெல்லிய தோற்றம், கைத்தடி இல்லாமல் 'நடன'மாடாவிட்டாலும் 'நட'மாடுவார். கண்ணாடி இல்லாமல் பத்திரிகைகள் படிப்பார். மேலுக்கு எதுவும் அணிவதில்லை. ஏதாவது விசேடம் என்றால் துவாலை அல்லது துண்டைப் போட்டுக் கொள்வார்.

அவர் கதைத்தால் கேட்டுக்கொண்டேயிருக்கலாம். அதிலே சுவையும் பொருளும் பொதிந்திருக்கும். அவர் ஓட்டப் போட்டிக்கு முன் - ஓட்டப் போட்டிக்குப் பின் (கி.மு. - கி.பி என்பதுபோல) என்று பேசிக் கொண்டது முதலில் எனக்குப் புரியவில்லை. 1995 இடப் பெயர்வைத்தான் அவர் அப்படிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லுகிறார் என்பது பின்னர்தான் விளங்கியது. அந்தோனி அந்த ஓட்டப் போட்டியில் பங்கு பற்றாமல் ஓடாமல் இங்கு தங்கியிருந்தவர்.

ஆலயப் பிரவேசம், தேநீர்க் கடைப் பிரவேசம் என்பது போல சலூன்கள் எல்லாருக்கும் பொதுவானது எவ்வாறு? அதற்கு 'அதுதான்' முன்னோடியாக இருந்ததாகச் சொல்லி, அதற்கு அவர் ஒரு கதையும் சொல்லுவார்.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் ஐரோப்பிய சமூகப் பிரமுகர்கள் சிலர் இலங்கைக்குப் பயணம் வந்திருந்தார்கள். அவர்கள் இங்கு - முக்கியமாகத் தமிழ்ப் பகுதிகளிலே தாடியும் சடையுமாகப் பலரை வீதிகளிலே கண்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் முனிவர்களா என்று விசாரித்திருக் கிறார்கள். அத்தகைய தோற்றங்களுக்குரியவர்களையும் சென்று விசாரித்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள், ''அப்படியல்ல பிரபுக்களே! எம்மைத் தாழ்ந்த வகுப்பினர் என முடி திருத்துபவர்கள் ஒதுக்கி வருகிறார்கள்; அதனால்தான் எமக்கு இந்த அலங்கோலம்'' என்றார்கள்.

அதற்கொரு முடிவு கட்டவேண்டும் என நினைத்தவர்கள் அடுத்த நாள்களிலேயே அதற்கான திட்டங்களையும் வகுத்துவிட்டனர். அதன்படி, சலூன்காரர்களையும் நடமாடும் முடிதிருத்துபவர்களையும் அணுகினர். எங்கள் நாட்டிலே நாம் புதிதாக ஒரு தொழிற்சாலை நிறுவியுள்ளோம். அதற்கு மூலப் பொருள் சிகை (மயிர்)தான். அதனைத் தொகையாகச் சேகரித்துத் தந்தால் நாமும் அதற்கு நல்ல விலை தந்து கொள்முதல் செய்வோம் என்றெல்லாம் ஆசைகாட்டினார்கள். மீண்டும் அதற்காக ஒரு குறிப்பிட்ட நாளில் வருவதாகச் சொன்னார்கள்.

என்ன ஆச்சரியம்! எங்கும் சிகை சேகரிக்கும் பணிகள் மும்முரமாக நடைபெறலாயிற்று. பழைய இரும்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுமினியம் சேகரிக்கும் வியாபாரிகள் போல இவைகளைச் சேகரிப்பதற்கென்றும் பல சப் ஏஜண்டுகளும் தோன்றலாயினர். சலூன்களும் ஏற்கனவே உள்ளவைகளை விட புதிதாகவும் பல தோன்றின. இந்தப் புதிசுகளுக்குச் சொந்தமானவர்களில் பலரும் முன்னர் நடமாடும் முடிதிருத்தகர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் இப்போதெல்லாம் வேறுபாடுகள் காட்டுவதில்லை. முனிவர்கள், ரிசிகளைக் கூட 'மயிர் வெட்ட வாறியளா? நீங்க மயிர் வெட்ட வாறியளா?' எனக் கேட்கும் அளவுக்குக் கீழிறங்கி வந்துவிட்டார்கள்.

இருந்தும் அந்த ஐரோப்பியக் குழுவினரை இவர்களால் திருப்திப்படுத்த முடியவில்லை (என்னவிருந்தாலும் அக் காலத்துப் பெண்களால் இவர்களின் கத்தரிக்கோல்களுக்குத் தலைகளைக் கொடுக்க முடியாதல்லவா?)

அவர்கள் இவர்களின் பொதிகளைப் பார்த்துவிட்டு 'இவைகள் எமது கப்பலின் கொள்கலன்களுக்குப் போதியதாக இல்லை. அடுத்த தடவை ரொம்பச் சேர்த்து வைக்கவேணும்' என்று சொல்லிவிட்டுப் போனார்கள். சேர்ந்தவைகளையும் பணம் கொடுத்து வாங்கிக் கொண்டு போய் நடுக்கடலில் கொட்டிவிட்டுப் போனார்களாம்.

அடுத்த முறையும் அவர்கள் கொள்முதலுக்காக இங்கு வந்தார்களா என்ற விவரம் நமது அந்தோனிக்கும் தெரியாது. ஆனால், அவர்கள் இங்கு மாபெரும் மாற்றம் ஒன்றைச் செய்து விட்டுப் போனார்கள் என்பதுதானே நமக்கு முக்கியம்.

மூலக்கதை இன்னார் என்றும் திரைக்கதை இவர்தான் என்றும் சொல்வது போல, அந்தோனியின் கதைக்கு நான் உருவம் கொடுத்திருக்கிறேன். கதையின் உண்மைத் தன்மைக்கும் அவர்தான் பொறுப்பு. இதிலே என்னுடைய வேலை எல்லாம் மறு ஒலிபரப்புத்தான்!

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சேலை கட்டிய மாது

சங்கானை பிளாக் வீதியைச் சேர்ந்தவர் திரு. தங்கவேலாயுதம் என்பவர். 'ரயில் சிநேகிதம்' என்பது போல இவர் எனக்கு வைத்திய சிகிச்சைச்சாலை (கிளினிக்) சிநேகிதர். அப்படித்தான் எமது நட்பு ஆரம்பமானது. யாழ் - போதனா வைத்திய சாலையில் எங்கள் 'கிளினிக்' கில் இவரைக் கண்டால் எனக்குப் 'பேரானந்தம்.' இவர் ஒரு தகவல் களஞ்சியம். டாக்டரின் தரிசனம் கிடைக்கும் வரை இவரோடு கதைத்துப் பொழுது போக்கிக் கொண்டிருக்கலாம்...

இந்த நண்பர் மற்றவர்களை விட ஒரு வித்தியாசமான பேர்வழி. அதனை அவரது 'கிளினிக்' கொப்பியைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். அநேகமாக எல்லோரும் எண்பது பக்க கொப்பியைத்தான் இதற்காகப் பாவிப்பார்கள். இவரோ ஐந்து கட்டு 'மொனிற்றர்' கொப்பி... அதுகூட விசேடமாகப் 'பைண்டு' செய்து முகப்பில் அச்சுப் பதித்தாற் போல் பெயர் விவரங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

'கிளினிக்' என்று 'ஏடு' (கிளினிக் கொப்பி) தொடங்கியவர்கள் யாராவது 'நோய் குணமாகிவிட்டது... இனி வைத்திய சாலைக்குப் போகவேண்டியதில்லை... ஏடு தேவையில்லை' என்று அதனை அப்பால் வைக்க முடிகிறதா? அவர் சிவகதியடையும் வரை அவருக்கு அந்த ஏடும் வாழ்க்கைத் துணைதான்! தங்கவேலாயுதத்துக்கும் அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை தெரிந்ததால் போலும் அவர் தமது கொப்பியில் அவ்வளவு கவனம் செலுத்திவருகிறார். என்ன இருந்தாலும் அவருக்குத் 'தங்க' மூளைதான்!

அவர் தமது மோட்டார்சைக்கிள் சவாரியின் போது எதிர் கொண்ட ஒரு வேதனையான அனுபவத்தை ஒரு 'கிளினிக்'கின்போது சொன்னார். அதைத்தான் நான் இப்பொழுது சொல்லுகிறேன்...

அன்று இவர் சித்தங்கேணிச் சந்தியில் திரும்பி சங்கானையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அச்சமயம் இவரது மோட்டார் சைக்கிளை முந்திக் கொண்டு இன்னொரு மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்தது. அதிலே பயணித்தவர்கள் இருவரும் பெண்கள். அதுவும் 'சேலை கட்டிய மாதர்'கள் இவரை முந்திவிட்ட வெற்றிக் களிப்பில் சென்று கொண்டிருந்தவர்களை இவர் கவனித்தார்...

அவர்களது ஓட்டமும் காற்று அவர்களது சேலைகளில் செய்கின்ற லீலையும் இவரைக் கவலை கொள்ள வைத்தது. அந்தச் சைக்கிளை நிறுத்தச் சொல்ல வேண்டும் என்பதற்காக 'கோர்ண்' மூலமாகவும் வேறு வழிகளிலும் 'சைகை' காட்டியவாறு இவரும் தமது சைக்கிளை வேகமாகச் செலுத்தினார். பின்வருவதை அவதானிக்கும் கண்ணாடியில் இதனைக் கவனித்த பெண்கள் 'இந்த நைன்ரியை முந்த விடுவதா' என்ற கௌரவப் பிரச்சினை மீதூர வாகனத்தை மேலும் விரைவாகச் செலுத்தினார்கள் ... இவரும் தான்.

ஏட்டிக்குப் போட்டியாக ஒன்றை ஒன்று முந்தும் முயற்சியிலான சைக்கிள் சவாரி சங்கானை வீதியில் நடந்து கொண்டிருந்தது. தமிழ்ப்பட உச்சக் கட்ட காட்சி போல...

கடைசியில்அந்த வீதியின் மதவடிப் பகுதியில் அந்த விபத்து நடந்தே விட்டது. அதிலிருந்து அவர்களைத் தடுத்தாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளும் இவரது முயற்சியும் பயனற்றுப் போய்விட்டது. இவர் அஞ்சியது போலவே அந்தச் சைக்கிளில் பின்னால் அமர்ந்திருந்த பெண்ணின் சேலைத் தலைப்பு பின் சில்லுக்குள் அகப்பட்டு அவளையும் விழுத்திவிட்டு சேலையின் ஒரு பகுதியையும் உள் வாங்கிக் கொண்டு விட்டது.

'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு' என்பது போல நல்ல வேளையாக அந்த விபத்து சேலையோடு நின்று விட்டது. சில உரசல் காயங்கள் மட்டுமே...

பெண்கள் இருவரும் விழிபிதுங்க இவரையே பரிதாபமாகப் பார்த்து நின்றனர். பின்னால் இருந்து வந்த பெண்ணோ உட் பாவாடையுடன் 'கையது கொண்டு மெய்யது பொத்தியவாறு....'

தங்கவேலாயுதம் அவர்களுக்குச் சொன்னார். 'இப்படி ஒரு ஆபத்து வரப்போகிறது என்றுதான் எச்சரிக்கை செய்தவாறு நான் உங்களைத் துரத்தி வந்தேன். நீங்கள் அதைப் புரிந்து கொள்ளாமல் நடந்து விட்டீர்கள்.'

இவரே மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் அகப்பட்டுச் சிதைந்து போன சேலைத் துண்டுகளை அகற்றி சைக்கிளையும் சரி செய்து கொடுத்தார். நல்ல வேளையாக விபத்து நடந்த அயலில் இவருக்குத் தெரிந்த ஒரு குடும்பம் இருந்திருக்கின்றது. அவர்களிடமிருந்து 'பாவாடை'க்காரிக்கு ஒரு பழைய சேலையும் வாங்கிக் கொடுத்து அவர்களை வழியனுப்பி வைத்திருக்கிறார்.

மற்றும்படி அவர்களை நோக்கி பெண்ணியல் வாதத்துக்கு எதிராக இவர் அங்கு சொற்பொழிவு எதுவும் நிகழ்த்தவில்லை.

'CHAIRMAN' என்ற ஆங்கிலச் சொல் பலவிடங்களில் நீக்கப்பட்டு 'CHAIR PERSON' என்ற சொல் வழக்குக்கு வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கிறது. கேட்டால் முன்னதில் ஆணாதிக்கம் வெளிப்படுகிறதாம். ஆண்களுக்குப் பெண்கள் எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்ற கருத்து எனக்கும் உடன்பாடுதான். ஆனால் எல்லா விதத்திலும் முந்த வேண்டும் என்பதிலுமா...?

என்ன இருந்தாலும் மோட்டார் சைக்கிள் என்பது பாருங்கோ ஒரு நவீன துச்சாதனன்தான்!

அவனுக்குச் சேலையைக் கண்டால்...?

அதனால் 'பெண் புரசு'கள் அவதானமாக இருக்க வேண்டும்.

எல்லா இடங்களிலும் எந்த நேரத்திலும் அவர்களின் மானத்தைக் காக்கும் (ஆபத்) பரந்தாமனாக 'தங்க வேலாயுதங்கள்' தோன்ற முடியாதல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதுக்கு வைத்தியம் பார்க்கின்ற...

யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவ சிகிச்சைப் பிரிவில் (கிளினிக்) எந்நாளுமே நெருக்கடிதான். ஹர்த்தால்கள், வேலை நிறுத்தங்கள் என்று வந்தால் இப்பிரிவுகளுக்கு மேலும் ஒரு பின்னடைவு. அதனையடுத்து வருகின்ற கிளினிக்குகளில் நோயாளர்களின் எண்ணிக்கையில் மேலும் ஓர் அதிகரிப்பு... (தொலைக்காட்சியில் படம் பார்க்கவென்று வந்து அங்கு மேலும் ஒரு நெருக்கடியை ஏற்படுத்துகின்ற அந்த எண்ணிக்கையைக் கழிக்குக.)

இந்தச் சிகிச்சைப் பிரிவில் அதிகரித்துவரும் எண்ணிக்கையை ஓரளவு குறைப்பதற்கு மானிப்பாய் லயன் செ. கேசவராஜன் சில காலத்துக்கு முன்னர் ஒரு கருத்தினை வெளியிட்டதாக நினைவு ... 'றிப்பீற் கிளினிக்' என்பதை இல்லாமற் செய்து நோயாளர்க்ளைப் பார்க்கும் கிளினிக்கிலேயே ஒரு மாதத்துக்குரிய மருந்துகளையும் கொடுத்து (கலைத்து) விடலாமே என்பதுதான் அவரது கருத்தாகும். நல்ல யோசனை.

ஒரு காலத்தில் இங்கு அப்படித்தானே நடந்தது?

இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கொழும்பிலே வாழ்ந்த காலத்திலே அங்குள்ள இருதய மருத்துவச் சிகிச்சை பிரிவுக்கு (Cardiology Clinic) சென்று வந்த அனுபவத்திலிருந்து சில குறிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளினிக் கொப்பிகளுக்குப் பதில் அங்கு இரண்டாக மடிக்கப்பட்ட கோவைகள் தான் (Files) பேணப்படுவதுண்டு. அதற்குள் வைத்திய சிகிச்சை விவரங்கள் எழுதுவதற்கான ஓர் அட்டையும், மருந்து விவரங்கள் எழுதுவதற்கான இன்னோர் அட்டையும் சொருகப்பட்டிருக்கும். ஆய்வுகூட அறிக்கைகளையும் அதற்குள் வைக்கலாம்.

இந்தக் கோவைகள் அந்த வைத்தியசாலையில் அதற்கெனவுள்ள அலுவல் அறையில் பேணப்படும். அந்தப் பிரிவில் சம்பந்தப்பட்டவரும் சிகிச்சை பெறுபவர் என்பதற்கான ஓர் அடையாள அட்டை மட்டுமே நோயாளியிடம் இருக்கும். அதனை அங்கு காட்டினாற் போதும். அப்பொழுதும் அவரது கையில் கோவை கொடுக்கப்படமாட்டாது. குறிப்பிட்ட பகுதிக்குப் போகும்படி சொல்வார்கள். கோவைகளும் ஒன்று சேர்க்கப்பட்டு அங்கு அனுப்பப்படும்.

அங்கே நோயாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வாங்குகளில் அமர்ந்திருப்பார்கள். பெயர் கூப்பிடப்பட்டு இவர் வைத்தியரை நெருங்கும் சமயத்திலேதான் இவரது கைக்குக் கோவை கிடைக்கும். அவருக்கு ஏதாவது 'விளங்கும்' என்றால் அந்தக் குறுகிய காலத்தில் அதைத் தட்டிப் பார்த்தால் சரி. வைத்தியர் நோயாளியைப் பார்த்ததும், மருந்து எழுதிய அந்த அட்டையை மட்டும் இவரிடம் கொடுப்பார். ஏதாவது விளங்கும் என்றால் கியூவில் நின்று மருந்து எடுக்கும்வரை மட்டும் அதையும் பார்த்து மகிழலாம். எனக்கும் கொஞ்சம் விளங்கும் என்பதால் தானே (டிக்க... டிக்கத் தண்ணுவ) இக்கட்டுரையை எழுதத் துணிந்தேன்.

அங்கும் ஒரு மாதத்துக்குரிய மருந்துகள் வழங்கப்படும். 'நீப்பீற் கிளினிக்' என்றெல்லாம் கிடையாது. வைத்திய சிகிச்சைப் பிரிவுகளிலே எங்குமே ஒரு நோயாளிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகச் சில மருந்துகளே தொடர்ந்து எழுதப் படும். மருந்து அட்டையிலே மேலே குறிப்பிட்ட அந்த மருந்துகளையே அன்றைய திகதியிட்டு 'திரும்பவும் எல்லாம்' (Repeat All) என்று அவர்கள் குறிப்பிடுவார்கள். நோயாளிக்குப் புதிதாக ஏதாவது 'கோளாறு' இருக்குமானால் மட்டும், அதற்குக் கீழே அதற்குரிய மருந்தினை எழுது வார்கள்...

கொழும்பு மார்புநோய் சிகிச்சைப் பிரிவில் அடுத்த கிளினிக் எப்போது என்றெல்லாம் திகதி குறிப்பிடப் படுவதில்லை. ஒரு மாதத்துக்குப் பின்னர் எப்போது வேண்டுமானாலும் போகலாம். ஏதாவது 'விக்கினம்' என்றால் இடையிலும் போகலாம் போலிருக்கிறது! மாதக்கணக்கில் நின்று விட்டுப் போனாலும் கூட கோவையைத் தேடி எடுத்து இத்தனையாம் அறைக்குப் போகும்படி சொல்வார்கள். பார்க்கின்ற வைத்தியர்களும் அதுபற்றி எதுவும் விசாரிக்க மாட்டார்கள்.

அங்கு பின்பற்றப்படும் இத்தகைய நடைமுறைகளில் ஒருவருக்கு அங்கு தொடர்ச்சியான கிளினிக் சிநேகிதர்கள் என்றெல்லாம் வாய்ப்பதில்லை. ஒரு முறை கண்ட ஒருவரை பின்னர் காணமுடியாமற் போனால் 'அவர் இல்லைப் போலிருக்கிறது' என்று நினைத்துக் கொள்ள வேண்டியதுதான்! (இரண்டு கருத்தில் சொல்லுகிறேன்!)

இந்த நடைமுறைகள் எல்லாம் கொழும்பு இருதய சிகிச்சைப் பிரிவுக்கு மட்டுமே பொருந்தும். அவர்களிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியதும் இருக்கிறது. நம்மிடமிருந்து அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டியதும் (?) இருக்கிறது என்பதற்காகவே இவ்வளவும் சொன்னேன்.

எப்படி இருக்கிறது எனது 'சமாளிப்பிக்கேசன்'?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வாறெனினும் இந்த வித்தியாசத்துக்கான காரணத்தை அறிந்துகொள்ள எமது பகுதி 'கிளினிக்' நோயாளர்கள் மிகவும் ஆசையாக மட்டுமின்றி அவசரமும் காட்டுவார்கள் என்பது எனது நம்பிக்கை.

இந்த இடத்திலே ஒருவர் என்னை இப்படிக் கேட்டார்:

''அடிக்கடி தலைதூக்குகின்ற சுகாதார ஊழியர்களின் 'சுகயீன' வீவுப் போராட்டம் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?'' ஒரு சினமாப் படத்திலே இப்படி ஒரு வசனம் பேசப்பட்டதாக எனக்கு ஞாபகம்.

'பைத்தியத்துக்கு வைத்தியம் பார்க்கின்ற வைத்தியருக்குப் பைத்தியம் பிடித்தால்...'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இதுவுமொரு 'மச்ச' விவகாரம்தான்

*மா*னிப்பாய் இந்துக் கல்லூரியில் எமக்குத் தமிழ் - சமயம் கற்பித்த ஆசிரியர்களில் ஒருவர் திரு. சு. இராஜநாயகம் அவர்கள்; அமரராகிவிட்டார். தமிழ், சமயம் இரண்டிலுமே ஆழ்ந்த புலமை மிக்கவர். சுவையான எடுத்துக்காட்டுக்கள் , கதைகள், சம்பவங்களைத் தமது கற்பித்தலின் ஊடாகச் சொல்வார். அவர் சில வேளைகளில் சில பக்திப் பழங்களின் பகல் வேடத்தை இப்படித் தோலுரித்துக் காட்டுவார்.

*அ*வர் நீராடிவிட்டு நித்திய வழிபாட்டுக்காக ஆசார சீலராக சுவாமிப் படத்துக்கு முன்னே அமர்ந்து கொள்கின்றார். திருநீற்றைக் குழைத்து மந்திரங்களை ஓதியவாறு குறியிடுவதற்கு ஆயத்தமாகிறார். வழிபாட்டுக்குப் பின்னர் 'வயிற்றுப்பூசை'யல்லவா? அந்த நினைப்பு இடையில் வந்துவிடுகின்றது...

சமையலறையில் அலுவலாக இருந்த மனையாளுக்குக் கேட்கக்கூடியதாக ''என்னப்பா எல்லாம் ஆச்சுதா?'' (மந்திரம் ஓதப்படுகிறது)

பதில்: ஓம்..ஓம்..

அவர்: ஓம்... சிவாய நம... (மந்திரம் ஓதப்படுகிறது; அடுத்த குறியை இட்டுக் கொள்கிறார்.) 'என்ன பண்ணியிருக் கிறாய்?' (மந்திரம் ஓதப்படுகின்றது; அடுத்த குறி இட்டுக் கொள்கிறார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்: (அன்றைய உணவு விவரம் ஒப்புவிக்கப் படுகின்றது.)

அவர்: தினமும் அதுதானா? (மந்திரம்... குறி)

அன்றைய சமையலில் மச்சக் கறி எதுவும் இடம்பெறாதது குறித்துக் கழிவிரக்கப்படுகிறார். அதற்காக மனைவி மீது வேறு அர்ச்சனை..!

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்'' என்ற வள்ளுவம் இந்துக்கள் சிலருக்கே எவ்வளவு ஒவ்வாமைக்குரியதாகவுள்ளது என்பதை விளக்கவே அவர் இதனைச் சொல்லுவார்.

அப்பொழுதெல்லாம் (இப்பொழுது என்று சொன்னால் எனக்குப் பிரச்சினை) பெரிய கோவில் உற்சவங்கள் முடிந்த கையோடு வேறு ஏதாவது கோவில்களில் வேள்விகள் நடப்பதுண்டு. அப்படி இல்லாவிட்டால் யாராவது ஒரு பிரமுகர் வீட்டுக் கோடியில் 'மினி' வேள்வி ஒன்று நடக்கும். அது பற்றிய 'பங்குப்' பரிவர்த்தனை 'அமைதிப்பேச்சு'கள் குறிப்பிட்ட கோயில் தேர், தீர்த்தக் காலத்திலே, கோவில் வீதியிலே - மடத்திலேயேகூட நடப்பதுண்டு.

எம்மவர்கள் மத்தியிலே மரக்கறி வகைகளை 'தீயகறி' என்று சொல்வதுண்டல்லவா? உற்சவ காலத்திலே 'தீயமையாக் கறி' (மரக்கறிக்கு அப்படியும் ஒரு பெயராம்) வகைகளோடு நின்றவர்களுக்கு அதை ஈடுசெய்வதற்கு உண்மையான 'மையாக் கறி' (ஆட்டுக்கறி) சாப்பிட்டால் தானாம் 'பொச்சம்' தீரும் போலிருக்கிறது. விரதத்தின் மகத்துவம் - அதன் பயன்கள் இதனால் பாதிக்கப்படலாம் என்பதை அவர்கள் எண்ணுவதில்லை.

இக்காலத்தில் சில திருவிழாக்களிலும் இப்படியான தோர் ஆபாசம் வேறு உருவில் புகுந்து விடுகிறது; அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுத்தப்பட்டுவிடுகின்றது. எல்லாத் திருவிழாக்களையும் ஓரளவுக்காவது ஒழுங்காகவும் ஆசாரத்துடனும் நடத்தி வந்தவர்கள், அது கடைசிதானே என்றோ என்னவோ பூங்காவனத் திருவிழாவை ஏனோதானோ என்று நடத்தி விடுகிறார்கள் அல்லது நடத்த விட்டு விடுகிறார்கள். இன்னும் கேட்டால் ''கொடி ஏற்றி இறக்கியாச்சுத்தானே'' என்ற அலட்சிய மனோபாவம் வேறு!

இன்னொரு காரணமும் சொல்லப்படுவதுண்டு. 'அதெல்லாம் இளைஞர்கள் நடத்துகின்ற விழா அல்லது வெளிநாட்டு இளைஞர்கள் அனுப்புகின்ற பணத்தைக் கொண்டு நடத்தப்படுகின்ற விழா.'

அதை நிர்வாகமோ பெரியவர்களோ தட்டிக்கேட்க முடியாது. தட்டிக்கேட்கும் துணிவும் அவர்களுக்குக் கிடையாதே ! அப்படிக் கேட்க வெளிக்கிட்டு சில இடங்களில் 'பிரச்சினை'கள் வளர்ந்துள்ளதாகவும் தெரியவருகின்றது. இனித் திருவிழாவை இவர்கள் எப்படி மச்சமாக்குகிறார்கள் என்பதற்கு ஒரு சிறு எடுத்துக்காட்டு...

விழாவிற்கு மாசு கற்பிக்கும் வகையில் முதற்படியாக தேவைக்கு அதிகமான ஒலி பெருக்கிகளைத் தேவையற்ற இடங்களில் எல்லாம் கட்டிக் களியாட்டம் ஆடுகிறார்கள். 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பது போல இந்த ஒலிபெருக்கிகளுக்குப் பின்னால் 'கரும்புத் தோட்டத்திலே யானை புகுந்தாற்போல' கோவில் சூழலிலே ஒலிக்கக்கூடாத 'இசைகளும் ராகங்களும்' புகுந்து விடிய விடிய ஆடாத ஆட்டங்கள் எல்லாம் நடந்துவிடுகின்றன.

அண்மையில் எனக்குத் தெரிந்த ஒரு கிராமத்துச் சிறிய கோவில் பூங்காவனத்தின்போது மூன்று கூட்டம் ஒலிபெருக்கிக்காரர்களைப் பிடித்து அறுபது ஒலிபெருக்கிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டப்பட்டதாகப் பெருமையாகச் சொல்லப்பட்டது! அப்படி யானால் அந்தக் கிராமத்து மக்களின் இயல்பு வாழ்க்கை? மதுரைக்கு வந்த சோதனையைவிட பெரியதாகத்தான் இருந்திருக்கும். இதைவிட அக்கிராமத்தின் மீது ஒரு குண்டு விழுந்தால்கூட அதன் பாதிப்புக் குறைவாகத்தான் இருக்கும்...

இந்த 'மச்ச' மயத்துக்கும் கலாசாரச் சீரழிவுக்கும் இளைஞர்கள்தான் காரணம் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சமய அறிவு மிக்கவர்கள், கோவில்களில் ஆசாரம் பேணப்பட வேண்டும் - அங்கு ஒழுங்கும், ஒழுக்கமும் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பவர்களும் அவர்கள்தானே? ஆனால், சில இடங்களில் அத்தகையவர்கள் கரங்கள் தாழ்ந்தும் ஏனையவர்களின் கைகள் ஓங்கியும் இருக்கலாம். அத்தகைய சில இடங்களிலுள்ள சில கோவில்களில்தான் நான் மேலே சொன்ன 'மச்ச' விவகாரங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நேற்றுக் கேட்டிருக்கலாமே...

முன்பெல்லாம் சில கடைகளிலே 'இன்று கடன் இல்லை' என்று எழுதியிருப்பார்கள். அதாவது இன்றைக்கு கடன் கேட்காதீர்கள். வேண்டுமானால் நாளைக்குக் கேட்டுப் பாருங்கள்(!) என்பது கருத்து. வேறு சிலர் இன்னும் விளக்கமாக 'இன்று ரொக்கம் நாளை கடன்' என்று எழுதியிருப்பார்கள். இதிலேயும் நாளை கடன் கேட்கலாம்(?) என்ற கருத்துத் தொனிக்கிறது. ஆனால் நாளையும் அந்த அறிவித்தல்கள் அங்கெல்லாம் அப்படியேதானே இருக்கப் போகின்றன? இது 'திருநாளை'க் கதை என்றால் நான் இப்பொழுது சொல்லப்போவது 'திருநேற்று'க் கதை...

நாங்கள் கொட்டாஞ்சேனையிலும் சரி மட்டக்குளியிலும் சரி வாழ்ந்த காலத்திலே அந்த நண்பரும் எங்களுக்குப் பக்கத்திலேயே இருந்தவர். இவரும் இவரது குடும்பத்தினரும் ஏற்கனவே யாழ்ப்பாணத்திலும் எமக்கு அறிமுகமானவர்கள் தாம். அவரது குழந்தையுள்ளம் காரணமாகவோ என்னவோ அவர் 'பவா' என்றுதான் அழைக்கப்பட்டார். அவரும் அவரைச் சேர்ந்தவர்களும் இப்பொழுது வெளிநாடுகளில் வாழ்கிறார்கள்.

சும்மா சொல்லக்கூடாது நாங்கள் ஒருவருக்கு ஒருவர் நல்ல உதவி. எமக்கு மட்டுமல்ல எம்மவர் பலருக்கும் அவர் உத்தியோகப்பற்றற்ற இலவச சமகால சிங்கள - தமிழ் மொழி பெயர்ப்பாளராகவும் பணிபுரிந்தவர். அதனால் 'பவா'வைத் தேடிப் பலரும் வருவார்கள். அவரிடம் ஒரு நல்ல பண்பாடு இருந்தது. அவர் எதற்குமே 'இல்லை - முடியாது' என்றெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லமாட்டார். ஆக, முடியாது என்றால் மட்டுமே 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று காமராசர் பாணியில் சொல்லுவார்.

எவருக்காவது பணத்தேவை ஏற்பட்டு அவரை அணுகினால் ''ச்சா...நேற்று கேட்டிருக்கலாமே!'' என்று சொல்லி முதல் நாள் தான் எவ்வளவு வசதியுடன் இருந்தார் என்பதைச் சொல்லி உதவி கேட்டுவந்தவரின் துர்அதிர்ஷ்டத் துக்காகக் கழிவிரக்கப்படுவார். இப்படிப் பல சம்பவங்கள்... எனக்கும் அப்படி ஒரு தேவை ஏற்பட்டு ஒரு சமயம் அவரை நாடவேண்டி வந்து விட்டது. நான் கொஞ்சம் 'புத்திசாலி' என்பதால் மிகுந்த எச்சரிக்கை உணர்வுடனும் தயாரிப்புடனும் தான் கதையை விட்டேன்.

'நீங்களுமா இப்படி? பக்கத்திலே இருந்து கொண்டும்... நேற்றுக் கேட்டிருக்கலாமே' என்று தட்டிக் கழிப்பதற்கு நண்பருக்கு இடம் கொடுக்காமல் நானே அவருக்கு கொழுக்கி போட்டு இழுத்து மாட்டும் திட்டத்துடன்தான் அவரிடம் பேச்சுக் கொடுத்தேன்...

''எனக்கொரு பத்துத் தேவைப்படுகிறது. அதுவும் இன்றைக்கு அல்ல, நாளைக்குத்தான் தேவை. நாளைக்குக் கேட்டால் 'என்ன சண், நீருமா இப்படி... நேற்றுக் கேட்டிருக்கலாமே' என்பீர். அதனால்தான் முன்கூட்டியே இன்றைக்கு முன்னறிவித்தல் தந்திருக்கிறேன். மீண்டும் சொல்லுகிறேன். எனக்கு நாளைக்குத்தான் தேவை, இன்றைக்கு முன்னறிவித்தல். சரிதானே!''

நண்பர் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். நான் அவரை 'சிக்'கெனப் பிடித்து விட்டேன் அல்லவா? அதிலிருந்து அவர் இனித் தப்ப முடியாதல்லவா? பாவம் அவர்... ஆனால்... ஆனால்... அவர் மாறவில்லை நிதானமாகத்தான் எனக்குப் பதில் சொன்னார். ''நேற்றுக் கேட்டிருக்கலாமே!''

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நேற்று வந்திருக்கலாமே...

அப்படி ஒரு பிரசுரம் அப்போதெல்லாம் உங்களுக்கும் ஒன்றாவது கிடைத்திருக்கும். திருப்பதி வெங்கடாசலபதி அல்லது வேறு கடவுளர்களின் பெயரால் 'அதிசயம் ஆனால் உண்மை' - 'அற்புதம்' என்பன போன்ற தலைப்புகளில் அவை எழுதப்பட்டிருக்கும்.

உங்களுக்குத் தெரிந்தவர் அல்லது உங்களது பெயர் முகவரிகளை வேறு வழியில் பெற்ற எவராவது தம்மை யார் என்று காட்டிக்கொள்ளாமல் அநாமதேயக் கடிதமாக அதனை அனுப்பியிருப்பார்.

அதிலே குறிப்பிட்ட தெய்வமானது ஒருவரது கனவில் தோன்றியே அந்த நோட்டீஸ் ஆசையை வெளியிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கும். அத்துடன் அதுபோல நீங்களும் ஒரு தொகைப் பிரதிகள் எடுத்து (உங்களுக்கு அதனை அனுப்பியவர் உங்களை எவ்வளவு தூரம் பழிவாங்க நினைக்கிறாரோ அத்தனை பிரதிகள் என்றும் வைத்துக் கொள்ளலாம்) அவைகளை உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்கப்பட்டிருக்கும்.

அதெல்லாம் ஆண்டவனின் கட்டளை என்பது போலவும் அதனை அலட்சியம் செய்பவர்கள் பாதிக்கப் படுவார்கள் என்றும் அப்படிப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மதித்துப் போற்றிப் பெருமையும் புகழும் பெற்றவர்கள் என்பதற்கும் ஒரு பட்டியல் அதிலே தரப்பட்டிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதெல்லாம்கூட விசாரித்து அறிந்து கொள்ள முடியா விட்டாலும் நம்பக்கூடியது போலவே இருக்கும்.

ஒருவருக்கு இப்படி ஒரு பிரசுரம் கிடைத்தால் அவர் பாடு அதோ கதிதான். இருபத்தைந்து பிரதிகள் பண்ணி அனுப்பும்படி கேட்கப்பட்டிருந்தால், இருபத்தைந்து தாள்கள், இருபத்தைந்து சோடி கடித உறைகள் - முத்திரைகள் எல்லாம் சேகரித்துக் கொண்டு கடிதம் வரைய உட்கார வேண்டியதுதான். இனவாதிகள் வாக்காளர் இடாப்பு, தொலைபேசி விவரக் கொத்துக்களிலிருந்து தமிழர்களின் இருப்பிடங்களை அறிந்து தாக்குவதுபோல இவர்களும் அப்படி எதையாவது பார்த்துத் தாக்குதல் மேற்கொள்வதுமுண்டு. என்ன செய்வது புண்ணியம்தான் கிடைக்காவிட்டாலும் பாவம் பிடித்து விடக்கூடாது என்ற பயம்தான்.

அப்படியான கடிதம் கிடைத்து அதனைத் தபால் வெடிகுண்டு போல நினைத்துப் பதறுபவர்களும் உண்டு... 'படிக்காதே... கிழித்தெறி' என்று துடித்துப் போவார்கள். காரணம் அதன் பின் விளைவுதான்.

கடிதச்சுற்று வட்டமாகப் பரவிவந்த இந்த முறை பின்னர் அச்சுப் பிரசுர முறைக்குத் தாவியது. அதற்குப் 'பிள்ளையார் சுழி' வைத்துக் கொடுத்த பெருமை அச்சுக்கூடக்காரராகத்தான் இருக்கவேண்டும். அதே கடித விவரம் துண்டுப் பிரசுரமாக அச்சிடப்பட்டு வெளியிட்டவரின் பெயர் விலாசத்துடன் அச்சகத்தின் பெயரும் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும். அப்பிரசுரங்களைத் தபாலில்தான் அனுப்ப வேண்டு மென்பதில்லை. நோட்டீஸாக விநியோகிப்பவர்களுமுண்டு. இதனைக் கண்டும் ஓடி ஒழிபவர்கள் உண்டு. காரணம் அதே பின்விளைவுதான்...

துண்டுப் பிரசுரம் பெற்ற பயந்தாங்கொள்ளி ஒருவர் அச்சகத்துக்குச் சென்று இதுபோல நூறோ இருநூறோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிடவேண்டும் எனக் கேட்கிறார் என வைத்துக் கொள்வோம். அச்சக முதலாளி சிந்தனை வயப்பட்டவராக 'ச்சா... நீங்கள் நேற்று வந்திருக்கலாமே... நேற்றுத்தானே மாற்றரைக்கலைத்தோம்' என்று வந்தவருக்காக மனம் வருந்துவார். ஆனால் உள்ளே ஏற்கனவே தயாரித்த 'மாற்றர்' அப்படியேதான் இருக்கும். அவரும் அப்படியான ஓடர்களை எதிர் பாத்திருந்தவர்தானே! பின்னர் வந்தவருக்காக மனமிரங்கி தாள்களின் செலவு - அடிகூலியுடன் அச்சுக் கோர்த்த செலவையும் சேர்த்து வசூலிப்பார். 'மாற்றரில்' அவர்கள் செய்ததெல்லாம் பெயர் விலாச மாற்றங்களே...!

அந்த அதிசயம் - அற்புதம் - பிரசுர விவகாரம் இப்பொழுது இங்கு மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. கதிர்காமத்திலே நடந்த அதிசயம் - வேளாங்கன்னி மாதாவின் அற்புதங்கள் போன்ற சில பிரசுரங்கள் என் பார்வைக்கும் எட்டியுள்ளன. இது கொம்பியூட்டர் காலமல்லவா? அதனால் அந்த அச்சிலே தற்போதைய பிரசுரங்கள் வெளிவருகின்றன.

'யானைப்பசிக்கு சோளப்பொரி' என்பது போலன்றி அதற்கு அதிக வேலை கொடுக்க வேண்டுமல்லவா? பிரசுரத்தின் அடியில் பெயர் முகவரிக்குப் பதில் பக்தன் - அன்பன் என்றிருக்கும். 'ஓப்-செற் பிறின்டர்ஸ்' என்று அந்த விவரமும் தரப்பட்டிருக்கும். (சில வேளை இதற்கும் பிள்ளையார் சுழி வைத்த பெருமை இவர்களாகத்தான் இருக்குமோ என்னவோ?...)

எல்லாம் சரி இந்த அதிசயம் - அற்புதம் பிரசுரங்களைப் பெற்றுப் படித்தும் அதன்படி நடந்துகொள்ளாத எனக்கு என்ன நேரும் என்பதுதானே உங்கள் கவலை? அடுத்த கட்டுரை எழுதுவதற்கு இவர் இருக்க மாட்டார் என்று உங்களில் சிலர் முணுமுணுப்பது கூட எனக்குக் கேட்கிறது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மிகினும் குறையினும் நோய் செய்யும்

ஒரு சமயம் கொழும்பு நகருக்குத் தண்ணீர் வழங்கும் நீர்த்தாங்கிக்குள் நஞ்சு கலக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி பரவியது. பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் இரவிரவாகப் பறந்து திரிந்து குழாய் நீரை அடுத்த அறிவித்தல்வரை யாரும் பாவிக்கவேண்டாம் என அறிவித்துக் கொண்டிருந்தனர். தமிழர்கள் நெருங்கி வாழும் பகுதிகளுக்கு அவ்வறிவித்தல் அவ்வளவு தூரம் சென்றடையவில்லை. (அவர்களின் ஆள்கள்தானே அதனைச் செய்திருப்பார்கள். அதனால் அனுபவிக்கட்டும் என்ற அலட்சியம் போலும்)

விடிந்ததும், அதெல்லாம் அநாமதேயத் தொலைபேசி மிரட்டலைத் தொடர்ந்து ஏற்பட்ட வதந்தி என்பது உறுதிப்படுத்தப்பட்டதாகப் புதிய தகவல் வெளியாகியது.

என்னவோ எழுதவென்று வந்து எங்கேயோ போய்விட்டேன் போலிருக்கின்றது.

அந்த ஊரின் நிலத்தடி நீரானது பெரும்பாலும் உவர்த்தன்மை பெற்று விட்டதால் அப்பகுதிகளுக்குக் குடி தண்ணீர் வழங்கும் பெரும் பணியினை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டு வருகிறது. இதற்கென இங்கு பெரியதொரு நீர்த்தாங்கி அமைக்கப்பட்டிருக்கிறது. சற்றுத் தூரத்திலுள்ள நல்ல தண்ணீர்க் கிணற்றிலிருந்து அதற்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டு, குழாய்களின் மூலமாக மக்களுக்கு வழங்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தண்ணீர்த் தாங்கி அமைவிடத்திற்கு முன்னே அறிவித்தல் ஒன்று நடப்பட்டு அந்த அறிவித்தலில் தமிழ் கொலை செய்யப்பட்டிருந்தது. அதனை 'உதயன்' சில வாரங்களுக்கு முன்னர் 'படம் போட்டு' வெளிக்காட்டியது. என்ன ஆச்சரியம், அந்த பட விளக்கம் வெளியான அடுத்தடுத்த நாட்களிலேயே அப்பிழை திருத்தப்பட்டு அந்த அறிவித்தல் இப்பொழுது புதுப்பொலிவுடன் திகழ்கின்றது. இதற்காக உதயனுக்கு மட்டுமல்ல குறித்த நீர் வழங்கல் சபையினருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியினையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அதற்குப் பக்கத்திலே ஒரு முன்பள்ளியும் இயங்கி வருகிறது. அந்தப் பள்ளிப் பிள்ளைகள் அதனைப் பார்த்துத் 'தமிழ் படிக்க' வெளிக்கிடமுன்னர் அவர்களைத் தடுத்தாட்கொண்டமை காலத்தினாற் செய்த உதவி என்பேன்.

தவறைத் திருத்திப் புதிதாக அதனை மாட்டும்போது 'சம்பந்தப்பட்டவர்கள்' பத்திரிகைக்குச் செய்தி கொடுக்கு முன்னர் அதனைத் தங்களிடம் சொல்லியிருக்கலாமே என முணுமுணுத்துக் கொண்டார்களாம். அப்படியானால் பத்திரிகை சுட்டிக்காட்டிய பின்னர்தான், பாவம் அவர்களுக்கும் அத்தவறு தெரிந்ததோ?

சரி, அதுதான் போகட்டும், அப்படியானால் மக்கள் சொல்லி வருகின்ற இன்னொரு குறைபாட்டை இவர்கள் கவனிப்பதாக இல்லையே! அது பற்றிச் சொல்லட்டுமா?

குடி தண்ணீரில் அளவுக்கதிகமான குளோரினைக் கலந்து விடுகின்ற விவகாரம்தான் அது. இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அப்பொழுதும் நான் இதே பத்திரிகையில் இப்படியானதொரு பத்தியினை எழுதி வந்தேன். அச்சமயம் "...நீர் வழங்கல் சபையினர் சில சமயம் செய்வது போல குடிதண்ணீருக்குள் அளவுக்கு அதிகமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளோரினைக் கலந்து விடக் கூடாது'' என்று வேறெதற்கோ அதனை ஓர் எடுத்துக் காட்டாகச் சொல்லியிருந்தேன். அதற்கே, அதற்கடுத்து நீண்ட காலமாக அவர்கள் 'நல்ல பிள்ளை'களாக நடந்து கொண்டார்கள். இப்பொழுது மீண்டும் அதே கதை தொடருகிறது போலிருக்கிறது. (இந்தக் கிறுக்கன் மீண்டும் கிறுக்க வந்து விட்டானே).

இதனை எழுதிக் கொண்டிருக்கும் காலத்தில் மிக அதிகமாக - பாவனையாளர்கள் தமது முகங்களைச் சுழிக்கும் அளவுக்குத் தண்ணீரில் குளோரின் கலந்திருப்பது தெரிகிறது. தண்ணீர், தேநீரில் மட்டுமல்ல அதனைக் கொண்டு தயாரிக்கப்படும் பிட்டு, இடியப்பங்களிலே கூட அந்த மணத்தை உணர முடிகிறது. இப்படியே போனால் நாம் யாரை யாவது ''லஞ்சுக்கு வாறியளா?'' என்று கேட்டால் அவர்கள் ''உங்களது உணவில் அது மணக்குமே'' என்று மறுத்துவிடக் கூடும்!.

அதுபற்றி அதற்குரியவர்களிடம் கேட்டால் ''உங்களுக்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதற்காகத்தான் அப்படிச் செய்கிறோம். நாங்கள் ஒன்றும் விகிதாசாரத்துக்கு மேல் போடவில்லை'' என்கிறார்கள்.

எங்களுக்கு அந்த விகிதாசாரம் போன்ற அறிவியல் நுணுக்கங்களெல்லாம் தெரியாவிட்டாலும் ''நல்ல தண்ணீருக்கு நிறமும் இல்லை மணமும் இல்லை'' என்றெல்லாம் படித்த நினைவுகள் இருக்கின்றன. இப்பொழுதும் இங்குள்ள மக்கள் வேண்டுவதும் அதைத்தான். அவர்கள் ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொண்டு, ஆயுளை வேண்டுமானாலும் குறைத்துக் கொள்ளச் சித்தமாகவிருக்கிறார்கள். ஆனால், இறுதிவரை நல்ல தண்ணீர் குடித்துச் சாகவேண்டும் என்பதுவே அவர்களது வேணவா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் இந்த அறிவியல் நுணுக்கங்களெல்லாம் தெரியாதுதான் (நாங்கள் அந்தக் கொப்பிகளுக்கு நடுவே குமுதம், கல்கண்டு, வைத்துப் படித்தவர்கள்) ஆனால், இலக்கியம் ஓரளவு தெரியும் 'மருந்து' அதிகாரத்திலே திருவள்ளுவர் இப்படிச் சொல்லுகிறார்.

''மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று''

'மருத்துவ நூலோர் குறிப்பிடும் மூன்றும் அளவுக்கு மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்' என்பது இதன் கருத்து.

அந்த மூன்றும் என்ன என்பதில் உரைகாரர்களிடையே கருத்து முரண்பாடு இருந்தாலும், அதில் ஒன்றாக இல்லாவிட்டாலும், அது போன்ற ஒன்றாக இந்த தண்ணீரில் குளோரின் கலக்கும் விவகாரத்தையும் எடுத்துக் கொள்ளலாம் போலிருக்கிறதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாண்டியன் (நாவலர்) நெடுஞ்செழியன்

ஒரு காலத்தில் கண்ணகி பாத்திரமேற்று நடித்துப் புகழ்பெற்றவர் பழம்பெரும் நடிகை பி. கண்ணாம்பா. அதனால் கண்ணகி என்றதும் கண்ணாம்பாவையே நினைத்துக் கொள்வார்கள். இப்படி மேலும் பல நடிக நடிகைகள் அவர்கள் ஏற்று நடித்த பாத்திரங்களாகவே மாறியிருக்கிறார்கள்.

எஸ்.எஸ்.இராசேந்திரன் இலட்சிய நடிகர் என அழைக்கப்பட்டவர். அவரது மனைவி விஜயகுமாரியையும் சேர்த்து இலட்சிய நடிக தம்பதியினர் என இவர்கள் அழைக்கப்பட்டனர்.

கலைஞர் மு. கருணாநிதி திரைக்கதை வசனம் எழுதிய 'பூம்புகார்' படத்திலே இவர்களே கோவலன் - கண்ணகி. விஜயகுமார்ரி என்றதும் கண்ணகியை நினைவு கொள்ளும் அளவுக்கு அவரும் அப்படத்தின் மூலம் புகழ்பெற்றவர். அப்படம் வெளிவந்த காலத்திலே கசிந்த சில சங்கதிகளும் நினைவுக்கு வருகின்றன.

காப்பியத்திலே சிலம்பு திருடிய கள்வன் பொற்கொல்லனே! இதனைப் படத்திலே காட்டித் தமது (தேர்தல்) 'வாக்கு' வங்கி பாதிக்கப்ப்டுவதை விரும்பாத கலைஞர் அதனை அரண்மனைக் காவலர்களே செய்ததாகக் கதையிலே தமது 'கை' வண்ணத்தைக் காட்டியிருக்கிறார்...

படத்தின் விறுவிறுப்புக்கு கண்ணகி பாண்டியன் நெடுஞ்செழிய்னிடம் நீதி கேட்டு வழக்காடும் கட்டத்தைக் குறிப்பிடலாம். குறிப்பிட்ட காட்சியில் விஜயகுமாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞரின் கனல் தெறிக்கும் வசனத்தைப் பேசியே கண்ணகியை (தம்மை) மறக்கமுடியாத பாத்திரமாக்கி விட்டார். அக்காலத்திலே கலைஞருக்கும் நாவலர் நெடுஞ்செழியனுக்கும் இடையே கழகத்திற்குள் உட்பூசல் நிலவியதாகத் தகவல். அதனை கலைஞர் மனதிலே வைத்துக் கொண்டே பாண்டியனைச் சாடும் போக்கில் நாவலரையும் 'கவனித்து'க் கொண்டதாக அப்போது 'கதை' அடிபட்டது.

என்ன இருந்தாலும் 'பூம்புகார்' ஒரு வெற்றிப் படம்தான். கலைஞருக்கு மட்டுமல்ல விஜயகுமாரிக்கும் தான். அதிலே கவுந்தியடிகளாக நடித்த கே.பி.சுந்தராம் பாளுக்கும் பாத்திரப் பொருத்தம் நன்றாக அமைந்துவிட்டது. அவர் ஏற்கனவே 'ஔவையார்' படத்தில் நடித்தும் மக்கள் மனதில் ஔவையாராகவே நிலைத்துவிட்டவர்.

1968 வாக்கிலே 'பூம்புகார்' யாழ்ப்பாணத்திலேயும் வெற்றிகரமாக ஓடியது. அச்சமயமே சென்னையில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலம் - தொடக்க விழா விவரணப்படமும் வெளியாகியிருந்தது. கலைஞர் மு.கவின் உரை விளக்கத்துடனான இக்குறும் படமும் 'பூம்புகார்' ஓடிய திரையரங்கிலேதான் இடை வேளையின்போது காண்பிக்கப்பட்டது. கலைஞரின் கவிதை நடைத் தமிழைக் கேட்பதற்காகவும் பூம்புகாரை மீண்டும் மீண்டும் மக்கள் பார்த்தனர். அதிலேயும் கலைஞர் தொடக்கத்திலே தோன்றி முன்னுரை வழங்கியது குறிப்பிடத் தக்கது. இப்படியாகத்தானே பூம்புகாரும் கண்ணகியும் (விஜயகுமாரி) மக்கள் மனதிலே நிறைந்து விட்டது.

படத்தின் மூலம் விஜயகுமாரிக்குக் கிடைத்த பெருமையளவுக்கு எஸ்.எஸ்.ஆருக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். அந்தக் குறையினை ஈடு செய்யும் வகையிலே அவர் பின்னர் ஒரு சாதனை செய்தார். சிலப்பதிகார கதையை 'கண்ணகி கதை' என்ற பெயரில் வில்லுப் பாட்டாக அமைத்தார். அதிலே அவர் பாட்டுடைத் தலைவனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றில்லாமல் தாமே வில்லடித்துக் கதை சொல்பவராகத் தோன்றினார். அந்த வில்லிசையானது தமிழ் நாட்டிலே மட்டுமின்றி தமிழர் வாழும் இடங்களெல்லாம் கலைப் பயணம் செய்தது. அதன்மூலம் எஸ்.எஸ்.ஆரும் சிறந்த வில்லிசைக் கலைஞராக வலம் வந்தார். யாழ் - முற்றவெளி மைதானத்திலே மாபெரும் மக்கள் மத்தியிலே அந்நிகழ் வினைக் கண்டு மகிழும் வாய்ப்பு எனக்கும் கிடைத்தது. அதிலே கூட கண்ணகி என்றால் அது விஜயகுமாரிதான் என்ற கணிப்பு அழுத்தம் பெற்றது.

எஸ்.எஸ்.ஆர் கணீர் என்ற தமது குரலில் கண்ணகி கதையினைச் சொல்லிக் கொண்டிருந்தார். ...கண்ணகி பாண்டியனிடம் நீதி கேட்டு வழக்காடும் கட்டம்... அச்சமயம் பிரமுகர்கள் வரிசையில் அமர்ந்திருந்த விஜயகுமாரிக்கு எஸ்.எஸ்.ஆர் 'கண்' சாடை காட்டுகிறார். அவரும் மேடைக்கு வந்து அவருக்கு அருகே அமர்கிறார். அடுத்து அவருக்கேயுரிய உணர்ச்சி பாவத்துடன் கலைஞரின் கனல் தெறிக்கும் அந்த 'பூம்புகார்' வசனங்களைப் பொழிந்து தள்ளுகிறார்... இரசிகர்களின் அமோகமான பாராட்டுக்களையும் பெறுகிறார்...

இன்னொரு தகவல் - ஒரு நவராத்திரி விழாத் தொடக்க நாள் - அப்பொழுது கொழும்பிலிருந்து வந்துகொண்டிருந்த தமிழ் வாரப் பத்திரிகை ஒன்று அதையொட்டி முன்பக்க முகப்புச் சித்திரமாக அதை வெளியிட்டிருந்தது. இது 'சரஸ்வதி சபதம்' திரைப்படத்தில் இடம் பெற்ற ஒரு கண்கொள்ளாக் காட்சி அத்னைப் பார்த்தவர்கள்.

கல்விக்கு அரசியான சரஸ்வதி என்றால் அது சாவித்திரி -

செல்வத்துக்கு அரசியான இலக்குமி என்றால் அது கே.ஆர் விஜயா -

வீரத்துக்கு அரசியான துர்க்கை என்றால் அது பத்மினி என்றெல்லாம் நினைக்கவும், சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆள் பாதி ஆடை பாதி

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் தமிழ் மன்றம் நடத்திய முத்தமிழ் விழாவினைக் கண்டு மகிழும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது. அந்த விழா சம்பந்தமாக எதனை எழுதுவது, எதனை விடுவது என்றிருக்கையில் கடைசியாக 'அதனை'யே எழுதலர்மென்று தோன்றி விட்டது.

அந்தத் தமிழ் மன்ற மாணவ - மாணவிகள் மட்டுமன்றி அதிபர் - ஆசிரியர்கள் அனைவருமே தமிழ்க் கலாசாரத்தை வெளிப்படுத்தும் தமிழ்த் தேசிய உடைகளிலே வந்திருந்தமையே அந்தச் சிறப்பம்சமாகும். மன்றத் தலைவர் கபிலனோ மேலும் ஒரு படி முன்னேறி தலைப்பாகை வேறு சூடி மணவாளக் கோலத்திலேயே வந்துவிட்டார்.

'வேட்டி கட்ட வராது' என்று 'பெருமை'யடிக்காது முதன் முதலாக தமிழ்க் கலாசாரத்துக்குள் புகுந்த சிலர் 'அவை'களால் 'அவதி'ப்பட்டதைப் பார்க்க வேடிக்கையாக இருந்தாலும் அவர்களின் துணிச்சலைப் பாராட்டியே ஆக வேண்டும்.

அந்த விழா நடைபெற்ற அரங்கின் பெயர் 'ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபம்.' ஒறேற்றரான ஒறேற்றரே - அதுவும் ஆங்கில ஒறேற்றர் தமிழ்த் தேசிய உடையிலேதான் வலம் வந்தவர். எனவே அவர் பெயராலமைந்த அந்த மண்டபத்திலே அந்த நிகழ்வு அப்படி அமைந்தது மிகவும் பொருத்தமானதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மன்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்கள் 'தமிழாய்' வந்தமைக்கு அங்கு துணை அதிபராக விளங்கும் ஆறு. திருமுருகனும் காரணமாக இருந்திருப்பார் என நம்புகிறேன். அப்படிச் சொல்வதால், 'அப்படி' அவர் கடுமையானகட்டளைபிறப்பித்திருப்பார்என்பதுகருத்தல்ல. 'அவரே அப்படி' இங்கு மட்டுமல்ல உலகையே சுற்றி வரும் போது நாம் எம்மாத்திரம்' என்று அவர் சொல்லாமலே அறிவுறுத்தியிருப்பார்.

மாணவ மாணவியர் கல்லூரிகளுக்கு அவர்களுடைய கோலவுடைகளுடன்தான் வரவேண்டும். 'உசாலா' நீலத்தை அதிகமாக அள்ளிப் போட்டு வெள்ளையை நீலமாக்குவதைக் கூட ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் இப்படியான தமிழ் - இந்து - கலாசார விழாக்களில் தேசிய உடைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது வரவேற்கவேண்டியதே!

அணியும் ஆடையைக் கொண்டே ஒருவரை மதிப்பது என்பதெல்லாம் தொன்று தொட்டேயுள்ள வழக்கம்தான் போலிருக்கிறது. மேல்நாடு ஒன்றிலே நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் இது. விருந்தோடு கூடிய நிகழ்ச்சி ஒன்றுக்கு அந்தப் பிரபல அறிஞருக்கும் அழைப்புக் கிடைத்தது. அவர் சாதாரணமாகவே அதற்குப் போயிருக்கிறார். வாயிற் காவலர்கள் 'அவர் ஒரு சாதாரண மனிதராக இருக்க வேண்டும். அதனால் தான் கௌரவ விருந்தினர்களுக்குரிய ஆடையுடன் வரவில்லை' என்று நினைத்துக் கொண்டு அவரை உள்ளே விடவில்லை.

வெளியேறிய அந்தப் பிரமுகர் தம்வீடு சென்று தகுந்த - ஒழுங்கான - உடையுடன் மீண்டும் அங்கு சென்றார். பிரமுகர்கள் வரிசையிலே அமர்ந்து கொண்ட அவர், உணவை உட்கொள்வதற்கு முன்னராக ஒவ்வொரு 'ஐயிட்டம் ஐயிட்டமாக' எடுத்துத் தம் 'ரை'க்கும் 'கோட்'டுக்கும் கிட்டக் கொண்டுபோய் காட்டி "இந்தா ரையே நீ உண்... இந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டே நீயும் உண்... உங்களுக்குத் தானே இங்கு முதல் மரியாதை...'' என்றெல்லாம் சொல்லி வந்தாராம்... .

ஒருவருக்குத் தோற்றப் பொலிவும் முக்கியம் என்பதை எடுத்துக் காட்டுவதுபோல எம்மத்தியிலும் 'ஆள் பாதி ஆடை பாதி' என்றொரு பழமொழி உண்டல்லவா? இதற்கு வேறு விதமாக பொருள் கொள்பவர்களும் இருக்கிறார்கள் போலிருக்கிறது. இதே விழாவில் அறிஞர் ஆறு. திருமுருகன் தமது உரையினிடையே சொன்ன ஒரு தகவலையும் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

துர்க்கை அம்மன் கோவிலுக்கு அந்தப் பெண்மணி வந்திருந்தாள். வெளிநாடு சென்றுவந்த அவளின் கையிலே 'காமரா'வும் இருந்தது. தலை மயிரை ஒட்ட வெட்டியிருந்த அவள் இறுக்கிப் பிடிக்கும் அரைகுறை ஆடையுடன் காணப் பட்டாள்... (ஆள் பாதி ஆடை பாதி)

துர்க்கா , துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை அவள் மெல்ல அணுகி ''உங்களுடன் சேர்ந்து நின்றுகொண்டு ஒரு படம் எடுத்துக் கொள்ளலாமா?'' என்றாள்.

வந்தவளை ஏற இறங்கப் பார்த்த அம்மையார் ''அதை நான் விரும்பவில்லை'' என்றார்.

மங்கை நல்லாள் தான் இன்னாருடைய மகள் என்று அம்மையாருக்கு நன்கு அறிமுகமான தந்தையாரை அறிமுகம் செய்து மீண்டும் தனது வேண்டுகோளை நினைவு படுத்துகிறாள். அதற்கு மீண்டும் அம்மையார் சொன்னார். ''அப்படியா? அவருடைய மகள் இந்தக் கோலத்திலே - அதுவும் இந்த இடத்துக்கு வந்திருக்கக் கூடாதே... அதை அவரும் விரும்பியிருக்க மாட்டாரே...''

வந்தவளுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மார்லன் பிராண்டோவை எனக்கும் தெரியும்

உலகப் புகழ்பெற்ற திரைப்பட நடிகர் மார்லன் பிராண்டோ தமது எண்பதாவது வயதில் அண்மையில் காலமாகிவிட்டார்.

ஒரு சமயம் பேரறிஞர் அண்ணா அவர்கள் நடிகர் திலகம் சிவாஜி கணேசனைப் பாராட்டும்போது அவரை மார்லன் பிராண்டோவுடன் ஒப்பிட்டுப் பேசியிருந்தார். சிவாஜி தி.மு.கவை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டபோதும் அவரை 'எங்கிருந்தாலும் வாழ்க' என்று பெருந்தன்மையுடன் பாராட்டிய பெருமகன் அண்ணா!

'கல்கண்டு' ஆசிரியராக இருந்த தமிழ்வாணன் ஒரு பல்துறை எழுத்தாளர். 'நூறு ஆண்டுகள் வாழ்வது எப்படி?' என்று நூல் எழுதிய அவர் அறுபது ஆண்டளவில் மறைந்து விட்டார். அவர் அப்போது அண்ணாவின் கருத்தை மறுத்துரைப்பது போல் '' ஜுலியஸ் சீசர்' போன்றதொரு திரைப் படத்திலே மார்க் அந்தோனியாக சிவாஜி தோன்றியிருந்தால் மார்லன் பிராண்டோ தோற்றுப் போயிருப்பார்'' என்பது போலக் கருத்து வெளியிட்டிருந்தார். (பிரச்சினைக்குரிய எழுத்தாளரான தமிழ்வாணனைப் பற்றி பின்னொரு சமயம் எழுதலாமென்றிருக்கிறேன்).

சிலப்பதிகார 'வழக்குரை காதை' போல மார்க் அந்தோனியின் ஜுலியஸ் சீசரது மரணச் சடங்கு உரையும் குறிப்பிடத்தக்கது. கோவலனைக் கள்வன் எனச் சொல்லிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டியன் நெடுஞ்செழியனை கண்ணகியின் கனல் தெறிக்கும் வாதம் தலை கவிழச் செய்து விடுகிறது. 'யானே கள்வன்' என்றவாறு அவனைத் தலைசாய வைக்கிறது.

ஜுலியஸ் சீசரைக் கொலை செய்துவிட்டு அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த புறூட்டஸ் கூட்டத்தின் மத்தியிலே அந்தோனி தோன்றுகிறான். புறூட்டஸின் வேண்டுகோளின்படி சீசரின் உடலைத் தகனம் செய்வதற்காக மட்டுமே தாம் அங்கு வந்ததாகவும், 'புறூட்டஸ் எனது நண்பர், அவர் மிகவும் நல்லவர்' என்ற முன்னுரையுடன் அந்தோனியின் உரை தொடங்குகிறது. புறூட்டஸ் தந்த அந்தக் குறுகிய கால அவகாசத்திற்குள் சீசரின் கடைசி உயிலை மட்டும் வாசித்து விட்டுப் போகிறேன் என்கிறான். புறூட்டஸை அடிக்கடி தட்டிக் கொடுத்தவாறே சீசரின் பெருமைகளை ஒவ்வொன்றாக எடுத்துரைத்துக் கொண்டு வருகிறான். மக்களின் மனங்கள் தன்பால் திரும்புவதை உணர்ந்து உற்சாகமடைகின்றான். அவனைத் தொடர்ந்து பேசுமாறு அவர்கள் கட்டளை யிடுகிறார்கள். அந்தோனி மேலும் உற்சாகம் அடைந்தவனாக சீசரின் பெருமைகளை மேலும் மேலும் எடுத்துரைத்து அவர் கொலை செய்யப்பட்டது அநீதியான செயல் என்பதை நிரூபிக்கிறான். புறூட்டஸின் ஆதரவாளர்களான அந்தக் கூட்டத்தை சீசரின் ஆதரவாளர்களாக்கி புறூட்டஸுக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்கிறது அந்தோனியின் அப்பேச்சு...

மொத்தத்திலே சிறந்த சொற்பொழிவுக்கு அந்தோனியின் அந்தப் பேச்சை சொற்பொழிவுக் கலைஞர்கள் எடுத்துக் காட்டாகச் சொல்வதுண்டு. இந்தப் பாத்திரத்தையே 'ஜுலியஸ் சீசர்' படத்திலே மார்லன் பிராண்டோ ஏற்று நடித்தார். அதனை தமிழ் வடிவமாக்கி அந்தோனி பாத்திரத்தை சிவாஜி கணேசன் ஏற்று நடித்திருந்தால்...?

நீண்ட வசனங்களை அதற்குரிய உணர்ச்சி பாவங்களுடன் பேசி நடிப்பதில் சிவாஜி வல்லவர். பராசக்தி உட்படப் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோர்ட் சீன்' களில் 'கனம் கோர்ட்டார் அவர்களே' என விழித்து அடுக்குத் தொடர் வசனங்களை அப்படி வெளுத்து வாங்க யாரால்தான் முடியும்? ஓர் உண்மையை உங்களுக்குச் சொல்ல வேண்டும். நீதிமன்ற சாட்சிக் கூட்டிலே நிற்பவர்கள் கேட்ட கேள்விகளுக்கு மட்டுமே பதில் சொல்ல வேண்டும் என்பதுதான் நடைமுறை வழக்கம். 'வசனம்' பேசுவதற்கு அது இடமல்ல.

மார்லன் பிராண்டோ நடித்த அந்த 'ஜூலியஸ் சீசர்' படத்தினை ஆங்கிலத்தை அவ்வளவாகப் புரிந்து கொள்ள முடியாத அக்காலத்திலே யாழ்ப்பாணம் 'றீகல்' திரையிலே பார்த்திருக்கிறேன். அந்தத் தியேட்டர் எங்கிருந்தது என்றால்... பேருந்து நிலையத்திலிருந்து முற்றவெளியை நோக்கிய ஒரு வீதி இருக்கிறதல்லவா? அந்த வீதி வழியாக 'மூக்கை'ப் பிடித்தவாறு (அப்போது) போனால் முடிவில் வலது பக்கமாக மைதானத்தை நோக்கியவாறு முதலில் இருந்தது 'றீகல்'. அதற்குப் பக்கத்திலேதான் வீரசிங்கம் மண்டபம்.

இந்த 'றீகல்' திரையரங்கிலே கொழும்பு 'றீகல்' போல அநேகமாக ஆங்கிலப் படங்கள்தான் ஓடுவதுண்டு. 'தினசரி இரண்டு, சனி, ஞாயிறு நான்கு காட்சிகள்' என்று தமிழ்ப் படங்கள் ஓடுவதுபோல இங்கே ஆங்கிலப் படங்கள் ஓடுவதுண்டு (தியேட்டரைவிட்டு அல்ல). அவ்வளவுக்கு ஆங்கிலம் தெரிந்தவர்கள் அப்போது யாழ்ப்பாணத்திலே இருந்திருக்கிறார்கள்.

சிலர் போசக்கையாகவும் றீகலில் இங்கிலுசுப் படம் பார்த்ததாகப் பெருமையடித்துக் கொள்வதுண்டு. தமிழ்ப் பத்திரிகையிலே தகவலைப் படித்து விட்டு 'டெயிலி நியூஸிலே' பார்த்தேன் என்று சொல்லுவது போல் என்று வைத்துக் கொள்ளுங்களேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏமாந்தவர் யார்?

'ஏ-னையின் (A-9) பாதை திறந்ததையடுத்து யாழ்ப்பாணம் சென்று திரும்பியவர்களின் கதைகளைக் கேட்ட அவனும் 'எயர்லையின்' பாதை வழியாக வந்து யாழ் நகரில் கால் பதித்தான்.

அவன் தனது மேல் நாட்டு மனைவியுடன் கனடாவில் இருந்து வந்திருந்தான். பல்லாண்டு கால அஞ்ஞாத வாசத்தின் பின்னர் ஒரு சோதனை முயற்சியாக வந்திருக்கிறான். நிலைமை உண்மையாகவே சீர்தான் என்றால், அடுத்த தடைவை பிள்ளைகளையும் அழைத்து வரும் திட்டம்!

அவர்களிடம் ஓடிவந்த முச்சக்கர வண்டிக்காரன் ஒருவன் ''சார் எங்கே போகவேண்டும்? ஆட்டோ வேணுங்களா?''

முச்சக்கர வண்டிக்காரன் 'ஓட்டோ'வை 'ஆட்டோ' வாக்கியதுடன் 'சேர்'ரையும் சாராக்கிவிட்ட அலங்கோலத்தை எண்ணியவனாக அந்த இடத்தைக் குறிப்பிட்டு ''அதற்கு எவ்வளவு வரும்?'' என்று கேட்டான்.

வண்டிக்காரனின் பதில் அவனை வியக்க வைத்தது. 'இதற்குப் போய் இவ்வளவா? எல்லாம் மறந்து போயிருக்கும் என்று இவன் எனக்குத் தலை சுற்றுகிறானா?'

'சரி போனால் போகிறது' என்று அவர்கள் இருவரும் வண்டியில் ஏறிக்கொள்கிறார்கள். வண்டியை ஓடவைத்தவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையோடு 'ஓ...போடு' என்ற பாட்டையும் போட்டுத் தொலைத்தான். ஏதோ பாட்டுகேட்கவும்தான் அவர்கள் அதிலே ஏறியிருக்கிறார்கள் என்று எண்ணிவிட்டான் போலும்!

''ஐசே... ஸ்ரொப் தற் பிளடி சோங்...'' யூலி. ஆமாம் அதுதான் அவளின் பெயர்; துடித்தாள்.

'என்னவாம்' என்பதுபோல வண்டிக்காரன் அவனைப் பார்த்தான்.

''அந்தப் பாட்டை நிறுத்தச் சொல்லுறா. அவவுக்கு நமது சங்கீதம் என்றால் நல்ல விருப்பம். குன்னக்குடியின் வயலின் தொடக்கம் அங்குள்ள நம்நாட்டு ஸ்ரீதாஸின் வீணை - புல்லாங்குழல் கச்சேரி வரைக்கும் இரசித்துக் கேட்பா. ஆனால் இந்த மாதிரிக் கண்ராவியெல்லாம் அவவுக்குப் பிடிக்காது; எனக்கும்தான்.''

இப்பொழுது அவர்களால் நிம்மதியாகப் பயணம் செய்ய முடிகிறது.

'இவன் ஏன் இந்த வீதியால் போகிறான்' என்று அவன் எண்ணிக்கொண்டிருக்கையில் சாரதி சொல்லிக்கொண்டு வந்தான்...

''வலது பக்கம் இருப்பதுதான் பாருங்கோ சந்தைப் பகுதி. முன்னர் முற்றாக எரிந்த கதையினை நீங்களும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்பொழுது மறுவாழ்வு பெற்றிருக்கிறது...''

வண்டிக்காரன் சொல்லிக்கொண்டு வருவதை இவன் தனக்குத் தெரிந்த 'சங்கதி'களுடன் சேர்த்து யூலிக்கு விளக்கிக் கொண்டு வந்தான்.

''பார்த்தீர்களா... புதிது புதிதாக எத்தனை நவீன கடைகளும் கட்டடத் தொகுதிகளும் தோன்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதை... எல்லாம் உங்களைப் போன்றவர்கள் அங்கிருந்து அனுப்புகிற பணம் செய்கிற வேலைதான்.''

''இதுதான் பெரிய தபால் கந்தோர். பலகாலமாக இயங்காதிருந்து இப்பொழுதுதான் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. அதற்கடுத்தது வீரசிங்கம் மண்டபம். தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின்போது உயிர்நீத்தவர்களின் நடுகற்கள்தான் அதற்கு முன்னால் முற்ற வெளியில் இருப்பது...

''இதுதான் பிரசித்தி பெற்ற கோட்டை முனியப்பர் கோவில். அப்போதெல்லாம் கோட்டை மைதானத்திலே அரசியல் கூட்டம் போட்டவர்கள் இந்த முனியப்பரைச் சாட்சியாக வைத்துத்தான் வாக்குறுதிகளை வாரி வழங்குவார்கள்... அது மணிக்கூட்டுக் கோபுரம்... அடுத்தது தந்தை செல்வாவின் நினைவுத் தூபி... இதுதான் டச்சுக் கோட்டை இருந்த இடம்...''

அவன் இருந்தாற்போல் இடைமறித்துக் கேட்டான் ''கச்சேரிப் பக்கம் வந்துவிட்டோம் போலிருக்கிறது...''

''சரியாகச் சொல்லிவிட்டீர்கள். இன்றைக்கு இங்கே மறியல் போராட்டம் எதுவும் இல்லைப் போலிருக்கிறது.''

வண்டி ஓடிக்கொண்டிருக்கிறது. வண்டிக்காரன் சொன்னான்: '' நல்லூருக்கு வந்துவிட்டோம்... பின்னர் ஒரு நாள் ஆசார சீலர்களாக வந்து வழிபடுவீங்கதானே... இப்பொழுது கோபுரத்தைப் பார்த்துக் குட்டிக் கும்பிடுங்கோ...''

''ஓ... வொண்டர்புல்'' என்று யூலி தான் அறிந்து வைத்ததைச் சொன்னாள். ''கோபுர தரிசனங் கோடி புண்ணியங்...''

பயணம் தொடர்ந்தது. ஒரு காலத்தில் அவன் தமிழ்நாடு சென்றிருந்தபோது, அங்குள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி வாரிய வாகனத்திலே சென்னையை மேலோட்டமாகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிப் பார்த்திருக்கிறான். சில முக்கிய இடங்களை இறக்கிக் கொண்டுபோய்க் காட்டினார்கள். மற்றும்படி வழிகாட்டி யானவர் வாகனம் ஓடிக் கொண்டிக்கையிலே ஒலிபெருக்கி மூலம் விளக்கங்கள் தந்து கொண்டிருப்பார். ''இது மவுண்ரோடு... இது மெரினா கடற்கரை... இது கன்னிமாரா நூலகம்... இது ராஜாஜி மண்டபம்... இது அண்ணா சிலை...'' இப்படியே விவரணங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும். அவர்கள் இறக்கிக்கொண்டு போய்க் காட்டாத இடங்களில் முக்கியமானவைகளைப் பின்னர் நாம் தனியாகச் சென்றும் பார்த்திருக்கிறோம்.

முச்சக்கர வண்டி இப்படியே ஓடி இறுதியில் கன்னா திட்டியில் உள்ள அவர்களின் வீட்டுக்கு முன்னால் வந்து நின்றது.

வண்டிக்காரன் அவர்களை ஏமாற்றி 'அவ்வளவு' பணம் கறந்து விட்டதாக நினைத்தான்.

அவன், இவ்வளவு குறைந்த செலவில் நகரத்தை யூலிக்கு சுற்றிக் காட்டிவிட்டதாக நினைத்தான்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிரிக்க... விளம்பரங்கள்

அப்படியும் சில துப்பறியும் நாவல்கள் வந்திருக்கின்றன. ஒரு விபத்து நடக்கிறது. அந்த விபத்து உண்மையாக நடந்ததா அல்லது ஒரு பெருந்தொகையைக் காப்புறுதியாகப் பெறுவதற்காகச் சம்பந்தப்பட்டவர்களால் 'சோடிக்கப் பட்டதா' என்பதைக் கண்டறிய வேண்டும். அதற்காக குறிப்பிட்ட காப்புறுதி அமைப்பைச் சேர்ந்த உளவுப் பிரிவினர் விசாரணைகள், ஆய்வுகள் என்று நடத்தி உண்மையைக் கண்டறிகிறார்கள். அதுவே அந்த நாவல்களின் சுருக்கம். யாரும் பொய்யான கோரிக்கையை வைத்துக் காப்புறுதி நலன்களைப் பெற முடியாது.

திருட்டுக்கு - நெருப்புக்கு எதிராக என்றும் வாகனங்களாயின் அவை சுமந்து செல்லும் பொதிகளுடன் என்றும் (INSURED WITH GOODS) காப்புறுதிகள் மேற்கொள்வதுண்டு. ஆனால், அப்படியான அசம்பாவிதங்கள் நடந்தால் மட்டுமே அவைகளுக்கு அந்தக் காப்புறுதி நலன்கள் கிடைக்கும்.

அதற்காக காப்புறுதி செய்யாமலும் இருந்துவிட முடியாது. எடுத்துக்காட்டாக நகைகள் அட்கு பிடிக்கும் ஒரு நிறுவனம் திருட்டு - நெருப்புக்கு எதிரான காப்புறுதி செய்து கொள்ள வேண்டும் என்றால், அதைச் செய்து, காலத்துக்கு காலம் அதற்கான தவணைக் கட்டணத்தையும் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் கடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துவதற்கான அரசாங்க அனுமதி அதற்குக் கிடைக்க மாட்டாது. ஆயுள் காப்புறுதியைப் பொறுத்தவரை, காப்புறுதி செய்து கொண்டவர் ஒப்பந்தப்படி முதிர்வின்போது முழு நலன்களையும் பெறலாம். ஆனால், அவர் இடையிலே மண்டையைப் போட்டுவிட்டால் அப்பொழுதே முழு நன்மைகளும் கிடைக்கும். (சில வேளை அதிகப்படியாகவும் கிடைக்கும்) அத்துடன் தவணைப் பணமும் மேற்கொண்டு அவர் பெயரால் செலுத்த வேண்டியதில்லை.

அதற்காக ஆயுள் காப்புறுதி செய்து கொண்டவர்களை விரைவாகச் செத்துப்போங்கள் என்று நான் சொல்லுவதாக நீங்கள் நினைக்கக்கூடாது. அதற்காகத்தானே அவர்களை முதலில் வைத்தியப் பரிசோதனைகளுக்கு உட்படுத்துகிறார்கள்.

கடைக் காப்புறுதி போன்றவைகளில் விபத்து நடந்தால் மட்டுமே காப்புறுதி நன்மைகள் கிடைக்கும். அதற்காகக் கடையைத் தாமாகவே எரித்து விட்டோ அல்லது அங்கு திருட்டு நடந்த தாகக் காட்டியோ அல்லது அப்படி நடப்பதற்கு உடந்தையாக இருந்துவிட்டோ காப்புறுதி நன்மைகளைப் பெற முடியாது. அப்படி (?) எங்காவது ஒரு சில சம்பவங்கள் நடந்திருக்கலாம். ஆனால் அது விதியல்ல, மோசடி...

ஒருவர் தமது வலது கை விரலைப் பெருந்தொகைப் பணத்துக்குக் காப்புறுதி செய்திருக்கிறார் என வைத்துக் கொள்வோம். அப்படி ஓர் இழப்பு அவருக்கு அவராலோ அல்லது பிறராலோ நேராமல் கவனித்துக் கொள்ளும் தார்மீகப் பொறுப்பு அந்தக் காப்புறுதி நிறுவனத்துக்கும் இருக்கிறது. கம்பெனி 'வங்றோத்து' அடைவதை அவர்களும்தான் விரும்புவார்களா? இவ்வளவும் எதற்காக என்றால் ஒரு சில மாற்றங்களுடனான இந்த வானொலி விளம்பரத்தைத்தான் பாருங்களேன் விளங்கும்.

★ ★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்: (பதறியபடி) இஞ்சருங்கோ... அங்கை எங்கடை கடை வெள்ளத்திலை மூழ்குகிறது. நீங்கள் என்னடா வென்றால் இங்கை ரீ.வி பார்த்துக் கொண்டிருக்கிறியள்...

ஆண்: அதற்கு ஏன் அப்பா பதறுகிறீர்? நான் கடைக் காப்புறுதி செய்திருக்கிறன். வெள்ளம் நெருப்பு - எவைகளால் பாதிப்பேற்பட்டாலும் முழுமையாக எங்களுக்குக் கடை காப்புறுதி கிடைக்கும்.

பெண்: (அமைதியாக) அப்ப பிறகென்ன? நல்லாய் இருந்து ரீவியைய் பாருங்கோ...

★ ★ ★ ★ ★

இன்னொரு வேடிக்கையான வானொலி விளம்பரம் அதையும் சில மாற்றங்களுடன் தருகிறேன்.

★ ★ ★ ★ ★

குரல்: கூரையிலை ஏறியிருந்து உண்ணாவிரதம் இருக்கிறது... கவனம்... கவனம்... (அடுத்து 'படீர்', 'ஐயோ' என்ற சப்தங்கள்)

மீண்டும் குரல்: சொன்னால் கேட்டால் தானே... கூரை மீது ஏறியிருந்து உண்ணாவிரதம் இருப்பதானாலும் எங்கடை கூரைத் தகடு என்றால் அசையாது...

★ ★ ★ ★ ★

கூரைமீது ஏறியிருந்து போராட்டம் - உண்ணாவிரதம் என்று அடிக்கடி இங்கு நடப்பதை ஒரு விதத்தில் கொச்சைப்படுத்துவது போலவும் இது அமைந்திருந்தது.

ஒரு சமயம் சிங்களப் பல்கலைக்கழக மாணவர்கள் கூரை மீது அமர்ந்து ஏதோ போராட்டம் நடத்தியபோது அப்போது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்த லிங்கம் அவர்கள் தாமும் கூரைமீது ஏறி அவர்களைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரசப்படுத்திக் கீழே இறக்கி வந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது.

சிறைச்சாலைக் கூரை மீது ஏறியிருந்து போராட்டம், உண்ணாவிரதம் என்றெல்லாம் அடிக்கடி இங்கு நடப்பது சாதாரண நிகழ்வுகள். இதிலே தமிழ் சிங்களக் கைதிகள் என்ற வேறுபாடுகள் கிடையாது.

சிறைச் சாலைகளிலே எத்தனையோ சட்ட திட்டங்கள் கட்டுப்பாடுகள் என்றெல்லாம் இருக்கும்போது அதையெல்லாம் மீறி எப்படிக் கைதிகள் சிறைக் கூண்டை விட்டு வெளியேறி, கூரைமீது ஏறிச் செல்ல முடிகிறது?

எது எப்படி இருந்தபோதிலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூரைத் தகடுகள் 'படீர்' என்று உடைந்து நொறுங்கி கைதிகள் 'ஐயோ' என்று விழுந்ததாகச் சரித்திரம் இல்லை. அப்படியானால் அங்கு பொருத்தப்பட்டவைகளும் குறிப்பிட்ட விளம்பரதாரர்களின் குறிப்பிட்ட வகைக் கூரைத் தகடுகளாகத்தான் இருக்குமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 'பக்குவப்பட்ட' எழுத்தாளர்கள்

எமது தமிழறிஞர் ஆறு. திருமுருகன் அவர்கள் நூல் வெளியீட்டு விழா ஒன்றிலே இப்படி ஒரு கருத்தினை வெளியிட்டிருந்தார்.

''தமிழ் நாட்டிலே இலக்கிய விழா ஒன்று நடைபெற்று முடிந்தால் அந்த விழாவிலே கலந்து கொண்ட அறிஞர்கள் - எழுத்தாளர்களை இலக்கிய ஆர்வலர்களும் இளம் எழுத்தாளர்களும் சூழ்ந்து கொள்வார்கள். பேட்டி காண்பது போல கேள்விகள் கேட்டும் கலந்துரையாடியும் அவர்களின் அனுபவங்களையும் பெற்றுத் தங்களையும் அத்துறைகளில் வளர்த்துக் கொள்வார்கள். அந்த நல்ல முன்மாதிரிகளை இங்கே அவ்வளவு தூரம் காண முடியவில்லை.''

இன்றைய நிலை இப்படி இருந்தாலும் அன்றெல்லாம் நாமும் அப்படித்தான் நடந்து கொண்டோம். இன்னும் ஒரு படி மேலே சென்று மூத்த எழுத்தாளர்களின் வீடுகளைத் தேடிச்சென்றே - சில சமயம் அவர்களின் பொறுமையைச் சோதித்துக் கொண்டும் எம்மை வளர்த்திருக்கிறோம். இரசிகமணி கனக செந்திநாதன், கலைச்செல்வி ஆசிரியர் 'சிற்பி' சி. சரவணபவன் போன்றவர்களின் இல்லங்கள் அப்படியான இலக்கியச்சந்திப்புகளுக்குப் பெயர்பெற்றவை.

இரசிகமணி சம்பந்தப்பட்ட விவரங்களை மட்டும் இங்கே தருகிறேன். நவாலியூர் க. நடேசனுடன் மாதத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்து ஒரு ஞாயிற்றுக்கிழமையிலாவது இரசிகமணியின் இல்லத்திற்குச் சயிக்கிளில் சென்று வருவோம். அப்படிச் சென்று வருவதன் மூலம் இருவருமே எழுத்துத் துறையில் ஒருவித தன்னிறைவைப் பெற்றுக் கொண்டதாக உணர்ந்து கொள்வோம். நடேசனுக்கும் அப்பொழுது அவர் ஆசிரியராக இருந்த 'கூட்டுறவு' இதழுக்குப் புதிதாக எழுத ஏதாவது 'கரு' கிடைக்கும். எனக்கும் 'சுதந்திரன்' பத்திரிக்கைக்கு 'விடயதானம்' செய்வதற்குத் 'துப்பு'க் கிடைக்கும்.

இரசிகமணியும் அப்படி இரசிகர்கள் என்று தமது இல்லத்திற்கு வருபவர்களைத் தொல்லை என்று நினைப்பவரல்லர். அப்படியானவர்களுடன் மணிக்கணக்கில் கூட உரையாடி மகிழ்வார். அப்படியானதொரு சிறப்பியல்பு அவருக்கு இருந்தது.

ஒரு முறை அப்படி அவரது இல்லம் நோக்கி நாம் சென்று கொண்டிருக்கையில் அந்தக் கவிஞரை மல்லாகத்திலே சந்திக்க நேர்ந்தது. அந்த நண்பருக்கு எம் போன்றவர்கள் இரசிகமணியையும் சிற்பியையும் அப்படிப் 'பெரிதாகத் தூக்கிப் பிடிப்பது' அவ்வளவாகப் பிடிப்பதில்லை. அதெல்லாம் அவருக்கு ஒருவித 'ஒவ்வாமை' போலிருக்க வேண்டும். அதனால் எங்களுக்கு இப்படி ஒரு புத்திமதி.

''இரசிகமணி, டி.கே.சியையும், சிற்பி , அகிலனையும் தங்களுடைய ஆதர்ஸ குருக்களாக வரித்துக் கொண்டவர்கள். எவ்வளவு முயன்றாலும் அவர்களால் டி.கே.சி அளவுக்கு - அகிலன் அளவுக்கு மேலே வர முடியாது. நாங்கள் அப்படியல்ல. நாங்கள் - டோல்ஸ்டோயையும் - (இன்னும் சில உச்சரிக்க முடியாத பெயர்கள்) ஆதர்ஸ வழிகாட்டிகளாகக் கொண்டிருப்பவர்கள். அதனால் எங்களால் உயர உயரப் பறக்க முடிகிறது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கென்னவோ நாம் டி.கே.சி. - அகிலன் அளவுக்கு வந்தாலே போதும் என்று படுகின்றது.

அந்தப் புத்திமதியுடன் அவர் எனக்குத் தனியாகவும் ஒரு 'வத்தி' வைத்தார்.

'நீர் இரண்டு நகைச்சுவைக் கட்டுரைத் தொகுதிகளை வெளியிட்டிருக்கிறீர். 'சுயா'வின் ஒரு நூல்தானும் வெளி வரவில்லை. அதை வைத்துக்கொண்டு சுயாவை விட நீர்தான் சிறந்த நகைச்சுவை எழுத்தாளர் என்று சொல்ல முடியுமா? இதை நான் சொல்லவில்லை; இரசிகமணிதான் சொன்னார்.'

அதாவது அப்படியான இரசிகமணிக்குப் பின்னால் நீங்கள் ஏன் நிற்க வேண்டும் என்பது நண்பரின் கருத்து. என்னைப் பொறுத்தவரை அந்த நண்பர் எனக்கு நல்லதைத்தான் செய்தார்.

இரசிகமணி அப்படிச் சொல்லியிருந்தால் அது சரியாகத் தான் இருக்கும் என்ற எண்ணத்துடன் அன்றைய அவருடனான சந்திப்பை அதற்காகவும் செலவிட்டேன். 'ஈழகேசரி ' காலத்திலே நகைச்சுவைக் கட்டுரைகள் எழுதி வந்த 'சுயா' என்ற சு. நல்லையா மற்றும் 'அநுசுயா' என்ற அல்வாயூர் கவிஞர் மு.செல்லையா பற்றியெல்லாம் அறிந்து கொண்டேன். பின்னர் அவரே அவர்களின் கட்டுரைகளை 'ஈழகேசரி'த் தொகுப்புகளில் இருந்து முழுமையாகப் படித்தறிவதற்கும் எனக்கு வழிவகைகள் செய்து தந்தார்.

இரசிகர்களை மதிப்பவர்கள், இரசிகர்கள் என்று யாரும் வந்து தொல்லை கொடுப்பதை விரும்பாதவர்கள் என்றெல்லாம் எழுத்தாளர்களிலும் இரண்டு வகையினர் இருக்கிறார்கள். இதை ஆறு.திருமுருகன் அவர்களும் அறிந்திருப்பார்.

ஒரு பிரபல எழுத்தாளரை நாடி ஓர் இளைஞன் வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் ஓர் எழுத்தாளனாக வரவேண்டும் என ஆசைப் படுவதாகவும் அதற்கு அவர் வழிகாட்டி ஆலோசனைகள் வழங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான்.

அதற்கு அந்த எழுத்தாளர் ''அதற்கான 'பக்குவம்' உமக்கு வந்ததும் நீர் எழுதத் தொடங்கலாம்'' என்றார்.

இளைஞன் குறுக்கிட்டுச் சொன்னான். ''நீங்கள் மட்டும் என்னைவிடக் குறைந்த வயதில் எழுதத் தொடங்கி விட்டீர்களே!''

அந்தப் பிரபல எழுத்தாளர் அமைதியாகச் சொன்னார்.

''சரிதான், ஆனால் நான் அந்த வயதில் இப்படி யாரையும் போய் 'எப்படி எழுதுவதென' ஆலோசனை கேட்கவில்லையே!''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நான் சொல்லுகிறேன் "ஒன்றும் இல்லைப் போ..."

"சக்கடத்தார்" புகழ் இராசரத்தினம் அவர்கள் தமது 'ராஜ் நகைச்சுவை நாடக மன்றம்' மூலமாகத் தயாரித்தளித்த இன்னொரு நாடகம் 'மின்னுவதெல்லாம் பொன்னல்ல'. இது கொழும்பில் மட்டுமின்றி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அப்போது மேடையேறி மக்களின் பாராட்டுக்களைப் பெற்றது.

எனது 'நினைவு வங்கி'யிலிருந்து அந்நாடகத்தின் கதை இப்படித்தான் விரிகிறது... பொன்னம்பலம் - செல்வநாயகம் என்று இரு குடும்பங்கள். அக்குடும்பத்தின் பிள்ளைகளிடையே ஒருவருக்கு ஒருவர் காதல் அரும்பி - அதுவும் வளர்கிறது .

அதனை ஏற்றுக்கொள்ளாத குடும்பத் தலைவர்கள் 'கௌரவப் பிரச்சினை'யை முன்நிறுத்தி அதனை எதிர்க்கின்றார்கள். அவர்களிடையே பிரச்சினைகளும் பிணக்குகளும் மோதல்களும் ஏற்பட்டுக் குடும்பம் இரண்டு படுகின்றது.... (முடிவு என்ன என்பது தெரியவில்லை - ஞாபகத்துக்கு வர மறுக்கிறதே!)

வெளிப்படையாக இது முழுக்க முழுக்க ஒரு குடும்பக் கதைபோல இருந்தாலும் மறைமுகமாக அப்போது இரு துருவங்களாக இருந்த தமிழ்க் காங்கிரஸ் தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜி.ஜி.பொன்னம்பலமும் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் தமிழினத்தின் நன்மை கருதி ஒன்றுபட வேண்டும் என்ற தொனிப்பொருளையும் கொண்டிருந்ததாகவே இருந்தது எனலாம்.

இந்த நாடகம் அப்போது மானிப்பாய் இந்துக் கல்லூரித் திறந்தவெளி அரங்கிலே பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் நடைபெற்றது. அதிலே அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கம் அவர்கள் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார். நாடகத்தின் இறுதிக் காட்சிக்கு முன்னர் இடையிலே அவர் கருத்துரை வழங்கினார்.

'சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது' என்ற அக்கால நிலையில் அவரும் தந்திரமாகவே ''நாடகத்தைக் கவனமாக அவதானித்த வகையில் பொன்னம்பலமும் செல்வநாயகமும் (நாடகத்தில்) ஒன்றுபடுவதற்கான சாத்தியம் அரிதாகவே தெரிகிறது'' என்று பேசியதாக நினைவு...

பின்னால் தமிழரசுக் கட்சியும் தமிழ் காங்கிரஸும் தந்தை செல்வாவும் தலைவர் பொன்னம்பலமும் ஒன்று சேர்ந்து தோளோடு தோள் நின்று தமிழர் கூட்டணி உருவான வரலாறு தெரிந்த கதைதானே!

தமிழர்களைப் பொறுத்தவரை ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' என்பார்கள். ஒன்று 'தும்மல் கிழவி என்றால் மற்றது இருமல் கிழவி' என்று எமது அன்றைய தலைவர்கள் சொல்வதுண்டு.

ஒன்று கொடுக்க முயன்றால் மற்றது அதைக் கெடுக்க முற்படும். இதுதான் வரலாறு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலஞ்சென்ற பண்டாரநாயக்கா பிரதேச சுயாட்சி தர முன்வந்தபோது ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு எதிராக கண்டியாத்திரை மேற்கொண்டு அந்த ஒப்பந்தம் கிழிக்கப் பட்டதற்கும் காரணமாக இருந்தது.

பின்னர் ஐ.தே. கட்சி மாவட்ட சபை தருவதற்கு முன் வந்தபோது அதற்கு எதிராகச் சுதந்திரக் கட்சி முதலான கூட்டணி தோசை, வடை, நல்லெண்ணெய் என்றெல்லாம் இனவாதம் பேசி அதைக் கெடுத்தது.

அன்றுதான் அப்படி என்றால் அதன் பின்னர் திருமதி சந்திரிகா குமாரதுங்க தீர்வு யோசனையைக் கொண்டு வந்த போது ஐ.தே கட்சி அதனை எதிர்த்தது; நகல் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்திற்குள் வைத்தே தீவைத்துக் கொளுத்தியது .

அடுத்து, சமாதானம் குறித்த சில விடயங்களில் ரணில் விக்கிரமசிங்க சில நடவடிக்கைகள் எடுத்தபோது அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதன் மூலம் சிக்கலை ஏற்படுத்தியவர் சுதந்திரக் கட்சித் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா.

ஆக, சமாதானத்தை யார் கொண்டு வருவது என்பதிலும் போட்டி; அதனை யார் முறியடிப்பது என்பதிலும் போட்டி. இதற்குத் தீர்வாகவுள்ள ஒரு வழி இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்றெல்லாம் சில அரசியல் ஆய்வாளர்கள் சொல்லுகிறார்கள். சமாதானத் தீர்வைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கான அறுதிப் பெரும் பான்மையையும் அந்தக் கூட்டணி அதனால் பெறமுடியும் என்றும் அதற்கு அவர்கள் ஆதாரமாகச் சொல்லுகிறார்கள்.

**சி**ங்கள மக்கள் மத்தியிலே சிறந்த நாடகக் கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சிறந்த நாடகங்கள், குறுந்திரைப் படங்கள், தொலைக்காட்சி நாடகங்களில் புதுமை செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறார்கள். அவர்களில் யாராவது இந்த இருபெரும் கட்சிகளும் ஒன்றுபடவேண்டும் என்பதைக் குறியீடாக வைத்து நாடகம் ஏதாவது தயாரித்திருக்கிறார்களா என்ற விவரம் தெரியவில்லை.

அரசியல் பிரச்சினை பற்றி நான் கருத்துக் கூற முன்வரவில்லை; இது உண்மை. உண்மையைத்தவிர வேறில்லை. 'நாடகம்' பற்றியே மேலே குறிப்பிட்டிருந்தேன். கதையோடு கதையாக -

வாசலில் நின்ற பிச்சைக்காரியைப் பார்த்து வீட்டிலிருந்த மருமகள் ''பிச்சை இல்லை..போ'' என்றாள்.

வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த மாமியார் இதைக் கவனித்திருக்கிறாள். நடந்ததைப் பிச்சைக்காரியிடம் இருந்து அறிந்து கொள்கிறாள்.

''வீட்டுக்கு அதிபதியாக நான் இருக்கும் போது அவளுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது அப்படிச் சொல்வதற்கு?'' என்று சொல்லி அவளை மீண்டும் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறாள். பிச்சைக்காரிக்கு மிகவும் மகிழ்ச்சி.

வீட்டுவாசலில் அவளை நிறுத்திவிட்டு மருமகளைக் கூப்பிட்டு ''நீ யாரடி இந்த வீட்டிலை பிச்சை இல்லை என்று சொல்லுவதற்கு?'' என்று கொதித்தாள். பின்னர் பிச்சைக்காரியைப் பார்த்து -

''இப்பொழுது நான் சொல்லுகிறேன் பிச்சை ஒன்றும் இல்லைப்...போ.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஓடி(ட) ஓடி(ட) உழைப்பவர்

ஒரு பெரிய தொழிற்சாலை. அந்தத் தொழிற்சாலை இயந்திரத்திலே ஒரு பாரிய பிழை ஏற்படுவதற்கான முன்னறிவித்தல்போல இயந்திரங்கள் வேலை செய்து கொண்டிருக்கையிலே கூடவே ஒரு வேண்டாத சத்தமும் எழுந்து கொண்டிருந்தது. கடந்த சில நாட்களாக உள்ளூர் 'மருத்துவர்கள்' பார்த்தும் அது திருந்திய பாடாயில்லை. இப்படியே போனால் இனி என்ன நிகழுமோ என்ற நிலையிலே தலைநகரிலிருந்து இதற்கான ஒரு நிபுணர் வரவழைக்கப்பட்டார்.

வந்தவர் தொழிற்சாலையின் ஓர் ஓரத்திலே சாய்மனைக் கதிரையொன்றை இழுத்துப் போட்டு விட்டு அதிலே சாய்ந்தார். ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தவாறே தொழிலதிபரிடம் இயந்திரத்தை ஓடவிடுமாறு பணித்தார். சிகரெட் எரிந்து முடிந்த பின்னரும் சில நிமிடங்கள் அமைதியாக இருந்து எதையோ கவனித்துவிட்டு இயந்திரத்தை நிறுத்துமாறு பணித்தார். பின்னர் மெல்ல உடம்பைத் தூக்கிக் கொண்டு சுத்தியல், உளி, சாவிகளுடன் இயந்திரத் தொகுதியின் ஒரு பகுதிக்குச் சென்றார். அதிலும் குறிப்பிட்ட பகுதி ஒன்றுக்குள் நுழைந்தார். எதையோ ஒன்றைச் சுத்தியல்கொண்டு தட்டி விட்டுப் பின்னர் சாவி - உளிகளைக் கொண்டு அதனை இறுக்கி முறுக்கிவிட்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவுதான். இயந்திரம் இப்பொழுது சீராக சிக்கலின்றி ஓடத் தொடங்கியது; ஓடிக் கொண்டே இருந்தது. தொழிலதிபருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஆனால் நிபுணரின் சேவைக் கட்டணச் சிட்டையைப் பார்த்தபோது அதிர்ச்சியடைந்தார். எல்லாச் செலவுகளையும் தள்ளி அந்தத் திருத்த வேலைக்கு மட்டும் ரூபா எண்ணாயிரம் போட்டிருந்தது. 'போயும் போயும் ஒரு தட்டுக்கும் சில சுற்று முறுக்குகளுக்கும் அவ்வளவு தொகை கேட்கிறாரே என்று அதனை மீளாய்வு செய்யும்படி' பணிவன்புடன் கேட்டுக் கொண்டார். அதனைப் புரிந்து கொண்டு நிபுணர் சொன்னார்.

''தட்டியதற்கும் முறுக்கியதற்கும் நான் போட்டது பத்து ரூபாதான். ஆனால் எதை எங்கே செய்யவேண்டும் என்பதைக் கண்டறிந்ததற்குத்தான் மிகுதி ஏழாயிரத்தித் தொளாயிரத்தித் தொண்ணூறு ரூபாவும்''

★ ★ ★ ★ ★

**கா**ரின் சாரதி ஆசனத்தில் இருந்தவாறு ஒரு சஞ்சிகையிலிருந்து அந்தத் துணுக்கைப் படித்துவிட்டு நிமிர்ந்தபோது பக்கத்திலே அவர் நின்றார்; தெரிந்த முகம். அவர் ஒரு பிரபல சட்டத்தரணி என்பதை அவன் ஏற்கனவே அறிந்திருந்தான்.

'அவர் சொந்தத்திலேயே கார் வைத்திருப்பவர் அதிலே ஏதோ பழுது போலிருக்கிறது. அதனால் அதைத் 'தட்டி முறுக்க' எங்காவது கராச்சில் விட்டிருக்கவேண்டும். அதனால் தான்...' என எண்ணியவாறு அவன் காரின் முன் கதவை மிக்க மரியாதையுடன் திறந்து விட்டான்.

வந்தவர் தாம் போகவேண்டிய தமது வீட்டு முகவரியைச் சொல்லுகிறார்; நீண்ட சவாரிதான்.

அவர் காரில். ஏறிக்கொண்டதும் தமது கோவைக் கட்டினை சீற்றின் பக்கத்திலே வைத்துவிட்டு தினக்குறிப்பினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் அதிலிருந்து உருவி எடுத்துக் கொண்டார். பக்கங்களைப் புரட்டுவதும், படிப்பதும் எழுதுவதுமாக இருந்தார்.

கார் பிரதான வீதிக்கு வந்ததும், அவன் அதற்குள்ளிருந்து ரூ-இன்-வண் வானொலியை இயக்க முயன்றான். அதைக் கையமர்த்தித் தடுத்தவர் ''நான் வழக்குச் சம்பந்தமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது; அமைதி வேண்டும். '' என்றார்.

தவறுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்ட அவன் ''அடுத்த வழக்கிலே எங்கே தட்டி எப்படி முறுக்குவது என்ற சிந்தனை போலும்'' என நினைத்துக் கொண்டான்.

அவனுக்கு நீண்ட காலமாக ஒரு தலைபோகிற பிரச்சினை. அதை இவரிடம் சொல்லி வைத்தால் என்ன? ஏதாவது தனக்குச் சாதகமாகப் பதில் கிடைக்கலாம் அல்லவா? அதற்கான நேரத்தை எதிர்பார்த்தவாறே அவன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

அவனும் அவனது குடும்பத்தினரும் இங்கு மீளக் குடிய மர வந்தபோது அவர்களுக்குரிய வீட்டை வேறொரு குடும்பத்தினர் ஆக்கிரமித்திருந்தனர். முதலில் குடியமர்ந்த அவர்களை இவர்கள் எவ்வளவு முயன்றும் வெளியேற்ற முடியாதிருந்து வருகிறது. அதனால் தங்கள் வீடு காலியாகும் காலத்தை எதிர்ப்பார்த்தவாறு இவர்கள் இன்னொரு உறவினர்களுடன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டிய நிலை...

சட்டத்தரணி ஓய்ந்திருக்கும்போது இவன் தனது பிரச்சினையை எடுத்துரைத்தான். அவர், அவன் சொல்லிய வற்றைக் கவனமாகச் செவிமடுத்துவிட்டு 'மெல்லத் தட்டு' வதைப் போலச் சில கேள்விகள் கேட்டார்.

''உமக்கு அந்த வீட்டைத் தவிர சொந்தமாக வேறு வீடு ஏதும் இருக்கிறதா?''

''இல்லை ஐயா.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உம்முடைய வீட்டைப் பிடித்து வைத்திருப்பவருக்கு?"

"கிராமத்திலே இருக்கிறது. வசதிகூட என்பதால் அவருக்கு எனது பட்டணத்து வீட்டை விட விருப்பமில்லை."

"அப்படியானால் உமது வழக்கை எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. எதற்கும் எதிராளிக்கு முதலில் எழுத்தாணை (Letter of Demand)விடுத்துப் பார்க்கலாம்" என்றவர் அதற்கு விருப்பமென்றால் எல்லா விவரங்களுடனும் தம்மை இன்னொரு நாள் வந்து சந்திக்கும்படி சொன்னார்.

அவரின் வீடு வந்து விட்டது. எல்லாவற்றையும் தூக்கிக் கொண்டு இறங்கியவர் "பணம் எவ்வளவு?" என்றார். இவன் "முந்நூறு ரூபா" என்றான்.

"பரவாயில்லையே! எனது சட்ட ஆலோசனைக் கட்டணம் (காரிலே நடந்தது) ஐந்நூறு ரூபாய். மிகுதி நீர்தான் தரவேண்டும்" என்றார்.

அவன் விழித்துக் கொண்டிருக்கையில் அவரே தொடர்ந்து சொன்னார்.

"அதனாலென்ன? நீர்தான் இப்பொழுது எனது கட்சிக்காரராயிற்றே. அந்த இருநூறை உமது அச்சவாரமாக வைத்துக் கொள்கிறேன்!"

அவர்தான் 'எங்கே தட்டவேண்டும்' என்று தெரிந்தவராயிற்றே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடுத்த நிகழ்ச்சி இன்னும் சில வினாடிகளில்...

தமிழக அறிஞர்களான பேராசிரியர் கலாநிதி இரா. மோகன், அவர்தம் துணைவியாரான பேராசிரியை கலாநிதி நிர்மலா மோகன் ஆகியோர் அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தனர். அவர்கள் இங்கு நடைபெற்ற சில பாரதி விழாக்களிலும் கலந்து சிறப்பித்தனர்.

இவர்கள் இருவரும் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமான அமரர் டாக்டர் மு. வரதராசனாரின் மாணவர்கள்.

அவர்மீது மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டவர்கள்.

இருவரும் காதலித்துத் திருமணம் செய்துகொண்ட தகவலும் தெரியவந்தது. இங்கும் இவர்கள் இணைபிரியாத தம்பதியினராகப் - புன்னகை பூத்த முகத்தினராகவே நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் அதிபர் க.சிவாஜி அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், பின்வரும் கவிஞர் மருதகாசியின் பாடல் வரிகளை நினைவூட்டியமை அவர்களுக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது.

''வண்டு ஆடாத சோலையில் மலர்ந்து
வாடாமல் இருக்கும் பூ என்ன பூ?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அன்புக் கணவனின் முன்னாலே மனைவி
அழகாகச் சிந்தும் புன்சிரிப்பு''

★ ★ ★ ★ ★

கதைகள் எழுதுவதில் சில முறைகள் இருக்கின்றன. எழுத்தாளனே தான் ஒரு மூன்றாவது ஆளாக நின்று கதை சொல்லுவதுதான் பெரு வழக்கமாக உள்ளது. கதைமாந்தரில் ஒருவராக எழுத்தாளனே நின்று கொண்டு கதை சொல்வதும் வழக்கிலுள்ளது. இடைக் காலத்திலே ஒரு புதுமையாகக் கதை மாந்தர்கள் தனித்தனியாகத் தோன்றித் தாம் சம்பந்தப்பட்ட சம்பவங்களை மாறி மாறிச் சொல்லிக் கதையை நகர்த்திச் செல்லும் முறையும் வந்தது. மு.வவின் பெரும்பாலான நாவல்கள் அந்த வகையானவைகளே. அவரின் 'கரித்துண்டு' நாவலும் அப்படியே! அந்த நாவலின் கதாநாயகனின் பெயர் மோகன்; நாயகியின் பெயர் நிர்மலா.

'நெய்க்கு தொன்னை ஆதாரமா அல்லது தொன்னைக்கு நெய் ஆதாரமா?' என்றெல்லாம் ஆராய்ச்சியில் ஈடுபடுவதை விடுத்து அடுத்த கட்டத்துக்குள் நுழைகிறேன்.

★ ★ ★ ★ ★

மோகன் - நிர்மலா இருவருமே சாதாரண மக்களும் ரசித்து மகிழும் வகையில் நகைச்சுவையாக உரையாற்றுபவர்கள். அதிலும் நிர்மலா பூப் பூவாய் வார்த்தைகளைக் கொட்டியது அழகாயிருந்தது. மாணவ - மாணவியர்களைப் பார்த்து அவர்களுக்கு விருப்பமான பூக்களின் பெயர்களைக் கேட்டவர் அதைவிட அவர்களிடம் இருக்கவேண்டிய மூன்று பூக்களாக படிப்பு, பண்பு, உழைப்பு என்பதையும் வலியுறுத்தினார். இன்றைக்கெல்லாம் சில மாணவர்கள் விரும்புகின்ற பூக்களாக குஷ்பு, பிரபு இருப்பதையும் நையாண்டி செய்தார்.

அவர்கள் காதலித்துத் திருமணம் செய்தவர்கள் என்பதை முன்பே குறிப்பிட்டிருந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் அவர்கள் காதலுக்கு மதிப்பு கொடுப்பவர் களாகத்தானே இருக்கவேண்டும்? ஆனால், பெண்கள் மீது இளைஞர்கள் புரிகின்ற சில்மிஷச் சேட்டைகளை (EVE TEASING) நிர்மலா கடுமையாகக் கண்டித்தார். அதற்குப் பதிலடியாகப் பெண்கள் தங்கள் நகங்களை - பற்களைக்கூட பயன்படுத்துவதில் தவறில்லை என்றும் வலியுறுத்தினார்.

நான் சொல்லுகிறேன் - அவர்களுடன் ஒட்டி உறவாடுகின்ற ஊசிகளைக் கூட அதற்குப் பயன்படுத்தலாமே! அதனால் ''பெண்புத்தி 'பின்' புத்தி'' என்பதையும் வெளிப்படுத்தலாம் அல்லவா?

இந்த இடத்தில் திருமதி நிர்மலா மோகன் சொன்ன அந்தச் செய்தியும் சுவையாகவிருந்தது.

பாடசாலைப் பேரூந்துகளில் மாணவ - மாணவியர் நெருக்கி அடித்துக் கொண்டு, பயணிப்பதுண்டல்லவா? தமிழ்நாட்டிலும் அப்படித்தான்.

ஒரு பேரூந்தில் ஒரு மாணவன் அந்த நெருக்கடியைப் பயன்படுத்தி ஒரு மாணவியின் தோளில் இடித்து விடுகிறான்.

மாணவி திரும்பி அவனை முறைத்துப் பார்த்தபோது அவன் ''தடங்கலுக்கு வருந்துகிறோம்'' என வானொலி மொழியில் சொல்லுகிறான். மாணவி தனது ஒரு கால் செருப்பைக் கழற்றிக் கையில் ஏந்தியவாறே சொன்னாள்.

''அடுத்த நிகழ்ச்சி இன்னும் சில வினாடிகளில் தொடரும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கட்டபொம்மன் தமிழன் இல்லை என்று சொன்ன தமிழ்வாணன்!

பல்துறை அறிஞரும் பிரச்சினைக்குரிய எழுத்தாளருமான தமிழ்வாணனைப் பற்றி முன்னரும் குறிப்பிட்டிருந்தேன். ஆனந்த விகடன், கல்கி, போலவே அவரின் 'கல்கண்டு' இதழும் அப்போதெல்லாம் எம்நாட்டிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆனந்த விகடனில் சாவியின் 'வாஷிங்டனில் திருமணம்' நகைச்சுவைத் தொடரும் கல்கியில் அகிலனின் 'பாவை விளக்கு' நாவலும் வெளிவந்தபோது அவையெல்லாம் இங்கு எப்படி, ஆர்வப் பெருக்குடன் பேசப்பட்டதோ அப்படித்தான் கல்கண்டு சம்பந்தப்பட்ட விவரங்களும்...

கல்கண்டு வார இதழ் முப்பத்திரண்டு பக்கங்களைக் கொண்டிருந்ததாக நினைவு. பின் அட்டையில் மட்டும் தொடர்ந்து 'ரெமி' விளம்பரம். மற்றும்படி அதிலுள்ள எல்லா ஆக்கங்களையும் தமிழ்வாணனே எழுதித் தள்ளுவார். பிறரது ஆக்கம் என்று அதிலே இருக்கும் என்றால்... ஒன்று அவர் 'வாசகர் கடிதம்' எழுதியவராக இருக்கவேண்டும் அல்லது அவர் 'என்னைக் கேளுங்கள்' பகுதியில் கேள்வி கேட்டவராக இருக்க வேண்டும். 'என்னைக் கேளுங்கள்' பல பிரச்சினைகளுக்கும் தீர்வு அல்லது விளக்கமளிப்பதாக இருந்ததால் அது ஒரு சிறப்பம்சமென்று சொல்லலாம். அதிலே கறுப்புக் கண்ணாடியுடனான முகம் ரேகைச் சித்திரமாகப் போடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருக்கும். (இப்போது மல்லிகை ஜீவாவின் 'தூண்டில்' பகுதியில் வருவதுபோல) அட்டைப் படங்களையும் கறுப்புக் கண்ணாடியுடனான அவரது பலவிதத் தோற்றங்கள் அலங்கரிக்கத் தவறுவதில்லை.

ஒரு படைப்புடன் கறுப்புக் கண்ணாடியை மட்டும் போட்டாலே போதும் - அதனை எழுதியவர் தமிழ்வாணன் தாம் என்பதற்கு வேறு விளக்கம் வேண்டியதில்லை.

தமிழ்வாணன் தமது பெயருக்கேற்றாற்போலவே முறையாகத் தமிழ் கற்று எழுதியவர். அவருக்கென்றே ஒரு தனி நடையும் இருந்தது. மர்மக் கதைகளைக் கூட 'டுமீல்' என்பது போன்ற சில வார்த்தைகளைத் தவிர தூய தமிழிலேயே எழுதியவர்.

அப்போது ஸ்ரீதரின் வெற்றிப் படமான 'கல்யாண பரிசு' வெளிவந்த காலம்... அதிலே இடையில் 'ப்' வராததையிட்டு தமிழறிஞர்களிடையே வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன. ஸ்ரீதர் 'எண் சோதிடம்' பார்த்தோ அல்லது 'எட்டு' வரக்கூடாது என்பதற்காகவோ தெரிந்துக் கொண்டே அக்கொலையைச் செய்திருக்கலாம். அப்போது தமிழ்வாணன் 'ப்' இல்லாப் படம் (உப்பில்லா பண்டம் என்பது போல) என்று படத்தைப் பற்றியல்ல - தலைப்புப் பற்றிக் கருத்து வெளியிட்டதாக நினைவு... 'கல்யாண' என்பதில் 'அ' ஈறு வருவதால் அதையடுத்து 'ப்' மெய் வரவேண்டும் என்ற இலக்கண விதியை வலியுறுத்தி ஸ்ரீதர் செய்தது குற்றம் குற்றமே என்றார். அவரின் அத்தீர்வு அ'ப்'பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டியதுபோல அமைந்தது.

தமிழ்வாணனைப் பிரச்சினைக்குரிய எழுத்தாளர் எனக் குறிப்பிட்டதற்கான காரணத்திற்கு இனி வருவோம்.

'வீரபாண்டிய கட்டபொம்மன்' திரைப்படம் வெளியாகி கட்டப்பொம்மன் புகழ் பட்டி தொட்டி எங்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரவிய காலம். அச்சமயம் பார்த்துக் கட்டப்பொம்மன் (கட்டபொம்மு) ஒரு தெலிங்கன் - கொள்ளைக்காரன் என்றும் புலித்தேவனே உண்மையான தமிழ் வீரவான் என்றும் தமிழ்வாணன் கருத்து வெளியிட்டுத் தமிழ்நாட்டையே ஒரு கலக்குக் கலக்கி விட்டார்! அது சம்பந்தமான ஆய்வுக் கட்டுரைத் தொடரும் கல்கண்டு இதழில் வெளிவரத் தொடங்கியது. அப்போது கட்டப்பொம்மன் புகழ் பாடித் திரிந்த ம.பொ.சி. போன்றவர்களைக் கூட வாயடைக்கும்படி செய்துவிட்டார். அந்த வகையிலும் தமிழ்வாணன் பெயர் பெரிதாகப் 'பேச'ப்படலாயிற்று.

அவரின் 'கொள்ளைக்காரன் கட்டபொம்மு' கட்டுரைத் தொடரில் தாம் அந்த முடிவுக்கு வந்ததற்கும் அந்த ஆராய்ச்சிக்கு ஆதாரமாக உதவிய நூல்களின் விவரப் பட்டியல் ஒன்றும் அடிக்குறிப்பாகத் தரப்பட்டிருந்தது. அதெல்லாம் பெரும்பாலும் மேல்நாட்டவர்களின் நூல்களாகும். (வெள்ளையனை எதிர்த்த கட்டப்பொம்மனைப் பற்றி அவர்கள் அப்படித்தானே எழுதுவார்கள் என்ற எதிர்வாதமும் அப்பொழுது முன்வைக்கப்பட்டது.)

இன்னொன்று, அவர் வைத்தியம் சம்பந்தமான கருத்துக்களை வெளியிடும்போது இப்படிச் சொன்னார். எண்ணெய் உள்ளே சென்று உடம்பிலே சுவறும் என்பதெல்லாம் சுத்த அபத்தமான எண்ணம் என்றும் உடம்பிலோ தலையிலோ எண்ணெய் - தைலம் என்றெல்லாம் தேய்ப்பது மினைக்கெட்ட வீண்வேலை என்றும் சொன்னார். இக்கருத்துக்கும் அவர் பல சவால்களையும் மறுப்புக்களையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

ஒரு சமயம் நமது சுதந்திரன் குயுத்தியாரிடம் (எஸ்.டி.சிவநாயகம்) கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு தமிழ்வாணனை ''அவர் ஒரு அரைவேக்காடு'' என்று பதிலளிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்வாணன் வைத்தியம் சம்பந்தப்பட்ட விளக்கங்களின்போது அடிக்கடி ''முட்டையை அரை வேக்காடாக (எமது மொழியில் அரை அவியல்) எடுப்பதே சிறந்தது'' என்பார். அதை வைத்துத்தான் அந்தக் கிண்டல். தமிழ்வாணனை குயுக்தியார் இன்னொரு கேள்விக்கான பதிலில் ''கீழ்ப்பாக்கம்'' என்று குறிப்பிட்டிருந்தார். இங்கே அங்கொடை என்றதும் 'அது' நினைவுக்கு வருவதுபோல அங்கே கீழ்ப்பாக்கம் என்றதும் அங்குள்ள அந்தப் பிரபல மனநல வைத்தியசாலை நினைவுக்கு வருவதுண்டு. அப்போது கல்கண்டு அலுவலகமும் கீழ்ப்பாக்கம் நெடுஞ்சாலையில்தான் அமைந்திருந்தது நினைவு கொள்ளத் தக்கது.

சில பேரறிஞர்களும் சில நேரங்களில் பைத்தியக் காரத்தனமாக நடந்து கொள்வதுண்டு. மின்சார விளக்கைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசன் என்ற அறிவியல் அறிஞர் முட்டை ஒன்றை அரைவேக்காடாக அவிக்க விரும்பினார். ஒரு கையில் முட்டையும் மறு கையில் 'வோர்ச்'சுமாக அடுப்புக்கருகே இருந்து விட்டார். தண்ணீர் சுட்டதும் முட்டையை அதற்குள் ஒரு குறிப்பிட்ட நேரம் வரை போட்டு எடுக்க வேண்டும்.

முட்டையை எடுக்க வேண்டிய தருணம் பார்த்து இன்னொருவர், அதை கவனித்துவிட்டு ''என்ன செய்து கொண்டிருக்கிறீங்கள்?'' எனக் கேட்டார். அப்போதுதான் அறிஞர் தெரிந்து கொண்டார் தாம் முட்டைக்குப் பதில் 'வோர்ச்'சை வெந்நீருக்குள் போட்டு விட்டு முட்டையில் நேரம் பார்த்துக் கொண்டிருந்ததை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எண்ணும் எழுத்தும்

கொழும்பிலே வாழ்ந்து வரும் மோகனதாஸ் என்ற எனது நண்பர் ஒரு திறமைசாலி - பொறியியல் பட்டதாரி.

ஆனால் எந்தவொரு தொழிலிலோ பதவியிலோ அவர் தொடர்ந்து நின்று பிடிக்கமாட்டார். அப்படி ஒரு 'ராசி' அவருக்கு! தொழில் வாய்ப்புடன் வெளிநாடு செல்லும் சந்தர்ப்பங்கள்கூட அவருக்குக் கிடைத்ததுண்டு. இருந்தும் எண்ணிச் சில மாதங்களிலேயே ஏதாவது 'நொட்டை' சொல்லிக் கொண்டு தாயகம் திரும்பிவிடுவார்.

இங்கும் அப்படித்தான் பல நிறுவனங்களில் தொழில் புரிந்த 'அனுபவசாலி' அவர். கடைசியாக அவருக்கு அப்படியும் ஓர் அனுபவம்.

அங்குள்ள ஒரு பிரபல தனியார் நிறுவனத்திலே அவருக்கு உயர்பதவி ஒன்று வழங்கப்பட்டது. அதைக்கூடச் சில மாதங்களிலே நிர்வாகத்தினருடன் முரண்டு பிடித்துக் கொண்டு உதறி எறிந்துவிட்டார். நிர்வாகம் தனது கடமையைச் செய்யத் தவறவில்லை. அவருக்குச் சேர வேண்டிய பணிக் கொடையாக ஒரு பெரிய தொகைக் காசோலையை அனுப்பிவைத்தது. அதனை அவர் தமது வங்கிக் கணக்குக்குப் போட்டதும் 'உமது பெயர் எமது பதிவின்படி முரண் படுகிறது' என்ற குறிப்புடன் அது திரும்பிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் அந்த நிறுவனத்திலே சேருவதற்கு முன்னர் எண்சோதிட அடிப்படையில் தமது பெயரின் ஆங்கில உச்சரிப்பிலே சில மாற்றங்களைச் செய்திருந்தார். அது வங்கியில் ஏற்கனவே பதிவுசெய்த பெயர் உச்சரிப்புடன் முரண்பட்டிருந்தது. வேலை பார்த்த நிறுவனத்துக்குச் சென்று மாற்று ஒழுங்குகளைச் செய்வதற்கும் அவரது கௌரவம் இடம் கொடுக்கவில்லை. அதனால் அக்காசோலையைப் பணமாக மாற்றுவதற்கு அவர் சட்டத்தரணி - சத்தியக்கடதாசி என்றெல்லாம் நாய் அலைச்சல் பட்டது ஒரு தனிக்கதை.

எனக்குத் தெரிந்த ரமேந்திரா என்பவர் லொத்தர் விசாவில் அமெரிக்கா செல்வதற்கான அதிர்ஷ்டசாலிகள் பட்டியலில் தெரிவாகியிருந்தார். அவர் இந்த விசாவுக்கு விண்ணப்பிக்கும் முன்னர் தமது பெயரின் ஆங்கில உச்சரிப்பில் சில மாற்றங்களைச் செய்து அதிர்ஷ்டசாலியாகியதும் உண்மைதான். பின்னர் விசா விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும்போது தான் என்ன செய்வது என்ற தடுமாற்றம் ஏற்பட்டது. ஏற்கனவேயுள்ள பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ்கள், தொழில் வழங்கியவரின் பதிவுகள் எல்லாம் வழக்கமான வேறு உச்சரிப்பிலே இருக்கிறதே!

கடைசியில் வேறு வழியின்றி இரண்டு பெயர்களும் ஒருவராகிய தம்மையே குறிப்பதாகவும் முன்னதுதான் சட்டப்படி சரியானதென்றும் சத்தியக் கடதாசி முடிக்க வேண்டியேற்பட்டது. இப்பொழுதும் அவருக்குள்ள கவலையெல்லாம் 'அமெரிக்கன்' அதை ஏற்றுக் கொள்வானா என்பதுதான்.

எந்தவொரு சட்டப் பிரச்சனைக்கும் பிறப்புச் சான்றிதழில் உள்ளதுதான் முடிவானது - சரியானது எனக் கொள்ளப்படும். பெயரை மாற்றுவதென்றால் கூட பிறப்புச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றிதழில்தான் அதனைச் செய்யவேண்டும். மாவட்டப் பதிவாளர் நாயகம் அப்படி திருத்தம் செய்யும் போது முந்திய பெயருக்குப் பக்கத்திலே ஓர் அடையாளப் புள்ளியிட்டு குறித்த பெயர் தாமே செய்து கொண்ட பிரதிக்ஞையின்படி இன்ன திகதியில் அப்படியாக மாற்றப்பட்டுள்ளதாக அடிக்குறிப்பு எழுதியிருப்பார். என்னைப் பொறுத்தவரை அது சான்றிதழின் அழகைக் கெடுப்பதுபோல - குளிக்கப் போய் சேறு பூசிக்கொண்டது போலத்தான் இருக்கும்.

பஞ்சாங்கங்களை எடுத்துக்கொண்டால் திருக்கணிதம் என்ன சொல்கிறது, வாக்கியம் என்ன சொல்லுகிறது என்பதிலே வேறுபாடு இருக்கும். புத்தாண்டு எப்போது பிறக்கிறது, தைவிசேஷம் எப்போது, திருக்கார்த்திகை எப்போது என்பவைகளிலேயெல்லாம் இரண்டுவித கருத்துகள்.

மனையடி அல்லது வாஸ்து சோதிடத்திலேகூட அப்படித்தான். இவர்களில் சிலரை 'இடிசாத்திரிகள்' என்று கூட நம்மவர்கள் அழைப்பதுண்டு. அவர்கள் கட்டிய வீட்டிலே 'பழுது' சொல்பவர்கள். அந்தச் சுவரை இடிக்க வேண்டும்; இந்தக் கதவு - சன்னல்களை இடமாற்றம் செய்யவேண்டும் என்றெல்லாம் புதிய செலவுகளுக்கு வழிசொல்லுவார்கள். இத்தனைக்கும் ஏற்கனவேயும் ஒரு 'வாஸ்து' சொல்லித்தான் வீட்டுக்கு நிலமெடுத்திருப்பார்கள்.

நாட்டுக்கும் இதுதான் கதி. சிலோன் என்பதை 'SRI LANKA' என மாற்றியதுதான் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குக் காரணமாம். இதற்கு இன்னொரு ' A' இறுதியில் சேர்த்து 18இற்குப் பதில் 19 ஆக கூட்டுத்தொகையை மாற்றினால் பகைமை உணர்வு ஒழிந்து நாட்டிலே ஒற்றுமை, சமாதானம் ஏற்பட வழியுண்டு என்று ஒருவர் கருத்துக் கூறியது நினைவுக்கு வருகிறது. இதையெல்லாம் நினைக்கும்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கணிதம், வாக்கியம், இடிசாத்திரம் என்பது போல எண்சோதிடத்துக்கும் இன்னொரு பக்கம் - முகம் என்றிருந்தால் நன்றாகவிருக்கும் எனத் தோன்றுகிறது. பெயர் மாற்றம் என்று அலைபவர்களின் எண்ணிக்கையை ஓரளவுக்கேனும் மட்டுப்படுத்தலாமல்லவா?

ஒருவன் குருவிடம் சோதிடம் கற்று வந்தான். அன்றுதான் அவனுக்குக் கடைசிப் பாடம்.

பாடம் முடிந்ததும் குரு அவனிடம் சொல்லுகிறார்.

''எல்லாம் சரிதான் இறுதியாக இனித்தான் நான் உனக்கு முதல் பாடத்தைச் சொல்லி முடிக்கப்போகிறேன்.''

மாணவன் குருவை வியப்புடன் பார்த்தான்.

குருவானவர் சொன்னார்: ''அதாவது யார் குறிப்புக் கொப்பிகளைத் தூக்கிக் கொண்டு உன்னைத் தேடி வருகிறாரோ அவருக்குக் கெட்ட காலம் பிறந்துவிட்டது என்பதை நீ புரிந்து கொள்ள வேண்டும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மதுவிலும் 'மருந்து'ண்டாம்

பலரும் அறிந்திருக்க வேண்டிய துணுக்கு இது.

ஆசிரியர் ஒருவர் வகுப்பிலே செயல்முறைப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மேசையிலே இரண்டு கண்ணாடிக் குவளைகள். இரண்டிலுமே சில நீர்ப் பாம்புகளைப் போட்டார். ஒன்றிலே சிறிதளவு தண்ணீர். மற்றதில் அதேயளவு சாராயம் விட்டார். தண்ணீருக்குள் போட்ட நீர்ப் பாம்புகள் உயிருடன் நெளிவதையும் சாராயத்தில் விடப் பட்டவைகள் இறந்துவிட்டதையும் மாணவர்களுக்குக் காட்டி விட்டு ''இதிலிருந்து என்ன தெரிகிறது?'' என்று கேட்டார்.

அவர் எதிர்பார்த்த பதிலுக்கு மாறாக ஒரு மாணவன் சொன்னான். ''சாராயத்தைக் குடித்தால் நமது வயிற்றிலுள்ள பூச்சி புழுக்கள் எல்லாம் இறந்துவிடும் என்பது தெரிகிறது.''

அந்த மாணவன் சொன்னதை ஏற்கமுடியாது, என்றாலும் மது வகைகளில் ஓரளவு மருத்துவப் பயன்களும் இருக்கலாம் என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது போலிருக்கிறது.

இருதயசிகிச்சை நிபுணர்களில் ஒருவரான டாக்டர் சாந்தராசா அவர்கள், நரம்புகளில் கொலஸ்ரோல் என்ற கொழுப்புப் படிவங்கள் உருவாகுவதைத் தடுக்கும் சக்தி மதுவகைகளிலும் ஓரளவுக்கு இருக்கிறது என்றும், ஆனால் தாங்கள் அதை 'மருந்து' போலப் பாவிக்கும்படிகூட எவருக்கும் பரிந்துரைப்பதில்லை என்றும் சொல்லுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே அதைச் சாட்டாக வைத்துக்கொண்டு எவரும் 'பெருங்குடி'மகனாக மாறிவிடக்கூடாது என்பதுதான் அதற்குக் காரணமாக இருக்கும். பின்னர் அதே நோயாளிக்கு ஈரல் அழிவுக்கு (cirrhosis of liver) வைத்தியம் பார்க்க வேண்டியும் போகலாம்.

ஒரு சமயம் வானொலி 'நலமாக வாழ்வோம்' நிகழ்ச்சி ஒன்றிலே இன்னோர் இருதய வைத்தியர் குடிதான் மாரடைப்பு நோய்க்கு முதற்காரணம் என்பதை மறுப்பதுபோல ஒரு கருத்தைச் சொன்னார்.

அதற்கு உதாரணமாக அப்போது காலமான ஒரு புகழ்பெற்ற கல்விமானைக் குறிப்பிட்டு, 'அவர் அந்த வயது வரை வாழவில்லையா?' என்றும் கேட்டார்.

சிறுநீரகக் கல் (renal colic) சம்பந்தப்பட்ட நோய்களுக்கும் பியர், ஜின் போன்றவைகளை மருந்துபோலப் பாவிக்கலாம் என்று சொல்வதுண்டு.

ஆனால், கல்லைக் கரைப்பது போல சிறுநீரகத்தையும் அவை அறுத்துவிடாது என்பதற்கு என்ன உத்தரவாதம்?

எனக்குத் தெரிந்த பழம்பெரும் சித்தவைத்தியர் ஒருவரின் நினைவு வருகிறது. அவர் இதுபோன்ற நோய்களுக்கு பல மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டு ஒரு போத்தலில் கால்பாகம் வரை கொள்ளக்கூடிய சூரணம் செய்து கொடுப்பதுண்டு. அதற்குள் அரைப்போத்தல் சாராயத்தை. விட்டு நன்றாகக் குலுக்கிவிட்டு அடுத்த நாளிலிருந்து தினமும் ஒரு குறிப்பிட்ட அளவு அந்தத் தெளிவை எடுக்கும்படி சொல்லுவார். முடிந்ததும் பிறகும் அந்தக் கரைசலுக்குள் இன்னும் ஓர் அரைப் போத்தல் சாராயத்தை அப்படி விட்டுக் கலக்கிவிட்டு இன்னொரு சுற்று எடுக்கச் சொல்லுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளுப் பானைக்குள் இறந்து கிடக்கும் வண்டு குளவி போன்றவைகளை வடித்தெறிந்து விட்டு இன்னொருவர் பாவித்த பிளாவில் கள்ளைப் பெற்றுத் 'தாகசாந்தி' செய்கிறவர்களுக்கு ஒன்றும் நடப்பதில்லையே! அவர்கள் ஆரோக்கியமாக வேறு இருக்கிறார்களே அதற்குக் காரணம் என்ன? கள்ளில் இருக்கக்கூடிய 'மஸ்து' கிருமிநாசினி - நோய் எதிர்ப்புச் சக்தியாகவும் பயன்படுகிறதோ? நானும் குடிப்பதில்லை; நீங்களும் குடிப்பதில்லை.

மது எதிர்ப்புக்கு எதிராகவும் நான் இந்த கருத்துக்களைச் சொல்லவரவில்லை. நினைக்கச் சிந்திக்கத்தான் முடியா விட்டாலும் சிரிக்கவாவது உதவட்டுமே என்பதற்காகத்தான் இவ்வளவையும் சொன்னேன்.

மருந்துகளைப் பொறுத்தவரைக்கும் இப்படித்தான் நுண்ணுயிர்க் கொல்லி (antibiotic), உடல்வலியைப் போக்கும் (pain killer) மருந்துகள் நோய்களுக்கு நிவாரணம் கொடுப்பதுடன் கூடவே பல பக்க விளைவுகளுக்கும் காரணமாகிவிடுகின்றன.

அதனால் அவைகளைப் பாவிக்கும் போது அதன் பக்கவிளைவுகளைத் தவிர்ப்பதற்காகவே கூடவே 'விற்றமின்' போன்ற வேறு மருந்துகளையும் அதனோடு பாவிக்க வேண்டும் என்பார்கள். அப்படியிருந்தும் அந்த பக்க விளைவுகளால் முன்கண்ட நோயாளர்கள் பல புதிய நோய்களுக்கும் ஆளாவதுண்டாம்.

எடுத்துக்காட்டாக சிறுநீரகக் கோளாறு, குடற்புண், வயிற்றுப்புண்....

எப்போதோ படித்த ஒரு துணுக்கு இந்த இடத்திலே எனக்கு நினைவுக்கு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இரசாயன ஆய்வு கூடம். அத்துறை சார்ந்த ஆய்வாளர்கள் சிலர் கண்ணாடிக் குவளைகள், சோதனைக் குழாய்களுடன் ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறார்கள். ஒரு முதியவர் தப்பித் தவறியோ என்னவோ அங்கு வந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்.

கடைசியாக ''என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று அவர்களைக் கேட்கிறார்.

அதற்கு அவர்களில் ஒருவர் பெருமையுடன் சொல்லுகிறார்: ''எந்தவொரு திடப்பொருளையும் கரைக்க வல்ல ஒரு திரவத்தை கண்டுபிடிக்கப்போகிறோம்.''

முதியவர் சிறிது நேரம் யோசித்து விட்டு இப்படிக் கேட்டார்.

''சரிதான்... நீங்கள் கண்டுபிடிக்கப்போகின்ற அந்தத் திரவத்தை எந்தக் கொள்கலத்தில் வைத்திருக்கப் போகிறீர்கள்?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அறிவுரை கூறவும் ஒரு தகுதி வேண்டும்

வயதான தந்தை வீட்டுத்திண்ணையில் இருப்பது மகனுக்குப் பிடிக்கவில்லை. அவரை அழைத்துக் கொண்டு போய் வீட்டுக்குப் பின் புறமுள்ள ஒரு மாட்டுக் கொட்டகையில் தங்கவைத்தான். ஒரு சங்கையும் அவர் கையில் கொடுத்து ''சாப்பாடு, தேநீர் தேவைப்படும்போது சங்கை ஊதினால் எல்லாம் வரும்'' என்றான். அதன்படி எல்லாம் நடந்துவந்தது.

ஒருநாள் திடீரென்று சங்கு காணாமற் போய்விட்டது. எல்லா இடங்களிலும் தேடியும் கிடைக்கவில்லை. ''அப்பா, தாத்தாவிடம் இருந்த சங்கை நான்தான் எடுத்து வைத்திருக்கிறேன்'' என்றான் ஏழு வயதான மகன்.

''உனக்குச் சங்கு எதற்கு?'' என்று தகப்பன் கேட்க மகன் சொன்னான். ''நீங்கள் தாத்தா மாதிரி ஆனதும் உங்களுக்குக் கொடுக்க ஓர் சங்கு வேண்டுமல்லவா? அதற்குத்தான்.''

இ.சிறிஸ்கந்தராசா தொகுத்த 'பல்சுவை மணிகள்' நூலில் வருகின்ற ஒரு துளிக்கதைதான் மேலேயுள்ளது. இதேபோன்ற கதை கி.ராஜநாராயணன் தொகுத்த 'கிராமியக் கதைகள்' தொகுதியிலும் வருகிறது.

அதிலே சங்குக்குப் பதில் மண்சட்டி வருகிறது. ஒரு நாள் வழக்கம்போல கஞ்சியை ஊற்றவந்தவர் '' சட்டியை எடு'' என்றபோது அது காணாமற் போயிருந்தது. கிழவனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன் தந்தையிடம் அதைத் தாமே எடுத்துப் பத்திரப்படுத்தி வைத்திருப்பதாகச் சொல்லி 'அந்த பதிலை'ச் சொல்லுகிறான். கதையின் தலைப்பு 'அப்பன் குடித்த சட்டி பிள்ளைக்கு' என்பது.

இன்று ஒருவர் செய்கின்ற வினை பின்னர் அவரையும் சூழும் என்பதற்கான எடுத்துக்காட்டுகள் இவை.

ஒரு சமயச் சொற்பொழிவாளர் பற்றிய கதை இது. அவர் கொல்லாமை பற்றியும் புலால் மறுத்தல் பற்றியும் மிகவும் உருக்கமான முறையில் பேசுவாராம். ஒரு முறை அவரது மனைவியும் கூட்டத்திலிருந்து கேட்டு உள்ளம் உருகினாள்.

அடுத்த நாள் நண்பகல் அவருக்கு உணவு பரிமாறப் படுகிறது. அவர் எதிர்ப்பார்த்த அந்தக் 'கறி' இல்லாததைக் கவனித்தவர் ''எங்கே? அடைத்து வைத்த அந்தக் கோழிக்கு என்ன நடந்தது?'' என்றார்.

''உங்கள் சொற்பொழிவைக் கேட்டதிலிருந்து எனக்கு அந்தப் பாவத்தைச் செய்வதற்கு மனம் இடம் தரவில்லை. கூடையைத் திறந்து கோழியைக் கலைத்து விட்டேன்'' என்றாள்.

திடுக்குற்ற பிரசங்கியார் ''அடி அசடே அதெல்லாம் ஊருக்கடி... உனக்கல்ல...'' என்றாராம்.

இது, சொல்லுவது ஒன்று செய்வது இன்னொன்று என்பதற்கான எடுத்துக்காட்டு.

தென்கச்சி கோ. சுவாமிநாதன் சொல்லுகின்ற இன்னொரு கதை வருமாறு:

ஒரு பெரியவரிடம் ஒரு பெண் தனது பிள்ளையைத் தூக்கிக் கொண்டு வந்தாள். ''ஐயா என் பிள்ளை எப்போதும் இனிப்புச் (சீனி) சாப்பிடுகிறான். தடுக்க முடியவில்லை. நீங்கள் தான் அவனுக்கு நல்ல புத்தி கூற வேண்டும்'' என்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர் சிறிது நேரம் யோசித்து விட்டு ''சரி நீ போய் ஒரு வாரம் கழித்து வா'' என்று கூறி அவளை அனுப்பி வைத்தார்.

போனவள் மீண்டும் பிள்ளையுடன் வந்தாள். பெரியவர் அந்தப் பிள்ளையிடம் இனிப்புச் சாப்பிடக் கூடாது என்று நிறையப் புத்திமதி கூறியதுடன் தாயாரிடம் ''இனி அப்படிச் சாப்பிடமாட்டான்'' என்று ஆறுதல் கூறினார்.

அந்த அம்மாவுக்கு ஒரு சந்தேகம்: ''இப்பொழுது சொன்ன புத்திமதிகளை ஒரு வாரத்துக்கு முன்பே சொல்லி யிருக்கலாமே! ஏன் ஒரு வாரம் கழித்து வரும்படி சொன்னீர்கள்?'' என்றாள்.

அதற்கு பெரியவர் சொன்னார். ''ஒரு வாரத்துக்கு முன்வரை நானும் இனிப்புச் சாப்பிட்டு வந்தேன். இந்த ஒரு வார காலத்திற்குள் அந்தப் பழக்கத்தை நான் கொஞ்சம் கொஞ்சமாக விட்டு விட்டேன். இப்பொழுது முற்றாக விட்டுவிட்டேன். அதனால் இப்பொழுதுதான் அந்த அறிவுரையைச் சொல்லக்கூடிய 'தகுதி' எனக்கு வந்திருக்கிறது.''

அறிவுரையைக் கூறுபவருக்கு முதலில் அதற்கான தகுதி வேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டு இது!

கவியரசு கண்ணதாசனை இதற்கெல்லாம் விதிவிலக்காகக் கொள்ளலாம் போலிருக்கிறது. அவர் தம்மளவில் பல 'தவறு'களைச் செய்தாலும் தம்மை ஒறுத்துக் கொள்வதுபோல நடந்து கொண்டு தமது பேச்சாலும் எழுத்தாலும் மக்களை நல்வழிப்படுத்தியுள்ளார். அது பற்றி பின்னொரு சமயம் எழுதுவேன்.

இந்த முறை மற்றவர்களின் கதைகளைச் சொல்லியே - நான் அதிகமாக மூக்கை நுழைத்துக் கொள்ளாமலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைச் சிந்திக்க வைத்திருக்கிறேன். கதையோடு கதையாக இதற்குப் பொருத்தமாக இன்னொரு கதை - இதனை பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் ஒரு நினைவுச் சொற்பொழிவினிடையே கூறியிருந்தார்.

மதகுரு ஒருவர் கிராமம் ஒன்றுக்கு சொற்பொழிவாற்ற வென்று சென்றிருந்தார். இடையிலே அவருக்குத் தபாற் கந்தோருக்குச் செல்லவேண்டியிருந்தது. தெருவிலே இறங்கி ''கந்தோர் எங்கிருக்கிறது? அதற்கு எப்படிப் போவது?'' என்று எதிர்ப்பட்ட ஒரு சிறுவனிடம் வழிகேட்டார்.

சிறுவன் எப்படி எப்படியெல்லாம் அந்தத் தெருவால் திரும்பி வளைந்து செல்லவேண்டும் என்று அவருக்குப் புரிந்து கொள்ளும் வகையில் வழிகாட்டினான்.

மதகுரு அவனுக்கு நன்றி சொல்லிவிட்டு அன்று மாலை நடைபெற விருக்கும் அந்தக் கூட்டத்திலே அவனும் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதிலே தாம் 'சொர்க்கத்துக்குப் போவதற்கான வழி' பற்றிச் சொற்பொழி வாற்றப் போவதாகவும் கூறினார்.

சிறுவன் அலட்சியமாகப் பதில் சொன்னான். ''பக்கத்திலேயுள்ள தபாற் கந்தோருக்கே வழி தெரியாத நீங்கள் சொர்க்கத்துக்குப் போவதற்கு எப்படி வழிகாட்டப் போகிறீர்கள்!''

போதகருக்கு எப்படி இருந்திருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இடறி விழுந்தால்... அங்கே ஒரு சமாதான நீதிவான்

பேராசிரியர் 'கல்கி' ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமது 'இலங்கைப் பயணம்' பற்றிய நூலிலே ''யாழ்ப்பாணத்தில் இடறி விழுந்தால் ஒரு உபாத்தியாயர் அல்லது கல்விமான்கள் மீதுதான் விழுவோம்'' என்கிறார்.

இப்பொழுது, அப்படி யாராவது இங்கு வந்து இடறிவிழுந்தால் ஒரு சமாதான நீதிவான் அல்லது அதற்காக அலைந்து திரிபவர் மீதுதான் விழ வேண்டியிருக்கும்.

சென்ற ஆட்சிக்காலத்திலே ஒருமுறை ஒரு வாரத்திலே இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்குச் சமாதான நீதிவான் பட்டங்கள் வழங்கப்பட்டிருப்பதாக வர்த்த மானியில் அறிவித்தல் வந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் வேலை வாய்ப்புகளுக்காகவும் பசுமாட்டுக் கடன்களுக் காகவும் ஓர் அரசியல்வாதியிடம் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொண்டவர்களாம். இப்படியெல்லாம்கூட அப்பொழுது பேசிக்கொள்ளப்பட்டது.

ஏதோ அதுவாவது கிடைத்ததே என்று அவர்களில் சிலர் அமைதியடைந்தார்களாம். இன்னும் சிலரோ தாம் கேட்டதைவிடப் 'பெரிய பேறு' கிடைத்துவிட்டதாகப் புளகாங்கிதம் அடைந்தார்களாம். பண்டைத் தமிழகத்திலே விழுப்புண் படாதவர்களை வீரர்களாகக் கருதுவதில்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் விழுப்புண் படாது இறந்துபடும் ஆண் மகனுக்கு இறந்த பின்னராவது அப்படி ஒரு விழுப்புண்னை மார்பிலே ஏற்படுத்தி அவனுக்கு இறுதிச் சடங்கை முடிப்பார்களாம். அதன் பின்னர் அந்த ஆத்மா வீர சொர்க்கம் அடையும் என்பது அவர்களின் நம்பிக்கை. இங்குள்ள நம்மவர்களுக்கும் அப்படி ஓர் ஆசை...

மரண அறிவித்தல் போன்றவைகளில் சொல்லிக் கொள்வதற்கு கனடா, நோர்வே, சுவிஸ், லண்டன் என்று உறவுகள் இருக்க வேண்டும் என்பது போன்று கூடவே ஒரு 'ஜே.பி'யும் இருக்கவேண்டும் என்பது அவர்களின் விடுதல் அறியா விருப்பமாகும். சிவப்பேறு அடைவதற்கு அதெல்லாம் உதவுமா?

சமயப்பெரியாரான ஸ்ரீ. செ.சிவஞானம் ஐயா அவர்கள் ஒரு கதை கூறுவாராம்.

அகில இலங்கைக்கும் ஜே.பி யான ஒருவர் தமது சாதனைகளைக் கூறும் செய்தித்தாள்களின் வெட்டுத்துண்டுகள் போன்றவைகள் அடங்கிய கூடையுடன் சொர்க்கவாசலை அடைகின்றார். வாசலில் நின்ற காவற்காரன் கூடையுடன் உள்ளே அனுமதிக்க மறுத்து அவரின் இதயத்தைச் சோதிக்க வேண்டும் என்று நெஞ்சத்தை திறக்கச் சொல்லுகிறான். சோதனையின் பின் சொல்லுகிறான். "மைடியர் சேர், உங்கள் இதயத்தில் கறுப்புப் புள்ளிகள் இருக்கின்றன. அவற்றுடன் நீங்கள் இந்த வாசலைத் தாண்ட முடியாது. அடுத்த முறை வந்து உங்களுக்கு அதிர்ஷ்டம் உண்டா என்று பாருங்கள்." அடுத்த முறை என்றால் அடுத்த பிறவி.

கொழும்பிலே கடவுச்சீட்டுகள் வழங்கும் குடிவரவு குடியகல்வு அலுவலக வழி நீளம் பல சமாதான நீதிவான்கள் உத்தியோக முத்திரையும் கையுமாக வீற்றிருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு ஆட்களைப் பிடித்துக் கொடுப்பவர்களாக ''ஜே.பி. சைன்... ஜே.பி.சைன்'' எனக் குரலெழுப்பியவாறு பல நடைபாதை முகவர்கள் செயல்படுவார்கள். ஆளைத் தெரியாவிட்டாலும் அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ்களை ஆதாரமாகக் கொண்டு பணத்துக்காக அவர்கள் கையொப்பமிடுகிறார்கள். அதிலே முகவர்களுக்கும் தரகுப் பணம் கிடைக்கும்.

இங்கே என்னவென்றால் சமாதான நீதிவான்கள் பட்டம் பெற்று பாராட்டு விழாவையும் தங்கள் செலவிலேயே நடத்திவிட்டு எந்தவித உதவிகளையும் எதிர்பாராது 'சேவை'க்கே தம்மை அர்ப்பணித்துவிட்ட சிலருக்கோ 'கையொப்பத்துக்கு யாரும் வரக்காணோமே' என்ற ஆதங்கமாம்.... அதற்கு ஒரு காரணம் நான் முன்னர் குறிப்பிட்டதுபோல இடறிவிழும் இடங்களிலெல்லாம் சமாதான நீதிவான்கள்... அவர்களை அவமதிப்பது போல அமையக் கூடும் என்பதால் அடுத்த காரணங்களை இங்கே நான் குறிப்பிடவில்லை.

ஒருவர் வங்கியில் (தனியார் கடை என்றும் வைத்துக் கொள்ளலாம்) அடகு வைத்து அதற்குரிய சீட்டையும் பணத்தையும் நகை உரிமையாளரிடம் ஒப்படைக்கிறார். பின்னர் அதை மீட்பதற்கு 'அடகு வைத்தவரைக் காணவில்லையே என்ன செய்யலாம்?' என்று உரிமையாளர் வங்கிக்குச் சென்று விசாரிக்கிறார். அங்கே அடகு வைத்தவர் சீட்டுத் தொலைந்துவிட்டதாகச் சமாதான நீதிவான் மூலமாக சத்தியக் கடதாசி முடித்து நகைகளை மீட்டுக் கொண்டு போய்விட்டதாகச் சொல்லப்படுகிறது.

சாட்சிக் கையொப்பமிடும் சமாதான நீதிவானுக்கு ஆளைத் தெரிந்தால் மட்டும் போதாது. அவர் 'குழப்படி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவில்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

ஒரு புகழ்பெற்ற குடும்பத்திலே ஒரு கிளை போன்றவர் அந்த அச்சக உரிமையாளர். அவருக்குச் சமாதான நீதிவான் பட்டம் கிடைத்தது, அதையொட்டி ஒரு வரவேற்புபசார விழா அப்போது நடைபெற்றது. அந்தக் குடும்பமே பூரிப்புடன் கலந்துக் கொண்ட அவ்விழாவிலே இன்னொரு கிளை போன்ற அப்பிரமுகரின் தம்பியாரை மட்டும் காணமுடியவில்லை. இவருக்கு முன்னரே அவருக்கும் சமாதான நீதிவான் பட்டம் கிடைத்து விட்டது- அவர் ஒரு ஆசிரியர்.

அந்த விழாவிலே அமரர் நாவேந்தனும் கலந்து சிறப்புரையாற்றியவர். விழா முடிவிலே அவரிடம் 'அது' பற்றிக் கேட்டேன். அதற்கவர் ''அவர்கள் ஒருவருக்கொருவர் பகையாளர்கள் - கதைப்பதில்லை'' என்றார்.

எனக்கது பெருவியப்பாக இருந்தது. சமாதான நீதிவான் என்பதிலே சமாதானமும் இருக்கிறது - நீதியும் இருக்கிறது. ஆனால் சில சந்தர்ப்பங்களில் இரண்டையும் தேடிக் கண்டுபிடிக்க நேரிடுகிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கண்ணதாசனுக்குப் பிடித்த அந்த மூன்று பெண்கள்...

மது - மாது இரண்டிலுமே மிகவும் பலவீனமானவர் கவியரசு கண்ணதாசன். ‘கோப்பையிலே என் குடியிருப்பு ஒரு கோலமயில் என் துணையிருப்பு’ என்றவர் அவர்.

‘ஓர் கையில் மதுவும் ஓர்கையில் மங்கையரும்
சேர்ந்திருக்கும் வேளையிலே ஜீவன் பிரிந்தால்தான்
நான் வாழ்ந்த வாழ்க்கை நலமாகும்; இல்லையெனில்
ஏன் வாழ்ந்தாய் என்றே இறைவன் எனைக்கேட்பான்’

என்று அந்தவாறு தாம் வாழ்ந்ததற்கும் இறைவனைச் சாட்சிக்கு வைத்துக் கொண்டு சொன்னவரும் அவரே!

போதை போதாது என்பதற்காக ஒரு காலத்தில் அவர் தமக்குத் தாமே ‘பெதடின்’ ஊசி போட்டுக் கொண்டவராம்.

சிவப்பு விளக்குப் பகுதிக்குச் சென்று வந்த அந்த அனுபவத்தை ஓரிடத்திலே அவர் சொல்லியிருக்கிறார். சென்றவிடத்திலே, நமது ஊடகங்களின் பாணியிலே சொல்வதாயிருந்தால் ‘களேபரம்’ ஏற்பட்டு எல்லாரும் தலைதெறிக்க ஓடி வந்தார்களாம். அப்பொழுது கூட அவரது இளமைக்கால ‘அந்த நண்பர்’ அதற்கு அச்சவாரமாகக் கொடுத்த பணத்தைத் திரும்ப வாங்கிக்கொண்டுதான் வந்தாராம்.

அதையெல்லாம் கிளறிக் கவிஞரின் கௌரவத்தையும் மதிப்பையும் குறைத்துக் கொள்வதாக யாரும் கருதிவிடக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது. இவைகளும் பின்னால் வரப்போகின்ற அவரைப் பற்றிய தகவல்களும் பல்வேறு சமயங்களில் அவரே வெளியிட்டவைகள்தாம்.

''என் தந்தை குடிக்க மாட்டார்; வேறு பெண்களை ஏறெடுத்துப் பார்க்க மாட்டார்; ஆனால் சீட்டாடுவார். நானோ சீட்டு மட்டும் ஆட மாட்டேன்.'' - இப்படிச் சொன்னவரும் (அர்த்தமுள்ள இந்துமதம்) அவர்தாம்!

கற்பொழுக்கம் களவொழுக்கம் என்பதுபோல பரத்தையர் பிரிவு என்பதும் பண்டைத் தமிழகத்திலேயே இருந்தவைதாம். கண்ணகி இருக்கும்போது கோவலன் மாதவிபாற் சென்றதும் அதற்கொரு சான்று. கண்ணகிக்கு பின் தூங்கி முன் எழுந்து கோவலனுக்கு பணிவிடைகள் செய்து 'புட்டு அவித்து'க் கொடுக்கத் தெரிந்த அளவுக்கு அவனின் கலையுணர்வுக்கு மதிப்பளிக்கத் தெரியவில்லை. அதனால் அதெல்லாம் நிரம்பப்பெற்ற ஆடல், பாடல், அழகுக்குரியவளான மாதவியின்பால் அவனின் கவனம் சென்றிருக்கிறது. கவிஞரும் பழந்தமிழ்ப் பண்பாட்டிலும் இலக்கியங்களிலும் பரிச்சயமானவர்தாமே! கன்னிப் பெண்ணையோ குடும்பப்பெண்ணையோ களங்கப்படுத்துவது தவறுதான். 'அதற்கென்றி'ருப்பவளிடம் போவதில் தப்பில்லை என்று நினைத்தவர் கவிஞர்...

இப்பொழுது 'பெரிய இடத்து' விவகாரங்களில் சின்ன வீட்டுச் சமாச்சாரங்களும் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கோகிலா மகேந்திரன் எழுதிய நாவல் ஒன்றில் இந்த விவகாரம் வேறொரு முறையில் சொல்லப்படுகிறது. கதாநாயகி கணவன் இருக்கக்கூடியதாக இன்னொரு இளைஞனுடன் பழகிவருகிறாள். முன்னவருடைய உறவைப் பற்றிக் கூறுமிடத்து Sex without love என்றும், பின்னவரைப் பற்றிக் குறிப்பிடுகையில் Love without sex என்றும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சில சொல்லக்கூடாத வார்த்தைகளைத் தமிழில் சொல்வதை விட ஆங்கிலத்தில் சொல்லுவது நாகரிகம் போலிருக்கிறது. அதனால் இதற்கு நானும் தமிழாக்கம் தர விரும்பவில்லை)

கவிஞரது சொந்த வாழ்வை நினைவுபடுத்தி 'அவருக்கு உபதேசம் செய்வதற்கான பக்குவமோ, தகுதியோ கிடையாது' என்று அவரை யாரும் ஒதுக்கியதில்லை. அந்தப் 'பட்ட'றிவினால்தான் அவருக்கு அப்படி ஒரு 'பக்குவம்' வந்திருக்குமோ என்றுதான் எண்ணவேண்டியுள்ளது. அதனால் இனியும் அந்த வகையில் யாரும் 'பட்டு' 'அறிய' வேண்டியதில்லை. எல்லாருக்குமாகச் சேர்த்துத்தான் அவர் தம்மளவில் பல தவறுகளைச் செய்து தம்மை ஒறுத்துக் கொள்வது போல நடந்து மக்களை நல்வழிப்படுத்தி விட்டாரே! கோகுலத்துப் பெண்களுடன் லீலா விநோதங்கள் புரிந்த கண்ணன்தான் கீதோபதேசம் செய்தவர். வெறும் முத்தையாவாக இருந்தவர் கண்ணனுக்குத் தாசனாகி கண்ணதாசனான கதையும் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

கண்ணதாசனின் 'அர்த்தமுள்ள இந்து மதம்' போன்ற நூல்களும் அது சம்பந்தமான உரைகளும் மடாலயங்கள் கூட செய்திராத பணிகளை மக்களுக்குச் செய்தன.

அதிலும் அவர் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதை வலியுறுத்துமாற்போல இளைய சந்ததியினருக்குச் சொல்லிய கருத்துக்கள் மிகவும் அற்புதமானவை - அத்தனையும் தத்துவ முத்துக்கள்.

''ஆயிரம் பெண்மை மலரட்டுமே அதை ஆயிரம் கண்கள் ரசிக்கட்டுமே... ஒருத்தியின் நெஞ்சம் ஒருவனுக்கென்றே சொல் சொல் சொல் தோழி'' என்பது அவரது கவிதை வரிகள். பெண்களின் அழகை ரசிப்பதுகூடத் தவறில்லை. ஆனால் அங்கே 'ஒருவன் - ஒருத்தி' என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்புநிலை பேணப்பட வேண்டும் என்கிறார். (ரசிக்கத்தானே அழகு?)

இளைஞர்கள் தங்களுக்கு வரவேண்டியவர்களைப் பற்றியெல்லாம் பெரிய பெரிய கற்பனைகளில் மிதந்திருப்பார்கள் (மறுபக்கம் என்று பார்க்கும்போது இளம் பெண்களும்தாம்) வருபவள் எப்படியெல்லாம் அழகாகவும் தனக்குப் பொருத்தமாகவும் இருக்கவேண்டும் என்றெல்லாம் கனவு கண்டுகொண்டிருப்பான். இறுதியில் கிடைப்பதோ அவரவர் விதிப்படிதான். இவர்களுக்கெல்லாம் கவிஞர் சொல்லுவார். ''விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பு.'' வேண்டுமானால் அவன் அவளை அந்த - கனவுக் கன்னியை நினைத்துக்கொண்டு இவளை... 'அவள்தான் இவள்' என்று...

கண்ணதாசனுக்குப் பெண் பார்க்கும் ஏற்பாடு ஒரு கோயில் வீதியில்தான் அரங்கேறியதாம்... அதற்காக மூன்று அழகும் இளமையும் பொருந்திய பெண்களைத் தெரிவு செய்து வீதியில் வைத்துக் கொண்டு, இவரை அவர்களுக்கு எதிராக அழைத்து வந்தார்கள்.

கவிஞரை அழைத்து வந்தவர்களில் ஒருவர் அவரைப் பார்த்து மெதுவான குரலில் ''அதோ... அந்த மூவரில் உனக்கு யாரைப் பிடித்திருக்கிறது? சொல் பார்க்கலாம்...'' என்றார்.

கவிஞர் அழகில் ஒருவரையொருவர் மிஞ்சும் அவர்களைப் பார்த்துவிட்டு ''மூவரையுமே எனக்குப் பிடித்து விட்டது'' என்றாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மழையும் குடையும் கொடையும்

மழைக்காலம் என்றதுமே குடையின் நினைவும் குடையைத் தேடுகின்ற தேவையும் ஏற்படுகின்றதல்லவா? குடைகளிலும் ஆண், பெண் என்று இருந்தது. பெரியதும் முழுக்குடை எனப்படுவதுமானது ஆண்களுக்குரியது. சிறிய அரைக் குடைக்குப் பெயரே லேடீஸ்குடைதான். இப்பொழுதெல்லாம் போக்குவரத்து நெருக்கடிகளைக் கருதியும் மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இருக்கக்கூடாது என்பதற்காகவும் எல்லாருமே அநேகமாக லேடீஸாகி விட்டார்கள். சாத்துப்படிக்கு பிடிப்பது போல முழுக் குடையுடன் திரிபவர்கள் வேடிக்கைக்குரியவர்களாகி விட்டார்கள்.

சின்னக்குடை தலையை மட்டும்தான் காவாந்து பண்ணக்கூடியது. 'சீறும் புயலும் மழையும் சேர்ந்தால் சின்னக் குடை தாங்காதே' என்ற 'தேவதாஸ்' படப் பாடல் அதற்கு மிகவும் பொருத்தமானதே.

மழைக்காலம் அல்லது மழைவருகின்ற அறிகுறிகள் தெரிந்தால் வெளியே செல்லும்போது குடையும் கையுமாகச் செல்லுவது நல்லதுதான். ஆனால், போகின்ற இடங்களிலே குடையை மறந்து விட்டு வருகின்ற அவலங்களுமல்லவா இதிலே இருக்கிறது! முச்சக்கர வண்டி அல்லது வேறு வாகனங்களில் பக்கத்தில் குடையை வைத்துக்கொண்டு பயணம் செய்வோம்; இறங்கும்போது குடை நினைவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காது. அலுவலகங்கள், கடைகளுக்குள் நுழையும்போது குடையை வெளியே சாத்திவிட்டு உள்ளே செல்வோம். அங்கிருந்து வெளியேறும்போது குடையை மறந்துவிட்டு வீடு வரையே வந்து விடுவோம். பின்னர் நினைவு வந்து அங்கே சென்று பார்த்தால் பெரும்பாலும் குடையிருக்காது. யாரோ ஒரு புண்ணியவானுக்கு அது நன்கொடையாகப் போயிருக்கும்.

இதற்கெல்லாம் ஒரே தீர்வு மழை பெய்து கொண்டிருக்க வேண்டும். பெருமழை என்றில்லாவிட்டாலும் சும்மா 'சிணுங்கல்' மழையாவது தொடர்ந்து கொண்டிருக்க வேணும். அப்படியென்றால் குடையை மறந்து விட்டுப்போய் விடுகின்ற வாய்ப்பே வராது. அடுத்தது மழை வராது என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரிந்தால் தற்பாதுகாப்புக்காக இருக்கட்டுமே என்று குடையை வீணாகக் காவாதீர்கள்- இதுவும் குடையைப் பாதுகாப்பதற்கான - அது இன்னொருவருக்கு 'நன்கொடை'யாகப் போகாமல் இருப்பதற்கான வழிதான்.

மழை வருமா வராதா என்பதை அறிவதற்குக் காலநிலை - வளிமண்டல அறிவித்தல்களை நம்பமுடியாது. அவர்கள் 'நாட்டின் சிற்சில பகுதிகளில்...இலேசாகவோ மிதமாகவோ... பெய்யக்கூடும்'(?) என்றவாறு பொடி வைத்தல்லவா அறிவிக்கிறார்கள். சில புத்திசாலிகள் மழை வரும் என்ற அறிவித்தல் வெளிவந்தால் நம்பிக் குடையை எடுத்துச் செல்லமாட்டார்களாம்.....(?)

இன்னும் சிலர் வெயிலுக்கும் குடைபிடிப்பதுண்டு. 'குடையும் கையும்' என்பது அவர்களுக்கும் பழகிப்போய் விட்டதால் குடையை மறக்கின்ற வழக்கமே அவர்களுக்கு வருவதில்லை. வெய்யில் ஒத்துக்கொள்ளாத அவர்களில் சிலர் சையிக்கிளில் செல்லும்போது கூட குடை பிடித்துக்கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதிப்படுவதைக் கண்டிருக்கிறோம். அவர்களைப் பார்த்துச் சில குறும்புக்கார இளைஞர்கள் 'ஐயா அந்தப் பக்கம் மழையோ...' என்று கேட்பதுண்டு.

எனக்குத் தெரிந்த ஒருவரும் இப்படித்தான் எந்நேரமும் குடை நிழலில்தான் நடமாடுவார். அதிலும் வேடிக்கை என்னவென்றால் முழுக்குடையுடன்... மனிதர் பீனிசக்காரர் என்பதால் வெய்யில் மழை எதுவுமே ஒத்துவராது என்றுதான் கேள்விப் பட்டேன். காலப்போக்கில் இன்னொரு சங்கதியும் கேள்விப் பட்டேன். அவர் பலரிடம் கடன்பட்டுமிருக்கிறார்; கடமைப் பட்டும் இருக்கிறாராம். அவர்களை நேருக்குநேர் சந்திக்க நேருமிடத்தில் அவர்களிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ளவும் அவர்களைக் கண்டுகொள்ளாதது போல நடந்து கொள்ளவும் குடைதான் அவருக்குக் கைகொடுத்து வருகிறதாம்.

அந்தப் பெரியவர் பெரிய கடைப் பக்கத்தால் வரும் போது திடீரென்று மழை கொட்டத் தொடங்கிவிட்டது. குடை எடுத்துவராத அவர் வேறு வழியில்லாமல் தமது பையனையும் இழுத்துக் கொண்டு ஒரு புடைவைக் கடைக்குள் நுழைந்து விடுகின்றார்.

அங்கே அவர்களுக்குப் பலத்த வரவேற்பு '' வாங்கோ ஐயா... வாங்கோ...'' என்று ஊழியர்கள் மட்டுமல்ல முதலாளியே எழுந்து வரவேற்றார். குறைந்தது குடையாவது வாங்குவார்கள்தானே!

''என்ன எடுக்கப் போகிறீங்கள் முதலில் சேட் துணிகளைத்தான் பாருங்களேன்'' என்றவர்கள் அவரின் பதிலுக்குக் காத்திராமல் கண்ணாடி அலமாரிக்குள் இருந்த துணிவகைகளை எடுத்து மேசைமீது பரப்பினார்கள். 'உங்களுக்கு இது நல்லாயிருக்கும், பையனுக்கு இது நல்லாயிருக்கும்' என்று பரிந்துரை வேறு சொன்னார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர் 'எதைத் தெரிவுசெய்வது' என்று பாவனை செய்பவர் போல் இருக்கையில் ''இதோ இவைகளையும் பாருங்கோ'' என்று அடுத்த மேசைக்கு அவர் அழைத்துச் செல்லப்படுகிறார். அங்கு கால்சட்டைத்துணி வகைகள் எடுத்து வரப்பட்டு இவர்களுக்குக் காண்பிக்கப்படுகின்றன.

இப்படியே ஒவ்வொரு பகுதித் துணிவகைகளும் இவர்களுக்குக் காட்டப்படுகின்றன. பெரியவர் ஒன்றுமே பேசவில்லை. 'எல்லாவற்றுக்கும் எவ்வளவு வரும்?' என்று மனதுக்குள் கணக்குப் போட்டுக்கொண்டிருப்பவர் போலக் காணப்பட்டார்.

கடைசியாகக் கடை ஊழியர் ஒருவர் பெரியவரிடம் ''திறமான இந்தியச் சாரங்களும் இருக்கின்றன. வேண்டு மானால் அவைகளையும் காட்டட்டுமா?'' என்றார்.

இந்த சமயத்தில்தான் பெரியவர் பையனை மெல்லத் தட்டி ''தம்பி போய் வெளியே மழை நின்று விட்டதா என்று பார்த்துவிட்டு வா. இல்லையென்றால் சாரங்களையும் பார்க்கலாம்...'' என்றார்.

இது கடைக்காரர்களின் காதுகளிலும் விழுந்துவிட்டது. அவர்களுக்கு எப்படி இருந்திருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கீறல் விழுந்த தட்டுக்கள் (!)

இசைமேதை எம்.எஸ்.சுப்புலட்சுமியின் மறைவை யடுத்து அவரது 'பக்த மீரா' படப் பாடலான 'காற்றினிலே வரும் கீதம்..' மீண்டும் எமது மனத்திரையிலே நிழலாடுவது போன்ற நினைவு... அவர் அப்பாடலைத் தாமே பாடி நடித்திருந்தாராம். எம்.எஸ் போலவே ஆரம்ப கால நடிகர்களான எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா போன்றவர்களும் படங்களிலே பாடி நடித்தவர்களாம். பாடல்களுக்கு வாய் அசைக்கின்ற 'பம்'மாத்துக்களெல்லாம் பின்னால் வந்தவை.

'காற்றினிலே வரும் கீதம்...' மற்றும் பாகவதரின் 'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து...', 'வதனமே சந்திர பிம்பம்...' போன்ற ப்ாடல்களை மாமா வீட்டுப் 'பொன்னுக்கிராம்' பெட்டியில் கேட்டு மகிழ்ந்ததெல்லாம் இன்னும் பசுமையான நினைவுகள்தாம். 'PHONOGRAM' என்ற கிராமபோனைத்தான் அன்றுள்ள சில கிராமத்துப் பாமர மக்கள் அப்படி அழைத்தனர்.

இப்பொழுது வெளிநாடுகளுடனான தொலைத் தொடர்புகள் வைத்திருக்கும் சிலர் COLLECT CALL என்பதை 'கலைக்கோல்' என்று சொல்லுவது போல என வைத்துக் கொள்ளுங்களேன்.

அந்த கிராமபோன் பற்றியும் இசைத்தட்டுப் பற்றியும் சென்ற வார உதயனிலும் ஒரு கட்டுரை வெளியாகியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெட்டியில் சுழலும் வட்டத்தட்டில் வைக்கின்ற இசைத்தட்டு இருக்கிறதே அது அநேகமாக 'கொலம்பியா' வகையைச் சேர்ந்ததாக இருந்தது. அது போன்ற தகவலும் பாட்டைப் பற்றிய விவரங்களும் இசைத்தட்டின் நடுப் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கும். கூடவே ஒலிபெருக்கிக் குழாயுடன் அமைந்த கிராமபோன் பெட்டியும் அதற்கு முன் வேடிக்கை பார்க்கும் தோற்றத்திலான ஒரு நாயின் படமும் இருக்கும்.

அதற்கும் ஒரு கதையுண்டு. கிராமபோன் கண்டு பிடிக்கும் முயற்சி நடந்து கொண்டிருக்கையிலும் இப்படித்தான் ஒரு நாய்க்குட்டி அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததாம். இடையிலே அது வாயைத் திறந்து குரைத்திருக்கிறது. என்ன ஆச்சரியம், அதுதானாம் இசைத் தட்டிலே பதிவான முதல் ஒலிப்பதிவும் ஒலிபரப்புமாம்... அதை நன்றியுடன் நினைவூட்டும் வகையில்தான் இசைத் தட்டுகளிலே அந்த நாய்ப் படம். பின்னால் சந்திர மண்டலத்துக்குச் சென்று சாதனை படைத்ததும் அந்த நாய்க்குலம்தான்.

மாமாவீட்டு கிராமபோனைவிட பின்னர் பெரியம்மா வீட்டிலேயிருந்த கிராமபோனிலே சில முன்னேற்றங்களைக் காண முடிந்தது. பெட்டியிலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருந்த ஒலிபெருக்கிச் சாதனம் அதிலே இல்லை. அடிக்கடி என்றில்லாமல் ஒருமுறை 'வைன்' கொடுத்தால் சற்று நீண்ட நேரம் நின்றுபிடிக்கக் கூடியதாகவும் இருந்தது. அதென்ன 'வைன்'?

இசைத்தட்டு சுழன்று கொண்டிருக்கையில், அதிலுள்ள கீறல் போன்ற வழித்தடத்திலே காந்த ஊசி ஊர்ந்து கொண்டிருக்கும். தண்டவாளம்தான் ரயிலை வழி நடத்திச் செல்வது. தண்டவாளத்தின் 'ஸ்குரு' ஆணி கழன்றுவிட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரயில் தடம் புரள வேண்டியிருக்கும். இசைத்தட்டில் குறுக்கே கீறல் விழுந்துவிட்டாலும் இப்படித்தான். ''கள் பனித்திட... கள் பனித்திட... கள் பனித்திட...'' என்றெல்லாம் பாடல் தடம் புரண்டு கொண்டிருக்கும். மீண்டும் ஊசியுடன் கூடிய அந்தக் கையைத் தூக்கி அடுத்த வரிக்கு ஏற்றிவிட வேண்டும். இசைத்தட்டு சுற்றிக்கொண்டிருப்பதற்கு 'வைன்' எனும் சாவி கொடுக்க வேண்டும்.

அப்பொழுதெல்லாம் காரை 'ஸ்ராட்' பண்ணுவதற்கும் அப்படி ஒரு பெரிய சாவியை காரின் முன்பாகத்திலுள்ள துவாரத்திலே புகுத்தித் தெண்டிச் சுழற்றுவார்கள். இசைத் தட்டு ஓடிக்கொண்டிருக்கையில் சாவி கொடுத்தது போதாது என்றால் பாட்டிலே ஓர் 'அனுக்கம்' பிடிக்கும். அப்போது ஓடிச் சென்று சாவி கொடுத்தால் 'சேடம் இழுப்பது' நின்று பாட்டுப் புத்துயிர் பெற்றுவிடும்.

பெரியம்மா வீட்டுக் கிராமபோனில் அடிக்கடி கோவலர் கதை' போடுவார்கள். அது பகுதி ஒன்று, இரண்டு என்று பல பகுதிகளைக் (தட்டுகள்) கொண்டது. அந்தக் கதை ஓடப்போகிறது என்றால் ஆச்சி உட்படப் பலரும் அங்கு கூடி இடம் பிடித்துக்கொள்வார்கள்.

அது சீரமைக்கப்படாத பழைய இசை நாடகம், 'கற்பிற் சிறந்தவள் கண்ணகியா மாதவியா' என்று பட்டிமன்றம் நடத்திப் புலனாய்வு நடத்துகிற அளவுக்கு மாதவியிடமும் பல பண்பு நலன்கள் உண்டல்லவா? அப்படியிருக்க மாதவியை 'பரத்தை' என்று இழிவுபடுத்தும் பாங்கில் அமைந்தது அந்நாடகம். அதிலே ஓர் இடத்திலே கோவலன் சொல்லுவதாக ஒரு வரி வருகிறது... ''மாதவியா கண்ணகியா? மாதவி என்றால் மடிமேல் வா... கண்ணகி என்றால் கடந்து போ...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த இசைத்தட்டிலே மாதவி வரும்போதெல்லாம் எங்கள் ஆச்சி ''வந்திட்டாள்.. வேசை... தேவடியாள்...'' என்றெல்லாம் தனது வயித்தெரிச்சலைக் காட்டிக்கொள்வாள்.

இடையிலே ஓர் இடைச் செருகல்... பின்னாளில் மருதனார்மடம் / மானிப்பாயிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு பேரூந்துச் சேவை நடந்தது. அதை 'தாவடி - யாழ்.' பஸ் (771) என்று குறிப்பிடுவதுண்டு. நேர்வழியில் செல்லாமல் சுதுமலை, தாவடி, கொக்குவில் என்றெல்லாம் கோடி தூங்கிச் செல்லும் அந்தப் பேரூந்தைச் சிலர் குறும்பாகத் 'தேவடியாள்' பஸ்ஸென்றும் சொல்வார்கள்(!)

இசைத்தட்டை அடுத்து ஒலிப்பதிவு நாடா, இறுவட்டு என்றெல்லாம் பல புதுமைகள் வந்து விட்டன. ஆனால், கீறல் விழுந்த இசை என்பது இன்றைக்கும் இருக்கிறது. வானொலியில் கீறல் விழுந்த இசையை ஒலிபரப்பிவிட்டுப் பின்னர் அதற்காக வருத்தம் தெரிவிப்பதுண்டல்லவா? ஒருவேளை, ஒரு காலகட்டத்துக்கு முன்னர்வரையிலான பாடல்களெல்லாம் இசைத்தட்டு வடிவிலேதான் அங்கு பேணப்பட்டு வருகிறதோ?

சிலர் இருக்கிறார்கள், அவர்கள் ஒருமுறை சொன்னால் நூறு முறை சொன்னதுபோல இருக்கும். வேறு சிலர் இருக்கிறார்கள்; அவர்கள் ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். அவர்களைக் கீறல் விழுந்த (இசைத்) தட்டுகள் எனலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி

மானிப்பாயிலுள்ள அந்தச் சந்தியிலே ஆலமரம் இருந்த சுவடே தெரியாத காலத்திலும் அது ஆலடிச் சந்திதான்... ஏன் இன்றும் கூடத்தான்...

அந்தச் சந்தியருகிலிருந்து கிழக்குப் பக்கமாகச் சுமார் ஐம்பதடி நீள ஒழுங்கை... அதன் முடிவிலே இருந்தது அந்தப் பலசரக்குக் கடை... கடையின் பெயர் என்னவாக இருந்தாலும் மக்கள் அதற்குச் சூட்டியுள்ள பெயர் ஓடைக்கடை... ஓடைக்குள் இருந்தாலும் அது பிரபலமான பெரிய ஓடைக்கடை.

கடைக்குப் போகின்ற பாதையோரம் பனையோலை வேலியாலானது. அதிலே சிலர் தங்கள் சைக்கிள்களைச் சாத்துவதற்குக்கூட தயங்குவதில்லை. கடையின் முன் பக்க ஓரங்களிலே விளக்குமாறு, தும்புத்தடி, கயிற்றுக் கட்டுகள் கயிற்று முடிச்சுகள், சிரட்டைக் கரி, தவிடு - புண்ணாக்கு மூட்டைகள் என்பன இருக்கும். உள்ளே ஊழியர்கள் 'அக்சிடென்' படாமல் எடுக்க முடியாத அளவுக்கு பல சரக்குகள் நிரம்பியிருக்கும். நிதான விலை - மோசடிகள் இல்லாத வியாபாரம் என்பதால் கடைக்குமுன் எந்நேரமும் கூட்டத்துக்குக் குறைவிருக்காது. கடையைக் கணபதிப் பிள்ளை, மருதலிங்கம் என்ற இரு சகோதரர்கள் கூட்டாக நடத்திவந்தார்கள். அவர்களிடம் முதலாளிகள் என்ற பெருமை, பகட்டு எதுவும் கிடையாது. கடைக்குள் வந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டைக்கூடக் கழற்றிக் கொழுவிவிட்டுத்தான் வியாபாரத்தைக் கவனிப்பார்கள். ஒருவர் வீட்டுக்கு அல்லது வெளியே எங்காவது போயிருந்தால் மற்றவர் பட்டறையில் இருப்பார். அல்லது உதவியாளர்களுடன் கூட உதவிக்கு நின்று சாமான்கள் கட்டிக்கொண்டிருப்பார்.

அப்பொழுது நாங்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம். ஏதாவது கொப்பி, பென்சில் வாங்கவென்று இந்த ஓடைக்கடைக்கும் போவதுண்டு. வீட்டிலும் சில சமயங்களில் பாடசாலை விட்டு வரும்போது இடையிலேயுள்ள ஓடைக்கடையிலே ஏதாவது வாங்கி வரும்படி பணமும் பையும் தந்திருப்பார்கள். பை என்றால் ஏதாவது 'யூனிபோம்' துணியில் தைத்த தலையணை உறையாகத்தான் இருக்கும். அதை மடித்து புத்தகக் கட்டுக்கு இடையே வைத்துக் கொண்டு போவோம். சைக்கிளில் போய்வருகின்ற காலத்திலும் இதே கதைதான். அப்பொழுதெல்லாம் இந்த சொப்பிங் பைகளோ நாகரிகமான பைகளோ கிடையாது. அப்படி இருந்தாலும் அவைகளை எங்களை நம்பித் தரமாட்டார்கள்.

ஓடைக் கடையில் எந்நேரமும் கூட்டமாகவே யிருக்கும். அதுவும் பாடசாலைகள் விடும் நேரங்களிலே கேட்கவே வேண்டியதில்லை. இருந்தாலும் அந்தக் கடை முதலாளிகள் மிகுந்த 'கண்ணோட்டம்' மிக்கவர்கள். எந்தவித 'டோக்கன்' முறையும் இல்லாமலே யார் முதலில் வந்தவர் யார் அதன்பின் வந்தவர் என்பதையெல்லாம் மனக்கணக்குப் போட்டு வைத்திருந்து அதன்படிதான் சிட்டை போட்டு பணம் வாங்குவார்கள். சாமான்கள் கொடுப்பதும் அதே ஒழுங்கில்தான் நடக்கும்.

இந்த ஓடைக்கடையை மட்டுமன்றி அதனை நடத்தி வந்த சகோதரர்களைப் பற்றியும் எல்லோரும் வியந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவார்கள். அவர்கள் இருவரும் - அதுவும் திருமணமாகித் தனிக்குடித்தனம் சென்ற பின்னரும் எவ்வித பிச்சுப் பிடுங்கலுமில்லாமல் ஒற்றுமையாகக் கூட்டுவியாபாரம் செய்துவந்ததைப் பாராட்டிப் பேசுவார்கள்.

இன்னுமொரு விவரத்தை இந்த இடத்திலே சொல்லியாக வேண்டும். இவர்கள் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களாக இருந்தவர்கள். அதிலும் மூத்தவரான கணபதிப்பிள்ளை கட்சிக்காக முன்னின்று உழைத்தவர்களில் ஒருவர். கட்சித் தலைவர்கள் மீது மிகுந்த மதிப்பும் வைத்திருந்தார்கள். சில காரணங்களால் நானும் இந்த ஓடைக்கடை வரலாற்றைத் தமிழரசுக் கட்சி காலம்வரையே சொல்லுகிறேன்.

அமிர்தலிங்கம் அவர்கள் கூட்டங்களிலே ஓர் உவமானம் சொல்லுவார். ஒற்றுமை என்றால் அது 'நான் தவிடு கொண்டு வருகிறேன். நீ அவல் கொண்டு வா. ஒன்றாகக் கலந்துவிட்டு ஊதிஊதிச் சாப்பிடுவோம்' என்பதுபோல இருக்கக்கூடாது என்று! இந்த இரண்டு சகோதரர்களில் எவரும் தங்கள் கூட்டு வியாபாரத்திலே கடைசிவரை அப்படி நடந்துகொள்ளவில்லை.

காலமாற்றத்தில் ஓடைக்குள் இருந்த கடை தெருவோரமாக முன்னோக்கிப் பெரிய கடையாக மறு சீரமைக்கப்பட்டபோதும் அந்தக்கடை என்னவோ ஓடைக் கடை என்றுதான் வழங்கிவந்தது. ஆலமரம் இல்லாதபோதும் ஆலடிச் சந்தி இருந்தது போல...

மேலும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் அங்கு இன்னொரு மாற்றமும் தெரியவந்தது.

ஆரம்பத்திலே ஓடைக்கடை இருந்த இடத்துக்கு முன்னாலுள்ள கடைப்பகுதி தம்பியாருக்கும் அதற்கு வலப்பக்கமாகவுள்ள கடைப்பகுதி தமையனுக்குமெனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவினை செய்யப்படுவது போலத் தெரிந்தது. அது பற்றி கணபதிப்பிள்ளை அவர்களிடம் கேட்டேன்-

அதற்கு முன்னர் மானிப்பாயிலுள்ள இன்னொரு தொழிலதிபர் வீட்டிலே - அவர் இருக்கும்போதே அவரின் பிள்ளைகள் மத்தியிலே 'யாருக்கு எது' என்பதில் ஆரம்பித்த தகராறு ஆட்கடத்தல் - நீதிமன்றம் - வழக்குக் கணக்கு என்றெல்லாம் நடந்து கொண்டிருந்தது...

அதனை நினைவூட்டியவர் அப்படி எதுவும் தங்களுக்குள் நடக்காது என்றாலும் தங்கள் பிள்ளைகள் இப்ப இல்லா விட்டாலும் எதிர்காலத்தில் அப்படி நடந்துகொள்ளக் கூடாது என்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைதான் அது - என்றார். மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோது தந்தை செல்வா இப்படிச் சொன்னாராம்... "இன்று இந்தியத் தமிழர்களுக்கு நடப்பது நாளை இலங்கைத் தமிழர்களுக்கும் நடக்கலாம்..."

வேறொரு சமயம் கடைக்குள் சென்று கவனித்தேன். இரண்டு கடைகளுக்குமிடையே ஒரு குறுக்குச்சுவர். அதிலே ஓரிடத்தில் சன்னல் போன்ற இடைவெளி விடப்பட்டிருந்தது. அதன்மூலம் அவ்வப்போது முதலாளிகள் மட்டுமல்ல, ஊழியர்களும் நட்புரிமையுடன் உரையாடுவதையும் உறவாடுவதையும் காணமுடிந்தது. தொலைபேசிக் கருவியும் அந்த இடைவெளிச் சுவரில்தான் இருந்தது. அது இரண்டு கடைகளுக்கும் பொதுவாம்... அதாவது...

'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாவை விளக்கும் பெண் பாவையும்

அந்தத் திரைப்படத்திலே ஒரு காட்சி... இளநங்கை குளத்தங்கரையில் நின்றவாறு நீராடுவதற்கு முன்னதாகத் தனது ஆடைகளை ஒவ்வொன்றாக அகற்றிக் கொண்டிருக்கிறாள். கடைசியாக உள்ள அந்த ஒரே ஒரு துணியை அகற்றும் சமயம் பார்த்து பாழாய்ப் போன ரயில் வண்டி ஒன்று 'சட சட' வென ஓசையை எழுப்பியவாறு குறுக்கே வந்து விடுகிறது. ரயில் ஓடி மறைந்ததும் பார்த்தால், நங்கை குளத்தில் மறைந்து விடுகிறாள்.

மிகுந்த எதிர்ப்பார்ப்புடன் படம் பார்த்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவனுக்கு இது பெருத்த ஏமாற்றமாகப் போய்விட்டது. அவன் என்ன செய்தான் தெரியுமா? ரயில் வருவதற்கு இடையில் தான் காணத் தவறியதைக் கண்டுவிட வேண்டும் என்ற ஆவலில் மீண்டும் மீண்டும் அந்தப் படத்துக்குப் போகிறான்.... இது எப்போதோ படித்த நகைச்சுவைத் துணுக்கு. நினைவிலிருந்து மீட்டு எழுதியுள்ளேன்.

இது இவ்வாறிருக்க, ஒரு மாற்றமாக இப்பொழுது இலக்கியத் தகவல் ஒன்றைத் தரவிரும்புகிறேன். நாம் எவ்வளவுதான் படித்தாலும் அவைகள் பெரும்பாலும் மறந்து விடுகின்றன. ஆனால் சிலவற்றைப் பொறுத்தவரை காலம் கடந்தாலும் அவைகள் மனதை விட்டு அகலுவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய படைப்புகளில் ஒன்றுதான் 1957 - 58ஆம் ஆண்டுகளில் 'கல்கி'யில் வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்ற அகிலனின் 'பாவை விளக்கு' நாவல்.

அப்பொழுதெல்லாம் கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் இதழ்களுக்கு எம்மிடையே மிகுந்த வரவேற்பு இருந்தது. ஞாயிறு திகதியிட்ட இதழ்கள் முன்கூட்டியே வியாழக் கிழமையே எமக்குப் படிக்க கிடைத்து விடும். 'பாவை விளக்கு' வெளிவந்து கொண்டிருந்த காலம். என் போன்றவர்கள் இறுதித்தேர்வுக்கு (அதாவது என் போன்றவர்களுக்குத்தான் அது இறுதித் தேர்வு) ஆயத்தமாகிக் கொண்டிருந்த காலம். இருந்தாலும் பாடப்புத்தகங்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு 'பாவை விளக்கு ' நாயகன் நடந்து கொண்டது போல நாமும் இந்நாவலில் மூழ்கி விடுவோம்.

கிட்டடத்தட்ட ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரும் அந்த நாவலில் வரும் சம்பவங்கள் மனதில் நிற்கின்றன. தணிகாசலத்தின் பாத்திர வார்ப்பு - அவனின் சீப்புக்கு அடங்காது நெற்றியில் புரளும் கலைந்த கிராப்பு - அதற்கான வினுவின் ஓவியம் - அவனின் முன்கோபம் - அச்சமயங்களில் அவனின் வாயிலிருந்து வெளிவரும் 'மண்ணாங்கட்டி' என்ற வார்த்தை... இவற்றுடன் அவனின் வாழ்வில் பங்கு கொண்டிருந்த தேவகி, செங்கமலம், கௌரி, உமா...

அந்தப் பசுமையான இலக்கிய ரசனையை மீண்டும் புதுப்பிக்கும் எண்ணத்துடன் இருந்தவனுக்கு அந்த வாய்ப்பு அண்மையில் மீண்டும் கிடைத்தது. யாழ்.பொதுசன நூலகத்திலிருந்து 668 பக்கங்கள் கொண்ட - 12ஆம் பதிப்பாக 'தாகம்' வெளியீடாக வந்துள்ள 'பாவை விளக்கு' நாவலைப் பெற்றுப் படிக்க முடிந்தது.

நாவலைப் படித்துக்கொண்டிருக்கையில் இடையில் ஓர் இடறல் போலிருந்தது. பக்கங்களைக் கவனித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136ஆம் பக்கத்துக்குப் பின்னர் 137 - 152 பக்கங்கள் கொண்ட ஒரு 'போம்' காணப்படவில்லை. அதற்குப் பதில் நாவலின் இரண்டாம் பாகத்துக்குரிய 489 - 504 பக்கங்கள் கொண்ட போம் அந்த இடத்தில் மீண்டும் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. நூலில் ஒரு பக்கம் இல்லாவிட்டாலும் 'பொச்சம்' தீராத எம்மைப் போன்றவர்களுக்கு 16 பக்கங்கள் இல்லாவிட்டால் எப்படி இருக்கும்?

தணிகாசலம் தனக்குக் கிடைத்த வேலையை விட்டு விடுவது போன்ற விவரங்கள் அந்த இல்லாத பக்கங்களில் தான் சொல்லப்பட்டிருக்கின்றன. அதை அறிய முடியாமல் போனது எனக்கு ஏதோ ஈடுசெய்ய முடியாத இழப்புப் போன்றே இருக்கிறது. பந்தியில் இருந்தவனுக்கு பாயாசம் கிடைக்காதது போன்ற கவலை. மீண்டும் மீண்டும் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தேன். எங்காவது மாற்றிக் கட்டப்பட்டிருக்கலாம் என்ற நப்பாசையில்! ஏமாற்றம்தான் கண்ட பலன். ரயில் ஓடி மறைந்ததும் பெண் பாவையை முழுதாகப் பார்க்கலாம் என்றிருந்த அந்த இளைஞனின் மனநிலைதான் எனக்கும் ஏற்பட்டது.

அந்த நாவலில் உள்ள ஏராளமான எழுத்துப் பிழைகளை மன்னித்தாலும் 'அந்தப் பதினாறு பக்கத் தவறை' எனது மனத்தினாலும் மன்னிக்கவே முடியவில்லை. இதை யாரிடம் சொல்லி அழுவது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரைப் பற்றி...



பொ. சண்முகநாதன்

நகைச்சுவை எழுத்தாளர் என அறுபதுகளில் அறிமுகமான சங்குவேலி பொ. சண்முகநாதன் நகைச்சுவைக் கட்டுரைகள் மட்டுமன்றி இலக்கியத்தின் ஏனைய துறைகளிலும் கால் பதித்தவர். 'சேறும் தண்ணீரும்' என்பது இவர் 'சஞ்சீவி' வார இதழில் எழுதிய குறுநாவலாகும். இவரது ஆக்கங்கள் ஈழத்தின் பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

வானொலி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டிருக்கிறார். 'குங்குமம்' அக்கரைச் சிறப்பிதழிலும் இவரது நகைச்சுவைக் கட்டுரையொன்று (6-9-81) வெளிவந்தது.

'கொழும்புப் பெண்', 'பெண்ணே நீ பெரியவள்தான்' (நகைச்சுவைக் கட்டுரைகள்) 'வெள்ளரி வண்டி' (சிறுகதைகள்) 'இதோ ஒரு நாடகம்' (குறுநாடகம்) என்பவைகளின் ஆசிரியர்.

'கலைச்செல்வி'ப் பண்ணையில் உருவாகியவர்களில் ஒருவரான சண்முகநாதன் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

கடந்த சில ஆண்டுகளாக 'உதயன்' பத்திரிகையில் 'சண் அங்கிள்' என்ற பெயரில் புதியதொரு வடிவத்திலே பத்தி எழுத்துக்கள் *(Column Writings)* எழுதி வருகிறார். அந்த வகையில் 2004-இல் இவர் எழுதிய எழுத்துக்களுக்காக சிறந்த தமிழ்ப் பத்தி எழுத்தாளருக்கான விருது இலங்கை பத்திரிகையாசிரியர் கழகத்தினரால் வழங்கப்பெற்றது. அந்தக் கட்டுரைகளுடன் மேலும் சில கட்டுரைகளுமாகச் சேர்த்து இதோ உங்கள் முன்னால் இந்நூல்...

வே. வரதசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org